# இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்

கலாநிதி
செவாலியர்
தமிழ்க்கங்கை

இளவாலை -அமுது -

லண்டன் புதினம் பத்திரிகையின்
பத்தாவது ஆண்டு நிறைவு வெளியீடு

# இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்

[illegible]

2006

# இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்

## இளவாலை அமுதுு

**2006**

# நூல் விபரம்


| | |
|---|---|
| நூலின் பெயர் | இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள் |
| ஆக்கியோன் | கலாநிதி-செவாலியர்- தமிழ்க்கங்கை- அமுதசாகரன்- அடைக்கலமுத்து - இளவாலை அமுது |
| முதற்பதிப்பு | 2006 |
| நூல் உரிமை | ஆசிரியருக்கு |
| முதற்பதிப்பு வெளியிட்டோர் | "புதினம்" லண்டன் வெளியீடு |
| அச்சிட்டோர் | புனிதவளன் கத்தோலிக்க அச்சகம்<br>360, பிரதான வீதி,<br>யாழ்ப்பாணம்,<br>ஸ்ரீலங்கா |
| விலை | 5 பவுண்கள் |
| Book | **Hedge that was planted by the maker of the Fence** |
| Edition | **First Edition**<br>**Puthinum Publications LONDON (2006)** |
| Author | **Dr. Poet Adaikalamuthu**<br>**- Ilavalai Amuthu-** |
| Copyrights | **Author** |
| Press | **St. Joseph's Catholic Press,**<br>**360, Main Street,**<br>**Jaffna, Sri Lanka.** |

# கதியால் போட்டவர்கள்



| | |
|---|---|
| *01.* பண்டிதமணி கணபதிப்பிள்ளை | 01 |
| *02.* மீண்டும் பண்டிதமணி | 09 |
| *03.* என் குரு தேவர் | 14 |
| *04.* புலவர்மணி இளமுருகனார் | 18 |
| *05.* தனிநாயகம் அடிகள் | 25 |
| *07.* பத்திரிசியார் கல்லூரி அதிபர் யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் | 31 |
| *08.* மன்னார் ஆயர்மணி இராயப்பு யோசப்பு அவர்கள் | 36 |
| *09.* கவிஞர் கண்ணதாசன் | 40 |
| *10.* செவாலியர் சிவாஜி கணேசன் | 48 |
| *11.* பேராசிரியர் கல்கி | 52 |
| *12.* உபவேந்தர் சு. வித்தியானந்தன் | 59 |
| *13.* பேராசிரியர் செல்வநாயகம் | 66 |
| *14.* எனது பாலிய நண்பன் கேசவன் | 72 |
| *15.* எமில் இன்னாசித்தம்பி என்ற வைத்திய மாமணி | 78 |
| *16.* வித்துவான் பண்டிதர் வேந்தனார் | 85 |
| *17.* கலாநிதி ஜெயசேகரம் அடிகளார் | 91 |
| *18.* ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் | 95 |
| *19.* துறவி பேதுருப்பிள்ளை என்ற மாதவன் | 99 |
| *20.* பேராசிரியர் இம்மானுவேல் அடிகளார் | 105 |
| *21.* அன்னை திரேசா | 110 |
| *22.* மும்மணிகள் | 114 |
| *23.* கவிப் பேரரசு வைரமுத்து | 120 |
| *24.* எஸ். கே. ராஜன் | 124 |

25. மாலி 127
26. மறக்கமுடியாத வேர்களும் விழுதுகளும் 129
27. தந்தை செல்வா 135
28. ஆயர்மணி தியோகுப்பிள்ளை 140
29. நினைவில் தோன்றிய நிலவுகள் 144
30. சட்டத்தரணி ஜி. ஜி. பொன்னம்பலம் 149
31. அண்ணனும் தம்பியும் 156
32. வண்ணைத் தெய்வம் 163
33. சட்டநிபுணர் ஜெயசிங்கம் 166
34. காவலன் ஆசிரியர் அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை 170
35. முகத்தார் எஸ். யேசுரட்ணம் 174
36. இசைக்குயில் எம். எஸ். சுப்புலட்சுமி 177
37. அறிஞர் தாசீசியஸ் 182
38. வித்துவான் தமிழ் ஒளி க. செபரத்தினம் 185
39. நல்லறச் செல்வன் மைக்கல் ஆபேற்பிள்ளை 188
40. கவிமாமணி க.த. ஞானப்பிரகாசம் 192
41. திரு. ஐவன் பேதுருப்பிள்ளை
திரு. இராசா சுவாம்பிள்ளை 196
42. இசையரசன் மாணிக்கம் யோகேஸ்வரன் 201
43. ஏந்திய விளக்கில் எண்ணெயாய் வந்தோர் 203
44. மறைந்த மனிதகுல மாணிக்கம் 209

எனது பிரிய குரு மகனாருக்கு

# காணிக்கை

*"வெள்ளித் தாம்பாளத்தில் வைத்து"*



**பேராசிரியர் கலாநிதி ஏ.ஜே.வி சந்திரகாந்தன் அடிகளார்**
B.Th.,, M.Phil., M.Th., L.Th., Th.D., Ph.D.
Associate Professor, University of Toronto Canada

உமது வாழ்வில் பிரகாசித்த துறவு நிலை, தூய்மை, எளிமை, சமயநெறி, சேவை மனப்பான்மை, எழுத்துவன்மை, விரிவுரைகள், வழிகாட்டல், தேசபக்தி, பொதுப் பணிகளில் கைகொடுத்தல் ஆகிய சீரிய பணிகளுக்கு, குருத்துவப் பணி வாழ்வின் வெள்ளி விழா (2004) நினைவாக இந்நூலைக் காணிக்கையாக்குகின்றேன்.

**நூலாசிரியர்**




என் பிரிய குரு மகனாரே,

"இவர், பேராசிரியர் சந்திரகாந்தனுடைய தந்தையார்" என்று என்னைப் பிரபலமானோர்க்கு அறிமுகம் செய்து வைக்கும்போது பலர் குறிப்பிட்டார்கள். அப்போது அந்தப் பெரியார்களுடைய முகம் மலர்ச்சியினால் பொங்கியது. கண்கள் சிரித்தன. உதடுகளில் புன்னகை குமிழியிட்டது. அவர்கள் கிட்டவந்து என்னை அணைத்துக் கொண்ட செய்திகள் பல. இவ்வாறு உமது பெயராலேயே நான் தலைப்பாகை தரித்துக்கொண்ட சந்தர்ப்பங்களைச் சொன்னால் நம்பமாட்டீர்கள்.

உமது அறிவு மிதக்கும் கண்கள் காவியங்களாக விரிந்து இசைத்துக் கச்சேரி வைத்திருக்கின்றன. உமது வசீகரமான முகமே சிலருடைய உள்ளத்தில் புல்லாங்குழல் ஊதியிருக்கிறது. தெய்வீக வசனங்கள் தேவலோகத்தின் செந்தாமரைகள். உமது உரையாடல் ஆனைக்கோட்டையில் தொடங்கி அலாஸ்காவரையும் பரந்து, உலகைத் தொட்டுத் தடவிவரும்போது அவற்றைக் கேட்போர் உள்ளம், வானவீதியில் மேலே மேலே அதற்குமேல் சந்திர மண்டலத்தில் சஞ்சரித்திருக்கிறது.

தாமரையின் தண்டு எவ்வளவு நீளமானது? குளம் வற்றியிருக்கும் போது குறுகியிருக்கும் தண்டு, வெள்ளம் உயர உயர நிமிர்ந்து பலஅடி தூரம் வளர்ந்து விடுகிறது. "வெள்ளத்தனைய மலர் நீட்டம்" என்றார் வள்ளுவர். உமது உள்ளத்தின் எண்ணங்கள்

லீலி மலரின் சாயலானாலும் தாமரை போல் அழகானவை. கருத்துக்கள் உயரமானவை. மனிதருக்கு நற்பணி செய்வதில் கால் நூற்றாண்டைக் கழித்துவிட்டீர். இந்த வெள்ளிவிழா ஆண்டில் லூர்து பதிக்கு யாத்திரை செய்து அங்கு ஐம்பதுக்கு மேற்பட்ட சான்றோருக்குத் திரு உரையாற்றினீர். என்னையும் உடனழைத்துச் சென்றீர். இறுதி நாளன்று லூர்து திருப்பதியின் புனிதமான குகையில் திருப்பலி நிறைவேற்றினீர்.

மறுநாள் காலையில் 100 மைல் தொலைவில் உள்ள பிறனீஸ் மலையின் உச்சிக்குச் சென்றோம். மலைகளின் அடிவாரங்களினூடே சென்ற பாதையானது எட்டிக்குனிந்து பார்த்தால் ஆதாள பாதாளங்களைக் காட்டி நெஞ்சை ஒரு குலுக்குக் குலுக்கியது. சில இடங்கள் பாதாள உலகையே கண்களுக்கு விரித்துவிட்டன. அந்தரமான அந்தக் காட்டில் நெப்போலியன் பேரால் அமைந்த பாலம் ஒன்று அவன் நெஞ்சுரத்தைக் காட்டியது.

நாலு ஐந்து மணி நேரத்தால் 'கேவ்' நதியின் தாவாரம் வழியாக ஒருவாறு சென்று 'ஜெவர்னி' பள்ளத்தாக்கை அடைந்தோம். மதிய போசனம் முடித்துக்கொண்டு பிறினீஸ் மலையின் உச்சியைப் பார்த்தோம். அதனையே அக்காலத்தில் உலகின் அந்தம் என்று சொல்லியிருக்கிறார்கள். அப்படிக் கூறியதில் வியப்பில்லை.

கண்பார்வைக்குச் சிக்காத உயரத்தின் சிகரமானது கோடையிலும் பனிப்புகாரால் மூடப்பட்டு மேகங்கள் வந்து கூடி விளையாடும் களமாயிற்று. உச்சியிலிருந்து பசுமையும், மஞ்சளும், செந்நிறமுமான இலைகளைக் கொண்ட மரங்களும் கொடிகளும் பருவகாலப் பயிர்கள் போலத் தோன்றின.

வெடித்துப் பிளந்து உடைந்து உருண்டு கிடக்கும் பாறைத் துண்டுகள் அதிர்ச்சியளித்தன. வரட்சி என்பதன் முதலெழுத்தையும் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் கண்டு கேட்டிராத பசுமை சுமந்த மலைச்சாரலின் பள்ளத்தாக்கில் ஆடு மாடுகளோடு குதிரைகளும் எங்களைத் தலைநிமிர்ந்து பார்த்தன. மலை உச்சியிலிருந்து அருவியூற்றுக்கள் சலசலத்தன.

சிற்றாறுகள் இரண்டு, சிறு கல்லுகளை உருட்டி முழுகவார்த்தபடி ஓடுகின்றன. "பனிப்பாறையில் இருந்து வரும் ஆற்று நீரில் முகத்தைக் கழுவிக் கொஞ்சம் ஒரு முடறு குடியுங்கள், அமுதமான நீர் என்றார்" யாத்திரையின் முதல்வர் என்னருமை எமில்குமார். அவ்வாறே செய்தேன். அது உயிர் தரும் ஜீவ சலம் போன்றிருந்தது.

எனது எண்பத்தைந்து வருட வாழ்க்கையில் அந்த நாள் நான் கண்ட வசந்த காலத்தின் மகுடம்.

மக்கள் பற்றிலே, பாசப்பற்றிலே, அன்பின் பணியிலே நனைந்த உமக்கு, அந்தச் சிற்றாறு கொண்டு செல்லும் தெளிந்த நீர் ஒப்பானது.

தெய்வப் பணி என்பது மனித சேவைதான். அதில்
இருபத்தைந்து ஆண்டுகள் சேவை செய்த உமக்கு
பிறனிஸ் மலையும் கேவ் நதியும் நினைவிருக்கட்டும்.

**"அருட்பணித் துறவிகள் இறைவனென்ற**
**மலையில்**
**ஊற்றெடுக்கும் நதிகள்"**

**- இளவாலை அமுது -**
நூலாசிரியர்

# படலை வாசலில் நின்று....

படலை வாசலில் நின்று உங்களுக்கு ஒன்று சொல்ல விரும்புகிறேன்.

தயவுசெய்து இதற்குச் செவிசாய்த்தருள்க.

அடியேன் தொடர்பு கொண்டிருந்த பல சான்றோர்களைத் தொட்டுக் காட்டியிருக்கிறேன்.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை, புலவர்மணி இளமுருகனார், பேராசிரியர் செல்வநாயகம்...... என்போரிடம் யான் கற்றதையும், கம்பன் தம்பி கண்ணதாசன், பேராசிரியர் கல்கி என்போரிடமிருந்து பெற்றதையும் மறக்க முடியுமா?



அமைதிக்கு வித்திடும் ஆன்மீகத்துக்கும் தேசத்துக்கும் பணிசெய்த ஒரு சில மகான்களையும் கதியால்களில் தொடுத்திருக்கிறேன்.

பயன்படக்கூடிய பல தகவல் களஞ்சியங்களையும் புதைத்திருக் கிறேன். உயிரின் ஆழம்வரை ஊடுருவிச் செல்லும் சில கதியால்களின் வேர்கள் உயர்ந்த கருத்துக்களையும் இரசனைகளையும் தரும் என்பது நிச்சயம்.

பத்திரிசியார் கல்லூரி அதிபர் கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் என் எழுத்துக்கும் சொல்லுக்கும் ஊஞ்சல்கட்டி ஒய்யாரமாக ஆடச் செய் தவர்·புன்னகையும் தண்ணளி

யும் கொண்ட பணியின் தெய்வம். உயிரும் ஊக்கமும் அளித்த பாரியின் வாரிசு.

புதினம் இராஜகோபால், அஞ்சல் மாலி என்போர் எழுத்துத் துறையின் இலண்டன் சடையப்பவள்ளல்கள்.

அறிஞர் தாசீசியஸ் இளமையிலிருந்தே என் கவிதைகளுக்கு ஊறுகாய்ச்சாடி.

கணனியில் என் விரல்கள் நன்கு படியாதமையினால் முழு நூலையும் தானே பொறுப்பேற்று அச்சுக்காகப் பதனிட்டவர் என் பிரிய நண்பர் சீமை இராஜன் என்னும் இராஜசிங்கம் அவர்கள்.

இளமையில் நான் ஆடிய தொட்டில் காவலன்.



என் முழு எழுத்துக்களைப் பதிவு செய்த பூங்கொடி மாதவன் அச்சகம் கடைசி எழுத்துக்களையும் பதிவு செய்வதில் எனக்கு மட்டற்ற மகிழ்ச்சி.

அச்சக அதிபர் ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் என் எழுத்துக்களுக்கு மோதிரம் அணிய ஆசைப்படுபவர்.
எல்லாம் என் தமிழ்த் தாயின் பாற்கடலில் நான் அள்ளிய ஒரு சிப்பி அமுதத்தால் நடந்தேறியவை.

இனி விழிகளால் உங்கள் பயணத்தைத் தொடங்குங்கள்

உங்கள் பிரிய

**- அமுது -**

# பதிப்புரை

லண்டனில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் அபிமானத்தைப் பெற்ற 'புதினம்' இதழின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவில் **"இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்"** என்ற பழம் தரும் சோலையை வெளியிட்டு வைப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்; பெருமையடைகிறேன்.

தமிழைப் பிழிந்து, சாறாக்கி, உள்ளத்தை ஊடுருவும் இளமை எழுத்துக்களால் நெஞ்சை வருடும் சக்தி புலவர்மணி, கலாநிதி இளவாலை அமுது அவர்களுக்கு உண்டு. அவரது எழுத்துக் களைப் படிக்கும்போது அனுபவித்திருக்கிறேன். அது ஒரு சுகானுபவம். அவர் பேச்சைக் கேட்கிற சமயங்களில் எல்லாம் என்னை மறந்து வாய்விட்டுச் சிரித்திருக்கிறேன்.

ஆம். என் இதயத்தில் உயர்வான இடத்தில் இடம்பிடித்து, மௌனமாக வாழ்ந்து கொண்டிருக்கும் சிலருள் ஒருவர் அமுது ஐயா.

சில வருடங்களுக்கு முன்னர் லண்டனில் மறைந்த மற்றொரு தமிழறிஞர் வித்துவான் க. ந. வேலன் தலைமையில் அமுதுவின் கவிதை நூல் வெளியீட்டு விழா நடந்து கொண்டிருந்தது. புலவர்மணி தனது பதில் உரையின்போது, தன் வாழ்வில் நடந்த சில சுவையான நிகழ்வுகளைத் துணுக்குகளாகச் சொன்னார். சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த அவை போன்ற விஷயங்கள், தொடர் அம்சமாகப் 'புதினம்' இதழில் வெளிவர வேண்டுமென விரும்பினேன்.

விழா இறுதியில் விருந்துண்டு கொண்டே அமுது ஐயாவிடம், அவருடைய வாழ்க்கை வரலாற்றை தொடராக எழுதித் தரும்படி கேட்டேன். அவர் எனக்கு என்றுமே மறுப்புச் சொன்னதில்லை. "சரி செய்யிறன்" என்று சொன்னார்.

ஆனால், காலம்தான் பறந்தது! வேலை நடக்கவில்லை. நானும் அவரை விட்டபாடில்லை. எழுதத் தொடங்குமாறு அருட்டி, உருட்டி வந்தேன். எனது பிடியிலிருந்து சுளித்து, நெளிந்து ஒருவாறு தான் சந்தித்தவர்களைப் பற்றி எழுதித் தருவதற்கு ஒப்புக் கொண்டார்.

"என்ன தலைப்புப் போடலாம் மாஸ்ரர்" என்று கேட்டேன்.

"இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்றார். இதைக் கேட்டதும் நூற்றுக் கணக்கானவர் கூடியிருந்த அந்த இடத்தையும் மறந்து, அவரைக் கட்டி அணைத்தேன்.

தாயக மண்ணின் நினைவுகளை மீண்டும் நெஞ்சில் பதிப்பது போன்ற உணர்வோடு கூடிய உயிர்ப்புள்ள தலைப்பு!

பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களைப் பற்றி முதல் அத்தியாயம். அது பலருடைய பாராட்டைப் பெற்றது.

தொடர்ந்து தமிழ்ச் சான்றோர்களின் தொடர்புகள் பற்றி எழுதி வந்தார். சில சமயச் சான்றோரும் வந்து கலந்தனர். கண்ணதாசன், கல்கி, சிவாஜி, வைரமுத்து என்று இன்னும் பலரும் அவரிடம் சிக்கிக் கொண்டனர்.

அமுதுவின் நடையிலே ஒரு கவர்ச்சி. அது எவருமே புரிந்து கொள்ளக்கூடிய இலகுவான கவிதை நடை. பிரசுரத்திற்கு முன்னரும் படிப்பேன்; 'புரூவ்கள்' பார்க்கிறபோதும் படிப்பேன்; பத்திரிகை வெளியான பின்னரும் அனேகமாக விரும்பிப் படிக்கிற ஒரே ஆக்கம் தமிழ் பாற்கடலில் கடைந்தெடுத்த இந்தக் கட்டுரையைத்தான்!

என் வாழ்வின் பெரும் பகுதி பத்திரிகைத் துறையோடு கழிந்துவிட்டது. 'புதினம்' முழுக்க முழுக்க என் கடின உழைப்பில், கடந்த பத்தாண்டுகளை உங்களோடு உலாவி உறவாடி யிருக்கிறது. உங்கள் அரவணைப்பில் திளைத்திருக்கிற 'புதினம்' பத்தாவது ஆண்டு மாபெரும் நிறைவு விழாவில் நல்ல பணி

ஒன்றை 'புதினம்' நினைவாகச் செய்ய விரும்பினேன். அதுவே இன்று உங்கள் கைகளில் நூலாகத் தவழ்கின்றது.

என் இளமைக் காலத்திலிருந்து அமுதுவை நானறிவேன். இலங்கையின் எல்லாப் பத்திரிகைகளிலும் அவருடைய எழுத்துக் களைப் படித்திருக்கிறேன்.

பேராதனைப் பல்கலைக்கழக ஆண்டு வெளியீடான 'இளங்கதிர்' ஆசிரியராக இருந்திருக்கிறார். சொல்லின் செல்வன், தமிழ் கங்கை, புலவர்மணி என்ற சிறப்புப் பட்டங்களை பெற்ற பேரறிவாளன்.

நூறு கோடி மக்களின் தலைவரான பாப்பரசரால் 'செவாலியர்' பட்டமளித்துக் கௌரவிக்கப்பட்ட மாமேதை.

சமீபத்தில் தமிழ்மொழி, பண்பாடு, சமயம் என்பவற்றுக்கு ஆற்றிய தொண்டுகளுக்காக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் அளித்துக் கௌரவித்திருக்கிறது.

இவ்வகையான தமிழறிஞரை எழுத வைத்து, அதனை என் பத்திரிகையில் வெளியிட்டு அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுகிற அரிய வாய்ப்புகள் எல்லாம் கிடைத்தது குறித்து மீண்டும் மீண்டும் பெருமைப்படுகிறேன்.

**38. Moffat Road,**
**London SW17 7EZ**
**Tel: 020 8767 8004**

**ஈ. கே. ராஜகோபால்**
**(ஆசிரியர், 'புதினம்')**

# தமிழ்ச் சான்றோரின் சந்தனமாலை

தமிழ் இலக்கிய வகைகளிலே வாழ்க்கை வரலாற்று இலக்கியம் என்ற ஒருவகை, அண்மைக் காலங்களிலே மிகமுக்கியமானதாக அறிமுகமாகியுள்ளது. தனிமனிதன் ஒருவனின் வாழ்க்கை வரலாற்றினூடாக, அவனது சுயவிருப்பு வெறுப்புக்கள் மாத்திர மன்றி அவன் வாழ்ந்த காலத்துச் சமூக, பொருளாதார, பண்பாட்டு, அரசியல் அம்சங்களும் இலக்கிய நோக்குக்களும் போக்குக்களும் விரும்பியோ விரும்பாமலோ ஏதோ ஒரு வகையில், ஏதோ ஒரு அளவில் இடம் பெறுவதும் தவிர்க்க முடியாததே.

ஒப்பீட்டு அடிப்படையிலே நோக்கும்பொழுது தமிழ்மொழியில் வாழ்க்கை வரலாற்று நூல்கள் மிகக் குறைவாகவே வெளிவந் துள்ளன. ஈழநாட்டைப் பொறுத்தவரையில் மிகச்சிலரே தமது வாழ்க்கை வரலாற்றை எழுதியுள்ளனர். குறிப்பாகப் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை, கனக செந்திநாதன், சிரித்திரன் சிவஞானசுந்தரம், டொமினிக் ஜீவா, எஸ். பொன்னுத்துரை முதலானோர் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள்.

ஆறுமுகநாவலர், வித்துவசிரோமணி கணேசையர் சுன்னாகம் அ. குமாரசுவாமிப்புலவர், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலானோர், தாம் எழுதிய கட்டுரைகளிலே ஆங்காங்கு தமது வாழ்க்கைச் சம்பவங்களைக் குறிப்பிட்டுள்ளனர். இச்சம்பவங் களினூடாகவும் அவர்கள் காலத்துக் கல்வி உள்ளிட்ட வாழ்வியல் அமிசங்கள் பலவற்றைத் தரிசிக்க முடிகின்றது.

அவ்வப்போது பத்திரிகைகளில் இடம்பெறும் அறிஞர்களின் நேர்காணல்களிலும் வாழ்க்கை வரலாற்றுச் சம்பவங்களும் இடம் பெறுகின்றன. இவற்றினூடும் வரலாற்று, பண்பாட்டு, இலக்கியச் செய்திகளைக் கண்டுகொள்ள முடிகின்றது.

ஈழத்திலே சில அறிஞர்களின் வாழ்க்கை வரலாற்றை அவர் களோடு தொடர்புடையவர்கள் எழுதியுள்ளனர். உதாரணமாக

ஜோன். இராசா எழுதிய தம்பிமுத்துப்பிள்ளை சரித்திரம், கணேசையர் எழுதிய குமாரசுவாமிப் புலவர் சரித்திரம், முத்துக்குமாரசுவாமிப்பிள்ளை எழுதிய குமாரசுவாமிப்புலவர் வரலாறு முதலிய நூல்களைச் சுட்டிக் காட்டலாம். இவ்வரலாற்று நூல்கள் புறவயமான நோக்குநிலை அணுகுமுறையிலே அமைவதும் தவிர்க்க முடியாததே.

தமது வாழ்க்கை வரலாற்றைத் தாமே எழுதும்பொழுது 'உள்ளதும் நல்லதுமே' பெரும்பாலும் இடம்பெறும் எனக் கருதலாம். வாழ்க்கை வரலாற்றை எழுதும் ஒருவர் உண்மைகள் எல்லா வற்றையும் சொல்லவேண்டுமென்பதில்லை. ஆனால் அவர் சொல்லுபவைகள் யாவும் உண்மையாக இருக்க வேண்டும்.

கலாநிதி, வித்துவான் அடைக்கலமுத்துவின் (அமுது) "இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்னும் நூலும் ஒரு வகைச் சுயசரிதைதான். அமுது கவிஞரானபடியால் தமக்கேயுரிய பாணியில் தலைப்பொன்றினைத் தந்திருக்கிறார். தான் கண்டவர்களைத் தன்னோடு பழகியவர்களை, தனக்கு ஊக்கமும் உந்துசக்தியும் கொடுத்தவர்களைப் பற்றியே 'அமுது' எழுதியிருக்கின்றார்.

யாழ்ப்பாணத்துப் பண்பாட்டிலே 'வேலி', 'கதியால்' என்பவை மிகவும் முக்கியமானவை. வேலியின் பலத்துக்கும், பாதுகாப் புக்கும், நிலைபேற்றிற்கும் மூலகாரணமாக அமைவது கதியால்களே. கதியால்களிற் பலவகை உண்டு. ஒவ்வொன்றும் ஒவ்வொரு தன்மை வாய்ந்தவை. முள்முருக்கு, கிளுவை, (இதில் முட்கிளுவை, கல்கிளுவை, சீமைக்கிளுவை), பூவரசு முதலானவை யாழ்ப்பாணத்து வேலிகளிலே நாட்டப்படுபவை. வேரோடி வளர்ந்து சடைத்து நிலைப்பவை.

ஈழத்துத் தமிழ் இலக்கிய மரபுக்கு ஒருபக்க வேலியாக நின்று நிமிரும் அடைக்கலமுத்து, இத்தலைப்பைத் தெரிவு செய்தது மிகப் பொருத்தமானதே.

புறத்தாக்கங்கள் அதிகம் ஏற்படாது பழந்தமிழ்ப் பண்பாட்டின் பல விழுமியங்களைப் பாதுகாக்கும் நெடுந்தீவின் மகன் 'அமுது' மண்வளமும் மனவளமும் மிக்க இளவாலையின் மருமகன் ஆனவர். இரு வேறுபட்ட நிலவியல்பும் வாழ்வியலும் செதுக்கிய சிற்பம் அமுது. கல்வி மரபும் கடல்கடந்த உலக சஞ்சாரமும் காலத்துக்குக் காலம் இச்சிற்பத்திற்கு வர்ணம் தீட்டி வடிவாக்கின. அவரது எழுத்து, பேச்சு ஈழம் முதல் இங்கிலாந்து வரை பரந்து விரிந்து வியாபித்தது.

பிறந்த இடம் சிறக்கவும் புகுந்த இடம் பெருமை பெறவும் வாழ்ந்து கொண்டிருக்கும் இவரின் பிள்ளைகள் பூமிப்பந்தின் பல பாகங்களிலும் சீருடனும் சிறப்புடனும் வாழ்கின்றனர். கம்பனின் மொழியிலே கூறுவதானால் 'புதல்வராற் பொலிந்தவர்'.

ஈழத்தின் சிறந்த மரபுக் கவிஞர்களுள் 'அமுது'வும் ஒருவர். மரபு நெறி பிறழாது, பலவகை வனப்பும் பொருந்த இவர் எழுதிய கவிதைகள் நின்று நிலைக்கும் தன்மை வாய்ந்தவை. பொதுவான மரபு வழித் தமிழ் கவிஞர்களுக்கும் இவருக்கும் இடையே வேறுபாடு உண்டு. மனிதரையும் தெய்வத்தையும் மட்டும் பாடாது, சமூகப் பிரக்ஞையுடன் சமூக, பொருளாதார, அரசியல் விடயங்களையும் 'சுடச்சுடப்' பாடும் திறன் கொண்டவர். சமகால அரசியல் பற்றி இவர் எழுதிய கவிதைகள் வனப்புமிக்க வரலாற்று ஆவணங்களாகக் கொள்ளக்கூடியவை.

பயிற்றப்பட்ட தமிழ் ஆசிரியராகவும் வித்துவானாகவும் விளங்கும் கலாநிதி அமுது "முன்னைப் பழமைக்கும் பின்னைப் புதுமைக்கும்" பாலம் அமைக்கும் வல்லமை கொண்டவர். 'நெஞ்சே நினை' என்னும் இவரது நூல் ஆய்வுநெறிமுறையும் ஜனரஞ்சகத் தன்மையும் சங்கமிக்கும் வகையிலே, இந்த 'இரு மரபும் துய்ய' நெறியிலே எழுதப்பட்டுள்ளது. அமுதுவின் 'மேதாவிலாசத்திற்கான' முத்திரையாக இந்நூலைக் கொள்ளலாம். அடைக்கலமுத்துவின் தமிழ்ப் புலமையை அறிந்து, மதித்து கௌரவ கலாநிதிப்பட்டம் வழங்கி யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது மதிப்பினை உயர்த்திக் கொண்டது.

இவர் மிகச் சிறந்த மேடைப் பேச்சாளர். நகைச்சுவை ததும்ப சபையோரை ஈர்க்கும் வல்லமை இவருக்கு இயல்பாகவே

கைவரப் பெற்றது. 'அமுதுவின் நகைச்சுவைகள்' என்ற தொகுப்பு நூல் ஒன்றையே வெளியிடலாம் என்று எண்ணுகிறேன்.

இவரது மொழிநடை, கவர்ச்சியும் செம்மையும் கொண்டது. இந்த நூலிலேயும் இவரது உரைநடைச் சிறப்பைக் கண்டு கொள்ளலாம். இந்த நூலிலே பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை தொடக்கம் மறைந்த மனிதகுல மாணிக்கம் இரண்டாம் யோவான் பவுல் வரை நாற்பத்திநாலு கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. ஏதோ ஒரு வகையிலே தன்மீது செல்வாக்குச் செலுத்தியவர்களை நினைவுகூர்ந்து இந்த நூலை எழுதியுள்ளார். பேராசிரியர் வி. செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன், வித்துவான் வேந்தனார், ஆயர் தியோகுப்பிள்ளை, பேராசிரியர் இம்மானுவேல், பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை முதலானோருடன் பழகிப் பெற்ற அனுபவங்களைக் குறிப்பிடுவது சுவைபயப்பதாய் உள்ளது. கல்கி, கண்ணதாசன், சிவாஜி கணேசன் முதலானோரின் ஆற்றல் தன்னை ஆகர்ஷித்தமையைச் சுவைபடச் சொல்லுகிறார். ஒரு காலகட்டத்தின் ஆவணமாகவும் (Document) இந்நூலைப் பாதுகாக்கலாம்.

'இவன் தந்தை என்நோற்றான் கொல்' என்னும் சொல்லுக்கு இலக்கணமாக வாழும் இவரது அன்பு மகன் வண. சந்திரகாந்தன் அடிகளாரின் குருத்துவப் பணி வெள்ளிவிழா நினைவுக் காணிக்கையாகக் 'தந்தை மகற்காற்றும்' நன்றியாக இந்நூலைத் தருகிறார். அடிகளார் "குறுகுறு நடந்து சிறுகை நீட்டி இட்டும் தொட்டும் கவ்வியும் துளந்தும்" வாழ்ந்த காலங்களைத் தன் நினைவுத் திரையிலே நிழற்படமாக விரியவிட்டு இக்காணிக்கையை 'அமுது' செலுத்தியிருக்கிறார் என்றே நம்புகிறேன். அடிகளாரின் பணிகள் இன்னும் இன்னும் தொடர அப்பா வழங்கும் ஆசியாகவும் இக்காணிக்கையாகக் கொள்ளலாம்

கலாநிதி வித்துவான் அடைக்கலமுத்து (அமுது)வின் தமிழ்ப்பணி தொடர எமது வாழ்த்துக்கள்

**பேராசிரியர் எஸ். சிவலிங்கராஜா**
**தலைவர்,**
**தமிழ்த்துறை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## நூலாசிரியரைப் பற்றி...

# நேர்த்தியும் கீர்த்தியும்

செழுமையான தமிழ்வேலி - அதில் பொட்டுகள் இல்லை
உயர்ந்த கதியால்கள் - வளைவோ இல்லை
நீண்ட வேலி - சொத்தி இல்லை
மூலைகள் உண்டு - முடங்கவில்லை
அடைத்துப் பலகாலம் - கறையான் அரிக்கவில்லை
உட்பக்கம் கதியால்களின் நிர்வாணம் - ஆடோ மாடோ
காந்தவில்லை
வேலியிலே குழை பறித்துண்டு இரை மீட்டியவர் பலர்
கதியால்களின் நிழலிலே வெப்பந் தணித்தவரும் பலர்
மழைத் தூறலுக்கு ஒதுங்கியோரும் உளர்
சாயாத வேலி நல்ல பண்பாட்டு மறைப்பு, தென்பு தரும் பாதுகாப்பு
வேலியின் நேர்த்தி இவ்வளவெனில் அதற்குக்
கதியால் போட்டவரின் கீர்த்தியை எவ்வளவென்பது!
அப் பெருந்தகையர் யாவர்?
படித்துச் சலிக்காது அத்துணை அழகாகத் தருகின்றார்
அமுதுப் புலவர் ஐயா அவர்கள்.

**– பாவலர் கந்தையா இராஜமனோகரன் –**
லண்டன்

## கதியாலூடாகத்
## தமிழ்ச்சான்றோரின் சந்திர பிம்பங்கள்

*வதன அலங்காரமும், கருத்துப் பொருத்தமும், அனுபவ சித்தாந்தங்களும் கொண்ட கதியால்கள் ஒன்றை ஒன்று முத்தமிடு கின்றன. எவ்வளவு அழகான பெண்ணாயிருந்தாலும் வாழ்வில் ஒரு பருவத்தில்தான் அவளுடைய சௌந்தரியத்தின் உச்சம் தெரிகிறது. இந்தக் கதியால்களின் வசந்த காலம் இதுதான். அவற்றின் அழகும் நேர்நிரையும், மதாளிப்பும் கண்ணையும் கருத்தையும் கவ்வி இழுக்கின்றன. கதியால்களினூடாகத் தமிழ்ச் சான்றோர் முகங்கள், சந்திர பிம்பங்களாகத் தோன்றுகின்றன.*

**பேராசிரியர் மணிமாறன்**
திருச்சி

## மணம் வீசும் இதழ்கள்

உயிரின் ஆழம் வரை சென்று தொட்டுப் பார்க்கும் கவிதைகள் படைக்கும் அமுது, உரைநடையிலும் கவிதையின் சுவர்க்கத் துண்டுகளைக் கொட்டிவிடுகிறார்.

இந்த நூல் வரலாற்று ஆவணம். என்றென்றும் பயன்தரக்கூடிய தகவல் களஞ்சியம் கண்ணீரும் சிரிப்பும் கலந்த காவியம். பல ஆச்சரியங்கள் உள்ளே மூச்சுவிடுகின்றன. தொட்டால் மூட மனம் வராது. அறிஞர் களைக் கோத்திருக்கும் முத்துமாலை.

**கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம்**

# 1. அந்தி மந்தாரை

## ஆரம்பம்

தமிழ் அன்னையின் திருவடிகளை வணங்கிப் பூக்களால் அஞ்சலி செய்கிறேன்.

சங்க காலத்தில் வாழ்ந்த அவ்வை மூதாட்டி, பால் பழம் என நாலு கொடுத்து முத்தமிழெனும் மூன்று வரம் கேட்டாள்.

அடியேனுக்கு எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென ஐந்திலக் கணங்களைப் பிழிந்து சாறாக்கி ஐந்து வரம் தந்த திருமகளே! பாடையிலே படுக்கும்போதும் மேடையிலே தமிழ்ப் பாடலைக் கேட்ட படியே கண்மூடவும் உனது வரம் வேண்டும்.

தோண்டும் போதெல்லாம் சுரக்கும் செந்தமிழ்த் தாயே! வேண்டும் போதெல்லாம் விளைகின்ற நித்திலமாயிருந்தாய். கூண்டுக் கிளியாய் ஈழ நாட்டிலிருந்து குரல் கொடுக்கின்றாய்! வெளியே வா தாயே!

வடக்குக் கிழக்கை மாத்திரமல்ல தமிழ் நாட்டையும், உலகின் அந்தங்களிலெல்லாம் பரந்து வாழும் தமிழ்க் குலத்தையும் இணைக்கும் பாசக் கயிற்றை வைத்திருப்பவள் நீதான்! உன்னைப் பயின்று கொண்டிருந்தால் பசியும் வராது.

பாவணர் போற்றும் மூவேந்தர் குலக் கொடியே!

கம்பத்துக்கு மரியாதை அதில் பறக்கும் கொடியின் பெருமையில் தங்கியுள்ளது.

காகிதத்துக்கு மரியாதை அதில் அடங்கிய செய்தியில் தங்கியுள்ளது.

ஓவியத்துக்கு வனப்பு அதற்கு உயிர் கொடுத்தவன் கைகளிலே தங்கியுள்ளது.

கவிஞனுக்கு மரியாதை அவனுடைய எழுத்துக்களில் ஒட்டியுள்ள கருத்திலும் சொல்லாற்றலிலும் கற்பனையிலும் தங்கியுள்ளது.

கதியாலுக்கு மரியாதை அதன் இனத்திலும் செழிப்பிலும் உறுதியிலும் தங்கியுள்ளது.

நிலத்துக்கு அழகு நெல்லும் கரும்பும் என்பார். செங்கரும்பும், செந்நெல்லும், செவ்வாழையும் விளையும் எனது தமிழ்த் தோட்டத்துக்குக் கதியால் போட்டவர்களை நெஞ்சிலே நினைந்து அஞ்சலி செய்கிறேன்.

தமிழ் அறிவு நிரம்பிய மூற்றறிஞர்கள் பலரிடம் பாடம் கேட்கும் வரத்தை அடியேன் பெற்றிருந்தேன். வரன் முறையாக இலக்கண இலக்கியங்களைக் கற்றறிந்த பெரியார்கள், அந்த அமுதத்தை எனக்கும் வார்த்துவிட்டனர். அந்த அமுதசுரபிகளை நீர் வழியும் கண்களோடு நினைவு கூருகிறேன்.

சென்ற நூற்றாண்டின் நடுப்பகுதி, ஈழநாட்டின் தமிழ் வளத்துக்கு ஒரு பொற்காலம் என்று கூறலாம்.

அக்காலப் பகுதியில் வாழ்ந்துவந்த தமிழ்ச் சான்றோர் பட்டியல் மிக நீளமானது.

பண்டிதமணி கணபதிப்பிள்ளை, வித்துவசிரோன்மணி சுப்பையாபிள்ளை, புலவர்மணி இளமுருகனார், வித்துவான் வேந்தனார், வித்துவான் க. கி. நடராசா, வித்துவான் கார்த்திகேசனார் என்போரிடம் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயிலும் பெரும்பேறு கிடைத்தவர்களில் யானும் ஒருவன்.

ஈழத்திலும் தமிழ்நாட்டிலும் புகழ்பெற்றிருந்தவர் மகாவித்துவான் கணேசையர். தொல்காப்பியம் என்ற பழைய இலக்கண நூலுக்குத் தெளிவான உரை எழுதிய மாமேதை.

**அந்த மலையிலே புற்றெடுத்த சுண்டெலிக் கூட்டத்தில் இதுவும் ஒன்று.**

அண்மையில் யாழ்ப்பாணம் சென்றபோது இளவாலைக் கன்னியர் மடத்துத் திறந்த வெளியரங்கில் என்னை வரவேற்றுப் பொட்டு வைத்தனர்.

யாழ் பல்கலைக்கழகத் துணைவேந்தர் 'மதுரகவி' என்ற மதிப்பார்ந்த பட்டத்தை எனக்கு வழங்கினார்.

பல்கலைக்கழகப் பீடாதிபதிகளும், கலைப்பீடத்துச் சான்றோர்களும் எனது எழுத்துக்களையும், நூல்களையும், கவிதைகளையும் பாராட்டினர். ஆனால் எனக்குத் தனிப்பட்ட ஒரு பெருமையுண்டு. சான்றோர் பலரிடம் பாடம் கேட்கக் கிடைத்த பாய்க்கியமே அது! இது எல்லோருக்கும் கிடைக்கக் கூடியதன்று. இதுவே என் வாழ்வின் பெருமைக்குரிய நிதியம்.

"இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்று அடியேன் எழுதும் இந்த நூலிலே தமிழ்ச் சான்றோர் பலரின் வரலாறுகள் வந்து கலக்கின்றன.

மேலும் சமயச் சான்றோர் சிலரின் வரலாறுகளும் என்னோடு பின்னிப் பிணைந்தவை.

பிரித்தானியாவிலும் எனது தமிழ்ப்பணியென்ற பொங்கல் பானைக்கு பால் ஊற்றியவர்கள், பயறு போட்டவர்கள், சர்க்கரை தந்தவர்கள், விறகுவைத்து நெருப்பு மூட்டியவர்கள், சுள்ளிகள் வைத்து அடுப்பு ஊதியவர்களை நான் மறக்கமுடியுமா?

இப்படி ஒரு நூலை எழுத வேண்டும் என்ற எண்ணம் எனக்கு எப்படி உதயமானது? இதைக் கூறுவதே ஒரு சுவையான கதையாகும்.

ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு நடந்த நிகழ்ச்சி நேற்று நடந்ததுபோல் நினைவில் நிற்கின்றது.

எனது காவிய நூல் ஒன்றை அரங்கேற்றம் செய்த வெளியீட்டு விழா நிறைவுற்று மேடையில் நின்று கீழே இறங்கினேன்.

முன் ஆசனத்திலிருந்த பி.பி.சி தமிழ் ஓசை ஆனந்தி அவர்கள் என்னை அணுகி எனது நகைச்சுவையான பேச்சைப் பெரிதும் பாராட்டினார்.

உச்சி குளிர்ந்தபடி மேலும் சில அடிகள் முன்நடந்து சென்றேன். எனக்கு மிகவும் பழக்கமான நல்லிதயம் படைத்த ஒரு மனிதர் ஓடிவந்து என்னைக் கட்டிப்பிடித்து முத்தமிட்டார்.

அவர் முகத்திலிருந்த குறுந் தாடியின் மயிர்கள் என்னை உறுத்தினாலும் அந்த அன்பின் அணைப்பில் திக்குமுக்காடிப் போனேன்.

அவரோடு அவருடைய மீசையும் தாடியும் மகிழ்ச்சியில் மிதந்தன. சிரிப்புச் சிந்தியபடி "நீங்கள் இன்னொரு நூலும் எழுத வேண்டும்" என்றார்.

என்னிலே ஆச்சரியம் கூடுகட்டியது.

"நீங்கள் உங்கள் சுயசரிதையில் ஒரு பிடியைத்தான் இங்கே அவிழ்த்து விட்டீர்கள். முழுச் சுயசரிதையையும் எழுதித் தாருங்கள், இதோ இங்கே நிற்கிறார் பெரியபுள்ளி. இப்படியான காரியங்களுக்குத் தயங்காமல் தோள் கொடுப்பார்" என்று பக்கத்திலே நின்ற லண்டன் முதல் தமிழர் நகைக்கடை "வெஸ்டண் ஜுவல்லர்ஸ்" அமைப்பாளர் சிவசுந்தரம் அவர்களைக் காட்டினார்.

அவரும் சிரித்தவாறே எனது அருகில் வந்து தனது நல்மனதைக் காட்டினார். நான் சில வினாடிகள் மூச்சுவிட மறந்து நின்றேன்.

"நீங்கள் கேட்டவாறே எழுதுகிறேன், ஆனால் எனது சொந்த வரலாற்றை எழுதுவதில் எனக்கு ஆர்வமில்லை. நான் சந்தித்தவர்களைப்பற்றி எழுதுகிறேன்" என்றேன்.

"நூலின் பெயர் என்ன?" என்று உடனே கேட்டார் அந்த விடாக் கண்டர்.

"நான் சந்தித்தவர்கள்" என்றேன்.

"தலையங்கம் அவ்வளவு கவர்ச்சியாய் இல்லையே!"

மின்விசிறி போல வேகமாய்ச் சுழன்றது என் மூளை.

"இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்றேன்.

அந்த மனிதர் ஒரு கலைப் பிரியன். அவருடைய பாரியாரும் நடனக் கலையின் புகழ் ஏணியில் கால் வைத்தவர்.

சொற்களின் வீக்க தூக்கங்களை நன்கு புரிந்த எழுத்தாளன் அவர்.

சொற்களைப் பொறுக்கித் தங்கத்தராசில் நிறுப்பது போலத் தூக்கிப் பார்க்கும் இயல்புடையவர். இன்னும் சொல்லப்போனால் அவர்

ஒரு கட்டளைக் கல். 'கட்டளைக் கல்' என்பது புலவர் மணி இளமுருகனார் ஒருநாள் எனக்குச் சொல்லித் தந்த திருவாசகத்தில் ஒரு துளி. பொற்கொல்லர் தங்க நகைகளை உரைத்துப் பார்க்கும் கைக்கு அடக்கமான கறுப்புக்கல்.

யார் சொன்னது? "பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக் கல்" என்று வள்ளுவரே சொன்னார். நான் சொன்ன தலையங்கத்தைக் கேட்டதும் அவருடைய முகம் பளிச்சிட்டது. "எங்களுடைய அசல் யாழ்ப்பாணத் தமிழ்" என்று பொச்சடித்து என் முதுகில் தட்டி என்னை மறுபடியும் கட்டியணைத்தார்.

அவர் யார் தெரியுமா? லண்டனில் வாழும் பல எழுத்தாளர்களுக்குக் களம் அமைத்துக் கொடுத்து உயர்த்திவிடுகின்ற அன்பன், தமிழ் மண்ணின் பற்றில் சிறந்தவர், பத்திரிகை ஆசிரியன், தமிழ்ச் சான்றோர்களை அழைத்துப் பாவாடை விரித்துப் பன்னீர் தெளிக்கின்ற புதினம் ஆசிரியர் இராஜகோபால் அவர்கள்தான்!

அவ்வேளை என் காவிய வெளியீட்டு விழாவுக்குத் தலைமை தாங்கிய வித்துவான் வேலனாரும் எங்களோடு வந்து சேர்ந்தார். பத்திரிகை ஆசிரியரைப் பிரிந்து சென்றேன். வேலியும் கதியாலும் போன பக்கம் தெரியவில்லை.

தொலைபேசியில் தொடர்பு கொள்ளும் போதெல்லாம் புதினம் ஆசிரியர் "எழுதிப் போட்டீர்களா? எழுதி முடிந்ததை எனக்கு அனுப்பி வையுங்கள்" என்பார். "இன்னும் அதில் ஆனாக் கூடத் தொடங்கவில்லையே!" என்று பலமுறை கூறி அலுத்துப் போனேன்.

காலமும் நேரமும் என்னை அறியாமல் கடந்து கொண்டிருந்தன. அவற்றிலும் விரைவாக என் வயது கல்லறையை நோக்கிப் போகின்றது. ஆகையால் இதோ எனது வேலிக்குக் கதியால் போட்டவர்களைச் சுட்டிக் காட்டுகின்றேன்.

**புத்தகம் எழுதிப் பணக்காரன் ஆகிய தமிழன் யார்?**

*"இந்நாட்டில் எழுதப்படும் வாழ்க்கை வரலாறுகள் பல நாவல்களாகி விடுகின்றன" என்று மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கூறியிருக்கின்றார். அமரர் இராஜகோபாலாச்சாரியார் (இராஜாஜி) சுதந்திர இந்தியாவில் முதலாவது வைஸ்றோய் பதவியில் இருந்தவர். தமிழ் நாட்டின் முதல்வராக இருமுறை பணிபுரிந்தவர். பல நூல்களை எழுதிப் போற்றப் பெற்றவர். காந்தியடிகளின் நண்பர். சிறந்த அறிஞர். உயர்ந்த சிந்தனையாளர்.*

*இராஜாஜியில் ஒப்பற்ற மதிப்பு வைத்திருந்த கல்கி அவர்கள் தமது பத்திரிகையில் இராஜாஜியின் வாழ்க்கை வரலாற்றை எழுதி வந்தார். மூன்று நான்கு அதிகாரங்கள் வெளிவந்த கையோடு அதை எழுத வேண்டாமென இராஜாஜி தடுத்து நிறுத்திவிட்டார்.*

*பேராசிரியர் கல்கியின் வரலாற்றை வெள்ளி மணி என்ற பத்திரிகையில் 'சாவி" (சா.விசுவநாதன்) அவர்கள் எழுதி வந்தபோது அதையும் கல்கி தடுத்துவிட்டார்.*

*ஆனால் பலர் தங்கள் வரலாற்றைத் தாங்களே எழுதியிருப்பதும் நாம் அறிந்ததே!*

*மற்றவர்கள் பார்த்து வியக்கும்படியான தமிழ்ப் பணிகளையோ, சமயப் பணிகளையோ அடியேன் செய்துவிடவில்லை.*

*பத்து நூல்களை எழுதியது பெருமைக்குரியதுதான்! எனது முதல் நூல் "நெஞ்சே நினை" என்பது. அந்த நூலுக்கு ஆனா எழுதும் போதே பேராசிரியர் கல்கி எழுதிய குறிப்பை நான் நெற்றியில் ஒட்டிக்கொண்டேன்.*

*"தம்பி! வேண்டாம்" நான் சொல்வதைக்கேள். வேறெந்தத் தொழிலுக்குப் போனாலும் போ. ஆனால் இந்தப் பாழும் எழுத்துத் தொழில் மட்டும் வேண்டவே வேண்டாம். தமிழ் நாட்டில் புத்தகமோ கட்டுரையோ எழுதிப் பணக்காரனான ஒரு மனிதனைக் காட்டு பார்க்கலாம். இங்கிலாந்தில் பெர்னாட்சோவும் செஸ்டர்டனும் புத்தகம் எழுதி இலட்சாதிபதிகளானால் அதனால் உனக்கும் எனக்கும் என்ன ஆயிற்று? - ஆ.வி.13:-03-1931.*

கல்கி முதலில் 'சாரதையின் தந்திரம்' என்ற நூலை வெளியிட்டு 'உடும்பு வேண்டாம் கையை விட்டாலே போதும்' என்ற நிலமை உண்டாயிற்று.

ஆனால் பிற்காலத்தில் 'கல்கி' பத்திரிகை வெளியீடு பாரத நாட்டில் இரண்டாம் இடத்தைப் பிடித்தது.

கல்கி எழுதிய பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன், அலையோசை முதலிய நூல்கள் இலட்சக்கணக்கில் விற்பனையாகி இன்று அமரர் கல்கி தமிழ் நெஞ்சங்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறார்.

கல்கியைப் போல் சிறந்த மொழி அறிவும், இலக்கிய ஆட்சியும், பல நூல்களை வாசித்தறிந்த அனுபவமும், வரலாற்று ஞானமும் ஒரு எழுத்தாளருக்குத் தேவை. இவையில்லாவிட்டால் எழுத்துத் துறையில் வெற்றிக்கொடி உயர்த்த முடியாது என்று யாராவது கூறிக் கல்கியைச் சுட்டிக்காட்டினால் அதை ஏற்றுக்கொள்ள முடியாது. ஏனெனில் கடந்த ஆனி மாதம் (2005) கரிப்பொட்டர் (Harry Potter) என்ற நூலை எழுதிய பெண்மணி தனது ஆறாவது நூலை வெளியிட்டிருக்கிறார்.

இளஞ்சமுதாயத்தினர் இரவு முழுதும் கண்விழித்துக் கடைவாசல் களில் காத்திருந்து, கடை திறந்ததும் முண்டியடித்து அந்த நூலை ஆசையோடு பெற்றுக் கொண்டார்கள். இந்த நூலை எழுதியவர் ரவுலிங் என்ற பிரித்தானியப் பெண்மணி.

ஓரே நாளில் இந்த நூலின் கதாசிரியர் சம்பாதித்தது முன்னூறு கோடி ரூபாய்.

இந்த இளம் எழுத்தாளர் அநுபவசாலியுமல்லர். தன் குழந்தையைக் காப்பாற்றவே எழுதத் தொடங்கினார். புத்தகப் பதிப்பாளர் பலர் திருப்பி அனுப்பிய கதையை ஓருவர் பதிப்பிக்க முன்வந்தார். அதிலே கவர்ச்சி என்ற இரசாயனம் நிறைந்திருந்ததை அவரே மட்டிட்டார்.

இன்று ஜே.கே.ரவுலிங் கோடிகளைக் குவிக்கும் ஓர் இல்லத்தரசி. 200 நாடுகளில் 61 மொழிகளில் மொழிபெயர்க்கப் பெற்ற 'ஹரிப்பொட்டர்' புத்தகங்கள் இதுவரை 25 கோடி நூல்கள் விற்பனையாகிவிட்டன.

இவ்வாறு நிகழும் என நூலாசிரியரோ, பதிப்பாசிரியரோ கனவும் காணவில்லை. இது எழுத்துலகத்துக்கு அதிர்ச்சி தரும் செய்தி.

அடியேன் வருமானத்தைக் கருத்தாகக் கொண்டு நூல்களை எழுதுவதில்லை. 'அன்பின் கங்கை அன்னை திரேசா' என்ற நூலை லண்டன் 'அக்ரன்' மண்டபத்தில் அரங்கேற்றம் செய்தேன்.

அன்றே ஐந்நூறு பிரதிகள் விற்பனையாகின.

இப்போது அந்த நூல் யாழ்ப்பாணத்தில் மூன்றாம் பதிப்பாக வெளிவந்துள்ளது. நூற்றுக்கணக்கான அனாதைச் சிறுவர்களுக்கு அபயம் அளிக்கும், பத்திரிசியார் கல்லூரி முன்னாள் அதிபர், மூதறிஞர் மதுரநாயகம் அடிகளாரின் சேவைக்கு இந்நூல் அர்ப்பணமாகியது.

இவ்வாறு என் நூல்கள் வெவ்வேறு தேவைகளுக்குப் பயன்பட்டன. **"இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்" என்ற இந்த நூல் புதினம் பத்திரிகையின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவின்போது வெளிவருகின்றது.**

இதுவே எனது கடைசிக் கைவரிசை. பொழுது சாயும் வேளை மலரும் பூக்களை அந்தி மந்தாரை என்பர். எனது நீண்ட வாழ்வில் பொழுது சாயும் வேளை இது.

எனவே இந்த முதலாவது கட்டுரைக்கு 'அந்தி மந்தாரை' எனப் பெயரிட்டிருக்கிறேன்.

பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

01

# "மூன்றாவது கண்"



தமிழ் இலக்கியத்தின் திறனாய்வில் பண்டிதமணி ஒரு மகாநதி. அந்த நதியில் தோய்ந்த அவருடைய மாணவர்கள், பண்டிதமணியை நெஞ்சிலே நினைந்து அஞ்சலி செய்வார்கள்.

இலக்கிய நயம் என்பதை, "பருவமான பிஞ்சு மாங்காய்ப் பிளவுகளோடு உப்பையும் அளவாகச் சேர்த்து, வாயிலிட்டு ஒருவர் சுவைத்தால், மற்றவருக்கு வாயூறும்! அப்படி வாயூறாவிட்டால் அது பெரிய தவறு. ரசஞான விரோதம்!" என்று பண்டிதமணியே எழுதுகிறார்.

நாவலருக்குப் பின் ஈழநாட்டில் பேரும் புகழும் பெற்று வாழ்ந்த தமிழ் அறிஞர், பண்டிதமணி கணபதிப்பிள்ளை அவர்களே!

பண்டிதர் என்று சொன்னாலே அவர் பெயரையே சுட்டுவதாயிருந்த காலமும் ஒன்று இருந்தது.

பிறகு 'பண்டிதமணி' என்ற சிறப்புக் கௌரவப் பட்டத்தால் அவர் பெயர் நீண்டகாலம் நிலை பெறுவதாயிற்று.

இற்றைக்கு 50 ஆண்டுகள் முந்திய காலப்பகுதியை யாழ்ப்பாணத்தின் பொற் காலம் என்று குறிப்பிடலாம். தமிழ்மொழி வளர்ச்சியின் வசந்த காலம் அது.

இந்தக் குறிப்பிட்ட காலப்பகுதியில் தமிழ்மொழி, சைவசமயம் என்பவற் றிற்கு ஒரு சாயலைக் காட்ட வேண்டுமாயின், பண்டிதமணி அவர்களைச் சுட்டிக் காட்டுவதே பொருத்தமாக இருக்கும்.

ஆயுட்காலம் முழுவதும் தமிழ்ப் பணியும், சமயப் பணியும் தந்த அன்பு நிழல்.

பொய்யின் பாடசாலை என்று கூறப்படும் இந்தப் பூமியில், புண்ணியத்தின் பயிர்களை நட்டு, கண்ணியமாக வாழ்ந்து, எண்ணற்றவர்களுக்கு, இலக்கிய விருந்தளித்து, விண்ணுலகு சென்ற கண்மணி..

பாரம்பரியம் என்ற படிகளில் ஏறி மேடைக்கு வந்த ஓடை மலர்.

ஐந்து விரல்களையுமே ஆயுதமாகக் கொண்டு மண்ணைப் பொன்னாக்கு வார்கள் கமக்காரர்.

எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங் களையும், வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த தமிழ் நிதியங்களையும், ஓதி உணர்ந்தவர்.

அவருடைய சொல்வளம், குயில்களின் கூட்டிலிருந்து உதயமானது.

**இலக்கணச் சுத்தமும், இலக்கியச் சிந்தனையும் இழையோடிக் கொண்டிருக்கும் யாழ்ப்பாணத் தமிழ் மரபுக்குப் பண்டிதமணியும் அவரைத் தமிழ் ஈழத்துக்குத் தந்த மேதைகளுமே வேர்கள் விலாசங்கள்.**

இன்று நல்ல தமிழ் பேசும் யாழ்ப்பாணத்து இனிய தமிழ் வளர்ச்சிக்கு, உரமும் ஊட்டமும் அளிப்போர், பண்டிதமணியின் தமிழ் மரபினரே.

நகைச்சுவையாகப் பேசுவதில் பண்டிதமணிக்கு இணையான ஒருவரை நான் கண்டதில்லை.

கவிதைகள், நாட்டுப் பாடல்கள், பழமொழிகள், கதைகள், சிலேடைக் கருத்துக்கள் எல்லாம் அவர் பேச்சில் கைகட்டிக் கொண்டு பக்கத்தில் ஓடி வரும்!

சின்னச் சின்ன வசனங்களில், தெளிந்த சிற்றாறுபோல், அவர் உரை ஓடிக் கொண்டிருக்கும்!. கேட்போருக்குப் பஞ்சாமிர்தமாக இனிக்கும்!

உயர்ந்த வெள்ளை நிறமேனி, அழகான சின்ன முத்துப்பற்கள், கவர்ச்சியான கண்கள், பால் நிறத்தில் வெள்ளை வெளீரென்ற வேட்டி,

மேற்சட்டை, சால்வை! அவை ஆளுக்கும், பேச்சுக்கும், சபைக்கும் மதிப்புத் தரும்!

சில சமயங்களில், குதிக்காலை உயர்த்திக் கொண்டு, துள்ளி எழுந்து பேசுவதும் உண்டு!

குறைந்தது ஒரு மணி நேரமாவது பேசுவார். பேச்சு முடிந்ததும் பெருமூச்சுக்கேட்கும்.

"ஐயோ! பண்டிதர் பேச்சு முடிவுற்றதே!" என்று பலர் பெருமூச்சு விடுவார்கள்.

பண்டிதமணியின் சக்தி என்னத்தில் தங்கியிருக்கிறது? இலக்கண இலக்கிய வழிகளில் அவர் ஊறியிருப்பதிலா? அவர் கையாளும் உவமைகள், சிறுகதைகள், வரலாறுகள் எனபவற்றிலா? தனிப்பட்ட ஆளுமையிலா? கற்றுக் கொண்ட ஆசிரியப் பெருமக்களின் ஆற்றலிலா? அவர் பின்பற்றிய வித்துவ சிரோன்மணி பொன்னம்பலபிள்ளையின் ஆதிக்கமா?

இலக்கிய இரசனையின் சிறப்பே அவரை உச்சத்தில் வைத்து மெச்சிப் போற்ற வழிசெய்தது எனலாம்.

அவர் நடாத்தும் இலக்கிய வகுப்புகளுக்குப் பயிற்சிக் கலாசாலை அதிபரே சென்று பாடங் கேட்பதுண்டு.

பண்டிதமணியின் புகழின் மூலவேர், இலக்கிய இரசனைதான் என்பது, "மூன்றாவது கண்கள்" என்ற நூலை எழுதிய கனக செந்திநாதன் என்பவருடைய கருத்துமாகும்.

பண்டிதமணியை அவர் "மூன்றாவது கண்கள்" என எழுதுகிறார். பண்டிதமணியின் இலக்கிய இரசிகனே கனக செந்திநாதன். இவர் எனது காலத்தில் சைவாசிரிய பயிற்சிக் கலாசாலையில் கற்று வந்தவர் (1938) என்பதோடு, நாவலர் காவியப் பாடசாலையிலும் என்னோடு பண்டித வகுப்புக்களில் கற்றவர் என்று கூறி, அவருடைய புகழில் நானும் தொட்டுப்பூசிக் கொள்ளலாம்.

சொற்கள் எல்லாம் கவிதைகள் ஆவதில்லை. கற்கள் எல்லாம் சிலைகள் ஆவதுமில்லை.

சிறந்த சொற்கள் உரியமுறையில் புலப்படுத்தப்படும்போது, அங்கே கவிதை தோன்றுகிறது இலக்கியம் பிறக்கிறது.

அறிவியல் அறிஞனுக்குக் காகம் ஒரு பறவை. குருவியும் ஒரு பறவை. மணலும், கல்லும், மண்ணும் சேர்ந்தது மேடு. கடல் ஓர் நீர் நிலையம்.

இலக்கிய உணர்ச்சி பெற்றவனுக்கு இவை அனைத்தும் சொந்த பந்தம்! இதனால்தான், "காக்கை குருவி எங்கள் சாதி" என்றான் பாரதி. இலக்கிய இரசனை என்பது சாதாரண மக்களுக்கும் உள்ள உணர்ச்சிதான்!

கண்ணதாசன் கவிதைகள் அழவைக்கவில்லையா? சிரிக்க வைக்க வில்லையா? தத்துவக் கருத்துக்களை எடுத்து ஓதவில்லையா? உணர்ச்சி நரம்புகளைக் கிள்ளி விடவில்லையா? இலட்சக் கணக்கானோரை ஆட்டிப் படைக்கவில்லையா?

உயர்ந்தோரையும் இலக்கியம் விட்டுவைக்கவில்லை!

"கையில் கம்பன் கவியுண்டு" என்று கவிமணி தேசிகவிநாயகம்பிள்ளை கூறுகிறார்.

திருவாசகத்தை முறையாக ஓதிக் கண்ணீர் மல்கி நின்ற சிவப்பிரகாச சுவாமிகளை மறக்கமுடியுமா?

திருவாசகத்தை உணரந்தமையால் அன்றோ, "திருவாசகம் எனும் தேன்" என்ற தித்திக்கும் வரி உதயமாயிற்று.

அரிச்சந்திர நாடகத்தால், நெஞ்சிலே கண்ணீர் பாய்ந்தவர்கள் ஆயிரம்!

பாரதி பாடல் அடிமை முதுகை நிமிர்த்திவிடவில்லையா?

பாரதிதாசன் பாடலகள் அறிஞர் அண்ணாவின் மனத்தைப் பற்றிக் கொண்டன.

"வேட்ஸ்வேத்தின் பாடல்கள் என் மனநிலைக்கு மருந்தாய் இருந்தன" என்றார் வரதராசனார்.

அறிஞர் மு.வ., கல்கி என்போரின் எழுத்துக்கள் பல்லாயிரம் பேரைக் கவர்ந்திழுத்தன.

இந்த வரிசையில் பண்டிதமணியும் சேர்ந்து கொள்கிறார்!. இலக்கிய இரசனையில் மிதக்க வேண்டுமானால் பண்டிதமணியின் வகுப்பில் படிக்க வேண்டும்.

## முதலாவது வகுப்பு

சைவாசிரிய கலாசாலையில் படித்தவர்கள் பேறுபெற்றவர்கள்!

அவர் காலத்தில் வாழக் கிடைத்ததும், உரைகளைக் கேட்டதும், காவியப் பாடசாலையில் பாலபண்டித வகுப்பில் அவரிடம் பாடம் கேட்டதும், எனக்குக் கிடைத்த பெரும் பேறுகளாகும்.

வேலிக்கு வாய்த்த சிறந்த ஒப்பற்ற கதியால் அதுதான்! முதல்நாள் திருநெல்வேலி காவியப் பாடசாலையில் "கலிங்கத்துப் பரணி" என்ற நூலை அவர் தொடக்கி வைத்தார்.

எனது நீண்ட கால வாழ்வில் ஆயிரக்கணக்கான செய்திகளை மறந்து போனேன்! நூற்றுக் கணக்கான பாடல்கள்கூடக் காற்றோடு போய்விட்டன.

முதல்நாள் கலிங்கத்துப் பரணி படித்ததை மாத்திரம், என் நெஞ்சம் என்ற சுவரில் மாட்டியிருக்கிறேன்!

காலத்தால் அழியாத கற்கோபுரமாக அது காட்சி தருகிறது!

எத்தனையோ வித்துவான்கள் பண்டிதர்கள் அறியாத ஒரு மரபு பண்டிதமணியிடம் உண்டு.

படிப்பிக்கும் பாடத்தை மணம் குணமாக தாளித்துத் தருவதில், அவர் ஒரு நிபுணர்.

பரணி என்றால் என்ன என்று பாடம் ஆரம்பமானது! ஆயிரம் யானைகளைப் போரிலே வென்ற மாவீரன்மீது பாடப்படுவது "பரணி" என விளக்கினார். "கப்பிலிருந்து சொல் சொல் என்னும் பல்லிக்கும் கண்ணைப் பொத்தி வெளுக்கும் சண்டியர்கள் தங்களுக்கும் பரணி பாடச்சொல்லிக் கேட்கினம்..." இக்காலத்து அரசியல் வீரர்களைப் பற்றி ஒரு நக்கல். குலோத்துங்க சோழன் கலிங்க நாட்டின்மீது படைஎடுத்த வரலாறு தொடர்ந்தது. சயங்கெண்டார் என்ற கவிச்சக்கரவர்த்தியின் ஆற்றலைக் கூறிய வேளை, அவரே ஒரு சயங்கொண்டாராக மாறிக்கொண்டார்.

சொற்சுவையும் பொருட்சுவையும் கலந்த தாழிசைப் பாடல்கள், நாலைந்து அவரே பாடிக் கருத்துக்களையும் விரித்தார்.

கரிகாலனுடைய வீரப்படை செல்லும்போது, குறுக்கே மறித்த இமயமலையைத் துளைத்து, அங்கே புலிக்குறி பொறித்த வீர வரலாறு கேட்க இதமாகவும், வீரத்துக்குச் சான்றாகவும் இருந்ததோடு, சயங்கொண்டாருடைய சொல்லாட்சியும் திகைக்க வைத்தது.

**செண்டு கொண்டு கரிகாலன் ஒருகாலம் இமயச்**
**சிமய மால்வரை திரித்து அருளிமீள அதனைப்**
**பண்டு நின்றபடி நிற்கஇது என்று முதுகில்**
**பாய் புலிக்குறி பொறித்தது மறித்தபொழுதே**

கலிங்கப் பரணியில் கடைதிறப்பு என்ற முதலாம் அதிகாரம், அகப்பொருள் தழுவியதே.

பண்டிதமணியோ நைட்டிகப் பிரம்மச்சாரி.

பண்டிதர் இப்பாடல்களை மெல்லிய குரலில் அவருக்கே உரிய பாணியில் படிக்கும்போது புதுமையாக இருக்கும். சந்தம் மாறாத வகையில் பாடுவார். உரையும் கற்போரைக் கவர்ந்திழுக்கும்!

அக்காலத்தில் (1939-1940) கலிங்கத்துப் பரணிக்கு எவராவது உரை எழுதவில்லை.

மூல பாடம் கொண்ட நூல்களும் கிடைப்பதற்கு அரிதாய் இருந்தன என்பதையும் நாம் மனதிற்கொள்ள வேண்டும்.

"கடை திறப்பு" தொடங்கவே, அவரது சிவந்த சொண்டுகள் எங்களைப் பார்த்துப் புன்னகை பூக்கும்.

வாலிப எல்லை கடந்து தாலிபூட்ட நினைக்கும் ஆசிரியர்கள், ஆசிரிய மாணவர்கள், பண்டிதமணியிடம் பாடம் கேட்கும் ஆசையில் மிதந்து வந்த கூட்டத்தினர் என்போர் அடங்கிய வகுப்பு! விளக்கவுரைகளை நாங்கள் ரசிக்கின்ற பாணியைக் கவனித்துக் கண்களை எறிவார் பண்டிதர்!

சில பாடங்களுக்கு முன்னுரையே விளக்கவுரையாகவும் இருக்கும். "பணம் இல்லாதவை இருந்தாப்போல" பெருவாரியான பணத்தைப் பெற்றால், கொண்டு போய்ப் பெட்டிக்குள்ளே பூட்டிப் போடுவினம் ஆருமில்லாத நேரம். நாலு பக்கமும் பார்த்துப்போட்டு, எண்ணிப் பார்த்துவிட்டு, மீளவும் பூட்டிவிடுவினம்.

முலையிலே கணவன்மாருடைய கைவிரல் நகம் பதிந்த அடையாளம் நாணயக்குத்திகள் பதிந்ததுபோல இருக்கும்.

ஒருதரும் காணாத இடத்திலை போய், மெல்லத் தாவணியைக் கழற்றி, நெஞ்சில் பதிந்த அடையாளங்களைப் பார்ப்பார்கள் இளம் பெண்கள்! அது முந்திப் பணமில்லாமல் வறுமையில் கிடந்தவர்கள் கண்ட பெரும் நிதிபோல, மகா சந்தோசமாயிருக்கும். அது அழியக்கூடாது என்று நினைத்து அவசரமாக சீலையினால் மூடிப்போடுவார்கள். - இப்படியான பெண்களே!

"இதோ கலிங்கத்துப் போரில் வென்று வந்துவிட்டோம், சாத்திய கதவைத் திறவுங்கள்" என்று போர் வீரர்கள் கூறுகிறார்கள். பாடல் இதுதான்-

**முலைமீது கொழுநர் கை நகம் மேவு குறியை**
**முன் செல்வம் இல்லாதவர் பெற்ற நிதிபோல்**
**கலைமீது எடா(து) யாரும் இல்லா இடத்தே**
**கண்ணுற்று நெஞ்கம் களிப்பீர்கள்- திறமின்-**

கொழுநர் - கணவர் கலை - சீலை

தாழிசைப் பாடலைப் பாடியதும், வகுப்பை ஒரு புன்சிரிப்போடு பார்ப்பார்! "இங்கே சிலருக்கு, நான் சொன்ன உரையிலும் பார்க்கக் கூட நல்ல விளக்கம் இருக்குதுபோல" (வகுப்பில் ஒரே சிரிப்பு)

ஒரு பாடலுக்கு உரை கூறும்போது அந்தச் சந்தர்ப்பத்துக்கு பொருத்தமான வரிகளை பிற நூல்களில் இருந்து எடுத்துக் கூறுவது பண்டிதமணிக்குக் கைவந்த கலை!

"நின் பிரிவினும் சுடுமோ பெருங்காடு" என்று சீதை இராமனுக்குக் கூறிய சோக வரிகளை நினைவூட்டும்போது, "துன்பம் துணையாக நாடின் அதுவன்றி இன்பமும் உண்டோ எமக்கு" என்று கலித்தொகைத் தலைவி, தலைவனைப் பார்த்து, அவலக்குரல் எழுப்பும் அற்புத வரிகள்.

"போற்றா ஒழுக்கம் புரிந்தீர்" என்று கண்ணகி எழுப்பும் நெருப்பு வரிகள். இப்படித் தொடர்ந்துவரும் இலக்கிய வரிகள், எங்கள் நெஞ்சில் விழும்போது, இலக்கிய இரசனை வெள்ளத்தில் குமிழிகள் தோன்றும்! எனவே பண்டிதமணி கனக செந்திநாதனுக்கு மட்டுமல்ல, அவரிடம் கற்ற அனைவருக்கும் மூன்றாவது கண்ணாக விளங்கினார்.

பண்டிதமணி செய்த செயற்கரும் செயல்களில், அவருக்கு நிலையான பேற்றை அளித்தது, காவியப் பாடசாலை என்பது செந்திநாதன் கருத்து.

அடியேன் ஒரு பாடலில் "காவியப் பூ வாவியின் அன்னம் என்றும் பண்டிதர்கள் தாய் மடியே" என்றும் எழுதியிருந்ததைப் பேராசிரியர் தில்லைநாதன் அவர்கள் பாராட்டியிருந்தார்.

இந்த வேலிக்குப் போட்ட கதியால் எங்கேயோ தொடங்கி எங்கேயோ போய்விட்டது! பண்டிதரின் ஆரம்பகால வரலாறுகளைத் தொட்டுக் காட்டாமல் விட்டுவிட்டேன்.

## மீண்டும் பண்டிதமணி

02

**ப**ண்டிதமணி பிறந்த ஊர் மட்டுவில்(1899). மட்டுவில் தமிழ்க் கல்வி நலஞ்சார்ந்த ஊர். அங்குதான் உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை என்ற சான்றோர் வாழ்ந்து வந்தார்.

இந்து சாதனம் என்ற பத்திரிகை ஆசிரியராயும், இந்துக்கல்லூரி ஆசிரியராயும் பணிபுரிந்த திருஞான சம்பந்தப்பிள்ளை, கோப்பாய் அரசினர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலைத் தமிழ் விரிவுரையாளர் பண்டிதர் மகாலிங்கசிவம், இளவாலையிலும் காரைநகரிலும் ஆசிரியராயிருந்த நடராசா பீ.ஏ. என்பவர்கள் உரை ஆசிரியரின் புத்திரர். இவர்களோடு பண்டிதமணி கூடிக்குலாவியும் சேர்ந்து படித்தும் வந்துள்ளார்.

உரையாசிரியருடைய இலக்கிய நலனையும், திறனையும் பண்டிதமணி அறிந்திருந்தார். ஆனால் நேராக அவரிடம் பாடங் கேட்டதில்லை என அறிகிறோம்.

உரையாசிரியருடைய பிள்ளைகளின் தொடர்பால் நாவலர் காவியப் பாடசாலையில் 18 வயதில் சேர்ந்து, சுன்னாகம் குமாரசுவாமிப் புலவர் அவர்களிடம் பாடம் கேட்டார்.

புலவர் அவர்கள் புகழ்பெற்ற முத்துக்குமார கவிராயரின் வித்துவப் பரம்பரையில் வந்தவர். மேலும் புலவர் அவர்கள் முருகேசப் பண்டிதரிடம் இலக்கண இலக்கியங்களைக் கற்றதோடு, நாவலரோடு தொடர்புற்றிருந்தவர்.

"எனது கண்கண்ட தெய்வம்" என்று பண்டிதமணி புலவரைக் குறிப்பிடுவதிலிருந்து அவர்களுடைய தொடர்பு புலப்படுகின்றது. கம்பராமாயணத்தைச் சுருக்கி, இராமோதந்தம் என்ற நூலைச் செய்யுள் வடிவில் யாத்தவர் புலவரே!

புலவர் அவர்கள் மறைவின் பின்னர் வித்துவான் சுப்பையாபிள்ளை அவர்களிடமும் தென்கோவைப் பண்டிதர் கந்தையாபிள்ளை அவர்களிடமும் தொடர்ந்து படித்து மதுரைப் பண்டிதர் பரீட்சையில் சித்தி பெற்றார்.

கோப்பாய் அரசினர் பயிற்சிப் பாடசாலையில் சேர்ந்து பயிற்சி பெற்றார். கோப்பாயில் பண்டிதர் மகாலிங்கசிவம் அவர்களிடம் பாடம் கேட்கும் வாய்ப்புப் பெற்றார் எனக் குறிப்பிடத் தேவையில்லை.

ஆசிரிய கலாசாலைப் படிப்பு பண்டிதருக்கு மேலைத்தேச கீழைத்தேச அறிவையும், கற்பிக்கும் ஆற்றலையும் கொடுத்தது என்பர்.

தாம் கல்வி கற்ற காலத்தில் ஈழநாட்டில் வாழ்ந்த தமிழ்ப் பேரறிஞர்களிடம் கற்றமை, அவருடைய பேருக்கும் புகழுக்கும் அடிகோலியது எனக் கூறலாம்.

நாவலரில் பண்டிதமணி ஒப்பற்ற உயர்மதிப்பைக் கொண்டிருந்தார். நாவலரைப் பற்றிப் பேசுவதும் எழுதுவதும் அவருக்கு மனமகிழ்ச்சியைத் தந்தன.

வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, த. கைலாசபிள்ளை, குமாரசுவாமிப்பிள்ளை என்போர் நாவலர் தமிழ் மரபைச் சார்ந்தவர்கள்.

அந்த நீண்ட கொடியில் பண்டிதமணியும் இணைந்து பெருமையளித்தார். ஈழநாட்டில், சைவத் தமிழ்ப் பண்பாட்டுக்கும், கல்விக்கும் உயர்பீடமாக அமைந்தது திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலை.

அங்கே 30 ஆண்டுகள் (1929-1959) பணிசெய்து தமிழ் மக்களின் பெருமதிப்பைப் பெற்றுக் கொண்டார்.

1937ஆம் ஆண்டு சைவாசிரிய கலாசாலையில் இருந்து "நாவலன்" என்ற ஆண்டு மடல் வெளிவந்தது. அதிலே "பொடிக்குறள்" என்ற தலையங்கத்தில் வெளிவந்த ஒரு குறளை அடியேன் இன்னும் நினைவில் இருத்தியுள்ளேன்.

"பொடி" என்பது மூக்குத்தூள். சுருட்டு, பீடி என்பன போல மூக்குத் தூளும் பயன்படுவது வழக்கம். நித்திரையைப் போக்கவும், உற்சாக மளிக்கவும் மூக்குத்தூள் பயன்படலாயிற்று.

இக்காலத்தில் "பொடி" பாவிப்பவர்களைக் காண்பது அரிது. 50-60 ஆண்டுகளுக்கு முன்பு யாழ் மக்கள் மத்தியில் பொடி நல்ல புழக்கத்தில் இருந்தது! புகையிலைத் தூளிலிருந்துதான் இந்தப் பொடியைச் செய்வார்கள். வாழைத்தாரின் சருகுகளை மடித்து, அதற்குள் பொடித் தூளை வைத்து, அதனை அந்தந்த வேளை இரு விரல்களால் மூக்கில் வைத்து இழுப்பதுதான் முறை..

**"மடியில் பொடியிலான் வாழ்க்கை பொழுது**
**விடியப் பனி போல் கெடும்"**

என்று பண்டிதமணி 10 குறட்பாக்களை எழுதியிருந்தார். பொடியைப் பயன்படுத்துவோர் மூக்குப் பொடியிலும் பார்க்க இந்தக் குறட்பாக்களை விரும்புவார்கள் என நம்புகிறேன்.

நிற்க, "பெருந்தொகையான பண்டிதர்கள், தமிழ் அறிஞர்கள் ஆகியோர் தங்கள் திறமைக்குப் பண்டிதமணியின் நெறிப்படுத்தலும் திறமையுமே காரணம் எனக் கொள்வர்" என்று பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் நினைவு மலரில் குறிப்பிடுகிறார்.

**பண்டிதமணியின் பேச்சுக்கலை**

சைவ ஆசிரிய கலாசாலையில் விரிவுரையாளரான காலத்திலிருந்து பொது அமைப்புக்களில் பங்குபற்றி உரையாடினார் பண்டிதமணி.

தமிழர் வாழும் மூலை முடக்குகளிலும் அவர் பேச்சுக் கேட்டது. பாடசாலைகள், கோயில்கள், கல்லூரிகள், பொதுச் சபைகள், ஆண்டு விழாக்கள் போன்றவற்றிலும் அவ்வப்போது சொற்பொழிவாற்றி வரலானார்.

சபையை அறிந்து அதற்கேற்பப் பேசும் ஆற்றல் அவரிடம் இருந்தது! பண்டிதர் படிப்புக்கு ஏற்பக் கையாளும் கடும் தமிழை அவர் கையாண்ட தில்லை. இலக்கணம் சுத்தமாகப் பேசி வாழ்க்கை நடத்துவதிலோ, பேசுவதிலோ அதிக கவனம் கொள்ளவில்லை.

யாழ்ப்பாணப் பேச்சுத் தமிழே அவர் வாயில் வரும்! இலக்கியப் பூச்சு அதிலே தெரியும். அவருடைய இனிய பேச்சு என்னும் மசாலாவில், உப்பு, மிளகு, பூண்டு, சீரகம், வெங்காயம், கசகசா, பச்சை மிளகாய் எல்லாம் அளவாகச் சேர்ந்திருப்பதால் அதன் சுவை நெஞ்சை அள்ளும். அவருடைய பேச்சை மெச்சி மக்கள் பாராட்டினர்! அதனால் பட்டிதொட்டி யெல்லாம் பேசவருமாறு அவரை அழைத்தனர்.

தேவை அறிந்து கண்டன உரைகளும் அவர் நிகழ்த்துவார். யாழ்ப்பாணத் தையும் யாழ் அறிஞர்களையும் தமிழ் நாட்டில் சிறுமைப்படுத்தி யிருந்தால் பண்டிதமணி கொதித்து எழுவார்.

அப்போது தமிழ் ஆசிரிய சங்கம், சைவ வித்தியா விருத்திச் சங்கம், கலாநிலையம், பாஷாபி விருத்திச் சங்கம், சைவ பரிபாலன சபை, வாலிபர் சங்கம் எனப் பல்வேறு சங்கங்கள் இயங்கி வந்தன. அவற்றில் சான்றோர் பலர் இணைந்து செயல்பட்டனர். சு. நடேசபிள்ளை, சதாசிவ ஐயர், சுவாமி ஞானப்பிரகாசர், ஹண்டி பேரின்பநாயகம், க.ச.அருள்நந்தி, கலைப்புலவர் நவரத்தினம், முதலியார் இராசநாயகம் என்போரைக் குறிப்பிடலாம். இவர்களோடு பண்டிதமணியும் இணைந்து தமிழ் வளர்ச்சிக்குத் துணை புரிந்தார்.

திருநெல்வேலி பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற நான்காவது தமிழ்விழாவில் பண்டிதமணியின் பேச்சு எதிர்பார்த்ததுபோல் அமைய வில்லை (1951). அதனைத் 'தோற்ற பிரசங்கம்' எனக் கனக செந்திநாதன் கூறுகின்றார். மேடைப் பேச்சுகளில் சில எதிர்பார்த்தவாறு அமைவதில்லை. எவ்வாறாயினும் அவரது தகுதியைக் குறைத்து மதிப்பிடமுடியாது.

## எழுத்தாற்றல்

பண்டிதமணிக்கு நூல் எழுத வேண்டும் என்ற எண்ணம் இருந்ததில்லை. காலத்துக்குக் காலம் தமக்குத் தோன்றிய கருத்துக்களை கட்டுரை களாகவே எழுதி வந்தார். அவ்வாறாக அவர் எழுதிய கட்டுரைகளைத் தொகுத்து இலக்கிய வழி எனும் நூல் வெளிவந்தது (1959). ஈழத்தின் இலக்கியப் பரம்பரையை அதில் தொட்டுக் காட்டியிருக்கிறார். எக் காலமும், ஈழநாட்டுக்கு எதிராகவும், பிராமணர் பக்கச் சார்பாகவும் எழுதி, தமிழ் மக்களின் அபிலாசைகளை நிந்தித்து வரும் "இந்து" பத்திரிகை "இலக்கிய வழி" என்ற நூலை நடுநிலையிலிருந்து ஆராய்ந்து சிறந்த மதிப்புரை எழுதியிருப்பது வரவேற்கத்தக்கது. பல பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் மாத்திரமல்ல, கலைக் களஞ்சியத்திலும் அவர் எழுத்துக்களைக் காணலாம்.

உண்மையில் இலக்கியத்தை அறிமுகப்படுத்தும் 'இலக்கிய வழி' என்ற நூல் தனித்தன்மை வாய்ந்தது. நிகழ்ச்சிகளைப் புலப்படுத்தும் இயல்பு பாராட்டுக்குரியது. ஈழத்துப் புலவர்களின் தனித்திறமையும், தேசிய உணர்வும் அதில் மினுங்குகின்றன. செய்யுள் இயற்றுவதில் பண்டிதமணிக் குத் திறமை இருந்தும் அவர் அதனைப் பெரிதாகக் கையாளவில்லை.


யாழ்ப்பாணம் கந்தப்புராணக் கலாசாரத்தில் ஊறியிருந்தது என்பது பண்டிதமணியின் கருத்து. அவருடைய கட்டுரைகள் "கந்தப்புராணக் கலாசாரம்" என்னும் பெயரில் வெளிவந்துள்ளன. கந்தப்புராணத்தை மூச்சாகக் கொண்டிருந்த பண்டிதமணி அதன் தஷ்ண காண்டத்திற்கு உரையும் எழுதினார். ஆழ்ந்த கருத்துக்களை எளிமையாக, சுருக்கமாக, தெளிவாக எழுதுவதும், வெளியிடுவதும் எளிதன்று. இதற்குச் சிந்தனை யிலும் மொழி ஆட்சியிலும் முதிர்ச்சி வேண்டும். பண்டிதமணியிடம் இவை பூத்திருந்தன.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், 1978ஆம் ஆண்டு இலக்கிய கலாநிதிப் பட்டத்தைப் பண்டிதமணிக்கு வழங்கித் தனக்கே பொட்டு வைத்தது!

**என் குருதேவர்**
**யாழ்.பேராயர் கலாநிதி ஜே. எமிலியானுஸ்பிள்ளை**
DD. B.Sc.

03

# நெஞ்சிருக்கும் வரை நினைவிருக்கும்



ஆயர் திலகமே! நீங்கள் என் குரு தேவர்.

என் வாழ்வில் நான் சந்தித்த மனித தெய்வம் ஒன்று நீங்கள் தான்!

ஆசிரிய கலாசாலையில் எங்களுக்கு அதிபராய் இருந் தீர்கள். முழு நிலவைப் பிழிந்து தடவிவிட்டது போல வசீகர மான முகம்.

அறிவின் விசாலத்தைக் காட்டும் நெற்றி.

சொல்லுக்கு நிகரான கனிவு நிரம்பிய கண்கள்.

கண் வீச்சுக்கு நிகரான கருணை உள்ளம்.

பார்த்த உடனே உள்ளத்தில் ஓடிவந்து உட்காரும் புன் சிரிப்பு.

முன்னால் வந்திருப்பவரின் ஆழ நீளங்களை அளவிடும் புத்தி சாதுரியம்.

மனித நேயம் அலையடிக்கும் அன்பின் இதயம்.

பூக்களால் எறிவது போன்ற இனிய பேச்சு.

பட்டதாரிகளுக்குத் தட்டுப்பாடான அந்நாட்களிலேயே பிள்ளைப் பருவத்தில் விஞ்ஞானப் பட்டதாரி. அடியேன் உங்கள் அன்பு நதியில் இரண்டு வருடம் மிதந்திருக்கிறேன். உங்கள் நகைச்சுவையான பேச்சினை இரசித்து இரவில்கூடச் சிரித்திருக்கிறேன். கருத்துக் குவியலில் முழுகியிருக்கிறேன்.

நீங்கள் முதல் நாள் வகுப்புக்கு வந்த நிகழ்ச்சி எனக்கு நேற்று நடந்தது போல நினைவில் நிற்கிறது. துரிதமாக நடந்து வகுப்பிற்கு வந்தீர்கள்.

கையில் வைத்திருந்த சிவப்பு மட்டைபோட்ட புத்தகத்தைக் காட்டி 'A Gentleman' இதற்குத் தமிழ் என்ன சொல்லுங்கள் பார்ப்போம் என்றீர்கள்.

நாங்களும் விழுந்தடித்து, சிறந்த மனிதன், கனவான், புண்ணிய சீலன், நீதி நியாயம் உள்ளவன், குறையற்றவன், மதிப்புக்கு உரியவன், பண்புடையோன் என்று பலவாறு கூறினோம்.

என்றாலும் இந்த ஆங்கிலச் சொல்லுக்குரிய கருத்தான தமிழ்ச் சொல்லைக் கூற எங்களால் முடியவில்லை.

நீங்கள் எல்லாரும் கூறிய குணங்களை உடையவன்தான் 'ஜென்றில்மன்' என்று கூறிவிட்டு அப்படியானவன் எப்படி இருப்பான் என்பதை அழகாக விளக்கினீர்கள்.

உங்களுடைய வினாக்கள், நகைச்சுவை கலந்த விடைகள், உதாரணங்கள், கலந்துரையாடல் எல்லாம் உங்களிலே நாங்கள் வைத்திருந்த மதிப்பை இதயமானியில் எங்கேயோ உயர்த்திவிட்டது.

"சான்றோன்" என்பதுதான் நீங்கள் குறிப்பிட்ட ஆங்கில வார்த்தைக் குரிய தமிழ்ச் சொல் என்பதை நான் பிற்காலத்தில் குறளில் இருந்து அறிந்தேன். நிற்க,

கொலம்பகம் ஆசிரிய கலாசாலையில் உயர்கணிதம், விஞ்ஞானம், கற்பித்தல் நெறிமுறைகள், இறையியல் என்னும் பாடங்களைக் கற்பித்து வந்தீர்கள். உங்களை நாள்தோறும் வகுப்பில் காண்பதே ஒரு மகிழ்ச்சி யான செய்தி. அறிவுப் பெட்டகத்தில் இருந்து நாள்தோறும் புதுமையான செய்திகளையும் கருத்துக்களையும் எடுத்து அளவாகத் தருவீர்கள்.

அக்காலத்தில் "ரைம்ஸ்" ஞாயிறு வெளியீட்டில் (1946) ஒருவர் இலங்கையில் வாழும் சிறந்த குடும்பங்களைப் பற்றி எழுதிவந்தார்.

சேனநாயக்கா, லிங்கம் குடும்பம் என்பன என் நினைவிலுள்ளன. உங்களுடைய குடும்பத்தைப் பற்றியும் எழுதியிருந்தார்.

உங்கள் தமையனார் அருள்சகோதரர் **லூாக்** B.Sc., கொழும்பு சென் பெனெடிக்றஸ் கல்லூரிக்கு அதிபராய் இருந்ததும், மூத்த சகோதரர் **ஸ்ரனிஸ் வாஸ்** என்பவர் திறைசேரிப் பிரிவின் உதவி ஆணையாளரா யிருந்ததும், இலங்கையில் சிறந்த கல்விமானாக மதிப்புப் பெற்ற **பீற்றர்பிள்ளை** என்ற குருத் தம்பியார் கொழும்பு சென் யோசவ் கல்லூரி அதிபராயிருப்பதும், அக்குவைனஸ் பல்கலைக்கழகத்தை நடாத்துவதும் அங்கே சுட்டிக் காட்டப்பெற்றன.

உங்கள் தம்பியார் M.A., M.Sc., பரீட்சைகளில் பிரித்தானிய சாம்பிராச்சி யத்திலே முதலாம் தர மாணவராகச் சித்தி பெற்றார் என்பதையும் அறிந்து மகிழ்ந்தோம். அவர் அடியேன் பேராதனைப் பல்கலைக் கழகத்தில் படித்தபொழுது இராமநாதன் மண்டபத்திற்கு உரையாற்ற வந்ததும் என் நினைவில் மறவாமல் நிலை கொண்டுள்ளது.

அடியேன் ஆசிரிய கலாசாலையில் படித்து வந்தபோது பதினேழு வயதில் பத்திரிகைக்கு எழுத ஆரம்பித்தேன். "காவலன்" என்ற கிழமைத் தாளில் என் கட்டுரைகள் வெளிவந்தன. நான் இளமையில் ஆடிய தொட்டில் அதுதான். கட்டுரைகளை வாசிக்கச் சொல்லி என்னை ஊக்கப்படுத்திய தோடு சாதி வித்தியாசங்களை நீக்க நல்ல கட்டுரைகளை எழுதுமாறு என்னைத் தூண்டி நின்றதை நான் மறக்கவில்லை.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உங்களோடு உடன் மாணாக்கரா யிருந்த கலாநிதி என். எம். பெரேரா என்ற நிதி மந்திரியார் உங்களோடு கொண்டிருந்த பாசப் பிணைப்பைக்கூடச் சிறிது நான் அறிவேன்.

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேல் யாழ் ஆயராயிருந்து அரும்பணி ஆற்றி எல்லாராலும் பாராட்டப் பெற்றீர்கள். உங்கள் மறைவின்போது சிறீமா பண்டார நாயக்கா பிரதமராயிருந்தார். அரசியலார் வெளியிட்ட பிரசுரம் உங்களில் வைத்திருந்த உயர்ந்த மதிப்புக்கு ஒரு உரைகல்லாகும்.

அக்காலத்தில் திருநெல்வேலி சைவ ஆசிரிய கலாசாலையில் திரு.சுவாமிநாதன் B.A., அவர்களும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையில் திரு. இராஜசிங்கம் B.A., அவர்களும் சாவகச்சேரி அ.மி. ஆசிரிய கலாசாலையில் திரு. அமரசிங்கம் B.A., அவர்களும் அதிபர்களா யிருந்தனர். எங்கள் அதிபர் அருள்திரு. எமிலியானுப்பிள்ளையாகிய நீங்கள், விஞ்ஞானப் பட்டதாரியும் வேதசாஸ்திர விற்பனராயும் இருப்பது எங்களுக்குப் பெருமையளித்தது. ஆனால் இந்தப் பெருமை அங்கே நீண்டகாலம் நிலைக்கவில்லை.


நீங்கள் குருமாரின் முதல்வராக நியமனம் பெற்று யாழ் ஆயர் இல்லத்துக்கு மாற்றம் பெற்றீர்கள். பின்னர் நூற்றுக்கு மேற்பட்ட கத்தோலிக்க கல்விக் கழகங்களின் பிரதம முகாமையாளராக நியமனம் பெற்று பெரும் பொறுப்பை ஏற்றுக் கொண்டீர்கள்.



புலவர்மணி இளமுருகனார்

04

# "நாலும் மூன்றும்"



எறும்பிடம் சுறுசுறுப்பு, புறாவிடம் கபடமற்ற தன்மை, குயிலிடம் குரலினிமை, பூக்களிடம் கவர்ச்சியும் அழகும் அமைந்துள்ளன.

அவ்வாறு இலக்கணத்துக்கு கணேசையர், இலக்கியத்துக்கு பண்டிதமணி, கந்தப்புராணத துக்குப் பொன்னம்பலபிள்ளை ........ என்று சிலர் பாராட்டும் சிறப்பும் பெற்றிருந்தனர்.

தனித்தமிழ் என்றதும் ஈழநாட்டின் நெஞ்சில் நினைவுக்கு வருகிறவர், பண்டிதர் புலவர்மணி இளமுருகனார் அவர்களே.

எனது தமிழ்த் தாகத்துக்கு இளமையில் ஒரு தண்ணீர்ப் பந்தலைக் கண்டேன். அவர்தான் பண்டிதர் இளமுருகனார்! இளமையிலேயே பண்டிதர் என்ற கிரீடத்தைச் சூட்டிக்கொண்டவர்.

தமிழ் இலக்கண இலக்கியத்துக்கு அவரே என் தாய் நாடு! அவருடைய கவிதைகள் இலக்கண இலக்கிய மரபு தவறாதவை. சில கவிதைகளில் சொர்க்கத்தின் துண்டுகளைக் காணலாம்.

கடந்த நூற்றாண்டில் இலங்கையில் ஒரு தமிழ்ப்புலவர் பெருமான் வாழ்ந்தாரென்றால், அவர்தான் நவாலியூர் சோமசுந்தரப்புலவர்! அவரை ஈழத்து இரவீந்திரநாத்தாகூர் என்றும் பாராட்டினார்கள். அவருடைய தோற்றம் கூடத் தாகூரின் சாயலைப் போன்றிருந்தது. புலவருடைய திருமகனாரே இளமுருகனார் அவர்கள் என்பதை நாம் நினைவுகூர வேண்டும்.

குத்துவிளக்குப் போன்ற அவர் உடலும், அவர் புன்னகையைப் புதைத் தறியாத உதடுகளும், வெற்றிலைச் செல்வத்தின் ஆதிக்கமும், தமிழுக்கு என்றே அவதாரம் எடுத்தவை.

தமிழ் வரலாற்றில் மறை மலை அடிகள் தூய தமிழைப் பேணுவதற்காக ஒரு சீன மதிலையே கட்ட எண்ணினார். கலப்புத் தமிழைச் சலவை செய்து, தமிழ் மக்கள் பிறமொழிக் கலப்பற்ற செந்தமிழைப் பேசவும் எழுதவும் தூண்டிவிட்டார். சுவாமி வேதாசலம் என்ற பெயரையே மாற்றி, சுவாமி +வேதம் + அசலம் என்பதை மறைமலை அடிகளாக மாற்றினார். அடிகள் எழுதிய முல்லைப் பாட்டு, பட்டினப்பாலை, ஆராய்ச்சியுரை, சிந்தனைக் கட்டுரைகள் என்பன அவர் அளித்த திரவியங்கள்.

அக்காலத்தில் சூரிய நாராயண சாஸ்திரியார் என்ற அறிஞரும் தனது பெயரை பரிதி மாற் கலைஞன் என்று மாற்றிக்கொண்டார். இவ்வாறு தனித்தமிழ் வேள்வி ஒன்றே தமிழ்நாட்டில் தொடங்கியபோது பாலசுப்பிரமணியம் என்ற பெயரை மாற்றி "இளமுருகனார்" எனப் புனைந்து கொண்டு வட இலங்கையில் பண்டிதர் இளமுருகனார் தனித்தமிழ் இயக்கத்தைத் தொடங்கினார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலாவது என் குருநாதன் தனித்தமிழ்ச் சொற் களுக்குப் பதிலாகப் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதியதையோ பேசியதையோ அடியேன் அறிந்ததில்லை. ஐயா அவர்களுடைய வீட்டில்

எடுபிடி வேலைகளைச் செய்ய நாராயணன் என்று ஒரு வேலையாள் இருந்தான். அவன் பெயரையே நடுவிலான் என்று அழைத்து வந்தார். ஒருநாள் நான் ஐயா அவர்களிடம் செய்யுளியல் கற்கச் சென்ற போது அவருடைய குரல் கம்மியாயிருந்தது. நடுவிலானை அழைத்து வெந்நீர் கொண்டுவருமாறு சொன்னார். அவர் கொண்டுவந்த நீரைக் குடித்ததும் அது வெந்நீராயில்லை என்று அறிந்து, "யான் வெந்நீர் கொண்டுவருமாறு பணித்தேன், இந்த நீரைத் தொட்டுப்பார்!" என்றார்.

"ஐயா உங்களுடைய கடுந்தமிழ் அவனுக்கு விளங்காது! சுடு தண்ணீரென்றால் ஒரு சங்கடமும் நேராது!" என்றேன். உடனே பண்டிதர் அவர்கள், "சுடு தண்ணீர் என்பது வினைத்தொகை, "காலம் கரந்த பெயரெச்சம் வினைத்தொகை என்பது சூத்திரம். சுடுதண்ணீர் என்பது சுட்ட தண்ணீர், சுடுகின்ற தண்ணீர், சுடும் தண்ணீர் என மூன்று காலத்துக்கும் பொருந்தும். எனவே அவன் எக்காலத்தைச் சுட்டும் நீரை வழங்குவானோ என்பது ஐயத்துக்கு உரியது" என்று சுடு தண்ணீர் என்பதில் ஒரு இலக்கணச் செய்தியைச் சொல்லிவிட்டார்.

சங்கத் தமிழின் மரபு, ஒரு பேராசிரியரின் அறிவு, இலக்கணத் தூய்மை, உரையாசிரியர்களின் முடிபு என்பவற்றைத் தன் பேனாவுக்குச் சொல்லிக் கொடுத்த நச்சினாக்கினியர் அவர்.

தமிழ் நாட்டு அறிஞர்கள் - இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ் அறிஞர்களின் கட்டுரைகளில் காணப்பெற்ற இலக்கணத் தவறுகளைக் காலத்துக்குக் காலம் சுட்டிக்காட்டி ஆதாரங்களுடன் கருத்தை நிலைநாட்டிய பெருமை போற்றத்தக்கதாகும். தமிழ் உலகம் தலையில் வைத்துப் போற்றிவரும் சிறந்த எழுத்தாளர் கல்கி. கல்யாணசுந்தர முதலியாரே கல்கியின் எழுத்தாற்றலுக்கு உற்ற துணையாயிருந்தமையால் கிரிஷ்ணமூர்த்தி என்ற பெயரை விடுத்து ஒரு புனை பெயரை சூடும்போது, தான்போற்றும் மேதையின் பெயரின் இரு எழுத்துக்களையும் தன் பெயரையும் இணைத்து கல்கி என்று அமைத்தனர் என்பர்.

ஒருநாள், கல்யாணசுந்தரனார் எழுதிய, "சீர்திருத்தம் அல்லது இளமை விருந்து" என்ற நூலையும் கையிலே கொண்டு பண்டிதர் ஐயாவிடம் சென்றேன். புன்முறுவல் பூத்தபடி என் கையில் இருந்த நூலின் மட்டையைப் பார்த்தார். அவருடைய புன்சிரிப்பு அதிகரித்தது!

தலையங்கமே தவறாயிருக்கிறதே" என்றார். "ஏன் ஐயா அவ்வாறு சொல்கிறீர்கள்?" என்றேன்.

"சீர் என்றால் சிறப்பு. சிறப்பை எப்படித் திருத்தலாம்?" என்று கேட்டார். "மேலும் ஒரே கருத்துள்ள இரண்டு சொற்றொடர்களை எழுதும்போது என்னும் என்ற இடைச்சொல்லைப் பயன்படுத்த வேண்டும். எடுத்துக் காட்டாக என்னை அழைக்கும்போது பாலசுப்பிரமணியம் என்னும் இளமுருகனார் என்று அழைக்க வேண்டும், அல்லது என்ற சொல்லைப் பயன்படுத்தினால் இரு வேறு மனிதர்களாகி விடுவோம்" எனக்கூறி முதலியார் 'அல்லது' என்ற சொல்லைப் பயன்படுத்தியிருப்பது தவறாகும் என்று தெளிவுபடுத்தினார். எனவே முதலியார், "சீர்திருத்தம் என்னும் இளமை விருந்து" என்று பெயரை இட்டிருக்க வேண்டும் என்பது ஐயாவின் தெளிவான குறிப்புரையாகும்.

கொழும்புத்துறை ஆசிரிய கலசாலையில் பண்டிதர் இளமுருகனார் விரிவுரையாளராக விளங்கிய காலம், எங்கள் பஞ்சாங்கத்தில் இடம்பெறத் தக்கது. அங்கே பால பண்டித வகுப்புக்களை நடாத்தி வந்தார்.

1975ஆம் ஆண்டில் ஐயா அவர்கள் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, "நெஞ்சே நினை" என்ற நூலை அனுப்பி அதற்கு அணிந்துரை எழுதி அனுப்புமாறு கேட்டிருந்தேன். **"பல திங்கள் நோயுற்று இருந்த எனக்கு 'நெஞ்சே நினை' என்னும் இந்நூல் புதிய உயிர்ப்பைத் தந்தது. எடுத்த படிப்பை இடையிலே விடுவதற்கு விருப்பமின்றி மூன்று மணி நேரத்தில் முற்று முடியப் படித்து மகிழ்ந்தேன். முற்றிப் பழுத்த கொழும்பு மாவின் கனியை வெட்டித்தின்ற நிறைவில் என்னுளம் இன்பமெய்தியது. கற்பனை அழகும், நடையழகும் பொருந்தக் கவிபுனையும் அமுது, அடிகளாரின் வரலாற்றைப் பாட்டிலே தீட்டியிருப்பாராயின் ஒரு காவியமே தோன்றி யிருக்குமென வாயூறினேன்...**" என்று பொன் எழுத்துக்களை வாசித்து கண்ணிலே ஒற்றிக்கொண்டேன்.

எனது நூலில், "புலவர்மணியின் புகழாரம்" என்று முதலில் அச்சிட்டிருக் கிறேன். பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சதாசிவம் என்பாரின் அணிந்துரைகளின் முன்னே ஐயா அவர்களின் அணிந்துரை நூலுக்குப் பொட்டு வைத்திருக்கிறது.

"ஈழத்துச் சிதம்பர புராணம்" என்ற காப்பியத்தையும் ஐயா அவர்கள் எழுதினார்கள். அந்'நூல்' காரை வைத்தீசுவரக் குருக்களால் அரங்கேற் றப்பட்டது. அடியேன் ஐயா அவர்களுடைய காப்பியத்தை வியந்து பாராட்டி எழுதிய கவிதைகள் துண்டுப் பிரசுரமாகவும் வெளிவந்தன.

'எழுத்தறியார் சொல்லறியார் இக்காலக் கவிஞர்.

இன் தமிழின் சுவையறியார் பழந்தமிழும் அறியார்.

"'பழுத்த தமிழ்ப் பாவலனார் இளமுருகன் பாடல் படித்திட்டால் ஐந்தமிழும் நித்தமெனக் கொள்வார்..." என்று அவை செல்வதைக் காணலாம்.

என் அருமைக் குருநாதனே! நீங்கள் எனது நூலுக்கு அணிந்துரை எழுதிய பின்பு வேறு எவருக்காவது ஒரு அணிந்துரை கொடுத்ததில்லை. சில காலத்தால் வானோருக்கு தமிழ்த்தேனை அள்ளிப் பருக்கச் சென்று விட்டீர்கள்.

சில ஆண்டுகளின் முன்பு உங்களைக் கீரிமலையில் சந்தித்தது நினை விருக்கிறதா? பூவரசு மர நிழலில், கடற்கரை மணலில், மத்தியான நேரம் சப்பாணி கொட்டியபடி இருந்தீர்கள். யாரோ ஒரு தமிழ் அறிஞரும் உங்களோடு இருந்தார். உங்களுடைய நீலக்கரைச் சால்வையை பூவரசு மரக்கிளைகளில் இலாவகமாகத் தொடுத்திருந்தீர்கள். அது காற்றுக்குப் படபடத்து ஆடியபடியே வங்காளக் கடலைப் பார்த்து உங்கள் தங்கத் தமிழை எடுத்தோதியது.

அடியேன் உங்களைக் கண்டதும் சந்திரனைக் கண்ட சமுத்திரம் போலப் பொங்கிய உள்ளத்துடன் ஓடிவந்து உங்கள் கால் அடிகளைத் தொட்டு வணங்கினேன்.

என்னையும் பக்கத்தில் இருக்குமாறு பணித்தீர்கள். வெற்றிலைச் செல்வத் தினால் சிவந்த உதடுகளிலிருந்து, "முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாடே" என்ற புறநானூற்றுப் பாடலை அவ்வேளை நினைவுபடுத்தினீர்கள்.

நீங்கள் நவாலிக்குச் செல்வதற்கு இரண்டு மணி நேரமாவது செல்லும் என்பதை நான் அறிந்து கொண்டேன்.

ஊர் வெற்றிலையை எடுத்து அதில் ஈரச்சுவடு இல்லாதபடி துடையின் மேலுள்ள வேட்டியில் துடைத்தீர்கள். வெற்றிலைக் காம்பையும், அதனோடு சேர்ந்த நரம்புகளையும் துல்லியமாக நீங்கள் நீவி எடுத்தீர்கள். அதைப் பார்த்த எனக்கு ஒரு சத்திர சிகிச்சை நிபுணனின் கைவேலை நினைவுக்கு வந்தது. வெற்றிலையின் பின்புறத்தில் வெண்மையான சுண்ணாம்பைத் தடவினீர்கள், பாக்குச் சீவலோடு வாசனைத்தூள் கலவையைச் சேர்த்து, வெற்றலையை மடித்து, உருட்டி வாயில் போட்டீர்கள்.

இயல்பாகவே சிவந்த உதடுகள், இப்போது மேலும் அழகு சிந்தின. உங்களது உரைகளை முடித்துக்கொண்டு விரைவாக எனது மிதி வண்டியில் இளவாலைக்குச் சென்றேன்.

நேரம் பதினொன்றாகிவிட்டது. மகனார் வசந்தனை அழைத்து வந்து அந்நாட்களில் கோயிலடியில் புதிதாகத் திறக்கப்பட்ட கடையில் கசுக்கொட்டை, முந்திரிகைப் பழவற்றல், கப்பல் வாழைப்பழம் என்பன வற்றை வாங்கி, வீட்டில் இருந்த பசும்பாலையும் கற்கண்டு போட்டுக் காய்ச்சி, என் மகனாருக்குப் பண்டிதர் ஐயாவின் நிறம், சாயல், தோற்றம், நிற்கும் இடம் எல்லாம் சொல்லி அனுப்பி வைத்தேன். நீங்கள் எதிர் பாராத நிகழ்ச்சி இது.

பால், பழம், முந்திரிகைவற்றல், கசுக்கொட்டை இவற்றைக் கண்டதும் உங்கள் தமிழ் நெஞ்சத்துக்கு அவ்வையின் நினைவுதான் ஓடி வந்தது. அவ்வை பிள்ளையாருக்கு நாலு கொடுத்து மூன்று வரம் கேட்டிருந்தாள்.

**பாலும் தெள்ளிதேனும் பாகும் பருப்புமிவை**
**நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம் செய்**
**துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீயெனக்குச்**
**சங்கத் தமிழ் மூன்றும் தா.**

என்பது பாட்டு, சங்க காலத்து அவ்வையார் பாடியது.

ஐயா நீங்கள் அங்கே சுருட்டி வைத்திருந்த வீரகேசரி பத்திரிகையின் ஓரத்தில்,


**நாலு கொடுத்தவ்வை மூன்று வரங்கேட்டாள்**
**வேலவற் கீந்திட்டால் வீணென்றே - மேலும்**
**இளமுருகற் கீந்தால் என்ன பயன்? என்னமுதே**
**வளம் பெருகி நீடூழி வாழ்.**

அவ்வை நாலு கொடுத்து மூன்று வரத்தை விநாயகரிடம் வேண்டினாள். முருகனிடம் கேட்டதில்லை. கேட்டால் அவை கிட்டாதென அவ்வை அறிவாள். அப்படியிருக்க இளமுருகனிடம் வரம் கேட்டால் கிடைக்குமா?

உங்களுடைய தமிழும் கற்பனையும் கருத்தும் எண்ணிப் பார்க்கும் வேளைகளில் எல்லாம் உங்களை ஆராதிக்கத் தோன்றுகிறது. இந்தச் செய்யுள் எக்காலமும் உங்கள் முகத்தை என் முன்னே காட்டி என் குருநாதனை நினைவுபடுத்தும் கல்வெட்டாயிற்று.

நீங்கள் உலகத்தைப் பிரிந்தபோது, வண்ணை வைத்தீஸ்வரக் கல்லூரி யில் நடைபெற்ற இரங்கல் நிகழ்ச்சியில் இப்பாடலைக் குறிப்பிட்டு அடியேன் பேசினேன்.


ஒரு பேச்சின்போது, தாரை தாரையாக நான் அழுதேன் என்றால் அது உங்கள் பிரிவை நினைந்து உருகிய இந்த நிகழ்ச்சிதான். உங்கள் உடன் பிறப்பாளரும் மைந்தர் பாரதியும், யூனியன் கல்லூரி அதிபர் துரைரட்ணமும் என்னைத் தேற்றினர். எப்படியிருந்தாலும் என் துயரம் அழுதாலும் தீராது.



"தமிழ் தூது" தனிநாயகம் அடிகளார்

05

# "யாதும் ஊரே"



யாழ்ப்பாணத்தில், பூக்கள் பூத்த தமிழ்மேடை, பரமேஸ்வராக்கல்லூரி! இன்று அந்த மண்ணிலேதான் யாழ் பல்கலைக்கழகம் வேர்விட்டு எழுந்து விருட்சமாகி நிற்கிறது.

அடியார்களாரே! ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு உங்களுடைய தமிழ்ப்பணி என்ற தேர் புறப்பட்டு அந்த மேடையில் தோன்றியது! ஆயிரக் கணக்கான கண்கள் இமை மூட மறந்து உங்களையே உற்றுப் பார்த்தன.

வெங்கல நாதம் போன்ற குரல். கூச்சம் அறியாத பேச்சு, முக

வசீகரம், சொல்லழகு, கருத்துக் குவியல், பல மொழி அறிவு, பல்வேறு நாடுகளுக்குச் சென்ற அனுபவம் எல்லாம் உங்கள் கன்னிப் பேச்சில் குருத்துகள் விட்டன! மறக்கமுடியாத வாசகங்கள் வாயால் உதிர்ந்தன.

"ஆங்கிலம் வணிகத்தின் மொழி என்றும், இலத்தின் சட்டத்தின் மொழி என்றும், கிரேக்கம் இசையின் மொழி என்றும், ஜேர்மன் தத்துவத்தின் மொழி என்றும், பிரேஞ்சு தூதின் மொழி என்றும், கூறுவது ஒரு புடை ஒக்குமெனின் தமிழ் இரக்கத்தின் மொழி என்று கூறுவது இனிது பொருந்தும். பக்தியின் மொழி என்றும் கூறலாம். இரக்கமும் பக்தியும் மனம் உருகுவதால் தோன்றும் பண்புகளெனக் கண்டுகொள்க. தமிழில் இரங்குவது போல வேறெம் மொழிகளிலும் இரங்குவது அரிது." இதைக் கேட்ட காதுகளில் தேன் வெள்ளம் பாய்ந்தது. கைதட்டிய ஓசையில் கட்டிடம் அதிர்ந்தது.

இந்தப் பேச்சு 1951இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ் விழாவில் இடம்பெற்றது. அவ்வேளை தலைமை தாங்கவேண்டிய சொல்லின் செல்வர் ரா.பி. சேதுப்பிள்ளை மேடைக்கு வரத் தாமதமாயிற்று.

எனினும் அவர் மேடையில் தோன்றி தனிநாயகத்துக்கு ஒரு சபாநாயகம் தேவையில்லை என்றதும், சபை ஆரவாரத்தில் குலுங்கியது. தொடக் கத்தில் "கலைப்பாலம் கட்ட முனைந்த பெரியோருடன் யானும் இந்த நிலத்துக்கு வந்துள்ளேன். அன்று சேது என்னும் அணைகட்ட உதவிய சிறு அணிலைப் போல சங்க இலக்கியம் என்ற சிறு மண்கடலில் மூழ்கி, ஆராய்ச்சித்துறை என்னும் அழகிய கரையின் மண்ணிலே புரண்டு என்மீது அரிதாய் ஒட்டிய சிறுமணல் மணிகளை இங்கு சிதற விரும்பினேன்!" என்று உங்கள் பேச்சு ஆரம்பமாகிறது.

இது கம்பனின் அவை அடக்கம்போல, களிப்பூட்டும் உவமையாகும். பல நூற்றுக் கணக்கான தமிழ் நெஞ்சங்கள், உங்கள் உரையை அன்றுதான் முதல் முதலாகக் கேட்டன. இவன் இதற்கு முன்னரும் உங்கள் தேன் ஒலியைக் கேட்டு சிந்தையைப் பறிகொடுத்தவன்.

நீங்கள் பிறந்த ஊர் நெடுந்தீவு. உரோமாபுரியில் உயர் படிப்புகளை நிறைவேற்றிக் கொண்டு, குருப்பட்டம் என்னும் திருப்பட்டம் பெற்றபின், சொந்த ஊரில் கால்வைத்தீர்கள். அங்கே அமைந்த அழகுப் பந்தலில்

புன்னகை பொங்க எழுந்து நின்று நீங்கள் உரைத்தவை, இலங்கையின் நெஞ்சுக்குச் சொன்ன நீதி வாசகங்கள்.

சில ஆண்டுகளுக்குப் பின்னர், பண்டாரநாயக்காவுக்கு நீங்கள் எழுதி வெளியான பகிரங்கக் கடிதம், அவர் மகள் சந்திரிக்காவின் கண்ணைக் கூடப் பறித்து விட்டதெனலாம்.

நிற்க, நெடுந்தீவின் பெருவிழாவில் ஒரு வாழ்த்துமடல் அளித்தார்கள். அதிலே நெடுந்தீவின் புற உருவப் படத்தை வரைந்து, கரையோரமாக நெடுந்தீவின் பசுக்கூட்டங்கள், குதிரைக்கூட்டங்கள், வெடியரசன் கோட்டை, ஆலயங்கள், காடுகள் எல்லாம் அழகு மயமாக வரையப்பட்டிருந்ததை மறக்க முடியவில்லை. சித்திர மேதை மாணிக்கத்தம்பி என்பாரின் வைரிசை அது! அதில் வரைந்த வாசகங்களை முத்துப்போல, இவன் கையே எழுதியிருந்தது.

பிரான்சிஸ் சேவியர் என்பதுதான் உங்களது இளமைப் பெயர். நீங்கள் தமிழ்ப் பணியில் சிறப்புற்று இருந்தாலும் தமிழ் இலக்கண இலக்கியங் களை முறையாகக் கற்க வாய்ப்பு இருக்கவில்லை.

யாழ் சம்பத்திரிசியார் கல்லூரியில் கற்று வந்த நாட்களில், "ஆங்கிலத்தில் பேசு" என்று சுவர்களுக்கும், தூண்களுக்குமே கட்டளையிடப் பெற்றிருந் தது. எனவே, உங்கள் தமிழ் மொழிப்பற்றின் வேர்களுக்கு இளமையில் தண்ணீர் வார்க்கப்படவில்லை. அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில், தமிழ் வெள்ளத்தில் புரண்டீர்கள்.

உரோமாபுரியில் 43 நாடுகளைச் சேர்ந்த மாணவர்களோடு கற்று வந்த போது, நாடு, இனம், மொழி என்பவற்றில் அளவற்ற பற்றுக் கொண்டிருப்ப தாகக் குறிப்பிட்டிருப்பது உண்மையே! உரோமாபுரியில் வீரமாமுனிவர் கழகத்தைத் தொடக்கி, "யாதும் ஊரே யாவரும் கேளிர்!" என்ற தமிழர் பண்பாட்டுக்கு அத்திவாரமிட்டீர்கள்.

"தமிழன் தன் மொழியைக் காதலிப்பதுபோல, வேறு எவரும் தம்மொழி யைக் காதலிப்பதில்லை, தமிழ்ப் புலவர் தம்மொழியைப் போற்றுவது போல வேறு இலக்கியத்தில் யாரேனும் தம்மொழியைப் போற்றியிருப் பதைக் கண்டிலேன்!" என்று நீங்கள் கூறுவது ஆராய்ச்சியில் கடைந்து

வந்த அமுதங்களன்றோ! உலக அண்டங்களில் நீங்கள் கால்பதியாத நாடுகள் இல்லை. 47 பல்கலைக்கழகங்களில் உரையாற்றியிருக்கிறீர்கள்.

"மேல் நாடுகளில் வெளிவந்த இந்திய இலக்கிய வரலாற்று நூல்களில் தமிழ் இலக்கியங்கள் பற்றிய கருத்து எதுவும் இல்லை. ஒரு சொல் லேனும் இல்லை. இந்திய நாட்டில் இந்திய கலைஞர்கள் எழுதிய இலக்கிய வரலாற்று நூல்களிலும், தமிழுக்கு உரிய இடம் கொடுக்கப் படவில்லை. இந்தியப் பிரதமர் நேரு எழுதிய நூல்களிலும், தமிழுக்கு ஒரு துளி மதிப்பும் அளிக்கப்படவில்லை!" என்ற செய்திகளை நீங்கள் சொல்லித்தான் உலகம் அறிந்தது.

இந்திய இலக்கியப் பண்பினை அறிய வடமொழி இலக்கியப் பயிற்சியே போதும் என்றிருந்த கருத்தை மேல்நாடுகளில் மாற்றி அமைக்க நீங்கள் செய்த பணி என்றும் நினைவுகூரத்தக்கது. "தமிழர் பண்பாடு" என்ற ஆங்கில முத்திங்கள் வெளியீடு 15 ஆண்டுகளாக வெளிவந்தது. சங்க நூல்களில் புதைந்து கிடந்த பரந்த உலக மனப்பான்மையை உலகுக்கு எடுத்து ஓதிவந்தீர்கள். விருந்தோம்பல், ஈகை, தனக்கென வாழா பிறற்குரியாளன் என்ற கோட்பாடு, மானமென்றால் உயிரையே கொடுக்கும் ஒப்பற்ற பண்பு, உயர்ந்தவற்றைச் சிந்திக்கும் இயல்பு என்பவை எல்லாம் உங்கள் எழுத்திலும் பேச்சிலும் நிறைந்து வழிந்தன.

தமிழ் ஆராய்ச்சி என்பது, தமிழ் இலக்கண இலக்கிய நூல்களை ஆராய்வதுதான் என்ற கருத்து நம்மிடை நெடுங்காலமாக நிலவியது. அடிகளார் இக்கருத்துக்கு முழுக்குப் போட்டுவிட்டார்!

தமிழ்மக்கள் வரலாறு, தமிழ்மக்கள் சமயம், தத்துவங்கள் தொல்பொருள் இயல், பிறநாட்டுத் தொடர்பு, தமிழர் பண்பாடு, தமிழர் கலைகள், மொழியியல் என்று பல திசைகள் தமிழ் ஆராய்ச்சியில் இடம்பெறச் செய்தார்.

அடிகளார் மலேஷியா பல்கலைக்கழகத்தில் கலைத்துறையின் பீடாதிபதி யாக இருந்தவேளை, டில்லி மாநகரில் தமிழ்ப் பேரறிஞர்கள் ஒன்று கூடினார்கள். உலகம் தழுவிய தமிழ் அமைப்பு ஒன்று உருவாக வேண்டும் என்ற கருத்தை முன்வைத்தார் அடிகளார். அதன் பயனாக, 1964இல் உருவானதே, **உலகத் தமிழ் ஆராய்ச்சி மன்றம்.**

முதலாவது தமிழ் ஆராய்ச்சி மன்றம் மலேஷியாவில்தான் பூத்துக் குலுங்கியது. மலேஷிய பிரதமரே வாயார வாழ்த்தினார்.

அரசியல் ஞானியும் பேராசிரியருமான ஏ.ஜே.வில்சன் அவர்கள், அடிகளாரை "நாட்டுப்பற்று நாயகம்" என்றும், அறிவுக் களஞ்சியமென்றும், குருமணி என்றும் குறிப்பிடுகிறார்.

"கடந்த ஆயிரம் ஆண்டுகளில் அளவிடற்கரிய பணியாற்றியவர்களில் தனிநாயகம் அடிகளை விஞ்சியோர் எவரும் இல்லை!" எனப் பேரறிஞர் குலேந்திரன் அவர்கள் குறிப்பிடுவது சிந்திக்கத்தக்கது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் உயர் படிப்பின் கற்கைநெறிக்கு விரிவுரையாளராக இருந்தபோது, 1958இல் அங்கே செனற் மண்டபத்தில் தமிழ் நூல்களில் புத்தகக் கண்காட்சி ஒன்றை நடத்தி வைத்தார்கள். இலங்கையில் பல முனைகளிலுமிருந்து ரசிகர்கள் வந்தார்கள். மானிப்பாய் டாக்டர் கிறீன் எழுதிய வைத்திய நூலும் அங்கு இடம்பெற்றிருந்தது. "புத்தகப் பூஞ்சோலை" என்று அடியேன் வீரகேசரியில் ஒரு கட்டுரையும் எழுதியிருந்தேன். இலங்கையில் முதன்முதலாக நடைபெற்ற புத்தகக் கண்காட்சி இதுவே என்று எண்ணுகிறேன்.

கண்டறியாத பல நூற்றுக் கணக்கான நூல்கள், அங்கே கண்ணையும் கருத்தையும் கவர்ந்தன.

1958இல் பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் விழா ஒன்று நடைபெற ஏற்பாடாகி இருந்தது. திறந்தவெளி அரங்குக்கு எதிர்பாராதவாறு சன வெள்ளம் சரிந்தது. வட்ட வடிவாக கீழ்நோக்கிப்போகும் அந்த அரங்கில் மட்டுநகர் வந்தாறுமூலைக் கலாசாலையின் நாட்டுக்கூத்தும், நாதசின்னம், தவில் மேதைகள் பத்மநாதன், தட்சணாமூர்த்தி என்பாரின் இசைவிருந்தும், வேறு பல கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற இருந்தன.

விழா பிற்பகல் 6.30 மணிக்கு ஆரம்பமாக வேண்டும். பிற்பகல் 5.30 மணிக்கு தமிழ்ச் சங்கத் தலைவர் என்னை அழைத்தார். "ஓடிவாரும், மகாகந்தைக்கு அவசரமாகப் போகவேண்டும்!" "அப்படி என்ன நடந்தது?" என்றேன் நான்.

"தமிழ் விழாவுக்கு ஆயிரக் கணக்கில் வருகிறார்கள். அதில் முக்கால் பங்கு பேருக்குத் தமிழே விளங்காது. ஆங்கிலத்தில் ஒரு ஆரம்ப உரை நிகழ்த்த வேண்டும். அதற்குத் தனிநாயக அடிகளாரை உடனே அழைத்து வருவோம். அவரைவிட வேறு ஒரு தகுதியானவர் இல்லை!" என்றார். இருவரும் புறப்பட்டோம்.

அடிகளார் குளியல் அறையிலிருந்து தலை துவட்டியபடி வெளியே வந்தார். நான் நிலமையை விளக்கினேன். "எவ்வளவு நேரம் உரையாற்ற வேண்டும்? சிறப்பாக என்னென்ன இடம் பெறவேண்டுமென்று நினைக் கிறீர்கள்?" என்று கேட்டார். "எல்லாம் உங்கள் எண்ணப்படி நடக்கட்டும்!" என்றேன். அனைவரும் பாராட்டிப் புகழும் ஆங்கிலப் பேச்சுத் தென்றலாய் வீசியது.


அடிகளாரின் மகாகந்தை இல்லமே ஒரு புத்தகக் காடு!. வாசிக்கும் போது அவருக்குப் பிடித்ததை எழுதி ஒரு பெட்டிக்குள் போட்டு வைக்கும் பழக்கம் அவரிடம் இருந்தது.

ஒருமுறை இக்காலப் பாடல்களைப் பற்றிப் பேசிக்கொண்டிருந்தோம். மரபுக் கவிதைகள், புதுக்கவிதைகள் பல அங்கே கிடந்தன. சிலவற்றை அடியேன் வாசித்தேன்.

"வெறும் வசனங்களாயிருக்கின்றன. கற்பனையோ கருத்தோ பல பாடல் களில் இல்லை" என்றார் அடிகளார்.

"பாரதிக்கு மண்டபம் கட்டியவர்கள் இவைகளுக்குக் கிடங்காவது வெட்டி விடவேண்டும்" என்றேன். அடிகளாரது சிரிப்பு அடங்கச் சில நிமிடங் களாவது சென்றன!


புலவர் அரியநாயகம் அவர்கள் அடிகளார்மீது அளவற்ற அன்பு கொண்டவர். நெடுந்தீவில், அடிகளாரது உருவச்சிலையை நிறுவியதோடு, தமிழ்த்தூது என்ற நூலை மீளப் பதிப்பித்து அடிகளார் சேவையை அறிய ஆவன செய்கிறார்.



பத்திரிசியார் கல்லூரி அதிபர்
கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்

07

# "நாட்டிற்கு ஒருவர்! நயந்தரு குரவர்"



உங்களைக் காணும்போது சாளரம் வழியாக விரிந்து கொண்டு செல்லும் காலைப் பொழுதைக் காண்பதுபோல் மனம் மலர்ச்சி அடைகிறது.

கரும்பும் தேனும் கலந்த சொற்களைக் கேட்கும்போது ஐம்பெரும் காப்பியங்களைப் படிப்பதுபோல ஆனந்தம் உண்டாகிறது.

புலிக்கொடி பறக்கும் பூமியில் உங்கள் புகழ்க்கொடி பறக்கும் பொன்னாள் வரும்.

உங்கள் குளிர்ந்த உள்ளம்

கண்ட மாணவர் நெஞ்சம் பசும்பாலில் திரண்ட வெண்ணெய் சூடுபிடித்ததுபோல் உருகும்.

அன்பாலும் கருணையாலும் பகைவரின் நெஞ்சையும் உங்கள் பக்கம் இழுக்கும் காந்தம் உங்களோடு கூடப்பிறந்தது.

நம்பித் தொடருகின்ற நல்லவர்களுக்குத் தோழன்.

பணி செய்ய என்றே வெள்ளை அங்கியை அணிந்து, புன்னகையும் தண்ணளியும் பூத்த முகத்துடன் சேவை என்ற சிலுவையை மௌனத்தோடு சுமந்துவரும் சீமோன்.

தன்னலம் தேடாத குரவர்! பற்றும் பாசமும் நிறைந்த பங்கயச்செல்வன்! வாழ வழியற்ற ஏழைகளுக்கு வலக்கை அறியாமல் வழங்கும் வள்ளல். கள்ளங் கபடறியாத வெள்ளைப் புறா.

உள்ளம் உடைந்து, கண்ணீர் கசிந்து, துன்பத்தில் மிதந்து வந்தவர்களுக்கும் ஆறுதலளிக்கும் அரிய குருவாய், சிலுவைச்செடியின் நிழலில் இருத்தி அருள்வாக்குக் கூறி அபயமளிக்கும் மனித தெய்வம்.

உங்கள் பார்வையின் அலை வரிசைகள் பூக்களுக்கே வகுப்பெடுக்கும். இளவாலை புனித என்றியரசர் கல்லூரி, வடமாநிலக் கல்விச் சங்கிலியில் ஒரு பதக்கம்.

தேங்காய் விழுந்து மாங்காய் சிதறும் இந்தக் கல்லூரியில் கால் நூற்றாண்டு காலம் பணிசெய்தவர் யஸ்ரின் அடிகளார். இளவாலையிலும் அயல் ஊர்களிலும் இந்த அதிபர் ஒரு இளவரசர்போல ஆராதிக்கப் பெற்றவர். கல்லூரியையும் அன்னம்மாள் ஆலயத்தையும் கண்ணின் மணிகளாகக் காத்து, கொத்தணி அதிபராய் இருந்து பல வேறு பாடசாலைகளையும் பரிபாலித்து, எல்லாருடைய மதிப்பையும் கவர்ந்த மாமனிதர். "இந்தியாவே இந்திரா" என்று ஒரு நூல் வெளிவந்தது. "இளவாலையே யஸ்ரின் அடிகளார்", "யஸ்ரின் அடிகளாரே இளவாலை" என்று சுவாமி அவர்களின் வெள்ளிவிழாவில் வியந்துரைத்தார்கள்.

இருபத்தேழு ஆண்டுகளின் முன் எனது அன்பரங்கம் என்ற வீட்டு வாசலின் முன்பு ஒரு அழகான பெரிய 'ஒஸ்ரின் கேம்பிறிஜ்' கார் ஒன்று மெதுவாக வந்து நின்றது.

விறகு வண்டிகளும் வைக்கோல் வண்டிகளும் ஒதுங்கிப் பதுங்கி வருகின்ற குறுகிய வீதியில் இப்படியான ஒரு வாகனம் வந்ததை நான் பார்த்ததே இல்லை, வந்து இறங்கினார் மதிப்புக்குரிய மாமனிதர்.

இளமைப் பருவத்திலிருந்தே எனக்கு அறிமுகமான நட்சத்திரம். முக வசீகரமும் ஆளுமைத் திறமும் மற்றோரின் உள்ளங்களைக் கவர்ந்து இழுக்கும் சிரிப்பும் அவரோடு கூடப்பிறந்தவை.

யாழ் நான்காம் குறுக்குத்தெருவில் போவோரின் தலைகள் நிமிர்ந்து பார்க்கக்கூடிய இல்லத்தில் வசதிகளும் வாய்ப்புகளும் குவிந்திருக்க வாழ்ந்து வருகிறவர்.

என்னைத் தேடி வருவதற்கு ஏதாவது காரணம் இருக்க வேண்டுமே! அவரைக் கண்டதும் ஆயிரம் கேள்விகள் என் மூளையில் அந்தரித்தன. கடன் கேட்க வந்திருப்பாரா? அவரது முரசுமோட்டை வயலின் வைக்கற் பட்டடைக்கே பெறுமதியற்ற என்னிடம், அதுவும் முல்லைத்தீவு வரையும் உள்ள வீதிகளைப் பராமரிக்கும் பொறுப்பாளர் என்னிடம் பணம் கேட்பதாவது?

அவர் வருகிற வழியில் எனது வளவில் நூற்றுக் கணக்கான மரவள்ளிகள் விளைந்து செழித்து நிற்பதில் அவர் கண்ணடித்திருப்பாரா? இருக்காது. அவருக்கு ஏன் மரவள்ளி? சந்தையில் வியாபாரம் செய்யவா? அவருக்கு இளவாலையில் ஏதாவது உதவி தேவைப்பட்டிருக்கும். அவருடைய சந்ததியார் மணியகாரனாயும் நாலூர் பாரபத்தியக் காரனாகவும் விதானை யாகவும் நடப்பு நாட்டாண்மையுடன் வாழ்ந்து வந்தவர்கள். சந்தேகம் கூடுகட்டி வந்த வேளையில் ஐயா அவர்கள் படியில் ஏறி வந்தார். இருங்கள் என்று முன் விறாந்தையில் இருத்தினேன். நின்றவாறு சொன்னார்.

நீங்கள் ஒரு உதவி செய்ய வேண்டும். எனது மூளை, இதயம், உடலம், எல்லாம் ஒன்று சேர்ந்து அந்தரத்தில் நின்று சுழன்றது. நானா? உங்களுக்கா? உதவியா? ஒன்றும் புரியவில்லையே! என்றேன். “ஆமாம் எனது அருமை மகனார் யஸ்ரின் சுவாமியார் என்றி அரசர் பாடசாலைக்கு உபஅதிபராக நியமனம் செய்யப் பெற்றிருக்கிறார். அவர் ஒரு இளம் குரவர். செல்லப் பிள்ளையாக வளர்ந்து வந்தவர். குருமடத்தில் ஏழெட்டு ஆண்டுகள் படித்து வந்த பின்பு திருச்சியிலும் பம்பாயிலும் மேற்படிப்பு முடித்து குருவாகி இங்கே இப்பொழுது வந்திருக்கிறார். உங்களுக்கும் ஒரு மகன் குருவாகி இருக்கிறார். நீங்கள் கல்லூரிக்குப் பக்கத்திலேயே இருக்கிறீர்கள். எனது மகனாரைக் கண்காணித்து அவருடைய ஆவை

தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு உங்களைவிட இன்னொருவர் எனக்குத் தட்டுப்படவில்லை. எல்லாவற்றிற்கும் பாதுகாப்பாக இருப்பீர்கள்" என்றார்.

"ஐயா! எதற்கும் கவலைப்படவேண்டாம். என் முன் வீட்டு விறாந்தையில் நின்று பார்த்தாலே கல்லூரியின் திறந்த மண்டபம் தெரியும். நாளாந்தம் அவரை நான் பார்ப்பேன். அவருக்கு எந்த இடரும் ஏற்படாது. குருப் பட்டத்திற்கு வந்தபோது நான் அவரைக் கண்டிருக்கிறேன். நீங்கள் மகா சந்தோஷமாகப் போய்வாருங்கள்" என்று அனுப்பிவைத்தேன்.

துணை அதிபராகவும் பின்னர் அதிபராகவும் இருந்து கால் நூற்றாண்டு காலம் கல்லூரியை ஏணிப்படியில் ஏற்றிவைத்த பெருமை அவருக் குரியதே. இடைக்காலத்தில் பிரித்தானியாவுக்கு வந்து கல்வியறிவைப் பெருக்கி கலாநிதிப் பட்டமும் பெற்றுக்கொண்டார்.

ஓரிடத்திற்கு வெள்ளத்தால் அழிவு வரலாம், நெருப்பால் அழிவு நேரலாம், நோயால் இன்னல் ஏற்படலாம். இவற்றைத் தாங்கவும் தடுக்கவும் முடியும். ஆனால் போரால் நேரடி அழிவு ஏற்பட்டால் என்ன செய்யலாம்?

சிறந்த முறையில் வளர்ந்து கல்வியிலும் விளையாட்டுத்துறையிலும் பிறவற்றிலும் முன்னணியில் நின்ற கல்லூரியை இராணுவப் பேய் வந்து முற்றுகையிட்டது. கல்லெறிபட்ட குளவிக் கூடுபோல கல்லூரி சிதைந்தது. மானிப்பாயிலும் வேறு இடங்களிலும் கொட்டில்கள் அமைத்து கல்லூரி கட்டி வளர்க்கப்பட்டது. அவ்வேளை அதிபர் பிரித்தானியா, பிரான்ஸ், கனடா முதலிய் நாடுகளுக்குச் சென்று அவ்விடங்களிலுள்ள என்றியார் கல்லூரிக் கிளைகளுக்கு, கல்லூரிக்கு ஏற்பட்ட தாங்கமுடியாத சோதனையை விளக்கிவிட்டார்.

கல்லூரியைக் கண்மணியாக நேசிக்கும் பழைய மாணவர்கள் தாய்க் கல்லூரிக்கு ஏற்பட்ட சஞ்சலத்தில் கண்ணீர்விட்டனர். மீளவும் கல்லூரி புத்துயிர் பெற்றது. புதிய கட்டிடங்கள் தோன்றின. புது ஆசிரியர்கள் குவிந்தனர். கல்லூரியின் நாடி நரம்புகளும் புதுவேகத்துடன் வேலை செய்தன. கணனி அறிமுகமும் விஞ்ஞானகூடமும் வாசிகசாலையும் புதிய முகங்களுடன் தோற்றமளித்தன.

அனைத்து இலங்கைக் கால்பந்தாட்டப் போட்டிகளில் என்றியரசர் கல்லூரி வெற்றிகளைப் பெற்று புதிய பொற்காலத்தின் திரையைக் காட்டியது.

சில்லாலை, பண்டத்தரிப்பு, அளவெட்டி, காங்கேசன்துறை, சண்டிலிப்பாய் என்ற இடங்களில் அமைந்த கல்வித் தளங்களுக்கும் அதிபரே கல்வி என்ற படகிற்கு மீகாமனாக இருந்தார். இவற்றிற்கு எல்லாம் மேலாக அதிபர் அவர்கள் ஒரு சிறந்த துறவி. துறவற நெறியில் அவர் ஒரு சிறந்த எடுத்துக்காட்டு.

இனம், சாதி, சமயம் என்ற எல்லைகளுக்கு அப்பாற்பட்டது அவருடைய சித்தாந்தம். கல்விமான்களையும் சமுதாயத்தின் உச்சத்தில் இருந்தவர் களையும் அழைத்து கல்லூரியைப் பெருமைப்படுத்தி அங்கே அறிவின் குத்துவிளக்குகளை ஏற்றிவைத்தார். ஏழைகளை அணைத்து அன்பு பாராட்டியதை அடியேன் அவருடைய வெள்ளிவிழாவில் மட்டிட்டேன்.

மேடையிலே ஏறியறியாத ஒரு பெரும் கூட்டம் அங்கே வந்து அவருக்கு மாலைகளைச் சூட்டி மகிழ்ந்தமையால் அவர் மூச்சுவிடவே திணறினார்.

பூர்வீகமான இளவாலை ஆலயத்தை மை பூசி அழகு செய்து அலங்கரித்த பெருமை அடிகளுக்கே உரியது. ஆசிரியர்களையும் மாணவர்களையும் அறியும் அந்தரங்கத் தராசு அவர் உள்ளத்தில் ஆடியது. பிற நாடுகளி லிருந்து பழைய மாணவ சங்கத்து அங்கத்தவர்கள் கல்லூரி என்ற காதலியைக் கண்டு மகிழ்ந்தனர். பரிசளிப்புவிழா, விளையாட்டுப் போட்டிகள், நாடகங்கள் புது நிகழ்ச்சிகள் என்று கல்லூரி கொடிகட்டிப் பறந்தது.

இருபத்தைந்து ஆண்டுகளுக்குமேல் பணியாற்றிய அதிபர் இளவாலை யிலிருந்து பத்திரிசியார் கல்லூரி அதிபராக நியமிக்கப் பெற்றமையால் கல்லூரிப் பழைய மாணவர்களும் கல்லூரியில் படிக்கின்றவர்களும் ஊர் மக்களும் பொங்கி எழுந்தனர்.


ஆனால் வடஇலங்கையில் கத்தோலிக்கரின் படிப்பிற்கு பத்திரிசியார் கல்லூரியே முன் வரியில் திகழ்ந்து நின்றது. அதன் சுவர்கள் வீழ்ந்தால் நாட்டின் கல்வியே நசிந்துவிடும். பத்திரிசியார் கல்லூரியின் உயர்ச்சி, வட இலங்கையின் வளர்ச்சி. தமிழர் தாயகத்தின் எழுச்சி.

அங்கே புதிய பொற்காலம் உதயமாகியுள்ளது. பத்திரிசியார் கல்லூரியை பல்கலைக்கழகமாக்கும் எண்ணம் அதிபர் லோங் அடிகளாருக்கு இருந்தது. லோங் சுவாமிகளின் ஆசை வேர்கள் ஆலமரமாகச் செழித்து நிழல் தர யஸ்ரின் அடிகளாரே மந்திரக் கோலாக இருக்கிறார்.

மன்னார் ஆயர்மணி இராயப்பு யோசேப்பு அவர்கள் D.D., D.C.L

08

# மன்னார் மாநிலத்துக்கு ஒரு மகுடம்



இக்காலத்தில் ஈழநாட்டின் இதயத்தில் இருப்பவர்களில் மன்னார் ஆயர் அவர்களும் ஒருவர்.

"பொன்னான மனம் படைத்த புண்ணியவான்'' எனப்படும் புகழ்மணி.

அன்னையின் வசீகரம் கொண்ட முகமும், கண்களின் கருணையும் அவரை இரக்கத்தின் மறுபதிப்பு என்று கூறிவிடும்.

அவரோடு உரையாடினால் அவர் பேச்சில் அன்பும் பண்பும் தேனும் தென்றலும் உலாவக் காணலாம்.

அவருடைய சிரிப்பு எங்கள் கவலைகளுக்கு விட்டமின் மாத்திரைகள்

மனு வேந்தனுடைய வாசற் கதவுகளைப் போல முறையீடுகளுக்கு அவருடைய காதுகள் திறந்தேயிருக்கும்.

மன்னார் என்ற பெரும் நிலமாகிய உடலின் அங்கங்களுக்கு எங்கே இடர் நேரிட்டாலும் அங்கே அடியாரைக் காணலாம்.

இடையிலிருந்து உடை நழுவிச் சென்றால் ஓடிச் சென்று தாங்குகிறது கை. இதனை "உடுக்கை இழந்தவன் கைபோல - ஆங்கே இடுக்கண் களைவது" என்று வள்ளுவரே தெள்ளிதில் கூறினார்.

அங்கங்களின் ஒத்துழைப்பிலும், ஒற்றுமையிலும்தான் சமூக நலன் தங்கியிருக்கிறது.

வாய் உண்ணக் கை உதவுகிறது. கண்கள் உறங்கக் காது தாலாட்டுக் கேட்கிறது.

கால் நடக்கக் கண் வழி காட்டுகிறது.

உடலில் எங்கே காயம் ஏற்பட்டாலும் கண் அழுது விடுகிறது.

மன்னார் மக்களுக்கு இதயமாயிருந்து தாய்ப்பால் ஊட்டி வருகிறார் ஆயர்.

மன்னார்க் கிராமங்களும், மக்கள் ஒன்றியங்களும் ஒன்றுக்கு ஒன்று உதவிபுரிகின்றன.

இனம், மதம், மொழி, நிறம் என்ற எந்த வேறுபாடுகளும் பாராத பட்டினத்தடிகள் ஆயர் அவர்கள்

அவர் மன்னாருக்கே ஆயராய அமைந்திருந்தாலும் ஈழநாட்டுக்கும் இலங்கைக்கும் ஏற்றம் புரியும் ஆற்றல் வாய்ந்தவர்.

போர்க்காலத்தில் வாடிய பயிராயிருந்த மக்களுக்குத் தேடிய மேகமாய் வந்து மழை பெய்து ஆறுதலளித்தவர்.

தமிழ் மக்களின் துயரத்தையும் கண்ணீரையும் கண்டு, அரசின் நெஞ்சுக்கு நீதியை எடுத்துரைக்கும் பல சந்தர்ப்பங்களில் அஞ்சா நெஞ்சுடன் வாதாடியவர். இராணுவத்தின் கெடுபிடிகள், அடாவடித்தனங்கள், காவலாளிகளின் கயமைத் தனங்களுக்கு மக்கள் இரையான வேளை களில் மின்னல்போல குறிப்பிட்ட இடங்களுக்குச் சென்று தாக்கப்பட் டோருக்குத் தஞ்சமளித்து உண்மையை எடுத்துரைத்த நீதியரசர்.

காட்டு மிராண்டித் தனமான கயவர்கள், பண்பறியாத பகைவர்கள், நமது மண்ணில் வந்து, மங்கையர் கற்பைச் சூறையாடி, வாயில்லாப் பிராணிகளை வருத்தி, நிராயுதபாணிகளை ஆயுதம் காட்டி அச்சுறுத்தி, பல்வேறு அட்டூழியங்களைச் செய்த தருணங்களில் அறமார்க்கங்களைக் காப்பதும் அமைதியைக் காப்பதும் தமது சீரிய பணியெனச் சிந்தித்துச் செயலாற்றி எல்லோருடைய அன்பையும் நன்மதிப்பையும் பெற்றவர்.

குளம் வெட்டி வளம் பெருக்கிய நாட்டில் தொழில் துறைகளின்றி. அகதிகளாகி அல்லல்பட்டோருக்கு இல்லிடம் அமைத்து வருவாய் தேடவும் வழி சமைத்து இன்னல் தீர்த்து நன்னயம் புரிந்த செல்வச்சீமான்.

பாடசாலைகளைத் திருத்தி, உயர்நிலை பெறச் செய்து, வறுமை ஒழிப்புத் திட்டங்களை வகுத்து, சுதந்திர அபிலாசைகளுக்கு ஆதரவளித்து சமுதாயம் முன்னேற்றப் படிகளில் ஏற ஆவன செய்தவர்.

சமய சம்பந்தமாகச் செய்த பணிகள் பலவாகும்.

மடுமாதா திருத்தலம் இலட்சக் கணக்கான மக்களுக்கு அமைக்கப் பெற்ற சரணாலயம்.

அதன் மகிமையின்மேல் விழாக்கள் எடுத்து வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து அதைத் திறம்படப் பரிபாலித்து புதிய கட்டிடங்களை அமைத்து மாதா அருள் வெள்ளம் பரவ ஆயர் பணி செய்து வருகின்றார்.

மன்னா என்ற மாத இதழை ஆரம்பித்து அது கொப்பும் கிளையும் விட்டு மலரச் செய்தார். நேசன் அடிகளார் அதனைப் பலவழிகளிலும் சிறப்புறச் செய்து வருகின்றார். சிறந்த கத்தோலிக்க ஏடாகிய மன்னா அங்கேயுள்ள அனைவர் கைகளிலும் தவழுகின்றது.

ஆயர் அவர்களைக் கிறிஸ்தவர்கள் மாத்திரமன்றி சைவர்களும், முஸ்லீம்களும் மதித்து அன்பு பாராட்டி வருவது பாராட்டுக்குரியது.

எல்லோருக்கும் பணிவான ஊழியனாக வாழ்ந்து தொண்டு செய்ய வேண்டுமென்பதே அவருடைய குறிக்கோள்.

எவராவது அவர் செயல்களில் மாசு கற்பிக்க முனைவதில்லை. ஏனெனில் அவருடைய இரத்தத்திலே பாசமும் அன்பும் பணிவும் கலந்துள்ளன.

விசுவாசத்தின் வேர் ஆழமாகப் பதிந்த குடும்பத்தில், தனிநாயக முதலி மரபில் அவர் தோன்றியிருந்தாலும் பெருமை, ஆங்காரம், தலைப்பாரம் என்பவற்றின் நிழல்கூட அவரில் படிந்ததில்லை.

ஆயர் அவர்களுடைய தாயார் ஒரு பத்தினிப் பெண். இறைவனுக் கேற்ற அன்பு மலர். வாயில் புன்னகையும், மனதில் தண்ணளியும் கையில் செபமாலையும் தவறாத மாதரசி. பொறுமை, இரக்கம், இன்சொல், பணிவு, பக்தி என்ற ஐந்து இதழ்கள் கொண்ட அல்லி. தந்தையாரும் சீரிய பக்தியும் உயர்ந்த சிந்தனையுமுள்ள ஆண்மகன்.

அடியேனுடைய எழுத்துக்களைக் கவனமாக வாசித்துக் கனிவோடு பாராட்டுவார். எனது கவிதைகளில் நெஞ்சைப் பறிகொடுக்கும் தமிழ்ப் பாசமுள்ள தந்தை. மடுமாதா காவியம் எழுதுமாறு தூண்டியவர். அதனை மன்னாரில் அரங்கேற்றியவரும் அவரே!

அந்த நூலில் தேர்ந்த சில கவிதைகளை, இந்தியாவில் சிறப்புப் பெற்ற மாதர்களையும் மாணிக்கங்களையும் கொண்டு கஸ்பார் அடிகளார் அமைத்த இசைத்தட்டுகள் இலண்டனில் உவால்சிங்கம் மாதா கோவிலில் 10 நிமிட நேரத்தில் ஆயிரம் பவுண் (ஒரு இலட்சம் ரூபா) பெறுமதிக்கு விற்பனையாயின. அந்த நிதி வடகீழ் மாகாணங்களுக்கே அன்பளிப்பாயிற்று.

அந்த இசைத்தட்டை அடியேன் அவருக்கே அர்ப்பணம் செய்தேன். என் வாழ்விலும் வளத்திலும் அன்புகொண்ட ஆயர், யாழ். பல்கலைக்கழகம் எனக்குக் கௌரவ கலாநிதிப்பட்டம் தந்தபோது, மடு அன்னை ஆலயத் தில் நன்றித் திருப்பலி நிறைவேற்றி எனக்குப் பொன்னாடை போர்த்துப் பாராட்டிய செயலை நினைத்தால் நன்றியால் என் கண் இமைகள் நனைகின்றன.

கவிஞர் கண்ணதாசன்

09

# கம்பன் தம்பி கண்ணதாசன்



கவிஞர் கண்ணதாசன் பல நூற்றுக் கணக்கான கவிதை களையும் அவ்வாறே பல நூற்றுக் கணக்கான திரை இசைப் பாடல்களையும் எழுதி யுள்ளார்.

அவை என்னைத் தாலாட்டியிருக் கின்றன. கலங்க வைத்திருக் கின்றன. கண்ணீர் சிந்தவைத் திருக்கின்றன. துள்ளிக் குதிக் கச் செய்திருக்கின்றன. சிரிப்பில் எத்தி ஏந்தி வைத்திருக் கின்றன. மகிழ்ச்சியின் வெள் ளத்தில் அமுக்கி மூச்சுத் திணறவும் செய்துள்ளன.

பிறான்சு நாட்டின் பிறனிஸ் மலையின் உச்சியை அதன் அடிவாரத்தில் நின்று பார்த்துக் கொண்டிருந்தேன்.

அந்தச் சிகரத்தின் அடிவாரத்தில் இருந்து பெயர் தெரியாத பல்லாயிரம் மரஞ்செடிகள் மதாளித்து வளர்ந்து மலையைப் போர்த்திக் கொண்டன.

கீழே பசுமையும், நடுவில் மஞ்சளும், அதற்கு மேலே செந்நிறமுமான இலைக்கடல்களால் படிப்படியாக அந்தச் சிகரம் மூடப்பட்டுப் பருவ காலங்களை நினைவூட்டிப் பரவசமாக்கியது. ஊசியிலைக் காடுகளையும் அவற்றையடுத்துப் பாரிய விருட்சங்கள் செழித்து வளர்ந்திருப்பதையும் மட்டிட்டேன்.

ஆகாயத்தைத் தொட்டுக் கொண்டு வளர்ந்திருந்த அந்த விருட்சங்களின் மீது மலைக்காற்று அடிக்கையில் ஏற்பட்ட சத்தம், ஒரு சமயம் அவை குதூகலமாகச் சிரிப்பதுபோல என் காதில்பட்டது. இன்னொரு சமயம் பிரிவுத் துயரால் யாரோ விம்மிவிம்மி அழுவதுபோலக் காதில் விழுந்தது.

காலை நேரத்தில் மரஞ்செடிகளிலிருந்து பனித் துளிகள் கலகலவென உதிரும்போது அவை மரங்களின் ஆனந்தக் கண்ணீராகவும், இன்னொரு சமயம் உலகை எட்டிப் பார்த்துவிட்டு அவை சொரியும் சோகக் கண்ணீராகவும் தோன்றியது.

பட்சிகளின் கானம் ஒரு சமயம் சங்கராபரண இராகத்தைப் பாடக் கேட்டதால் இதய வீணை நரம்புகள் உற்சாகத்தில் துள்ளிக் குதிக்கலாமா என்று தூண்டலாயிற்று.

மற்றொரு சமயம் பறவைகளின் கீதம் துன்ப ரசம் பொருந்திய எதுகுல காம்போதி போல மாறி என் கண்களில் நீர்த்துளிகளை வரவழைத்தன.

அவ்வேளை என் பிரிய கவிக்கடலே! உன் நினைவில் நான் நனைந்தேன். உங்களுடைய பாடல்கள் சில வான வீதியில் வட்டமிட்டு மகிழச் செய்கின்றன. வேறு சில கண்ணீர்த்துளிகளைச் சிந்தச் செய்கின்றன:

**பிறப்பிலும் அழுதேன்! வந்து**
**பிறந்தபின் அழுதேன்! வாழ்க்கைச்**
**சிறப்பிலும் அழுதேன்! ஒன்றிச்**
**சேர்ந்தவர் சிலரின் கூற்று**
**மறைப்பிலும் அழுதேன்! உங்கள்**
**மனத்திலும் அழுதேன்! ஊரார்**
**இறப்பிலே அழுவ தெல்லாம்**
**இதுவரை அழுதுவிட்டேன்**

**மன்றத்தில் அழுத என்னை**
**மறுபடி அழ வைக்காமல்**
**சென்றுவா! தமிழே நாளை**
**திரும்பவும் சந்திக் கின்றேன்.**

..... மூன்றாவது கவிதைத் தொகுப்பு பக்கம்- 157

என்று தமிழில் அழுது தமிழுக்குப் பிரியாவிடை கூறுவது அருமையாய் இருக்கிறது.

கம்பன் கவிதைகள் ஓரளவுக்கு இலக்கண இலக்கியம் கற்றோருக்கே விளங்கி இரசிக்கக் கூடியதாயுள்ளன.

ஆனால் உலக அந்தங்களிலுள்ள அனைத்துத் தமிழ் இல்லங்களிலும் உங்கள் பாடல்கள் கேளாத காதுகள் ஒன்று இரண்டாவது இருக்குமோ என்பது சந்தேகம்தான்! பாடல்கள் தித்திக்கும் தேனாகச் சுவை சொட்டு கின்றன.

**செந்தமிழ்த் தேன் மொழியாள் - நிலா வெனச்**
**சிரிக்கும் மலர்க் கொடியாள்**
**பைங்கிளி இதழில் பழரசம் தருவாள்**
**பருகிடத் தலை குனிவாள்**

என்று மாலையிட்ட மங்கையில் வரும் பாடல்கள் சொல்லிலும் கருத்திலும் சுவை சொட்டவில்லையா?

மனித சமுதாயத்தில் பாடல்களினால் உயர்ந்த கருத்துக்களை விதைத்து விட்டவர் கண்ணதாசன்:

**வாரி வாரி வழங்கும் போது**
**வள்ளலாகலாம்**
**வாழை போலத் தன்னைத் தந்து**
**தியாகி ஆகலாம்**
**உருகி ஓடும் மெழுகு போல**
**ஒளியை வீசலாம்**
**ஊருக் கென்று வாழ்ந்து நெஞ்சம்**
**சிலைகளாகலாம்**

சுமைதாங்கியில் வரும் இப்பாடல் மனிதர் உள்ளங்கள் என்ற சிலைகளில் தீட்டக்கூடிய சிறந்த வரிகள் அன்றோ?

"காட்டுக்குள் தேனீக்கள் கூட்டுக்குள் வைப்பதைப் பாட்டுக்குள் வைத்த வனே!" என்று உங்களைப் பாராட்டிப் பாடியவன், கவியரசர் கண்ண தாசனின் பாடல் தேனை நக்கிய பாவலன் ஒருவன்தான்!

தேன் என்பதையே ஒரு பாடலில் எவ்வளவு கச்சிதமாக எடுத்தாண் டுள்ளார் என்பதைப் பாருங்கள் !

**பார்த்தேன்! சிரித்தேன்! பக்கத்தில் அணைத்தேன் - அன்று.**
**உனைத் தேனென்ன நான் நினைத்தேன் - அன்று**
**மலைத்தேன் இதுவென மலைத்தேன்**
**கொடித்தேன் இனி எங்கள் குடித்தேன் - என்றொரு**
**படித்தேன் பார்வையில் குடித்தேன் - ஒரு**
**துளித்தேன் சிந்தாமல் களித்தேன் - கைகளில்**
**அழகினை ரசித்தேன்... எடுத்தேன் கொடுத்தேன்**
**சுவைத்தேன்...**

என்று பாடலில் இசைக்கும் பொருத்தமாக எத்தனையோ தேன் துளிகளைப் பெய்திருக்கும் கண்ணதாசன் பூங்கரங்களை வணங்க வேண்டும்போல் தோன்றுகிறது. அவருடைய சொல்லாட்சி இணையற்றது.

நீதி நெறிமுறைகளை அவரைப் போலப் பாடலில் புகுத்திய வேறொருவரை காண்பது அரிது.

**மக்கள் கட்டும் மண்டபத்தை நான் இடித்தேனா? நீதி**
**மன்றத்திலே பொய்யுரைத்து நெறி மறந்தேனா?**
**கற்றவர் மேல் - பழி உரைத்துக் கலங்க வைத்தேனா? - ஒரு**
**கடவுளில்லை என்று சொல்லிக் கருத் தழித்தேனா?**

பெண் பிறவிகளைக் கண்ணதாசனிலும் பார்க்க இன்னொருவர் பின்வருமாறு கவிதைகளில் மணம் வீசச் செய்யமுடியுமா?

**தேன் தரும் மலரே! திருநாள் சிலையே!**
**வான் தரும் மழையே! வளரும் பிறையே!**
**காவியக் கலையே! காவிரிக் கரையே!**
**தீபத்தின் ஒளியே! தெய்வத்தின் நிழலே!**

எமது சங்கப் பாடல்களில் காதலும் போரும் பாடு பொருள்களாக வந்திருப்பதைப் பார்க்கலாம்.

கண்ணதாசன் பாடல்களில் காதல் பெருக்கெடுத்திருக்கிறது.

கவிஞர் சிகரமே! ஈழ நாட்டிலும், புலம்பெயர்ந்த நாடுகளிலும் நமது வாழ்வும் வளமும் எப்படியிருந்தாலும் கவிஞர்களுக்குக் குறைவில்லை.

நூற்றுக் கணக்கானவர்கள் தங்களைத் தாங்களே கவிஞர்களாக்கி விட்டார்கள். எல்லோரும் பண்டிதமணி கூறுவதுபோல் பரீட்சை எடாத பண்டிதர்கள். புல்லும் நெல்லும் புலவனாகிவிட்டால் உங்களையும் கவிஞர் என்பது பொருந்துமா?

உங்களை அவர்களோடு ஒப்பிட்டுப் பார்க்கால் வளர்ந்து நாலு பக்கமும் கிளை பரப்பிய ஆலமரம்.

ஆனால் கனிகளோ பலாக் கனிகள். அதுவும் இளவாலைப் பலாக்கனிகள். வட இலங்கையில் இளவாலைப் பலாக்கனிக்கு ஈடிணை கிடையாது.

உங்களைக் கவிஞர், கவிமணி, கவிஞர் திலகம், கவிப்பேரரசர், பெருங்கவி என்பதெல்லாம் பொருந்தாது. எனவேதான் கவிஞர் சிகரம்

என அழைக்கிறேன். நீங்கள் எழுதியுள்ள திரை இசைப் பாடல்களை ஒதுக்கிவிட்டு, மரபுக் கவிதைகளை எடுத்து ஆராய்ந்தால் பல நூறு கவிதைகளைக் காணலாம்.

கண்ணதாசன் கவிதைகள் ஆறு தொகுதிகள் வெளிவந்துள்ளன. ஒவ்வொரு தொகுதியும் பத்தாம் பதிப்பையும் கண்டு கொண்டவை. இவற்றைவிட இயேசு காவியம், முற்றுப் பெறாத காவியங்கள் என்பனவும் கணக்கிலே சேர்க்கப் பெறவேண்டும்.

இரண்டு வார காலத்திலே குற்றாலத்திலே இருந்து இயேசு காவியம் என்ற சிறந்த காவியத்தை எழுதி முடித்தது ஒரு இமய சாதனை. முற்றுப் பெறாத காவியங்கள் என்ற நூலை உங்களுடைய பிரிய தம்பியார் இராம கண்ணப்பன் வெளியிட்டார்.

அதில் பாண்டிமாதேவி, பார்த்ருஷ்ரி காவியம், சங்கர காவியம் என்பன தொகுக்கப் பெற்றுள்ளன.

"ஈழ மகள் கண்ணீர்" என்ற காவியம் கறையான்களுக்கு இரையாகிப் போனதாகத் துயரத்தோடு கண்ணப்பன் குறிப்பிடுவதை வாசிக்கும்போது என் சிந்தை நொந்தது.

கற்பனை இமயத்தில் ஏறி உங்களைப்போல ஈழ மகளைப் ப்ற்றி எழுத வருங்காலத்தில் யார் இருக்கிறார்கள்? 1500 ஆண்டுகளுக்கு முன்பு கவிச் சக்கரவர்த்தி கம்பன் வாழ்ந்தார். அவர் படைத்த காவியம் தமிழ் இலக்கியங்களின் மணிமுடி.

"யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல் வள்ளுவன்போல் இளங்கோவைப் போல்...." என்று பாரதி முதலில் கம்பனைப் போற்றினார்.

"கையில் கம்பன் கவியுண்டு" என்று கவிமணி தேசிகவிநாயகம் பாராட்டி னார். 'விருத்தம்' எனும் ஒண்பாவில் உயர் கம்பன் என்றார் முன்னோர். ஆனால் இன்று கம்பன் கவிதைகளைப் பயில்வோர் மிகவும் குறைந்து வருகின்றனர்.

கம்பன் கைபடாத பா இனங்களையெல்லாம் தொட்டுவிட்டீர்கள்.

செய்யுள் இலக்கணத்தைச் சீராகக் கற்றிருப்பதோடு உங்கள் மொழி ஆற்றலும் கற்பனைச் சிறகுகளும் மரபுக் கவிதைகளுக்குச் சுருக்கெடுத் திருக்கின்றன.

பாரதி தேசியக் கவிதைகளினால் தமிழ் நாட்டின் முதுகெலும்பை நிமிர்த்தினார்.

நீங்கள் கற்றவர்களும், பாமரர்களும் விரும்பிச் சுவைக்கக் கூடியதாக செந்தமிழைத் தேனாகப் பிழிந்து திருவிருந்தாகக் கொடுத்துவிட்டீர்கள்.

பிரதமர் நேருவில் நீங்கள் கொண்டிருந்த பாசம் ஒப்பு உவமையற்றது. விருத்தங்கள் கலிப்பாக்களைத் தவிர ஆசிரியப் பாக்களும் இடம் பெற்றுள்ளன.

"ஆசிரியப்பா அவசரப்பா" என்று நீங்கள் எங்கேயோ குறிப்பிட்டிருக் கிறீர்கள்.

பல தமிழிசைப் பாடல்களும் சந்தப் பாடல்களும் கைவரிசைக்கு வந்துள்ளன. உங்கள் கவிதைகள் பாடல்களில் நெஞ்சைப் பறிகொடுத்த ஒரு காதலனாக என்னை நினைத்துக் கொள்ளுங்கள்.

"சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக் காட்டினிலே" என்ற கலித்தொகைப் பாடலைத் திரை இசையில் நீங்கள் சேர்க்கவில்லையா? உங்களுடைய ஒரு சில பாடல் வரிகள் என்னையறியாமல் எனது கவிதைகளில் கலந்து கொண்டன.

எனது மரபுக் கவிதைகளில் மூலை வேலிக்கு கதியால் போடத் துணை புரிந்தவர் நீங்கள்தான்.

கண்ணதாசன் கவிதைகளையிட்டு இதுவரை எழுதினேன். அவருடைய வசன நடைபற்றி எழுதாவிட்டால் இக்கட்டுரை குற்றுயிரோடு கிடக்கும்.

இக்காலத்தில் கவிப் பேரரசு என விளங்கும் வைரமுத்து அவர்கள் எழுதும் வசன நடைக்கும் குருநாதன் கண்ணதாசனே!

கண்ணதாசன் ஒரு பந்தியில் எழுத வேண்டியதை ஒரு வாக்கியத்தில் அடக்குவார். இந்த மாதிரி எழுதிக் கண்ணதாசனுக்கு வழி அமைத்தவர் தி.ஜ.ர. அவர்களே! தி.ஜ.ர. அவர்களுடைய வசனநடைக்குப் பிதாவாக விருந்தது திருவிவிலியம் என்னும் வேதாகமம்.(பைபிள்).

பவளத்திலும் ஞானமே சிறந்தது. நீங்கள் விரும்பும் எதுவும் அதற்கு ஈடாகாது (நீதிமொழி - பைபிள்). ஒரு பந்தியாய் எழுத வேண்டியதை ஒரு வரியில் எழுதியது போலவே கண்ணதாசனும் எழுதுவார்.

இது எனது கருத்து மாத்திரமன்றி வைரமுத்து அவர்களுடைய கருத்தும் இதுவே! 'மன வாசம்' 'வன வாசம்' என்ற நூல்களில் கவிஞரின் வசன நடையின் செம்மையைக் காணலாம். 'தென்றல்' என்ற பத்திரிகையைக் கண்ணதாசன் நடத்திவந்தார். அது நின்றபோது தாங்கமுடியாமல் எழுதினார்.

**கம்பன் அடிச்சுவட்டில்**
**கால் வைத்த தென்றலது**
**காவிரியின் வெள்ளமெனக்**
**கரை கடந்த தென்றலது**

........................

**கண்ணில் கருத்தில்**
**கனவில் உனை அணைத்து**

**என்றும் மகிழ்வேன்**
**இனியவளே நின் ஆவி**
**வானகத்தே வாழியவே!**


என்று பாடி முடித்தார். அவருடைய பாடல்களும், கவிதைகளும், வசனங்களும் வானமும் பூமியும் உள்ளவரை வாழும்.

கவிஞர் வைரமுத்து அவர்கள், கடைசி வேளையில் எல்லாரையும் அகற்றிவிட்டு சுசீலா அம்மையாரின் பாடல்களைக் கேட்க விரும்புவதாய் எழுதினார். எனக்கு அப்படியான சந்தர்ப்பத்தில் சொல்லும் பொருளும் இனிக்கும். உங்களுடைய பாடல்களைக் கேட்கவே விரும்புகிறேன் என்று சொல்லி வைக்கிறேன்.

செவாலியர் சிவாஜி கணேசன்

10

# "திரை உலகில் ஒரு திருவிளக்கு"



"சிங்கத் திருநாடே! நீ சிலந்திக்கூடாக மாறியது எப்போது? வந்தாரை வாழ வைத்த வளமார்ந்த தமிழகமே! நீ சொந்த நாட்டாரையே சுரண்டு வது எத்தனை நாட்களாக? வீரப் பெண்களின் ஏடுகளை எழுதி, எழுதி ஏற்றம் பெற்ற என் அருமைப் பொன் நாடே!

நீ வீதிகளில் விலைமகளிரைத் திரியவிட்டு விழிகளை மூடிக் கொள்வது ஏன்? ஏன்?

வானத்தை முட்டும் மாளிகைகள்! மானத்தை இழந்த மனிதர்கள்! உயர்ந்த கோபுரங்கள்! தாழ்ந்த

உள்ளங்கள்! ஏ! தமிழ் நாடே! இதுதானா உன் பெருமை? தகுதி! யோக்கியதை!"– என்ற சிவாஜியின் சிம்மக்குரல் சிதறிப் பரவாத தெருக்கள் இல்லை! திருமண வீடுகள் இல்லை! பொதுக் கூட்டங்கள் இல்லை! ஒலிபெருக்கிகளுக்கே இவை மனன பாடமாகிவிட்டன.

இது நடந்தது 1952இல்.

அப்போது பராசக்தி திரைப்படம் வெளிவந்தது, திரைப்பட உலகின் திசையைத் திருப்பிவிட்டது.

இராஜா, இராணிக் கதைகளும், புராணச் செய்திகளும், மாயாஜால விநோதங்களும் பராசக்தி என்ற சுனாமியால் கரைதெரியாமல் ஒதுக்கப் பட்டன. கிட்டப்பா பாகவதர், தியாகராஜா பாகவதர், கொன்னப்பா பாகவதர், பி.யூ. சின்னப்பா, தண்டபாணி தேசிகர், கோவிந்தர், மகாலிங்கம் எனக் குரல் வளமுள்ள பாடத் தெரிந்தவர்களே பட உலகில் முத்திரை பதித்து வந்த காலம் அது.

1952 தீபாவளித் தினத்தன்று சமூகத் திரைப்படமாகப் பராசக்தி திரைவானில் உதயமானதும் பழைய நட்சத்திரங்கள் மறைந்துபோயின. கலைஞர் கருணாநிதி எழுதிய நெல்லும் பொரியும் வசனங்கள். சிவாஜியின் சிம்மக்குரலுக்குத் தீனிபோட்டன. இளமையில் கணேசனுக்குக் கம்மாளத்தான் கூத்தென்றால் உயிர். கட்டைப் பொம்மன் என்ற பெயர் ஆங்கிலேய அடிவருடிகளைப் பயமுறித்தி வந்ததால் அந்தப் பெயரையே கம்மாளத்தானென மாற்றிவிட்டனர் நாடக மாந்தர்.

"வானம் பொழியுது பூமி விளையுது உனக்கேன் வரிகட்ட வேண்டும்?" என்று உறுமிக்கொண்டு கேட்பது கணேசனுக்கு வாடிக்கையாகிவிட்டது.

வீட்டிலே கம்மாளத்தான் கூத்து வரிகளைப் பேசும்போது அயல்வீட்டார் எல்லோரும் அதைப் பார்த்துப் பரவசமுற்றனர். "இந்த நாடகம்தான் என் மனதில் ஒரு புதிய எண்ணத்தை எழுப்பி நடிப்புத் துறையில் என் வாழ்க்கையை அமைக்க அத்திவாரம் இட்டது" என்று கலைஞர் கருவூலமாகிய கணேசனே சொன்னார்.

தாயார் இராஜாமணி அம்மையாரும் மகனாரின் ஆசைத் திரியைத் தூண்டிவிட, பல நாடக மன்றங்களுக்கு அலைந்து, ஈற்றில் பாலகான சபா மன்றத்தில் சேர்ந்து கொண்டார் கணேசன்.

பல வருடங்களுக்குப் பின்னர் ஒருநாள் தம்மைப் பார்க்க வந்த ஒரு கட்டை மனிதரைச் சிவாஜி விழுந்து வணங்கி உபசரித்து வரவேற்றார். எல்லோரும் ஏங்கிக்கொண்டு நின்றபோது சிவாஜி, "இவர்தான் என் குருநாதர், பொன்னுச்சாமிப்பிள்ளை. இன்று நான் புகழ்பெற்ற ஒரு பெரிய நடிகராயிருப்பதற்கு வித்திட்ட தெய்வம் இவர்தான்!" என்று பாராட்டி நன்றியின் சுமையை அங்கே இறக்கினார்.

பத்து வயதிலேயே நாடகக் குழுவில் சேர்ந்து கொண்டார் கணேசன். அங்கே காலை ஐந்து மணிக்கு எழும்ப வேண்டும். தேகப் பயிற்சி, பாடல் பயிற்சி, வசனப் பயிற்சி, நடிப்பு, நடனப் பயிற்சி முதலான பயிற்சிகளைப் பெறவேண்டும். கணேசனுக்கு எல்லாம் வாலாயமாயின. முதலில் பால கிருஷ்ணன் வேஷம் தாங்கியவர், பின்னர் பெண் வேஷத்தில் நடித்தார்.

பல நாடகங்களில் கதாநாயகியாக நடித்திருக்கிறார். அக்காலத்தில் பெண்கள் நாடகத்தில் பங்குபற்றும் வழக்கம் இல்லை. நூர்ஜகான் வேடத்தில் அழகிய இளம்பெண்ணாக நடித்த கணேசனை உண்மையான யுவதி என நினைத்துக் கடத்த வந்து ஏமாந்தவர்களும் உண்டு.

"சிவாஜி கண்ட இந்து சாம்ராச்சியம்" என்ற நாடகத்தில் கணேசன் வீரசிவாஜியாக நடித்துப் பாராட்டுப் பெற்றார். திராவிடக் கழகத்தின் ஆதரவில் இந்த நாடகம் நடைபெற்றது. இதனை அறிஞர் அண்ணா அவர்களே எழுதியிருந்தார். நாடகத்தைப் பார்த்தவர்கள் கணேசனின் நடிப்பைப் பாராட்டினார்கள். திராவிடக்கழகத் தலைவர் பெரியார் கணேசனுக்கு, சிவாஜி கணேசனெனப் பட்டம் சூட்டினார். சிவாஜி எனப்பெயர் சூடிய வரலாறு இதுதான்.

என் சிந்தனையில் நடிக்கும் நடிகர் திலகமே!

நீங்கள் திடீரென மறைந்த செய்தியைக் கேட்டுக் கண்ணீர்விட்ட இலட்சோப லட்சம் மக்களில் இவனும் ஒருவன். தொலைக்காட்சிப் பெட்டியைக் கண்வெட்டாமல் பார்த்தபடியிருந்தேன். தாயார் இறந்து உடல் எரிந்தபின் பாயைத் தடவிப் பார்க்கும் பாலகன்போல உங்களுடைய' திரைப்படத் தட்டுகளைத் தடவினேன். உங்களுடைய வசனத்தைக் கேட்டு என் காதுகள் கவிதை எழுதியிருக்கின்றன.

உங்களுடைய நடை, சிரிப்பு, கோபம், துயரம், கண்ணீர் எல்லாம் என் ஆன்மாவில் அந்தரங்க அறைகளுக்குச் சென்று குளிர்ப்பெட்டியில் பாதுகாக்கப் பெறும் பொருட்களைப்போல இடம்பிடித்துக் கொண்டன. திரை உலகின் ஒழுக்கநெறியில் ஒரு துளி கரும்புள்ளிகூடப் படாத மனித மாணிக்கம் நீங்கள்.

அரசியல் சிக்கல்களில் காலை மாட்டிக் கொள்ளாமல் எழுந்து விட்டீர்கள். சிவாஜி, பத்மசிறீ, நடிப்புச் சக்கரவர்த்தி, நடிகர் இமயம், கலைவிளக்கு, உலகப் பெருநடிகர் என்று எத்தனையோ பட்டங்களை அளித்தார்கள்.

பாரதப் பிரதமர் நேரு, பெருந்தலைவர் காமராஜ், மூதறிஞர் இராஜாஜி, தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, இந்திரா காந்தி, மக்கள் திலகம் எம்.ஜி.ஆர், உலகில் இணையற்ற நடிகராக உங்களைப் பாராட்டினார்கள். இவற்றுக்கெல்லாம் மகுடமாக பிராஞ்சுதேசம் "செவாலியர்" என்ற மதிப் பார்ந்த பட்டத்தை அளித்துப் பாரதம் விட்ட குறையை நிறைவு செய்தது.

எனக்கு ஒரு குறையுண்டு. அடியேன் என் வாழ்நாளில் அன்னை திரேசா, பேராசிரியர் கல்கி, கவிஞர் இமயம் கண்ணதாசன், நடிகர் வேந்தன் சிவாஜி என்போரை நேரில் காண ஆசை கொண்டிருந்தேன். அது நிறைவேறவில்லை. என் பிரிய மகன் நேரு உங்களை நேரில் கண்டு மகிழ்ந்து எடுத்துக்கொண்ட நிழற்படத்தைப் பார்த்து மகிழ்ந்தேன்.

### தரகு

**தரகர்:** நான்தான் ஐயா, உங்களுடைய கலியாணம் விரைவில் முடிய வேண்டும் என்று எல்லா ஏற்பாடுகளும் செய்தவன். என்னை நினைவில் வைத்திருக்கிறீர்களா?

**வீட்டுக்காரர்:** அடடே! நீங்கள் தானா அந்த ஆசாமி. நான் இதுவரை வேறு யாரையோ திட்டிக் கொண்டிருக்கிறேன்.

பேராசிரியர் கல்கி

11

# "நீங்காத நினைவு"



**சிந்தனையில் செழிப்புற்ற நந்தவனம் கல்கி**
**தேசத்தின் தேரிழுக்க வடம்பிடித்த தியாகி**
**செந்தமிழில் சந்தனமும் மல்லிகையும் மணக்கத்**
**தேன்சேர்த்து நாவூறும் வசனநடை எழுதி**
**வீந்தைபெறும் சிறுகதைகள் நாவல்களைப் புனைந்து**
**விரும்புகின்ற கரும்பாக்கி விளைநிலத்தில் நட்டோன்**
**நந்தாத எழுத்துலகின் பண்ணையிலே கலைஞன்**
**நட்டுவைத்த பூமரங்கள் நறுமணத்தை வீசும்**

இளவாலையைச் சேர்ந்த ஏகலைவனுக்கு தூரத்திலிருந்தே துரோணரா யிருந்தவர் கல்கி.

பொன்னியின் புதல்வன் என்று போற்றுகின்ற அமரர் கல்கி அவர்கள் எழுத்துத் துறையில் என் குருநாதன்.

ஆசிரிய கலாசாலையில் படித்துக் கொண்டிருந்த காலத்திலேயே துரோணரின் வில்லாற்றலில் தன்னைப் பறிகொடுத்த வேடனைப் போல அவர் எழுத்துகளில் பேராசை கொண்ட பித்தனானேன்.

"நாடு நீங்கிக் காடு புகச் சென்ற கோதையாகிய சீதையின் காதலனை" என்று எதுகை மோனையுடன் எழுதிய பேராசிரியர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்களின் நடையினால் அக்காலத்தில் ஆக்கிரமிக்கப்பட்டிருந்தபோது கல்கியின் வசனநடை புதிய உல்கத்தைக் காட்டியது எனக்கு.

அந்நாட்களில் கல்கி ஆனந்தவிகடனின் ஆசிரிய பீடத்தை அலங்கரித்தார். அவர் எழுதிவந்த "கள்வனின் காதலி" என்ற தொடர்கதை, வசன அமைப்பிலும், கதை செல்லும் போக்கிலும், மண்ணின் வாசனையிலும் தமிழ் உள்ளங்களைக் கவ்விப் பிடித்தது. கதையின் போக்கைப் பொறுத்த சந்தியில் மாற்றிவிடுவார்.

அடுத்த இதழை எதிர்பார்ப்பது, சூரிய உதயத்தை எதிர்பார்க்கும் இராக் காவல்காரனைப் போல இருக்கும்

யாழ்ப்பாணத்தில் 25-26 பத்திரிகைகள்தான் வந்திருக்கக்கூடும். சண்முகநாதன் புத்தகசாலைக்கு அருகில் ஒரு பத்திரிகைக் கடையில்

ஆனந்தவிகடன் வேண்டிக்கொள்ள மூன்று மைல் தூரம் நான் நடந்து செல்வது வழக்கம்.

காதல் நூல்களை ஆசிரிய கலாசாலையில் வாசிப்பதற்குப் பூட்டுப் போட்டிருந்த காலம் அது.

நான் கொண்டுபோய்ச் சேர்க்கும் "ஆனந்தவிகடன்" எல்லாருக்கும் இரகசியமாக கைமாறும் பலகாரமாயிற்று. எங்கள் விரிவுரையாளரும் கல்கியின் தாசன் என்பதையும் நான் அறிந்து கொள்ளக் கூடியதாயிற்று.

ஒரு நாள் வகுப்பில் எனது கட்டுரையை வாசிக்க சொன்னார், வாசித்தேன். முடிவில் அவர் என்னை ஒரு "சின்னக் கல்கி" என்று குறிப்பிட்டுப் பாராட்டியது எனக்குப் பேரானந்தமளித்தது.

பிற்காலத்தில் எனக்கு அளிக்கப்பெற்ற "சொல்லின் செல்வன்" கவிமணிப் பட்டங்களிலும் "சின்னக் கல்கியே" எனக்கு இன்பமளித்த பாராட்டுப் பட்டமாயிற்று.

1938ஆம் ஆண்டு கல்கி யாழ்பாணம் வந்திருந்தார். அவரை நேரில் காணவேண்டும் என எனக்கிருந்த அகோரப் பசிக்குத் தீனி கிடைத்தது. இந்துக் கல்லூரி மேல் மாடத்தில் நடந்த பெரும் கூட்டத்தில் கல்கி பேசினார்.

அவருடைய பேச்சில் நகைச்சுவை இயல்பாகவே கலந்திருந்தது. மேடையில் கல்கிக்கு அருகில் அமர்ந்திருந்தார் மாலி.

அவர் ஒரு நகைச்சுவை கலந்த சித்திர மேதாவி.

ஒரு சில கோடுகளிலேயே காந்தி, இராஜாஜி என்பவர்களை வரைந்து விடுவார்.

மாலி பின்பக்கம் சென்று அன்று கூட்டத்துக்குத் தலைமைதாங்கியவரை கரும்பலகையில் வரைந்து கல்கியின் பேச்சின்போது மேடையில் வைத்தார். சுமார் 10 நிமிடம் கைதட்டலும் சிரிப்பும். கூரை ஓடுகள் கூட சிரித்தன. அந்த முதிய கட்டிடம் எக்காலத்திலும் இவ்வாறான சிரிப்பைக் கண்டு கேட்டிருக்காது.

தலைவரின் வளைந்த மூக்கு, மடிப்புச் சால்வை, முன் நெற்றியில் சில மயிர்கள், அவர் சிரிப்பு, முகத்தின் சுருக்கங்கள் எல்லாம் தத்ரூபமாய் அமைந்து நகைச்சுவையில் தாளித்திருந்தார். கல்கியும் சிரித்தார். 10 நிமிடங்கள் அவர் பேசாமல் இருந்துவிட்டார்.

தலைவர் ஒரு அறிஞர். "உலகில் ஒருவரைப்போல் இன்னொருவர் இருப்பதில்லை. மாலியைப் போல் உலகில் இன்னொரு சித்திரக்காரன் இருக்கமுடியாது" என்றார். கல்கி தொடர்ந்து பேசினார். கல்கியிடம் சபைக் கூச்சம் என்பது மருந்துக்கும் இல்லை.

நகைச்சுவை பொங்கிவந்து கூட்டத்தைக் கலக்கிவிடும். குரல் இனிமை யானது என்று சொல்வதற்கில்லை. ஆனாலும் பேச்சுக்கு இதமான குரலாய் இருந்தது. யாழ்-பட்டினசபையில் கல்கி பேசியபோது பேரின்பநாயகம் அவர்கள் தலைமை வகித்ததாக ஒரு சிறு ஞாபகம். களைத்துப்போய் வந்த கல்கி அவர்கள் அதிக நேரம் எதிர்பார்த்தவாறு உரையாற்றவில்லை. கேள்விகள் கேட்டால் பதில் கூறலாம் என்றார். ஒருவர் பின்வருமாறு ஒரு கேள்வியைத் தொடுத்தார்.

"வடக்கே இருந்து இந்தியும், தெற்கே இருந்து சிங்களமும், நசிக்கும் போது தமிழ் மொழிக்கு ஆபத்து ஏற்படும் என்று நீங்கள் நினைக்க வில்லையா?" என்பதுதான் கேள்வி. கல்கி சிரித்துக்கொண்டே மேடையில் எழுந்தார். "எனக்கு நன்கறிமுகமான ஒரு நண்பர் இருக்கிறார். அவர் ஒரு சிவபக்தர் ஆவர். தனது அருமை மகனுக்கு மிக நீளமான ஒரு பெயரை வைத்திருந்தார். சிவ நாராயண பழனிவேல் என்பதுதான் அந்தப் பெயர். "இவ்வளவு நீண்ட பெயரை ஏன் வைத்தீர்கள்" எனக் கேட்டேன். அக்காலம் சிவ பக்தர்களுக்கும் விஷ்ணு பக்தர்களுக்கும் கொஞ்சம் வேறுபாடிருந்த காலம். அந்த நண்பர் நாராயணனை இந்தப் பக்கம் சிவனும், அந்தப்பக்கம் பழனிவேலனும் நசுக்கவேண்டும். அதற்காகத்தான் இந்தப் பெயரைத் தெரிந்து கொண்டேன் என்றார். எப்படி நசுக்கினும் நாராயணன் நசுங்கிவிடப் போவதில்லை. நண்பருக்கு ஏற்பட்ட மனக் கிலேசம் இப்படி முடிந்திருக்கிறது. தமிழ் ஆயிரக் கணக்கான ஆண்டுகளாக எத்தனையோ இடர்ப்பாடுகளிலே தழைத்திருக்கிறது. அதற்கு ஆபத்து வந்துவிடாது" என்று இக்கருத்தை விரித்து அழகாகப் பேசினார்.

எழுத்தில் கல்கியினுடைய வசனநடை அழகாகவும், இனிமையாகவும், இதமாகவும் அமைந்தது. எவரையும் கவர்ந்து இழுக்கக்கூடிய சக்தி வாய்ந்தது. கட்டுரைகளோ, சிறுகதைகளோ, குறுநாவல்களோ தொடர் கதைகளோ, இசைவிமரிசனங்களோ, அரசியல் நடவடிக்கைகளோ எவையாயினும் அவருடைய எழுத்தில் ஒரு புதிய மலர்ச்சியும் அழகும் கருத்தும் அங்கே இருக்கும்.

அரசியலில் ஈடுபட்ட காரணத்தால் கல்கி ஆனந்தவிகடனை விட்டு விலக வேண்டியதாயிற்று. அதனால் தமிழ் உலகமே அதிர்ந்தது. ஆனந்தவிகடனுக்கு இருந்த மதிப்பும் சிறப்பும் சரிந்து கொட்டியது. கல்கி, "கல்கி" என்ற பெயரில் புதிய சஞ்சிகையை ஆரம்பித்ததும் தமிழ் உலகம் அவருக்குப் பேராதரவு கொடுத்தது. இந்தியாவிலேயே இரண்டாவது ஸ்தானத்துக்குக் கல்கிப் பதிப்புகள் வந்தன. ஆனந்தவிகடன் சிலகாலம் குற்றுயிராய்க் கிடந்தது.

காந்தி அடிகளின் உண்மையான தொண்டன் கல்கி. கல்கி புனைந்துள்ள கதைகளைப் போலவே அவருடைய வாழ்க்கை வரலாறும் சுவையானது. விடுதலைப் போராட்டங்களிலும், தமிழ் வளர்ச்சியிலும், சமூக சீர்திருத்தங் களிலும், தென்னகத்துக் கலைகளின் மறுமலர்ச்சியிலும் அவருக்குப் பெரும் பங்குண்டு.

வாழ்க்கை முறையில் எளிமையும், சிந்தனைகளில் உயர்வும் உடையவர் களே உலகில் மகான்கள் என்ற வரிசையில் வைத்துப் போற்றப் பெறுகின்றார்கள். இந்த வரிசைக்கு உரியவர் என்று இராஜாஜி அவர் களைக் கல்கி குறிப்பிட்டிருக்கிறார். ஆனால் கல்கி அவர்களும் இராஜாஜியின் அடிச்சுவடுகளில் தன் காலடிகளைப் பதித்தவரே! கல்கி சிறந்த எழுத்தாளர் என்பதோடு சாவி, துமிலன், தேவன், எஸ்.வி.வி, முதலான எத்தனையோ எழுத்தாளரை முன்னுக்குக் கொண்டுவந்தவர். மேலும் கல்கி ஒரு கவிஞர். நாட்டுப் பற்றுடன் தேசியக் கவிதைகளும், பக்திப் பாடல்களும், காதல் கீதங்களும் அவர் எழுதியுள்ளார்.

"காற்றினிலே வரும் கீதம்" என்ற திரை இசைப்பாடல் புகழ் பெற்றது. "அலைகடலும் ஓய்ந்திருக்க அகக் கடல்தான் பொங்குவதேன்? நிலமை களும் துயிலுகையில் நெஞ்சம் தான் விம்முவதேன்?" அலை ஓய்ந்திருக்க, காற்று மௌனமாயிருக்கப் பொன்னியின் செல்வனில் பூங்குழலி இவ்வாறு பாடுவது நயமறிவோர்க்கு நல்விருந்தாகும்.

கல்கியின் தர்ம பத்தினி ருக்மணி அம்மாளின் மோரை இராஜாஜி பலமுறை சுவைத்திருக்கிறார். தயிரில் கணக்காக நீர்விட்டு, நுரை பொங்கக் கடைந்து, சின்ன வெங்காயம் தூளாய் அரிந்து போட்டு, உப்பும் ஒரு சிட்டிகை சர்க்கரையும் சேர்த்து, பிறகு புதிய இஞ்சியைக் கசக்கி அதன் சாற்றோடு அப்போதுதான் தோட்டத்திலிருந்து புடுங்கிவந்த கருவேப்பிலையை ஒரு கசக்கு கசக்கி அந்த மோரில் கலந்து அரைக்கரண்டி நீரில் பெருங்காயத்தைக் கரைத்து அதை மோரில் விட அது குபீர் என்று பொங்கும். இந்த மோர் நாக்கில் பட அமுதமா யிருக்கும். இதனை அனுபவித்த இரசிகமணி டி. கே. சிதம்பரநாத முதலியார், "மகா விஸ்ணு இந்த மோரை ருசி பார்த்திருந்தால், பாற்கடலை விட்டு மோர்க் கடலுக்கே வந்துவிடுவார்" என்று கூறியுள்ளார்.

கல்கியின் எழுத்துகளைப் போல அம்மணியின் மோரும் சுவை பெருகியது. "கல்கி என்ற பெயருடன் கற்பனையும் வெள்ளமாகப் பெருகின. 'கர்நாடகம்' என்ற கல்கியின் இன்னொரு புனைப்பெயர் தமிழ் நாட்டுக் கலைகளுக்கு உயர்ந்த விமரிசன நதியின் பெயரானது. ரா.கி. என்ற பெயரோ வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் ஊடுருவிப் பாய்ந்து சிரிப்பின் வேகத்தால் குறைகளைத் தகர்த்த கட்டுரைப் பேராற்றின் தலைப்பாக நின்றது. இந்த எழுத்து வெள்ளத்தில் தமிழ் பேசும் இனம் தன் பழைய பெருமையை நினைந்து ஒன்றுபட்டது".

திருச்சி வானொலி 11.10.1955 கல்கியின் நகைச்சுவைக்கு உதாரண மாக ஒரு பானை சோற்றிற்கு ஒரு பருக்கை! "எனக்கு மட்டும் முதலை களைப் பார்க்காமல் வந்துவிட்டோமோ என்று வருத்தமாய்த்தான் இருந்தது. உண்மைகளைச் சொல்லப் போனால் எனக்கு அவைகளிடம் ஒரு காரியம்கூட இருக்கிறது. அது வியாபார விஷயம். 'முதலைக் கண்ணீர்' என்ற சரக்கை அவைகள் ஒழுங்காகச் சப்ளை பண்ண முடியுமா என்று விசாரிக்க ஆவல் கொண்டிருந்தேன். 'முதலைக் கண்ணீர்' நிறைய 'ஸ்டாக்' கிடைக்குமானால் சென்னையிலுள்ள அரசியல்வாதிகளுடன் நல்ல வியாபாரம் நடத்தலாம். அதிலும் சட்டசபைத் தேர்தல் நெருங்க நெருங்க அந்தச் சரக்குக்கு கிராக்கி அதிகமாக வருமல்லவா?"

கல்கி பாதகத்தைக் கண்டபோதெல்லாம் பதறினார். ஆனால் மனித நேயத்தை இழக்காமல் அதனைச் சாடினார். இதற்கு அடிப்படைக் காரணம் அந்த மாமனிதர் உடுத்திய உடையொத்த தூய்மை அவர் உள்ளத்தில் இருந்ததுதான். கல்கியினால் படைக்கப்பட்ட எல்லா எழுத்துக்களையும்

துருவித் துருவி ஆராய்ந்து பாருங்கள். அழுக்காறு, அவா, கோபம், இன்னாச்சொல் எனும் நான்கு அழுக்குகளையும் மனதில் நீக்கியவர் என்பது புரியும். அவருடைய வாழ்வு மூதறிஞர் இராஜாஜி அவர்களைக் கையிற் பிடித்தவாறு பின் சென்றதிலேயே தங்கியிருந்தது. சாதிப் பாகுபாடுகளையும், அநீதிகளையும் அவர் ஒதுக்கித் தள்ளினார். அவருடைய சொந்த வாழ்வில் அவருக்கு ஒரு கறுப்புப் புள்ளியை எவராவது கற்பிக்க முடியாது.

அவர் பிராமண வகுப்பைச் சேரந்தவர் என யான் பிற்காலத்திலேதான் லண்டனில் அறிய நேரிட்டது. எந்தச் சந்தர்ப்பத்திலாவது அவர் சாதி அடையாளத்தை எழுத்திலே காட்டியதில்லை. நகைச்சுவை அவரோடு கூடப் பிறந்தது. நவசக்தி ஆசிரியருக்குத் தான் கல்கியின் நாடியோட்டம் முதலில் பிடிபட்டது. மூதறிஞர் இராஜாஜியும் கல்கியின் ஆற்றலை மட்டிட நாள் செல்லவில்லை.

அழகிய வானத்தில் சந்திரன் மிதப்பது போல தமிழ் வானத்தில் கல்கி வலம் வந்தார். அவருடைய 'பொன்னின் செல்வன்', 'சிவகாமியின் சபதம்', 'அலை ஓசை', 'தியாக பூமி' என்பன தமிழ் இல்லங்களில் வெள்ளித் தாம்பாளங்களாய் விளங்குகின்றன. வரலாற்றுப் பின்னணிகளை ஆராய்ந்து அந்த அத்திவாரத்தில் கதைக் கோபுரங்களைக் கட்டி எழுப்பிவிட்டார். அவருடைய நூற்றாண்டை 1999 இல் நினைவு கூர்ந்தோம். கல்கி தமிழ் உள்ளளவும் நம் நெஞ்சில் வாழ்வார்.



உப வேந்தர் சு. வித்தியானந்தன்

12

# "தமிழ் இலக்கியத்தின் காதலர், காவலர்"



அழகின் மணிமுடி என்று இலங்கையில் பேராதனை யைக் குறிப்பிட்டால் அதில் வியப்பில்லை.

பல்கலைக்கழகத்தின் கால்களைக் கழுவிக்கொண்டு மகாவலி கங்கை ஓடுகிறது அங்கே.

மலை முகடுகளில் மேய்ச் சலுக்கு மேகக் கூட்டங்கள் ஒன்று கூடுகின்றன.

அவற்றில் சில ஒன்றோ டொன்று முட்டிமோதிக் கொள் ளும்போது இடியும் மின்னலும் தோன்றி அச்சுறுத்துகின்றன.

பூங்காவையும் பல்கலைக்கழகத்தையும் பேராதனையில் அமைக்க வேண்டுமென விரும்பியவர்கள், இயற்கையை அனுபவித்த ஊறுகாய்ச் சாடிகளே!

யான் மூன்றாண்டு காலம் வாழ்ந்த இராமநாதன் மண்டபத்தின் சாளரங் களைத் திறந்துவிட்டு வெளியே பார்த்தால் இராக்காலத்தில் மரக்கிளை களின் நடுவே நிலவு சிக்கிக்கொண்டு அந்தரிப்பது தெரியும்.

தமிழரின் பண்பாடு, நாகரிகம், பொருளாதாரம் என்பன பெருமூச்சுவிட்ட ஒரு காலப்பகுதியில் பேராதனை மலைச்சிகரங்களின் தோளில் தமிழன்னை ஏறியிருந்து புதுமுகம் காட்டினாள்.

தமிழ் கற்பிக்கும் மரபில் கிரக சஞ்சாரங்கள் மாறுபட்டன.

தொல்காப்பியமும், நன்னூல் சூத்திரங்களும், நர்ச்சினார்க்கினியர், சேனாவரையர், பேராசிரியர், சிவஞான முனிவர் என்போரின் உரைகளும் அங்கே இடம்பெறவில்லை.

ஆனால், இலக்கியங்களும், இலக்கிய வரலாறுகளும், ஆய்வுகளும், பிற்கால வசன வெள்ளத்தில் மிதந்த சரக்குகளும் அங்கே இடம்பிடித்தன.

அடியேன் அங்கு கால்வைத்தபோது, பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சதாசிவம் என்னும் சான்றோர்கள் பணிபுரிந்தனர்.

திரு. கைலாசபதி, திரு. சிவத்தம்பி என்ற பேரறிஞர்கள் கற்று வெளி யேறிய கலைப் பீடத்தில் அடுத்த ஆண்டு நாங்கள் கால் பதித்தோம்.

தமிழ் இலக்கியத்தின் காதலரும் அதன் காவலருமாக வாழ்ந்து வந்தவர் பேராசிரியர் வித்தியானந்தன்.

பலருடைய இலக்கிய வளர்ச்சிக்கு நீர் வார்த்து உரம் இட்டு வளர்த்து விட்டவர் வித்தி.

அறிஞர் அண்ணாத்துரைமீது வித்தி வைத்திருந்த பற்று நெல்லின்மீது உமி வைத்திருந்த பிடிப்புப்போல நீக்கமற்றது.

கால நேரம் அறிந்து இதயத்தை கனியவைக்கும் கலா ரசிகன் அவர்.

இளமை நரம்புகளைச் சுண்டிவிடும் வசீகரமான சிரிப்பு.

தேவைப்படும் நகைச்சுவைகளை உயிரோட்டத்தோடு கொட்டிவிடும் முகபாவம் கருத்திலே நிழலாடிக் கொண்டிருக்கும்.

கருத்துக்களைத் தனது இலகுவான சொற்கள் வழியாக பட்டதாரி மாணவர் மத்தியில் இடம்பெயர்த்து நாற்று நட்டுவிடும் அதிசயமான விரிவுரைகள் அவருக்கு வாலாயம்.

இந்திய கலாசாரத்தைப் பிழிந்த காளிதாசனைப் போல் வாத்சாயனாரைப் போல் தமிழர் கலாசாரத்தை அவர் நம்முன் வடித்துவிடுவார். 'தமிழர் சால்பு' அவர் எழுதிய நூல். தமிழ் மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் அவரில் பொங்கி நுரை தள்ளுவதை நான் மட்டிட்டேன்.

தமிழ்ச் சங்கத்துக்கும் பேராசிரியர் அவர்களே காப்பாளராயிருந்தார். ஆண்டுதோறும் நடைபெறும் தமிழ்விழாவுக்கும் அவரே பொறுப்பாயிருந்தார். அவரது இளமையான தோற்றமும், சரளமாகப் பழகும் இயல்பும், கண்டிப்பை அறியாத கனிவும் பட்டதாரி மாணவர்கள் மத்தியில் அவரை உயர்த்திக் காட்டின.

பேராதனைப் பல்கலைக்கழகத்தை அடியிட்டவர்கள், தமிழர், சிங்களவர், சோனகர் என்பாருக்கெல்லாம் அது கல்விக்கு ஒரு சிகரமாயிருக்கட்டும் என்று நம்பினார்கள். ஆனால் காலப்போக்கில் இனவாதத்தின் வேர்கள் அங்கே வெளியே தெரிய ஆரம்பித்தன.

சிங்களவர், தமிழர் பண்பாடுகளும் அங்கே வளர்ச்சி பெறவில்லை. சிதைவு பெற்றதென்றால் பிழையாகாது.

பழைய இலக்கிய பாரம்பரியத்தையும் அங்கு வளர்ச்சியடைய விடாமல் குறுக்கே நறுக்கிவிட்டார்கள். மலையகத் தமிழர்களை ஓரக் கண்ணால் பார்த்துவிட்டுப் பல்கலைக்கழகம் ஒதுங்கிக் கொண்டது.

மேல்நாட்டு நாகரிகம் என்ற கரடி கட்டிப் பிடித்துக்கொண்டது. நாங்கள் கைவிட்டாலும் அது காலை எடுக்கவில்லை.

வடகீழ் மாகாண இளைஞர்களும், இளம் பெண்களும் உயர்கல்வி பெற நூற்றுக் கணக்கில் சரிந்து கொண்டிருந்த காலம் அது. (1950-1960). கலாசாரம் பண்பாடு என்று நம்முன்னோர் ஏற்றுப் பறித்த மூட்டைகளை புதிய நாகரிகம் என்ற எலி கடித்துக் குதறியது.

அங்கே படிக்கச் சென்ற தமிழ் இளம் பெண்களுக்கு மரபு பாழ்பட்டுப் போகாமல் தாய்மார் கொடுத்தனுப்பிய முரட்டுத் தோற்செருப்புகள், பிடிவளைந்த பெரிய பெரிய குடைகள், 10 முழச் சேலைகள், குதிக்கால் முட்டும் பாவாடைகள், கரிப்பொட்டுச் சிரட்டைகள், சிமிக்கிகள், பட்டணம் காப்பு, இரட்டைப்பட்டுத் தங்கச் சங்கிலி, ஈர்வாரி எல்லாம் சுழற்றி வீசப்பட்டன.

நீண்ட கூந்தலைக் கட்டையாய் வெட்டி காகக்கூடுபோல் கையால் கிளைந்துவிட்டவர்களே சிகையலங்காரத்தில் சிறப்புற்றார்கள்.

நீண்ட பாவாடை தாவணி எல்லாம் பேர்த்தி காலந்தானாக மாறிக்கொள்ள, விரலுக்கு மோதிரம் போட்டவாறு உடையணிந்து கொண்டவர்கள் முன்னுக்கு நின்றார்கள்.

திருநீறு, சந்தனம், குங்குமம், பொட்டு எல்லாம் பழைய தேவாரமாயிற்று. பிரிய மகளைப் போய்ப் பார்த்த தாய் ஒருத்தி, கமக்கட்டுக்கு மேல் தொங்கிய சட்டையோடு வந்த மகளைப் பார்த்து "சிவ சிவா" என்று தலையில் அடித்துக்கொண்டாள்.

உடலுறுப்புகள் ஆடவரை நீசத்தனமாய் நினைத்து ஒளிக்கவில்லை. அன்று கப்பலேறி ஊர்ந்து ஊர்ந்து வந்த நாகரிகம் இன்று வான்வழியாக வந்து தலைமாட்டில் தொப்பெனக் குதித்தது.

அதற்குச் சிங்களப் பெரும்பான்மை வரவேற்புப் பாடியது.

தமிழரும் பத்தோடு பதினொன்றாகினார்கள். மேலும் திரைப்படக் காட்சிகளும், கால் நுழைத்துக் கைவரிசை காட்டின. இந்தப் புயல் வேக மாறுதலில் காதல் தன் தத்துவத்தை இழந்தது.

இந்தச் சூழலில் 1956இல் இனக்கலவரம் தோன்றி நாட்டை ஒரு குலுக்குக் குலுக்கியது. உயர் கல்விப் பீடமாகிய பேராதனையில் இனவெறியின் இரத்த வாடை வீசவில்லை. ஆனால் இரகசியச் சுவர்கள் எழும்பின.

"பேராசிரியர் வித்தியானந்தன் உங்களை அழைக்கிறார்" என்றார் நண்பர் ஒருவர். அதைக்கேட்டதும் பனிக்கட்டி ஒன்று முதுகுத் தண்டுக்குள் மெதுவாக இறங்கிவருவது தெரிந்தது.

என் அசட்டையும் கவனக் குறைவுகளும் என் காதைத் திருகின. மெல்ல எழுந்து அவரிடம் சென்றேன். "என்ன சிரிக்கிறீர்? உமக்குச் சிரிக்க வெட்கமாயில்லையா?" என்றார் பேராசிரியர்.

எப்போதும் மலர்ந்த முகத்தோடும் புன்னகையோடும் என்னுடன் உரையாடி வந்தவர், இவ்வாறு கூறியவேளையில் அவர் முகத்தில் கப்சான் வறுக்கலாம் போலத் தோன்றியது. அவருக்குப் பதில் கூற முடியாமல் திணறினேன்.

"ஒரு பொறுப்பை ஏற்றுக்கொண்டால் உயிரே போகிற இடம் வந்தாலும் அதைச் செய்து காட்டவேண்டும். இல்லையென்றால் நான்றுகொண்டு சாகலாம்" என்று குற்றப் பத்திரிகை கேட்டதும், என் சிரிப்பு, மேகம் வரையும் பறக்க, மேகம் என் முகத்தில் சஞ்சாரம் செய்தது.

பேராசிரியரின் குரல் திரைப்படங்களில் கருணாநிதி கூறுவதைக் கேட்பதுபோல உயிர் நரம்புகளை ஊடறுத்துக் கொண்டு உச்சந்தலைக்கு ஏறியது.

**"யாரைக் கேட்கிறாய் வட்டி?**
**என்னோடு வயலுக்கு வந்தாயா?**
**நீர்ப்பாச்சினாயா? நாற்று நட்டாயா?**
**அங்கே கொஞ்சி விளையாடும் பெண்களுக்கு மஞ்சள்**
**அரைத்துப் பூசினாயா? நீ என்ன மாமனா மச்சானா?**
**ஏதற்குக் கேட்கிறாய் வட்டி?"**

இந்தத் தமிழ்ச்சங்கிலி நம்மைச் சவுக்கால் அடிக்கவில்லையா? பேராசிரியர் தொடர்ந்தார்.

உம்மிலே இருந்த நம்பிக்கையால்தான் 'இளங்கதிர்' ஆசிரியராக உம்மைப் போட்டியின்றித் தெரிந்துவிட்டார்கள்.

ஆறு மாதம் போய்விட்டது.

இதுவரையில் ஒரு வார்த்தையாவது நீர் என்னுடன் பேசியதுண்டா? விளம்பரங்கள் சேகரித்தீரா? "இல்லை"

கட்டுரைகளைத் தேடிப்பெற்றுக் கொண்டீரா? "இல்லை".

அச்சுவேலைக்கு ஆவன செய்தீரா? "இல்லை"

"இல்லை", "இல்லை", "இல்லை", "இல்லை".

இதென்ன ஒருநாள் இரண்டு நாளில் நடக்கக்கூடிய காரியங்களா? நீர் ஒரு தகுதியானவர் என்றுதான் இந்தப் பெரிய பொறுப்பை உம்மிடம் ஒப்படைத்தார்கள். இதற்கு முன்பு, கைலாசபதி, வேலுப்பிள்ளை என்போர் பட்டபாடுகள் எனக்குத் தெரியும்.

அந்த வெளியீடுகளையாவது மேலோட்டமாகப் பார்த்திருக்கிறீரா? "ஆம் பார்த்துவிட்டேன் ஐயா!"

பேராசிரியருடைய கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுது இரண்டு துளி கண்ணீர் விடவேண்டும் போலத் தோன்றியது. என் மனத்துணிவை அவருக்கு முன்னே விசிறு வாணமாக விட்டாலென்ன என்றும் மனம் எண்ணியது. அவ்வேளை வீதியில் இசையரசி எம்.எஸ்.சுப்புலட்சுமியின் பாடல் ஒன்று காதில் கேட்டது.

அதைக் கேட்டுக் கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்தபடி ஒன்றும் பேசாமல் நின்றோம். நெஞ்சமெல்லாம் இசை பொங்கி வழிந்தது.

"மிக நன்றாக இளங்கதிர் பத்திரிகை வெளிவந்திருக்கிறது என்று பாராட்டக்கூடியவாறு பத்திரிகையை அமைத்து உங்கள் முன்னால் வைப்பேன். எந்தக் கவலையும் வேண்டாம்" என்றேன். பேராசிரியர் திகைத்துப் போனார்.

மூதறிஞர் இராஜாஜி அவர்களின் வாழ்த்துரையோடு அது வெளிவந்தது. பேராசியர்கள், தனிநாயக அடிகளார், புவியியல் பேராசிரியர் குலரத்தினம், வரலாற்றுப் பேராசிரியர் அரசரத்தினம் என்போரின் ஆராய்ச்சிக் கட்டுரைகள் மெருகூட்டின.

தமிழ்ப் பேராசிரியர்களின் கட்டுரைகள் பத்திரிகையை உயர்த்திவிட்டன.

சிறுகதைப் போட்டிக்கு யாழ்ப்பாணத்து வைத்திய மாமணி சி.சுப்பிரமணியம் அவர்கள் தங்கப்பதக்கங்கள் அளித்தார். கட்டுரைகள், கவிதைகள், சிறுகதைகள், நாடகம் என்று பல அம்சங்களிலும் பத்திரிகை சிறப்புற்றது.

யாழ். பல்கலைக்கழகச் சான்றோர் முன்னிலையில் பேரறிஞர் வட்டுக் கோட்டை ஜெபநேசன் அவர்களே எனது இளங்கதிரைப் பாராட்டிய வேளையில் என் காதுகள் வானவெளியில் வட்டமிட்டன.

துணைவேந்தரே! என் நெஞ்சத்தில் உங்களுக்கு ஒரு கதிரை போட்டிருக் கிறேன்.

உங்கள் திருமணவிழாவுக்கு மங்கல வாழ்த்துப் பாடிய என்னை நீங்கள் மறந்ததில்லை.

எனது அன்னை பிரிந்தபோது நீங்கள் அனுப்பி வைத்த செய்தி உங்கள் பண்புக்கும் அன்புக்கும் அறிவுக்கும் ஒரு உரைகல்லாகும்.

எனது நெஞ்சே நினை என்ற முதல் நூலுக்கு நீங்கள் அனுப்பிய மதிப் புரையை எனக்கு வைத்த பொட்டாக எண்ணினேன். மேலும் சில்லாலை வைத்திய மரபை இட்டு நான் எழுதிய காக்கும் கரங்கள் என்ற நூலுக்கு நீங்கள் அனுப்பிய வாழ்த்துரை பாயாசம் போல இனிக்கிறது.

இளைப்பாறிக் கலைத்தொண்டு புரியாமல் நீங்கள் பிரிந்தது எங்களுக்குப் பேரிழப்பேயாகும். யாழ். பல்கலைக்கழகத்துக்கு நீங்கள் செய்த பணிகள் பேராசிரியர் நந்தி குறிப்பிடுவதுபோல எவரும் ஒப்பிடமுடியாதன என்பதை நாம் நினைவில் இருந்து நீக்கமுடியாது.



பேராசிரியர் செல்வநாயகம்

13

# "இலக்கிய நலன் ஆய்வில் கலக்கமற்ற சிந்தனைச் செல்வன்"



சிறந்த பல்கலைக்கழகம் ஒன்றை அமைக்க வேண்டுமென இலங்கையில் வாழ்ந்த சான்றோர்கள் ஆவல் கொண்டனர்.

மண்ணிலும், நீரிலும், காற்றிலும், வெப்பத்திலும் கடன் பெற்றுக் கொண்டுதான் விதை உறக்கத்திலிருந்து விழித்து எழுகிறது.

மலையும், நதியும், மரம், செடிகளும், காற்றும், மழைத் தூறலும் இதமான சுவாத்தியமும் கொண்ட பேராதனை, பல்கலைக்கழகம் உருப்பெறும் மையமாயிற்று.

கங்கை நதி அதன் கால்களைக் கழுவிக்கொண்டு ஓடுகிறது! திங்கள் வந்து கலைக்கோபுரத்தின் தலையைத் தடவிச் செல்கிறது.

மழை மேகங்கள், அடிக்கடி வந்து சுமையை இறக்கி விடுகின்றன.

வீதியோரங்களிலுள்ள பாரிய விருட்சங்கள் பூமழை பொழிகின்றன. பெரிய இலைக்கொடிகள், மரங்களை வளைந்து சுற்றிப் படருகின்றன. குன்றுகளும், மலைகளும், மரஞ்செடிகளும், பசும்புல்தரையும் பார்வைக்குப் பால் வார்க்கின்றன.

பேராதனைப்பூங்கா சிறிது தூரத்தில் இருந்து கலைக் கோயிலைப் பார்த்துப் புன்னகை பூத்துத் தண்ணளி கொள்ளுகிறது.

இராமநாதன் மண்டபம், கில்டா உபயசேகரா மண்டபம், அருணாசலம் மண்டபம், ஜெயத்திலக்கா மண்டபம் என்பன நூற்றுக் கணக்கான மாணவர் வாழும் இல்லங்களாகத் திகழ்ந்து தீபச்சுடர் ஏற்றுகின்றன.

எவ்வாறிருந்தாலும், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் விரிவுரைகளைக் கேட்பதும், நூல் நிலையத்தைப் பயன்படுத்துவதும், நல்லார் இணக்கமும் உயர்ச்சிப் படிகளில் ஏற்றிவிடும் ஏணிகளாகும். அங்கே கற்றவர்கள்தான் இலங்கை நிர்வாகக் கப்பலில் பெரும்பணி புரிகின்றனர்.

அரசியல் அந்தப்புரத்துக்குச் சென்றவர்களும் பலர். யாழ்ப்பாண வளாகம் ஆரம்பமாவதற்கு முன்னர், தமிழுக்குத் தலைவாசலாயிருந்த உயர் கல்விப்பீடம் பேராதனையால் வெளியேறியவர்கள்தான்.

விபுலானந்த அடிகளார், பேராசிரியர் கணபதிப்பிள்ளை, பேராசிரியர் செல்வநாயகம், பேராசிரியர் வித்தியானந்தன், பேராசிரியர் சதாசிவம் என்போர் சென்ற நூற்றாண்டில் அங்கேயிருந்து அரும்பணியாற்றினர். பேராதனையில் இருந்து படிக்க வாய்ப்புக் கிடைத்ததும், மேற்கூறிய சான்றோரிடம் கல்வி பயிலப் பேறுபெற்றதும் அடியேனுக்குக் கிடைத்தற் கரிய நிதியமாயிற்று எனக் கூறுவேன். அங்கே தமிழ் கற்றவர்கள் யாரை மறந்தாலும் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களை மறக்க முடியாது.

"தமிழ் இலக்கிய வரலாறு' என்ற ஆராய்ச்சி நூலை எழுதியவர் அவரே. "உரைநடை' என்பதும் ஐயா அவர்களின் கைவரிசையே! தென்

தமிழ்நாட்டிலுள்ள சிறந்த அறிஞர்களிடம் அவர் கற்றிருப்பதால் அறிவும் தெளிவும் அவரில் படிந்திருந்தன.

ஆங்கில மொழித் தேர்ச்சியும், அவருடைய விரிந்த அறிவுக்கு ஊதுகுழலாயிற்று.

எல்லாவற்றிலும் பார்க்க, இலக்கிய நலன் ஆராய்வில் அவர் ஒரு பொன் நிறுக்கும் தராசு எனக் குறிப்பிடலாம். அவர் உரைகளில் மல்லிகைப்பூ வாசம் இருக்கும். சிரித்த முகத்தோடு, விரிவுரையாற்றும்போது தேன்விட்ட தீம்பாலாய் அவை சுவைதரும். தமிழ் இலக்கிய வரலாறு, தமிழ் இலக்கிய நயனாய்தல் என்ற பாடங்களை அவரிடம் கற்று வந்தோம்.

தமிழ்ப் பண்ணையில் தோன்றிய நந்தவனச் செடிகளில் அவரை, முல்லைச் செடிகளுக்கு ஒப்பிடலாம். உரையாற்றும் வேளைகளில் இடைக்கிடை நகைச்சுவையைப் பிழிந்து கலந்துவிடுவார்.

வாஸ்கொடகாமா என்ற தேச ஆராய்ச்சியாளர், புயல்முனை என்ற தென்ஆபிரிக்க முனையைக் கடந்தபோது அதற்கு நன்னம்பிக்கை முனை எனப் பெயர் சூட்டினார்.

எனக்கும், பேராசிரியர் அவர்களின் உரைநடைச் சித்தாந்தம் ஒரு நன்னம்பிக்கை முனையாயிற்று.

ஒவ்வொரு சொல்லையும் கருத்துக்குப் பொருத்தம் பார்த்து தூக்கி நிறுத்தி மதிப்பிடும்போது, அவரது ஆற்றலை வியந்து மூக்கில் விரலை வைத்தேன்.

ஒவ்வொரு வாரமும் தெரிந்து எடுத்து வந்து சில செய்யுள்களைக் காட்டி இலக்கிய நலன் ஆராய்வார். இந்த ஆய்வில், அவர் வைத்திருந்த அளவுகோல், அமெரிக்க நலன் ஆராய்வாளர் றிச்சாட்சன் என்பவர் கையாண்டது எனப் பேராசிரியரே குறிப்பிட்டார். என்ன சொல்லப்படுகிறது? எவ்வாறு சொல்லப்படுகின்றது? ஏன் அவ்வாறு கூறுகின்றார்? என்று மூன்று படிகளைக் கொண்டு, கவிதைகளின் நயனையும், குறிப்பிடப் பெற்ற வசன பாகத்தின் நயனையும் அறியலாம் என்று புலப்படுத்தினார்.

புலவர்கள் தங்கள் உணர்ச்சிப் பெருக்கை வெளிப்படுத்துவதுதான் கவிதை.

மன்னன் இறந்து போனான். வழமையான பாதையால் செல்லும் புலவன் முல்லைச் செடியைப் பார்க்கிறான். "பாணர் உனது பூவைச்சூடார்கள். பெண்பாலரும் அணியார். மன்னன் இறந்ததை அறிந்தும் நீ பூக்கலாமா?" என்று பாடுகிறான்.

> **"பாணர் சூடார்**
> **பாடினி அணியாள்**
> **வல்வேல் சாத்தன் மாய்ந்தபின்னர்**
> **முல்லையும் பூத்தியோ ஒல்லையூர் நாடே?"**

என்பது கவிதை. புறநானூற்றுப் பாடலில் இச்செய்யுள் ஐயா அவர் களுக்குப் பிடித்த ஒன்று.

யாழ்ப்பாணத்திலுள்ள சிறந்த தமிழ் அறிஞர்களிடம் இலக்கிய இலக்கண அறிவை ஓரளவு பெற்ற பின்புதான் அடியேன் பேராதனையில் கால் வைத்தேன்.

பத்திரிகைகளிலும் சஞ்சிகைகளிலும் இந்தக்குயில் கூவித்திரிந்த காலம் அது.

இதனை எனது பேராசிரியரும் அறிவார்.

அக்காலத்தில் சென்னைப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த அறிஞர் ரா. பி. சேதுப்பிள்ளை அவர்கள், பல நூல்களை எழுதிக் கொடியேற்றினார். "வேலும் வில்லும்" "கர்ணனும் கும்பகர்ணனும்" என்று அவர் எழுதும் நூல்களும் கட்டுரைகளும் எதுகை மோனை நிறைந்து காணப்படும். நான் ஆசிரிய கலாசாலையில் பயின்ற காலத்திலேயே அந்த வசனநடையில் கண்ணடித்தேன். அவ்வாறு எழுதவேண்டுமென்ற ஆசை என் கழுத்தைப் பிடித்துத் திருகியது.

கவிஞர் கண்ணதாசனும் பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்களிடம் பெரும் மதிப்புக் கொண்டிருந்தார்.

கலைஞர் கருணாநிதியினுடைய எழுத்துக்கும் அவரே அத்திவாரம் போட்டிருப்பாரோ நான் அறியேன்.

"பொன்னும், மணியும், மின்னும் வைரமும் பூட்டி மகிழ்ந்து கண்ணே முத்தே என்றெல்லாம் தந்தக்கால் ஆன கட்டிலிலே சந்தனத் தொட்டிலிலே..." என்று கலைஞர் எழுதிய வரிகளைப் பார்த்தால் கலைஞர் சேதுப்பிள்ளைக்குப் பிறந்த பிள்ளையா என்று எண்ணத் தோன்றும்.

"நாடு நீங்கிக் காடு புகச்சென்ற கோதையாகிய சீதையின் காதலனை.." என்று பேராசிரியர் சேதுப்பிள்ளை எழுதினார். அவ்வாறு எல்லா வரிகளிலும் எதுகை, மோனை புனைந்து எழுதுவதே அவர் இயல்பு. அடியேனும் பேராசிரியர் செல்வநாயகம் அவர்களிடம் பயின்றபோது வித்துவான் மாணவ வகுப்பில் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதும்போது முதலில், ஐயனார் கோயில் முன்றலில் நின்று, கையிலே கிடந்த நூல் ஒன்றில் செய்யுள் சில படிக்க வெய்யில் மெய்யிலே பட்டு பொய்யுடல் என்று புகல, ஓரத்தில் நின்றவருக்கு தூரத்தில் இருந்து வந்த ஓசை செவியிற் கேட்டு..." என எழுதியிருந்தேன். பேராசிரியர் இதை வாசித்துப் புன்னகை பூத்தார். பின்பு சிரித்தார். "ஓசை செவியிலே கேட்காமல் வேறெங்காவது கேட்குமா?" என்று என்னைக் கேட்டார். "எதுகை மோனையிலே கவனம் செலுத்தும்போது பொருளை நழுவ விடலாமா? வெய்யில் உடம்பில் பட்டதும் இது பொய்யுடல் என்று ஞானம் வந்துவிடுமா? நீங்களே பதில் சொல்லுங்கள்" என்றார்.

"கோதையாகிய சீதை என்று யாராவது இருக்கின்றார்களா?" என்றார் பேராசிரியர். நான் பதில் கூற இயலாமல் போயிற்று. அன்று எதுகை மோனை கலந்து எழுதுவதால் ஏற்படும் இடர்ப்பாடுகள் பற்றிய தெளிவான விளக்கமொன்றைத் தெரிந்து கொண்டேன்.

இலக்கிய நலனாய்தல் வகுப்புக்கு கலைப் பட்டதாரிகள் உட்பட நாற்பதுக்கு மேற்பட்ட மாணவர்களும் மாணாக்கிகளும் வருவது வழக்கம். பேராசிரியர் மிக இலகுவான வினா ஒன்றைக் கேட்பார். வகுப்பில் எவராவது பதில் கூறத் துணிவதில்லை.

பதில் கூறினால் அதில் குறைகண்டு எல்லோரையும் சிரிக்க வைப்பார்! பெண்பாலாரும் படிக்கும் அந்த வகுப்பில் "மானம்" காக்கவென்று மாணவர்கள் வாய்திறப்பது அருமை.

பேராதனைப் பல்கலைக்கழகத்திலிருந்து பிரிய வேண்டிய காலம் நெருங்க நெருங்க எனக்கு ஒரு அசாத்தியமான துணிவு வந்தது. இலக்கிய நயனாய்தல் வகுப்பின் மௌனத்தை உடைக்கவேண்டுமென்று தீர்மானித்தேன்.

"திக்குத் தெரியாத காட்டில்" என்ற பாரதி பாடலைப் பிரதி எடுத்து வகுப்பில் எல்லா மாணவர்களுக்கும் கொடுத்தார் பேராசிரியர்.

"இந்தப் பாரதி பாடலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்று வகுப்பைப் பார்த்துக் கேட்டார். எவராவது எந்தப் பதிலும் கூறவில்லை.

நான் தலையை நிமிர்த்தினேன்! "அமுது! நீங்கள் இந்தப் பாடலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" என்றார்.

நான் எழுந்து "பாரதியார் நினைத்த கருத்துக்குப் பாடல் வரிகள் ஒத்துப் போகவில்லை" என்றேன். வகுப்பில் ஒரே அமைதி.

"எப்படி இதைக் கண்டுகொண்டீர்கள்?" என்றார் ஐயா அவர்கள். நான் "திக்குத் தெரியாத காட்டில் கண்ணனைக் காணத் தவிக்கிறாள் ஒரு காதலி. கண்ணனைத் தேடித்தேடி அலைகிறாள் அந்தக் காதலி. கண்ணனைத் தேடித்தேடி அலைகிறாள். ஆனால் அவளுக்கு என்ன தெரிகிறது? மிக நலமுடைய மரங்கள் விந்தைச் சுவையுள்ள கனிகள் எந்தப் பக்கத்தையும் மறைக்கும் மலைகள். அதிலிருந்து பாடி நகர்ந்து வரும் நதிகள்! நெஞ்சில் கனல் மணக்கும் பூக்கள்! எங்கும் நீளக் கிடக்கும் இலைக்கடல்கள்! மதி வஞ்சிடும் அகழிச் சுனைகள்! முட்கள் மண்டித் துயர் கொடுக்கும் புதர்கள்! சுனைகள், புதர்கள், மான்கள், புலிகள் என்பவற்றைக் கண்டு மனதைப் பறிகொடுக்கிறாள். இவ்வாறு சுற்றுலாப் பயணி போன்றவர்களுக்குக் கண்ணன் தோன்றுவானா? இதுதான் கண்ண பெருமானைக் கண்டடையும் முறை என்று நீங்கள் கருதுகிறீர்களா?" என்று கேட்டுவிட்டேன்.பேராசிரியர் ஆச்சரியப்படவில்லை. மடிப்புச் சால்வையை மேலே இழுத்துவிட்டார் சிரித்தார். "நல்ல கேள்வி கேட்டிருக்கிறீர்கள். அடுத்த வகுப்பில் உங்களுக்குப் பதில் சொல்கிறேன்" என்றார். என்னை மதித்து ஒரு நண்பர்போல நடந்து கொண்டார்.

இலக்கிய நலனாய்தல் வகுப்பின் பரம்பரை மௌனத்தை மாற்றியதில் எனக்குள்ளே ஒரு சிறு பெருமை கொண்டேன்.

●●●

எனது பாலிய நண்பன் கேசவன்

14

# "தோசைக்கு மசிரும் உண்டா?"

கடலிலும் சூரிய வெப்பத்திலும் காற்றிலும் கடன்வாங்கிக் கொண்டு தான் மழைமேகம் ஆகாயத்தில் கூடு கட்டுகிறது.

அங்கிருந்துதான் மழைத்துளிகள் பூமிக்கு வந்து விழுகின்றன. கண்டவை கேட்டவை என்பவற்றால்தான், நாங்கள் கர்ப்பம் அடைந்து, முதிர்ச்சி பெறுகின்றோம்.

தொண்டைக்குள் போனவற்றால் எங்கள் சுவர்கள் எழும்பின. எண்ணி எண்ணிப் பார்த்தால், நாங்கள் ஒரு கூட்டல்.

எனது கூட்டல் கணக்கில் சேர்ந்தவர்களில், கேசவனை மறக்கமுடியாது! இளமைக் காலத்தில் எனது பிரிய நண்பன் கேசவன்! அக்காலத்தில் மனித நேயத்தின் கதவுகளையும், யன்னல்களையும் திறந்துவிட்டவன் அவனே!

**என் அருமை நண்பனே!**

சில சேலைகள் காலப்போக்கில், கந்தல் கந்தலாய்க் கிழிந்து போனாலும் சாயம் போவதில்லை. உன்னை நான் முப்பது ஆண்டுகளுக்கு மேல் கண்டதில்லை!

இன்று நீ எங்கே இருக்கிறாயோ எனக்குத் தெரியாது.

ஜே.ஆர்., சிறிமாவோ, சந்திரிகா என்று மூன்று அக்கினி நட்சத்திரங்கள் உச்சம் கொடுத்தவேளையில் ஆட்டிறைச்சிக் கடையில் மழைக்கு ஒதுங்கிய ஆட்டு மந்தைகளில் ஒன்றாய், வதைக்கப்பட்டாயோ? காம்பு ஒடிந்த அகப்பையில் கஞ்சி ஊற்றும் அகதிக்கூட்டில், அந்தரித்தாயோ? நான் அறியேன்.

நீயும் நானும் யாழ். கயிலாய பிள்ளையார் கோவிலடியில் வசித்து வந்தோம்! உனக்கு 14-15 வயதிருக்கும். எனக்கும் அதுதான்! கொலம்பகம் சாதானா பாடசாலைக்குக் குறுக்கு ஒழுங்கையால் நடந்து போவோம்.

அங்கே சனநடமாட்டம் இல்லை. குடியில்லாத மண் வீடுகள் பாழடைந்து போய்க் கிடக்கும். கறையான் படை எடுத்தபடி, பல கிடுகுக் கொட்டில்களை அங்கே காணலாம்.

நீ மறந்து போனாலும், அந்த வளவுகளில் நின்ற மா மரங்கள், கொய்யா மரங்கள், விளாத்திகள் எங்களை மறக்கமுடியுமா?

மாமரத்துக்குக் கல்லால் எறிந்து மாங்காய்களை வீழ்த்தி, தெருநீளம் கடித்துக்கொண்டு போகும் இளைஞர்களின் போக்கு எங்களுக்கு இல்லை. மாமரத்தில் நாலு பாய்ச்சலில் ஏறிவிடுவாய்! உனது சட்டைப்பையில் வில்லுக்கத்தி, உப்பு, மிளாய்த்தூள் சரைசரையாய் இருக்கும். மாமரத்தில் காலைத் தொங்கவிட்டபடி மாங்காய்ப் பந்தி நடக்கும்! "புறாயர் வளவை நீ ஒருபோதும் மறந்திருக்கமாட்டாய்!" அது நல்லூர் கோவில் வீதியையும் (Temple Road) இராசாவின் தோட்ட வீதியையும் தொட்டுக் கொண்டிருக்கும் பெரியவளவு! அங்கே முப்பது நாற்பது மாமரங்கள் நின்றன. அவை அடர்த்தியாக வளர்ந்து, ஒன்றோடொன்று உறவு கொண்டாடின.

இரு பெண்கள், முப்பது நாற்பது வயது இருக்கும், உன்னை எதிர் பார்த்தபடி பெரிய வீட்டின் வாசலில் நிற்பார்கள். "கேசவன் இராசா! அந்தப் பச்சைத் தின்னியில் இரண்டு மூன்றைக் காகம் கொத்திப்போட்டுது. இன்னும் ஐந்து ஆறுதான் கிடக்கு. அதைப் பிடுங்கித் தந்துவிட்டுப் போ ராசா!" என்று கெஞ்சுவார்கள்.

அந்தப் பெரிய வளவின் மாமரங்களின் இனமும் சுவையும் உனக்கும் அணில்களுக்கும்தான் தெரியும். ஒருமுறை மாமரத்தில் ஏறி மாங்காய் பிடுங்கியபோது ஒரு பட்டுப்போன கொம்பின் பொந்திலே இருந்த பாம்பு ஒன்றை வாலிலே பிடித்து இழுத்துச் சுழற்றிவிட்டு நிலத்தில் எறிந்தாய்! அந்த விஷப்பாம்பு மலைத்துப்போய் கிடந்தது! நினைவிருக்கா கேசவா?

கனிஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் (J.S.C) பரீட்சை முடிந்ததும், நீ பாடசாலை வாழ்வுக்கு முழுக்குப் போட்டுவிட்டுப் போய்விட்டாய்! ஒரு சில வருடங்கள் பறந்து போயின.

நான் ஒரு ஆசிரியனாகி விட்டேன். அந்தப் பாணியில் என் உடையையும் அணிந்திருந்தேன். உன்னைக் கண்டபோது உன் பேச்சு நீங்கள் என்று ஆரம்பித்தது.

நான் உடனே அதை முறித்துவிட்டேன். "அடே கேசவா! உனக்கும் எனக்கும் இடையில் ஒரு வேலியும் இல்லை. எப்போதும் போல நீ என்று கூப்பிடு. அதுதான் எனக்கும் பிடிக்கும். நானும் உன்னை நீ என்று தான் அழைப்பேன்" என்றேன்.

நீ காக்கிச் சட்டையும் கால்சட்டையும் அணிந்திருந்தாய். "இப்போது என்ன செய்கிறாய்?" என்று குசலம் விசாரித்தேன். "மறியற் கூடத்தில் சேவகனாய் வேலை செய்கிறேன்" என்று நீ சொன்னதும் நான் வான்வீதியில் வட்டமிட்டேன்! "வேலையை விட்டுவிடாதே" என்று புத்தி கூறினேன்.

இரண்டு ஆண்டுகளுக்குப் பின்பு சந்தித்தபோது, முப்பத்திரண்டு பல்லையும் காட்டிச் சிரித்தாய்! "வேலை போச்சடா மச்சான்!" என்றாய்.

"கோழி வளர்த்தாலும் 'கோறணமேந்தில்' செய்ய வேண்டும் என்பார்கள். நீ கையில் இருந்த வேலையினையும் இழந்து, இப்படிச் சிரிக்க உனக்கு வெட்கமில்லையா?" என்று கடிந்து கொண்டேன். என்ன நடந்தது என்று விபரமாய்க் கேட்டேன்.

நீ மறியற்கூடத்துச் சேவகர் அணியும் உடுப்போடு வைக்கோல் வண்டியின் மேலே ஏறி வந்ததும், பக்கத்திலே வந்த 'கார்' ஒன்றுக்கு இடம் கொடுக்க வேண்டாம் என்று வண்டிக்காரனைத் தடுத்ததும், கார் 'கான்' பக்கமாய்

மெல்ல மெல்லச் சென்றதும், நீ வைக்கோல் வண்டியின் மேல் எழுந்து நின்று பார்த்ததும், முன்னே சென்ற காரிலிருந்து இறங்கி உன்னை நோக்கி ஒருவர் பார்த்ததும், அவர் வேறு யாருமல்ல, மறியல் வீட்டு மேலதிகாரியான 'சுப்ரிரின்டென்' என நீ கண்டு அவருக்கு ஒரு 'சலியூட்' அடித்ததும், அடுத்தநாள் உனது வேலை பறிபோனதும் ஆகிய சோகக் கதையைக் கேட்டு என் ஆவி துடித்தது!

மூன்று நான்கு வருடங்களுக்குப் பின்பு உன்னை மீண்டும் கொழும்பிலே சந்தித்தேன். கடும் பசியாய், 'இலட்சுமி விலாஸ்' என்ற போசனை சாலையில் கால் வைத்தேன்.

முன்னுக்கு அடுக்கி வைத்திருந்த இனிப்புப் போத்தல்களின் மேலால் முதலாளியின் முகம் தெரிந்தது. விபூதி பூசி, நெற்றியில் பெரிய சந்தனப் பொட்டுவைத்து, அதன் நடுவில் குங்குமப் பொட்டிட்டு, மடிப்புச் சால்வை போட்டபடி இருந்தார். அவரைப் பார்த்த உடனே ஒரு நம்பிக்கைத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டு உள்ளே சென்றேன்.

என் நம்பிக்கை வீண் போகவில்லை. அது பூ விசிறியாய் ஆகாயம் வரை சென்றது. நீ தேனீர் குவளைகளைப் போட்டுவிட்டு ஓடிவந்து, கட்டி அணைத்து, என்னை முத்தமிட்டாய்!

வாழையிலையில் இடியப்பம் ஏழெட்டு விழுந்திருக்கும். எனக்குக் கணக்குத் தெரியாது. நீயும் எண்ணிப் போடவில்லை! சாம்பார், உருளைக் கிழங்குச் சம்பல், கட்டுச் சம்பல், சொதி, வடை, வாழைப்பழம் என்று உன் அன்பையும், 'இலட்சுமி விலாஸ்' கடையின் சிறப்பையும், என் வாழையிலையில் சரித்துவிட்டாய்! எனக்கு அப்போது சூரபன்மன் வதைப் படலத்தில், வேத்திரகீயச் சுருக்கத்தில் வரும் இடும்பன் கதைதான் நினைவுக்கு வந்தது! வயிற்றை இரண்டு மூன்று நாள் பட்டினி போட வேண்டும் போலத் தோன்றியது.

"எப்போது யாழ்ப்பாணம் போகிறாய்?" என்று கேட்டாய். "இன்று தானே போகிறேன்!" என்றேன். "இல்லை இன்றைக்குப் போகாதே! இருவருமாக மருதானையில் இரவுப்படம் பார்ப்போம். நாளைக்குப் போ" என்றாய். நானும் தலையாட்டினேன். "ஒன்பது மணிக்குக் கடைப்பக்கம் வா!" என்று சொன்னாய். அப்படியே வந்தேன். இருவருமாகப் படம் பார்த்தோம். ஆனால் நானே உனக்குச் சகுனியாயிருந்ததைப் பின்புதான் அறிந்தேன்.

மாதகல் சஞ்சூசையப்பர் கல்லூரி உயர்தர வகுப்பு மாணவர்களும், ஏழு எட்டு ஆசிரியர்களும், இலங்கைச் சுற்றுப் பிரயாணத்துக்காகப் புறப்பட்டுத் திருகோணமலை போயிருந்தோம்.

காலைச் சாப்பாட்டுக்கான ஒழுங்குகளைச் செய்ய, முதல்நாள் இரவு அங்குள்ள பாண் 'பேக்கரி' ஒன்றுக்குள் அதிபரோடு நுழைந்தேன். ஆச்சரியத்தின் உச்சிக்கு என் கண்கள் போய்விட்டன!. என் பிரிய நண்பன் கேசவனே! நீ அங்கே நிற்கிறாய். ஓடிவந்து என்னைக் கட்டி அணைத்தாய்! ஒன்றாகி விட்டோம்! உன் கண்கள் நீரால் நிரம்பின.

"நீ ஏன் கொழும்புக் கடையை விட்டாய்? இங்கே ஏன் வந்தாய்?" என்றேன். நீ வழமைபோல் சிரித்தாய்! உனது கொடுப்புப் பற்களும் 'எங்களைப் பார்' என்று சுட்டிக்காட்டிச் சிரித்தன. "எல்லாம் உன்னாலே தான்!" என்று சொன்னதும் என் இருதய வீணையின் நரம்பு அறுந்தது போலிருந்தது.

கொழும்பில் கேசவனைக் கண்டபோது, கடையின் பின்புறமாகச் சென்று கேசவனை அழைத்தேன். இருவரும் சேர்ந்து படம் பார்த்த பின்பு, கவலையோடும் கண்ணீர்த் துளிகளோடும் பிரிந்து சென்றோம்!

"இனி எப்போது உன்னைக் காணப் போகிறேன்?" என்று நீ கேட்டபோது என் அடி வயிற்றிலிருந்து அக்கினி எழும்பி, என் உடலெல்லாம் பரவி, அன்பு ஆவியாவதை உணர்ந்தேன்.

நீ என்னோடு படம் பார்க்க வந்த அன்று, தோசைக்கு மாவைக் கரைத்து நீர்ப்பதமாகக் குழைத்து அரைப் பீப்பா போன்ற தொட்டியில் ஊற்றி இருக்கிறாய். ஆனால் அதை மூடிவைக்க மறந்து போனாய்!.

அன்றிரவு எலியைக் கலைத்து வந்த பூனை பாய்ந்தவேளை, அது தொட்டியில் விழுந்துவிட்டது. பாவம் அதனால் தொட்டியிலிருந்து மீள முடியவில்லை! விடியற்காலை தோசை சுட நீ மாவைக்கலக்கியபோது, பூனை குறைப் பிராணனில் தத்தளித்திருக்கிறது. பூனையைத் தூக்கி வெளியிலே குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டு வழமைபோலத் தோசையைச் சுட்டாய். 'இலட்சுமி விலாஸ்' கொழும்பில் தோசை, வடைக்குப் பேர்போன இடம்.

காலையில் சலீம் என்ற முஸ்லீம், கடைக்கு வந்தார். அவர் பழைய சோனகத் தெருவில் இரும்புக் கடை முதலாளி!

அவர் இருக்கும் இடத்தின் முன்னால் மேசையை ஈரத் துணியால் துடைத்தாய்! தண்ணீரில் குளிப்பாட்டிய வாழையிலையைப் போட்டு அதன் மேல் ஐந்து தோசைகளை அடுக்கி இருக்கிறாய்!

அதன்மேல் சூடான சாம்பார் வந்து சுழன்றபோது, சூடான ஆவி பறந்து தோசைக்கு உயிர் இருக்குமோ என்று சொல்லத் தோன்றியது. அடுத்த கணம், சலீம் தோசையில் ஒரு துண்டைப் பிரித்து, சாம்பாரில் தொட்டு, வாயில் போட்டார்.

இன்னொரு துண்டைப் பிரித்து, அவர் ஏற இறங்கப் பார்த்தார். தோசையை உயர்த்திப் பிடித்தார்! "முதலாளி தோசைக்கு மசிருமுண்டா?" என்று ஆவேசத்தோடு கேட்டார்.


முதலாளி இதுவரை கேள்விப்படாத கேள்வி அது. உடுப்புப் பெட்டியோ, காசு களஞ்சோ எதனையும் கையில் எடாமல் ஒரு உருவம் கடையின் பின்புறமாக நடந்து கொண்டிருந்தது. அது யாராக இருக்கலாம்? என் பிரிய நண்பன் கேசவன்தான்!!



எமில் இன்னாசித்தம்பி என்ற வைத்திய மாமணி

15

# "எல்லோரும் கைவிட்டால் சில்லாலை வைத்தியம்"



தேனும் இனிக்கும் தினை மாவும் தித்திக்கும். தென்றல் காற்றும் செவ்விளநீரும் தெவிட்டாத இன்பங்கள் எமக்கு! ஆனால் நோயாளிக்கோ, இவற்றைவிட இனிமையான பேர் ஒன்று உண்டு. 'தம்பி' என்பதே அந்தப் பெயர்.

ஈழ நாட்டிலும், தமிழ் கூறும் நல்லுலகத்திலும் நன்கு அறியப்பெற்ற இன்னாசித்தம்பி மரபினரைத் 'தம்பி' என்ற செல்லப் பெயரிட்டு அழைக்கின்றார்கள் ஊர் மக்கள்.

'பராகாரித் தம்பி' என்று அன்பிலே சொல்லைத் தேய்த்து அழைக்கிறார்கள் பிறவூர் மக்கள்.

புலவர் பாடும் புகழமைந்தது, இன்னாசித்தம்பி வைத்திய மரபு. செஞ்சொற் புவவர்களும் இம்மரபைப் பற்றிக் குறிப்பிட்டுப் பாடிய வரலாறுகளைப் பார்த்தால் ஈழநாட்டின் எந்த மரபுக்குமில்லாத பெருமை இது என்று கூறலாம்.

"எல்லோரும் கைவிட்டால் சில்லாலை வைத்தியம்" என்பது நாடோடிப் பழமொழி.

போரினாலும் அடித்துப் பறிக்கும் தியாக சிந்தனையில்லாத இயக்கங் களினாலும், நமது பாரம்பரியம் என்ற அற்புதமான கற்பக வேர்களில் கோடரி வைக்கப்பட்டது.

இதனால் சிதைந்த ஒரு ஆலமரமாக இன்னாசித்தம்பி பரம்பரை காட்சி தருகின்றது.

பண்டாரநாயக்கா பிரதமராக இருந்த காலத்தில், நேருஜி வைத்தியக் கல்லூரி ஒன்றைத் திறக்க இலங்கை வந்தார்.

அப்போது 'வீரகேசரி' வெளியிட்ட சுதேச வைத்தியப் பேரேட்டில், "ஈழநாட்டில் சுதேச வைத்தியம் என்ற பொற்சங்கிலியில், சில்லாலை இன்னாசித்தம்பி பரம்பரை, ஒரு பதக்கம்போல் ஒளிவீசுகிறது என்று நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு குறிப்பிட்டிருப்பது (14-10-1962) நினைவு கூரத்தக்கது.

ஒன்பதாவது பரம்பரையில் வாழ்ந்தவர் வைத்திய மாமணி எமில் இன்னாசித்தம்பி.

பத்துப் பரம்பரையாகத் தந்தைக்குப்பின் மூத்த மைந்தன் என்ற முறையில் இப்பரம்பரை கொடிவிட்டு இருக்கிறது.

இதனைச் சூரியவம்சக் குலமுறை என்றும், மயிலின் குலமுறை என்றும் சிலர் குறிப்பிட்டுள்ளனர்.

இளவாலையிலிருந்து மூன்று மைல் தூரத்திலிருந்த தம்பி வைத்தியத் தைப் பற்றி இளமையில் அடியேன் கேள்விப்பட்டிருந்தாலும், ஆங்கில

வைத்தியத்தின் மோகமும், ஊசி மருந்தில் இருந்த அபார நம்பிக்கையும் என்னை அத்திசைக்குத் திருப்பாமல் தடுத்துவிட்டன.

எனது பிள்ளை ஒன்றுக்கு மயிர்கொட்டி பட்டவாறு உடல் முழுவதும் தடித்திருந்தது. கண்கள் இருந்த இடமே தெரியவில்லை. மூளாய் வைத்தியசாலைக்குப் பிள்ளையைக் கொண்டு ஓடினோம். அங்கிருந்த ஆங்கில வைத்தியரே 'இது கிரந்தி ரோகம், சில்லாலை இன்னாசித்தம்பி யிடம் கொண்டுபோங்கள்' என்றார்.

தம்பி வைத்தியசாலையில் கால் வைத்தேன்.

வெளியில் நின்ற வயது சென்ற பெண்மணி ஒருவர், குவளைக் கடுக்கன்கள் ஆடக் குழந்தை ஒன்றைத் துரத்தித் திரிந்தார். குழந்தை அங்கேயுள்ள பூ மரங்களில் கைவைத்தது.

'தாயே நீங்கள் எங்கே இருந்து வருகிறீர்கள்?'' என்றேன் நான். "காரைதீவிலிருந்து பேரப்பிள்ளைக்கு மருத்தெண்ணெய் வாங்க வந்தேன்".

"காரைதீவில் வைத்தியர்கள் இல்லையா?"

"ஏன் இல்லை? நான், எனது ஆச்சி, எனது மகள் எல்லோரும் கிரந்தி எண்ணெய் வாங்குவது தம்பியிடத்திலே தான்" என்று வயோதிப மாது சொன்னதும், ஆச்சரியமடைந்தேன்.

கூடத்தில் படிகளால் ஏறிச் சென்றதும் உள்ளே பத்துப் பதினைந்து நோயாளிகள் இருந்தனர்.

என்னை வழிப்படுத்திய ஆங்கிலேய வைத்தியரை நான் அங்கே கண்டதும், என் கண்களை நானே நம்பவில்லை.

அவர் எழுந்துவந்து நான் பிரமிப்படைந்ததை அறிந்தவர் போல, "நானும் இவரிடம் நாற்பது நாள் மருந்து சாப்பிடுகிறேன்" என்றார்.

சுவரில் செப்புத்தகட்டில் ஒன்பது பரம்பரையினரின் பேர்களும் பொறிக்கப் பட்ட இலச்சினை பதிக்கப்பட்டிருந்தது.

குலசேகரம்பிள்ளை தனிநாயகம் என்பவரில் தொடங்கி, எமில் இன்னாசித்தம்பி வரையும் முறைப்படி பெயர்கள் குறிக்கப் பெற்றிருந்தன.

நாலாம் பரம்பரையில் தொடங்கிய இன்னாசித்தம்பி என்ற தம்பி பரம்பரை, பத்தாவது சுகந்தன் இன்னாசித்தம்பி வரை சென்றது.

ஒரு தாயின் அன்பு சிந்தும் மொழியை, ஒரு பிரிய நண்பனின் ஆலோசனையை, ஒரு தந்தையின் கண்டிப்பை, மனித தெய்வத்தின் மாண்புகளை நான் முதல் நாளிலே கற்றுக்கொண்டேன்.

எனது குழந்தைக்கு வந்த கிரந்தி நோய் போன இடம் தெரியாமல் பறந்தது. வைத்தியக் கலாநிதியுடன் நெருங்கிப் பழகவேண்டிய சந்தர்ப்பங்கள் பெருகின. அதனால் என் பேனாவுக்குப் பிரசவவலி ஏற்பட்டது.

ஒரு சில நாட்டு வைத்தியர்கள் நோயாளியின் கையைப் பிடித்துப் பார்க்கும்போதே, இயமனுக்குச் சிபார்சுக் கடிதம் எழுதிவிடுவார்கள். எமில் இன்னாசித்தம்பி அவர்கள் கை நாடிகளைப் பார்க்கும் விதமே அலாதியானது! தெய்வத்தின் பூ விரல்கள் தீண்டியது போலிருக்கும்.

**"கண்டான் கரத்தைப் பிடித்தான்**
**கடிதினில் ஓர் பஸ்பம் உண்டாக்கித் தந்தனன் - உண்டேன்**
**பிணி ஒழித்தோடியதே"**

என்று முத்துக்குமார கவிராயர் இவர் பேரனைப் பாடினார். நான் "காக்கும் கரங்கள்" என்ற நூலை எழுதி, "நோயாளரைக் காப்பாற்றும் கைகள்" அவை என 200 பக்கங்களில் விரித்தேன்.

சுமார் 400 ஆண்டுகளாகத் தொடர்ந்து பத்துத் தலைமுறையாக சில்லாலை இன்னாசித்தம்பி வைத்திய மரபு என்ற விருட்சம் வளர்ந்து, கொப்பும் கிளையும் விட்டு விரிந்து, அங்கு ஆறுதல் தேடிவந்த ஆயிரம் ஆயிரம் மக்களுக்கு அபயம் அளித்துள்ளது.

சில்லாலை என்ற சிற்றூரை வைத்தியத்துறையால் பேரூர் ஆக்கிய பெருமை இவர்களுக்கே உரியது.

சோழ மன்னர் காலத்தில், மாதகலில் வந்து குடியேறிய வைத்தியர் குலசேகரம்பிள்ளையும், அவரைத் தொடர்ந்து நாலு பரம்பரையும் மாதகலிலேயே வாழ்ந்து வந்தனர்.

பின்னர் உடையார் வளவிலே குடியேறிய சுவாம்பிள்ளை இன்னாசித் தம்பியும், பின்னோரும் வாழ்ந்த இடம் பழவீடு என அழைக்கப்பட்டது.

வீட்டின் முன்னால் ஐந்தாறு வேப்ப மரங்களும், பின்னால் வைக்கோல் பட்டடைகளும், கூடார வண்டி மாட்டுத் தொழுவங்களும் இருந்தன.

வளவின் முன்புறமாக பன்னிரண்டு வேப்பம் தூண்களில் அமைந்திருந்த மண்டபம், சுற்றி வர மண்ணால் அரைச்சுவர் கட்டப்பெற்றுத் தாழ்வாரம் உள்ளதாய் விளங்கிற்று. உள்ளே குட்டித் திண்ணை சூழவரக் காணப் பட்டது. அங்கேதான் வைத்தியர் இருப்பார்.

வைத்தியர் மிகச்சிறந்த கமக்காரனாகவும் மக்கள் மதிக்கும் மாமனித னாகவும் விளங்கினார்.

ஐந்தாம் பரம்பரையில் வந்த இன்னாசித்தம்பி அவர்கள், சிறந்த தமிழ் அறிஞர். உவைமன் கதிரவேற்பிள்ளையுடன் கற்றவர். இருபாலைச் செட்டியாரிடம் கற்று வைத்தியத்தில் மேலும் சிறப்புற்றிருந்தார்.

மானிப்பாயில் புகழ் பெற்றிருந்த எஸ்.எவ்.கிறீன், எம்.டீ., அவர்கள் சில்லாலைக்கு வந்து, சில்லாலை வைத்தியச் சிறப்பைப் பாராட்டிச் சென்றமை நினைவு கூரத்தக்கது.

"பேர் கேட்க எல்லாப் பிணியும் பறந்தோடும்" என்று புலவர் ஒருவர் குறிப்பிட்டது வெற்றியின் குரலே.

ஒன்பதாவது பரம்பரை 'இராச முடி' என்று பாராட்டப் பெற்றது. அவரே எமில் இன்னாசித்தம்பி என்ற பேருடன் 45 ஆண்டுகள் வைத்திய நிலையத்தை வளர்த்த மாமனிதர்.

சந்திரனை அரைத்துப் பூசியது போன்ற தங்க நிறம், முத்துப் பல்வரிசை, மெல்லிய நடை, இதமான இனிய பேச்சு! வைத்திய மரபில் தோன்றிய றீற்றா என்ற வசீகரமான பெண்ணை மணந்து வைத்தியக் குலத்தோடு எடுத்துக்காட்டான வாழ்வு மரபு.

வைத்திய மாமணியே! நீங்கள் அனைத்து இலங்கை ஆயுள் வேத சம்மேளனம் அளித்த 'சித்த ஆயுள்வேத சிரோன்மணி' என்ற மதிப்பார்ந்த பட்டத்தைப் பெற்றதோடு (1974) ஜனாதிபதி பிரேமதாசாவினால் புகழ்மாலை சூட்டப் பெற்றுச் சிங்கள தென்னிலங்கை வைத்திய சங்கத்தால் 'வித்திய விசாரத்' என்ற கௌரவப் பட்டத்தையும் பெற்றீர்கள்.

உங்கள் தந்தையாரே அகில இலங்கை சித்த ஆயுள்வேத வைத்தியர் மாநாட்டை முதன் முதலாகக் கூட்டியவர்.

அதன் முதலாவது தலைவரும் அவரே! அந்தத் தமிழர் வைத்தியர் சங்கத்துக்கு இருமுறை தலைவராயிருந்து அணி செய்ததும், சிங்கள வைத்தியர்களோடு பாலம் அமைத்ததும், வைத்தியர் மத்தியில் உங்களுக்கு இருந்த மதிப்புக்குச் சான்றுகளாகும்.

பழைய வீடிருந்த இடத்தில் அழகான புத்தம்புது மனையைக் கட்டிவிட்டீர்கள். 'குட்டி அரண்மனை' என்று சுதந்திரன் ஆசிரியர் எஸ். டி. சிவநாயகம் அதைப் புகழ்ந்து எழுதினார்.

முன்னர் பழையவீடு வேய்வதற்கு ஊரே திரண்டு வருவதும், ஓலை மிதித்தல், ஓலை பிரித்தல், கரம் போடல், வேய்தல் என்பவற்றை அவர்களே செய்வதும், வயல் அறுவடை, சூடு மிதிப்பு என்பவையும் அவ்வாறே நடைபெற்றதும், ஊர் மக்களுக்கிடையில் உங்களுக்கிருந்த ஒப்பற்ற மதிப்பை எடுத்துக்கூறும் சாட்சிகளாகும்.

'எல்லார்க்கும் நன்றாம் பணிதல்' என்ற பழமையான போக்கும், எறும்புக் கும் இடர்செய்யாத நல்லியல்பும், இரக்க மனப்பான்மையும், தெய்வ சிந்தனையும், எவரும் பாராட்டும் இல்லற வாழ்வும், தேன்சிந்தும் மொழியும், உங்கள் உயர்ந்த பண்புகளுக்குச் சாட்சிகளாகும்.

திருமணம் நிறைவேற்றச் சக்தியின்றிப் பெருமுச்சுவிடும் இளம் சோடிகள், வாழ்க்கை வரம்பில் ஏறிச் சறுக்கிவிழுந்து கண்கலங்குவோர், அனாதைகள் என்போருக்கு வலக்கை கொடுப்பதை இடக்கை அறியாமல் தானதர்மம் செய்தீர்கள். இவை உங்கள் இரக்க சிந்தைக்குச் சாட்சிகளாகும்.

என்னை முதல் முதலாகக் கூட்டிச் சென்று அழகான வேலைப்பாடுகள் அமைந்த முதிரைப்பெட்டி ஒன்றைத் திறந்தீர்கள்.

அந்தப் பெட்டி முழுதும் ஏடுகள்.

அமெரிக்காவைக் கண்ட கொலம்பஸ் என்பாரைப்போல, நான் அதிசய மானேன். சிறிதும் பெரிதுமான நூற்றுக் கணக்கான ஏடுகள்.

மடி ஏடு, கை ஏடு, பொன் ஏடு என்று கிடந்தன. சில ஏடுகளில் கைபடவே அவை ஒடிந்து மடிந்துவிடும் போலிருந்தன. பல ஏடுகளை அந்து போன்ற சின்னஞ்சிறு பூச்சிகள் அரித்துத் துவாரங்களை ஆக்கிவிட்டன.

பேராசிரியர் கா.இந்திரபாலா அவர்கள் கேட்டபடி ஒரு தொகை ஏடுகள் யாழ். பல்கலைக்கழகத்துக்கு அளிக்கப்பெற்றன. இவை எல்லாம் உங்கள் பூர்வீக வைத்திய மரபின் சாட்சிகள். இலங்கை அரசும், பல்வேறு அங்கத்துவப் பதவிகளைத் தந்து, உடல்நலப் பாதுகாப்புத் திணைக் களத்துக்கு உறுதுணை தேடினார்கள். சிங்கள ஆயள்வேத சங்கங்கள் பட்டமளித்து கௌரவம் செய்தார்கள். பாப்பரசர் உரோமாபுரியில் நீண்ட செபமாலையைத் தந்து புகழ்ந்தார். இவையெல்லாம் உங்கள் மனித சேவைக்குச் சான்றுகளாகும்.

நீங்கள் உலகைவிட்டுப் பிரிந்து முதலாம் ஆண்டு நினைவஞ்சலி சில்லாலையில் நூற்றுக்கணக்கான மக்கள் மத்தியில் நடைபெற்றது. உங்கள் பிரிய மகனார் கலாநிதி சுகந்தன் இன்னாசித்தம்பி திறம்பட அந்த நிழ்ச்சியை ஆயத்தம் செய்திருந்தார். இலண்டனிலிருந்து சென்ற அடியேன் அதற்குத் தலைமை வகிக்கும் வாய்ப்புப் பெற்றேன்.

பல வைத்தியர்களின் கண்ணீர்த் துளிகளையும், சுகம் பெற்றோரின் துன்ப மூச்சுக்களையும் அங்கே கண்டேன். கருகிப் போனேன். நானும் கண்ணீர் நிரம்பிய கண்களோடு இக்கட்டுரையை முடிக்கிறேன். ஏனெனில் பத்தாவது தலைமுறையின் முடியைப் புனைந்திருந்த சித்த வைத்தியக் கல்லூரி அதிபர் உங்கள் அருமை மகன் வைத்தியக் கலாநிதி சுகந்தன் விரைவில் உங்களைப் பின்தொடர்ந்து வந்துவிட்டார். உங்கள் பிரிய துணைவியாரும் பிறநாட்டில் உங்களை நினைந்தபடி வாழ்ந்து வருகிறார்.

உங்கள் வைத்திய விருட்சம் துளிர்விடுமா? பட்டுப் போகுமா? என்று நான் கலங்குகிறேன்.

என் குடும்பத்தின் குத்துவிளக்கைக் கொழுத்தியிருக்கிறீர்கள். என் எழுத்தைப் புகழ்ந்து கதியால் போட்டீர்கள். தமிழ்ப் பயிர்காக்கும் வேலி என்று போற்றினீர்கள்.

பத்துத் தலைமுறை வாழ்ந்த இடம் இன்று திருவிருந்துச் சபையின் ஆச்சிரமமாகிவிட்டது. உங்கள் பெயர் வானுலகிலும் பதியப் பெற்றது.

***

**வித்துவான், பண்டிதர் வேந்தனார்**

16

# "ஈழநாட்டின் இணையற்ற உரையாசிரியர்"



ஈழநாட்டில் இணையற்ற உரையாசிரியர் ஒருவர், எங்கள் காலத்தில் இருந்தார் என்றால், அவர் வித்துவான் வேந்தனார் தான்.

வேந்தனார் ஒரு பண்டிதர், வித்துவான், சைவப்புலவர் என்றாலும் அவரை உரையாசிரியர் என்பதே முற்றும் பொருந்தும். பொதுத் தராதரப் பரீட்சைக்கு எனக் குறிப்பிட்டிருந்த இலக்கியப் பகுதிக்குப் பல ஆண்டுகளாக உரை எழுதி வந்தவர் வித்துவான் வேந்தனாரே!

வேறு சிலரும் இந்தத் துறையில் முயன்றனராயினும், வேந்தனாரின் உரை ஆற்றலுக்கு ஈடுகொடுக்க இயலாமற் போய்விட்டனர்.

பல்லாயிரம் தமிழ் மாணவர் வேந்தனாரின் உரைச்சிறப்பை அறிந்து தமிழ் இலக்கியத்தில் ஆர்வமும் உயர்ச்சியும் பெற அவர் வழிவகுத்தார் எனலாம்.

அரும்பத உரை, பொழிப்புரை, தெளிவுரை, இலக்கணக் குறிப்பு, எடுத்துக் காட்டு, வரலாறு, நயம் உரைத்தல் என்பனவாக அவர் குறிப்பிட்டு எழுதிய திரவியங்கள் தேடக் கிடைக்காதவை.

இலக்கியம் என்பது ஒரு பசு மாடு. அதிலே பழக்கமில்லாதவர்கள் பால் கறக்கமுடியாது! கண்டவர்களும் மடியில் கைவைத்தால் அது காலால் அடிக்கும், கொம்பால் குதறும் என்று அஞ்சினார்கள் சிலர்.

இலக்கியம் தமிழில் பாண்டித்தியம் பெற்றவர்களுடைய முதுசம் பண்டித பரம்பரையின் சீதனம். அந்தத்துறையை கரையிலே நின்று பார்க்கலாமே யன்றி உள்ளே கால்வைப்பது ஆபத்தானது என்று எண்ணியவர்களும் இருந்தார்கள்.

இலக்கியம் என்பது இலக்கணத்தில் ஊறிக்கிடக்கும் ஊறுகாய். ஆழ்ந்த அறிவும், அனுபவமும், முதிர்ச்சியும் பெற்றவர்களே அதை எடுத்துச் வாயில் போடலாம் என்று சிந்தித்தவர்களும் இருந்தார்கள்.

தேள், கொடுக்கான், சிலந்தி, விஷ செந்துக்களைப்போல இலக்கியம் பாமரர்களை ஒற்றை விரல் காட்டி அச்சுறுத்தியது.

**கற்கக் கசடறக் கற்பவை...** எனத் தொடங்கவே நாக்குத் தெறிக்கும் குறள் வரிகள், அதில் வரும் இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை அதற்குப் பரிமேலழகர், "எவன் என்னும் வினாத்தொகை என் என்றாய் ஈண்டு இன்மை குறித்து நின்றது" என்றவாறான உரைகளும் ஊமாண்டி காட்டின.

கம்பராமாயணம், திருக்குறள், கந்தப்புராணம் என்ற இலக்கிய நூல்களைப் பிஞ்சு உள்ளங்களில் இனிய ஒட்டு மாங்கனிபோல சுவை தெரிய அறிமுகம் செய்து வைத்தார் வித்துவான் வேந்தனார். அவருடைய உரையை

நினைந்து கைதட்டியவர்களின் ஓசை, இன்னும் என் காதில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

வித்துவான் வேந்தனார், வேலணையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வேலணை, பிறநாட்டுக் கலாசாரம், பிறமொழிக் கலப்பு, பண்பாடு என்பவற்றால் பழுதடையாத மண்.

எனவே அவருடைய அத்திவாரம் சிறந்த நாற்றுமேடை எனலாம். வித்துவான் அவர்கள் பரமேஸ்வராக்கல்லூரி இயற்றமிழ் பேராசிரியராக நீண்டகாலம் பணிபுரிந்தவர். நாவலர் பாடசாலையில் பண்டித வகுப்பு களுக்குப் பாடம் எடுத்தவர். இவனும் அவரிடம் தொல்காப்பியம் பொருளதிகாரம் பாடம் கேட்க வாய்ப்புப் பெற்றவர்களில் ஒருவன்.

ஒருநாள் "ஐயா! நீங்கள் யாரிடத்திலே இலக்கணம் கற்றுக் கொண்டீர்கள்?" என்று கேட்டுவிட்டேன். உடனே அவர் சிரித்தவாறு. "சிவஞான முனிவர், நச்சினார்க்கினியர், சேனாவரையர் என்போரிடத்திலேதான் என்றார். நான் திறந்த கண்களையே மூடமறந்து, ஆச்சரியத்தில் மிதந்தேன்.

ஏனெனில் அவர்கள் எல்லோரும் இலக்கணத்துக்கு உரை எழுதிய பெரியார்களே! வித்துவான் வேந்தனாருடைய ஞாபக சக்தி அபாரமானது.

ஒருமுறை வாசித்துவிட்டு அப்பகுதியைப் பாராமல் சொல்லக்கூடிய ஆற்றலைக் கண்ட மாணவர்கள் வியப்புற்றோம்.

ஒருமுறை காவலூர் புளியங்கூடலில் ஒரு அரசியல் கட்சியின் மாபெரும் கூட்டம் நடந்தது. பல்லாயிரம் மக்கள் ஒன்று கூடியிருந்தார்கள். அது தமிழ் அரசுக் கட்சியின் தீவுப்பகுதி பாராளுமன்றத் தேர்வுக்காக நின்ற அமரர் வீ. ஏ. கந்தையா அவர்களை ஆதரித்து நடந்த இறுதிக்கூட்டம். தந்தை செல்வா அவர்களும் அங்கு இருந்தார்.

மேடையில் எனது அருகில் வித்துவான் வேந்தனார் இருந்தார்.

தீவுப்பகுதியைச் சேர்ந்தவரும், வணிகத்துறையில் மதிப்பார்ந்தவரும், முன்னாள் தீவுப்பகுதி பாராளுமன்ற உறுப்பினரும், என் பிரிய நண்பருமான அல்பிரெட் தம்பிஐயா அவர்களை எதிர்த்த கூட்டம் அது. என்னை முதலில் பேசுமாறு அழைத்தார்கள்.

நான் நகைச்சுவையாகப் பேசினேன். "நானும் என் நண்பன் ஒருவனும் கனகராயன் குளத்தில் எங்களுக்கு இருந்த நெல் வயலைப் பார்த்துவிட்டு வருவதற்காகச் சென்றோம். வேலையாள் சுப்பனையும் எங்களோடு கூட்டிக் கொண்டு சென்றோம். பஸ் கனகராயன் குளத்தில் நின்றதும், பழைய கண்டி வீதி அருகே சென்றோம்.

வீதி ஓரமாகப் பெரிய வாய்க்கால் போகிறது. மழை காலம் ஆகையால் வாய்க்காலில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகிறது. என் நண்பன் வாய்க்காலைப் பார்த்துவிட்டு "அட சுப்பா! அங்கே பார்! வெள்ளத்திலே ஆட்டுக்கிடாய் ஒன்று போகிறது. ஓடிப்போய் கட்டிப்பிடித்து அதைக் கொண்டுவா!" என்றார். சுப்பன் ஒரே பாய்ச்சலில் சென்று கிடாயைக் கட்டிப் பிடித்தான்!

மாலை நேரம். பொழுது கருகிவிட்டது. எங்களிடமிருந்த 'ரோச் லைற்' வெளிச்சமும் மங்கலாய் இருந்தது. சுப்பன் ஆட்டுக்கிடாயுடன் மல்லுக் கட்ட நேர்ந்தது. ஒருமுறை கிடாய் மேலே வந்தது. அடுத்தகணம் சுப்பன் மேலே வந்தான். கிடாய்க்கும் சுப்பனுக்கும் சீவமரணப் போராட்டம். என் நண்பனுக்கு விஷயம் விளங்கிவிட்டது.

"அடே! அது கரடியடா! கையை விட்டிட்டு வாடா!" என்று நண்பன் கத்தினான். "தம்பிஐயா அவர்கள் ஐக்கிய தேசியக்கட்சி என்ற கரடியைக் கட்டிப் பிடித்தார். இப்போது அது அவரை விடுகுதில்லையே" என்று முடித்தேன். சில நிமிட நேரம் ஒரே கைதட்டு. தந்தை செல்வாவே எழுந்து நின்று சபையை அமைதி பெறச் செய்தார். பேச்சு நிறைவுற்று என் கதிரையில் வந்து அமர்ந்தேன்.

"சபையை நன்றாகக் கவர்ந்துவிட்டீர்களே! நல்ல பேச்சு" என்று வித்துவான் பாராட்டியதும், என் இருதயத்தின் எல்லா அறைகளிலும் விளக்குகள் எரிந்தன.

என்னை அடுத்து வித்துவான் வேந்தனார் உரையாற்றினார். புறநானூற்றுப் பாடல் ஒன்றைத் தூக்கி நிறுத்தினார். பெரும் பாணாற்றுப் படையிலும் ஒரு நிகழ்ச்சி வந்து கலந்தது. திருக்குறள் சில தலைகாட்டின. திருமுரு காற்றுப் படையுடன் கம்பராமாயணமும் சுரந்தன. இலக்கியநயம் பொருந் திய அருமையான பேச்சு. "கற்றோர் உச்சியில் வைத்து மெச்சக்கூடிய அருமையான பேச்சு, அருமையான பேச்சு" என அடியேன் என் குருவை ஆராதித்தேன்.

ஒருநாள் பண்டித வகுப்பு நடந்து கொண்டிருந்தபோது, வித்துவ சிரோமணி சுப்பையாபிள்ளை வந்து குறுக்கிட்டு, சோமசுந்தரப்புலவர் காலமான செய்தியைச் சொன்னார்.

வித்துவான் வேந்தனார் வகுப்பை நிறுத்தி, "நான் சில பாடல்களை எழுத விரும்புகிறேன். நீங்கள் தொல்காப்பியத்தில் குறிப்பிட்ட பகுதியை வாசியுங்கள்" என்று கூறிவிட்டு கவிதைகளை எழுத ஆரம்பித்தார். அடியேனுக்கும் மறைந்த புலவரில் இருந்த பெருமதிப்புக் கிள்ளத் தொடங்கியது.

ஒரு சில எண் சீர்விருத்தப் பாடல்களை எழுதினேன். அடுத்த வாரம், ஞாயிறு தினகரன் மலரில் முதலாம் பக்கத்தில் என் கவிதைகள் வெளிவந்தன.

வித்துவான் வேந்தனாரின் கவிதைகளும் அழகாக வெளிவந்திருந்தன. எனது கவிதைகளை வாசித்துவிட்டு வித்துவான் வகுப்பிலே என்னைப் பாராட்டியது வசிட்டர் வாயால் பெற்ற வாழ்த்துப்போல என்னை இன்ப வெள்ளத்தில் தோய்த்து எடுத்தது.

கிட்டத்தட்ட ஒருமாத காலத்தில் எனது தாயார் இறைவனடி எய்தினார். எங்கள் கவிதை நெஞ்சின் உறவால் எனது அன்னையின் நினைவு அஞ்சலி நூலுக்குச் சில கவிதைகள் எழுதித் தருமாறு கேட்டேன். பேனை எடுத்தார் கவிதை மடை திறந்தது.

**அன்பால் அறிவால் உளம் உருகும் அமுத மொழியால் அனைவரையும்**
**தன்பால் இழுக்கும் தண்ணளியாள் தாயார் சேதுப் பிள்ளை யெனும்....**
என்று சில கவிதை மணிகளை யாத்துக் கையில் தந்தார்.

வித்துவான் வேந்தனாரின் கவிதை ஆற்றலை, சொல் வளத்தை, இலக்கண அமைதியை அன்பின் ஊற்றைக் கண்டு பிரமித்தேன்.

பேராசிரியர் வித்தியானந்தனின் அஞ்சலிச் செய்தியை அடுத்து, வித்துவான் வேந்தனாரின் இரங்கற் பாக்கள் இடம்பெற்றன. வித்துவான் வேந்தனாரின் புலமைக்குச் சான்றாகப் பல கவிதைகளைக் காணலாம்.

தமிழர் காலம் காலமாக நினைவு கூருமாறு ஒரு பாடலுண்டு. அது அம்மாவைப் பற்றி எழுதப் பெற்றது.

**காலைத்தூக்கிக் கண்ணீரில் ஒற்றிக் கட்டிக் கொஞ்சும் அம்மா**
**பாலைக்காய்ச்சிச் சீனி போட்டுப் பருகத் தந்த அம்மா**
**பள்ளிக்கூடம் விட்டபோது பாதி வழிக்கு வந்து**
**துள்ளித் திரியும் என்னைத்தூக்கித் தோளில் போடும் அம்மா...**

இப்பாடல்களில் தாய்ப் பாசம் பொங்கி நுரை தள்ளுகிறது. இலக்கிய வளத்திலும், இலக்கண அறிவிலும், சமயப் புலமையிலும், கவிதைச் செல்வத்திலும் வித்துவான் வேந்தனார் செழிப்புற்று இருந்தாலும், உரையாசிரியர் என்ற முத்திரையே அவரை உயர்த்திக் காட்டுகிறது.

### கல்கண்டு என்று எழுதலாமா?

தமிழ்நாட்டில் ஒரு பெரிய தமிழ் அறிஞர் கல்கண்டு என்று சொல்வதற்கும் பெரிய எதிர்ப்பைத் தெரிவித்து வந்தார். கவிஞர் கண்ணதாசன் போன்றவர்களும் அவரை ஆதரித்தனர்.

இன்னொரு பெரிய தமிழறிஞர் கல்கண்டு என்று சொல்வதும் சரிதான் என்று கூறிவிட்டார். கண்ணதாசன் பெரும் பேரறிஞரைச் சந்தித்து இவரும் இப்படிக் கூறலாமா? என்று கேட்டார். அதற்கு அவர் "கல்தாரைக் கல்தாரே காமுறுவர்" என்றார். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் என்ற சொற்றொடரைக் கற்கண்டோடு தொடர்புபடுத்தி இவ்வாறு பேரறிஞர் சொன்னதும் கண்ணதாசன் பலமாகச் சிரித்துவிட்டார்.

கலாநிதி ஜெய சேகரம் அடிகளார்

17

# என் கடன் பணி செய்து கிடப்பதே



ஜேர்மனி நாட்டின் எனக்குக் கிடைத்தது பூக்கூடை! பத் தாயிரம் மக்கள் மத்தியில் தமிழ் அறிஞனாக வரவேற்று அழைத்து பாராட்டினார்கள். இது உலக அண்டங்களில் ஒரு தமிழ் அறிஞனுக்கு கிடைத் தற்கு அருமையான செய்தி யாகும். 20 ஆயிரத்துக்கு மேற் பட்ட கண்கள் இமைகொட்டாது பார்த்துக் கொண்டிருக்க ஒரு தமிழ் அறிஞனை முன்னே அழைத்து மதிப்பதென்றால் இது நடைபெறக்கூடிய செய்தி என்று ஒத்துக் கொள்வது சந்தேகமே.

தமிழ்க்கங்கை என்ற பட்டத்தை அளித்து பட்டம் பொறிக்கப்பெற்ற அழகிய விருதையும் கையில் தந்து முகம் தெரியாமல் மறைக்கும் பூங்கொத்தையும் தந்து கேவலார் திருத்தலத்தில் எனது திருப்பணியைப் பாராட்டினார்கள்.

எதிர்பாராத இந்த அன்புச் சுனாமியின் அலைகளினால் என் ஆன்மாகூட ஏற்றி ஏந்தப்பட்டது. புகழையும் பெருமையையும் பாராட்டு உரைகளையும் விரும்பாமல் ஒதுங்கி வாழ்ந்த என்னை ஓசைப்படாமல் அழைத்து இவ்வாறு கௌரவம் செய்தவர் கலாநிதி ஜெயசேகரம் அடிகளாரே.

ஜேர்மன் நாட்டு ஆயர்களும் குருமணிகளும் சன வெள்ளமும் சூழ்ந்திருந்த அந்தவேளையில் யாத்திரை காரணமாகச் சென்ற அடியேனை ஒரு சிலர் அழைத்துச் சென்றனர். தமிழ் அன்னையே இந்தச் சிறு பயிருக்கு இவ்வளவு வெள்ளம் பாய்ந்ததைக் கண்டு திகைத்துப் போயிருப்பாள்.

போத்துக்கேயர்தான் கிறிஸ்தவ மதத்தை இலங்கையில் வித்திட்டார்கள் என்று பலர் நினைக்கிறார்கள். ஆனால் அவர்கள் இலங்கைக்கு கால் வைக்க முன்பே கிறிஸ்து சமயம் வேரூன்றிவிட்டது என்று பல ஆதாரங்கள் உண்டு.

யார் என்ன கூறினாலும் அந்நியர் வந்து ஆட்சியைக் கைப்பற்றியதால் கல்வி, போக்குவரத்து, பொருளாதாரம், வர்த்தகம், நாகரிகம், கிறிஸ்து சமயம் என்பன செழிப்புற்றன என்பதை மூடிமறைக்க இயலாது. கடந்த ஐந்து நூற்றாண்டுகளாக கிறிஸ்து சமயம் வளர்ச்சியுற்றுள்ளது.

பல வெளிநாடுகளில் கிறிஸ்தவ சமயம் தேய்ந்துபோய் இருப்பதை நாம் அவதானிக்கலாம். தமிழ் ஈழத்திலிருந்து சென்ற பல்லாயிரம் மக்கள் கனடாவிலும், பிரித்தானியாவிலும், பிரான்சு, ஜேர்மனி, நோர்வே ஆகிய நாடுகளிலும் தஞ்சம் கோரினர்.

புலம்பெயர்ந்த கத்தோலிக்க மத சமய வாழ்வு வெகுதூரம் பாதிக்கப் பட்டிருந்தது.

அவர்களுக்கு சமய போதகம் செய்யவோ, வழிபாடுகளை நடத்தவோ, அவர்களுடைய வியாகுலத்தைத் தீர்க்கவோ எவரையும் கண்டுகொள்ள முடியவில்லை.

இந்தச் சங்கடமான வேளையில் உரோமாபுரியில் வேதசாஸ்திரங்களைக் கற்ற ஜெயசேகரம் அடிகளார் ஜேர்மன் நாட்டுக்குச் சென்றார்.

அவர்தான் இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடொன்றுக்கு முதன் முதலாக சமய போதகராக சென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஜேர்மன் நாட்டின் கத்தோலிக்க நடுநிலையம் ஒன்றை ஆக்கி புலம்பெயர்ந்து வந்த ஆயிரக்கணக்கான மக்களுக்கு அரிய குருவாக விளங்கினார்.

தொடுவானம் என்ற ஒரு மாத இதழை வெளியிட்டு அதில் உள்ளூர் நிகழ்ச்சிகளையும், ஈழநாட்டு நிகழ்ச்சிகளையும் எழுதி வந்தது உண்டு. சிறந்த சமயக் கட்டுரைகளையும் எழுதி வந்தார்.

இந்தப் பத்திரிகை அயல் நாடுகளிலும் விரும்பி வாங்கப்பெற்ற இதழ் ஆக இருந்தது.

ராமானுஜம் என்ற வைஸ்ணவ பெரியார் ஒரு துறவி. கொக்காகவும் கோழியாகவும் உப்பாகவும் இருக்கவேண்டுமென்று விரும்புகிறார். கொக்கானது உறுமீன் வரும் மட்டும் காத்திருப்பது போல துறவியும் அற்ப காரியங்களையிட்டுக் கவலைப்படாமல் இறைவனோடு தொடர்புள்ள காரியங்களில் நாட்டம் கொள்ளவேண்டும்.

கோழியானது குப்பைமேட்டில் கிளறினும் உணவை மட்டுமே தேர்ந்தெடுக் கிறது. துறவியும் இடத்தின் தன்மை எப்படியிருந்தாலும் வேத சாஸ்திர சாரத்தை மட்டுமே தேடி உணரவேண்டும். உப்பில்லாப் பண்டம் குப்பையிலே என்பார்கள். சமூகத்தில் தொண்டு செய்பவன் உப்பாயிருக்க வேண்டும். இந்த உவமானங்களை நோக்கும்போது ஜெயசேகரம் அடிகளார் இராமஜனும் போன்று தோற்றமளிக்கிறார்.

பத்து ஆண்டுகளுக்கு மேலாக ஜேர்மனியில் பணி செய்து பாராட்டையும் பெற்றவர். இப்பொழுது யாழ்ப்பாணம் சென்று சமூகப் பணிகளில் ஈடுபட்டுள்ளார். எழுதி இலேசாக அழிந்த கரும்பலகை போல தலைமயிர் நரையும் கருமையும் கலந்திருக்கிறது.

ஆனால் எழுத்து வன்மையும் நா வன்மையும் செயல் ஆற்றலும் நமது நாட்டில் புகழோடு பேசப்படுகின்றன.

ஆசரிய குடும்பத்தில் அவதரித்தவர் அடிகளார். இன்சொல்,பணிதல், இரக்கம் என்பன அவருடைய முயற்சிப்படிகள.

அண்மையில் கனடாப் பத்திரிகையான 'தகவல்' ஆண்டு மலரில் "இளைய தலைமுறையினரின் எழுச்சி" என்ற கட்டுரையை பாராட்டாதவர்கள் இல்லை எனலாம்.

எழுத்திலும் பேச்சிலும் வாழ்விலும் விடிவெள்ளி போன்ற அடிகளார் நாட்டுப் பற்றிலும் விடுதலையிலும் ஆர்வம் உள்ளவர்.

தமிழன் புகழை நாற்றிசை அறியச் செய்த செந்தமிழ்ச் செல்வர்களில் அடிகளாரும் ஒருவர்.

## குதிரையும் கழுதையும்


ஒரு சமயம் டாக்டர் இராதாக்கிருஷ்ணன் மேல் நாடுகளில் சுற்றுப்பிரயாணம் செய்தபோது ஒரு பத்திரிகை நிருபர் அவரிடம் இடக்காக ஒரு வினாவைத் தொடுத்தார்.

"எங்கள் நாடுகளில் நாங்கள் எப்போதும் ஒரே நிறமாக இருக்கிறோம். இந்தியாவில் சிலர் வெளுப்பாகவும் வேறு சிலர் இரண்டும்" அதற்கு இராதாக்கிருஷ்ணன் "குதிரைகள் பல நிறங்களில் தான் இருக்கின்றன. ஆனால் கழுதைகளோ ஒரே நிறமுடையவை." என்றார்.

ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம்

18

# அமைதியின் பூங்காற்று



"மெல்லென ஓடும் தண்ணீர் கல்லையும் உருட்டிப் பாயும்" என்பது முன்னோர் வாக்கு.

ஆயர் பணியில் வெள்ளி விழாக்காணும் யாழ். ஆயர் கலாநிதி தோமஸ் சௌந்தர நாயகம் அவர்கள் வானம் காணாத விமானம்.

உரத்துப் பேசாத மெல்லிய பூங்காற்று. செபத்திலும் தியானத்திலும் வாழ்ந்து இறைவனிடம் தன்னைக் கையளித்து துறவறத்தின் உச்சத்தைக் காணும் சித்தர்.

போர்களும் நாளாந்தப் படுகொலைகளும் தற்கொலைத் தாக்குதல்களும் பயங்கரவாதிகளின் அச்சுறுத்தல்களும், போக்குவரத்தில் ஏற்படும் அபாயங்களும், பெண் பாலாருக்கு ஏற்படும் இன்னல்களும், மனித குலத்தின் வேர்களுக்கு விஷக்கிருமிகளாகி வருகின்றன.

பத்திரிகைச் செய்திகளும் வானொலி தொலைக்காட்சி ஊடகங்களும் கொடூரச் செய்திகளைத் தொண்டைவரை நிரப்பி அவை வழிந்து சென்று மனித சிந்தனைகளை வரட்சியாக்கும் இக்காலத்தில் நல்லோர்கள் வானத்தைப் பார்த்து பெருமூச்சு விடுகின்றனர்.

இறைபக்தியும் மனித நேயமும் நாடுகளில் வற்றி வரண்டு போய்விட்டன. சிறந்த நறுமலர்கள் பூத்துச் செழிப்பாகக் காணப்பட்ட நீர்த்தடாகங்கள் பல நீரும் வற்றி நிலமும் காய்ந்து சில்லவல்லமாக வெடித்துப் பிளந்து நீர்த்துளிகளைக் காணாது ஏங்கி இருக்கின்ற நிலமை பல நாடுகளில் உண்மை நிலையாகிவிட்டது.

நமது நாட்டில் 1984ல் தொடங்கி ஏற்பட்ட தீச்சுவாலையில் கருகியவர் களுக்கு அவர்களுடைய காயங்களுக்கு சமாதானம் என்ற எழுத்தில் தொங்கியிருக்கும் விளம்பரத் துண்டு மருந்து கட்டுமா?

இல்லிடம் இழந்து, தொழில் இழந்து, வசதி வாய்ப்புகள் இழந்து, உடுத்த துணியோடு ஓடிச்சென்ற ஆயிரக் கணக்கான தமிழ் அகதிகள் இன்றும் கொட்டில் குடில்களில் பெருமூச்சு எறிகின்றனர்.

இந்த அபாயத்தில் 2004இல் மார்கழி 26இல் வந்த ஓயாத அலைகள் வடகீழ் மாகாணங்களுக்கு ஓயாத துன்பத்தை கொடுத்துவிட்டன.

அலைகள் ஓய்ந்தும் துயரம் ஓயவில்லை.

ஆயிரம் ஆயிரம் உயிர்களை அலை வேடத்தில் வந்த கடல் நீர் மலைகள் அள்ளிக்கொண்டு போய்விட்டன. கொத்துக் கொத்தாக குவிந்த பிணங்களை நினைக்கவே நெஞ்சு நடுங்குகின்றது.

குண்டுகளினால் பொசுங்கிப் போன நவாலிக்கோவில் அகதிகளைப் போல ஈழத்தின் கிராமங்கள் சிதறிக் கிடந்தன.

திசைகள் எல்லாம் அலைகளை மீறிய அவலக்குரல் கேட்டது.

தொலைக்காட்சிப் பெட்டியை பார்த்துக் கொண்டிருந்த இடம்பெயர்ந்த மக்களே கட்டி அழ ஆரம்பித்த காட்சி காலங்கள் பல சென்றாலும் அழியாத நினைவாகும். சுனாமி பேரலைகள் தங்கள் அசுரத்தனங்களை கட்டவிழ்த்து அரங்கேறிய அன்று தமிழ் ஈழத்தின் கடற்கரைகள் நிர்மூலமாக்கப்பட்டன. ஊர் மனைகள் சவக்காலைகள் ஆகின.

அரசு முகத்தை மறுபக்கம் திருப்பிக் கொண்டது. ஒரு தென்னிலங்கைக் கட்சி தமிழருக்கு ஏற்பட்ட பயங்கரமான நிலையை நினைந்து கைதட்டி பட்டாசு கொளுத்தியது.

நிவாரணப் பொருட்களை ஈழத்தமிழ் உள்ளங்களே கொட்டிக் குவித்தன. அழுவோரைத் துடைக்கும் ஆறுதல் விரல்களாய் அனுதாபம் கொண்டோர் அவலத்தில் அரும்துணை செய்தனர்.

இந்த அவலமான சந்தர்ப்பத்தில் துன்பமுற்ற மக்களுக்கு வள்ளங்களும் வலைகளும் கொடுத்து ஆறுதல் புரிய ஆயர் அவர்களே முன் சென்றார்.

ஆயருடைய உதவியும் ஆறுதல் மொழிகளும் சுனாமி பேரலை கேட்டி ருந்தால் வருங்காலத்தில் மூச்சு எடுக்க வழியில்லை.

ஆயரே பணிகளுக்கு பொறுப்பாளராயிருந்து ஆங்கங்கு சென்று அவலப்பட்ட மக்களுக்கு அரும்துணை புரிந்தது ஈழத்தின் நெஞ்சில் நிலைக்கக் கூடியது.

"நெஞ்சே நினை" என்ற எனது நூலை தமிழ் இலக்கியக்கழகம் வெளியிட்டபோது அப்பணிகளுக்கு இவரே பொறுப்பாளராக இருந்தார். மேலும் நூலின் வெளியீட்டு விழா நடந்தபோது ஆயர் தியோகுப்பிள்ளை தலைமை தாங்க இவரே என்னருகில் வீற்றிருந்தார். எனது மறுபக்கத்தில் தனிநாயகம் அடிகளாரும் வித்துவான் சொக்கனும் வீற்றிருந்தனர்.

அடியேன் வட இலங்கை கத்தோலிக்க மன்றத்தின் இலக்கியப் பகுதி செயலாளராயிருந்தபோது "நான்கு நண்பர்கள்" என்ற சிறுகதை எழுதினேன். 4 வாரங்களாக அக்கதை தொடர்ந்து வெளிவந்தது. நண்பர்கள் ஒவ்வொருவரும் தங்களது கதைகளை நேரில் சொல்வது போல கதையைப் புனைந்து தொடுத்திருந்தேன்.

அதனைப் பாராட்டி எனக்கு வந்த முதல் மடல் தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளாரிடம் இருந்து வந்தது.

பத்திரிகையில் இருந்துவரும் துணுக்குகளை பரிசீலனை செய்யும் பழக்கம் அவரிலே இருந்ததை நான் மட்டிட்டேன்.

சுவாமி அவர்கள் இவ்வாறான கதைகளை தொடர்ந்து எழுதுமாறு கேட்டிருந்தார்.

நெஞ்சே நினை என்ற நூல் நெடுந்தீவில் அரங்கேற்றம் செய்யப் பட்டபோது அடிகளாரும் நானும் பயணம் செய்தோம். பல நூற்றுக் கணக்கான மக்கள் மத்தியில் நூல் அரங்கேற்றம் நடந்தது. அன்று இரவு எனது அருகில் வீற்றிருந்த அடிகளாரின் உணவைப் பார்த்து அவரது தவக்கோலத்தை அறிந்து மூக்கில் விரலை வைத்தேன்.

சமய நெறிகளில் ஊறி இயேசுவின் அடிச்சுவடுகளில் நடப்பதையே இலட்சியமாகக் கொண்டவர் ஆயர்.

சிலுவையின் தியாக வாழ்விற்குச் காட்சியாக முன் நிற்பவர். காவலூர் அந்தோனியார் கோவிலுக்கு முன் நிற்கும் புளியமர வேர்களைப்போல அவருடைய விசுவாச வாழ்வு ஆழமானது. மழை பெய்ய காரணமான மனிதரில் இவரும் ஒருவர் என்பது எனது பணிவான கருத்து.

பிரித்தானியாவிலிருந்து இவனுக்கு பாப்பரசரால் பாராட்டுக் கிடைக்க வேண்டுமென்ற விண்ணப்பத்திற்கு உலகம் போற்றும் செவாலியர் பட்டத்தை பெற்றுத் தந்து என்னை மதிப்பார்ந்த வரிசையில் வைக்க காரணமான ஆயரை வணங்கி வாழ்த்துகிறேன்.

❋❋❋



துறவி பேதுருப்பிள்ளை என்ற மாதவன்

# 19

# "சின்னப் பவனந்தி முனிவர்"

ஒருமுறை மூதறிஞர் இராஜாஜி அவர்கள் கும்பகோணம் சென்றிருந்தார்.

தேசாபிமானியும், பெருங்கவிஞரும் பேச்சாளருமான சுவன அர்த்த நாரீச வர்மா அவர்களைச் சந்தித்தார்.

"நீங்கள் ஏன் திருமணம் செய்து கொள்ளவில்லை?" எனக் கேட்டார் இராஜாஜி.

"திருமணமா?" என்று கேட்டுவிட்டுச் சிரிக்கத் தொடங்கினார் வர்மா.

"என்ன இப்படிச் சிரிக்கிறீர்கள்?" என்று திரும்பக் கேட்டார் இராஜாஜி.

"எனக்குத்தான் மூன்று மனைவியர் ஏலவே உள்ளனரே! இன்னும் ஒரு திருமணமா?" என்றார் இரஜாஜி. "நான் அறியவில்லையே என்றார்" மூதறிஞர்.

"நாட்டுப்பற்று என் முதல் மனைவி, மொழிப்பற்று எனது இரண்டாவது துணைவி, இனப்பற்று எனது மூன்றாவது பாரியார். இவர்களைத் திருப்திப் படுத்தவே எனக்கு நேரம் போதவில்லை. இந்த நிலையில் இல்லற வாழ்வில் இன்னொரு மனைவியா எனக்கு?" என்று கூறினார் வர்மா.

இராஜாஜி உணர்ச்சிப் பெருக்கினால் "வர்மா! நீங்கள் ஒரு இராசரிஷி!" என்று கூறிவிட்டுக் கரம் கூப்பினார்.

கொழும்புத்துறை என்பது யாழ்ப்பாணக் குடாநாட்டின் வரலாற்றில் இடம் பெற்ற பண்டைய துறைமுகம். அதன் தென்புறமாக, கடற்கரையோரமாக கொலம்பகம் என்ற ஒரு இடம் உண்டு. பிரித்தானிய ஆட்சியின்போது பிரயஸ் என்ற வெள்ளைக்காரன் நூற்றுக் கணக்கான ஏக்கர் நிலத்தில் தென்னை பயிரிட்டு வந்த நிலம் அது என்பர். அவ்விடத்தில் ஆசிரிய கலாசாலையும், சாதனா பாடசாலையும் யாழ்ப்பாணக் கல்வி வளர்ச்சியின் பண்ணைகளாக மாறின.

கல்விப் பணிக்காகத் தம்மை அர்ப்பணித்து துறவறம் பூண்டு, தியாகச் செம்மல்களாக வாழ்ந்த துறவிகளை 'பிறதர்' என்ற பெயரால் அழைப்பது வழக்கம்.

இவர்கள் பூங்கொடி மாதவன் சபைச் சந்நியாசிகள் எனப் பெயர்பெற்று இருந்தனர். இறைபற்றும், கல்வியும், ஒழுக்கமும், விடாமுயற்சியும் பிறர் அன்பும் இவர்களிடத்தில் மலர்ந்திருந்தன.

கொலம்பகம் ஆசிரிய பயிற்சிக் கலாசாலையினையும், சாதனா கழகத்தை யும் இந்தத் துறவிகளே கண்ணின் மணிகளாகக் காத்து வந்தனர்.

மாதகல், இளவாலை, கற்றன், கம்பளை, காவலூர், மட்டுநகர் என்னும் இடங்களில் ஆங்கிலக் கல்லூரிகளை அடியிட்டவர்களும் இவர்களே!

முதலாவது 'இலங்கைச் சரித்திரம்' தமிழில் வெளிவந்தது, துறவிகளில் ஒருவரின் பணியே. "கல்வி பயிற்றலின் அத்திவாரம்" என்று மொழி பெயர்ப்பு நூலும் இவர்களின் கைவரிசைதான். "புனித சீலி" என்ற தொடர்நவீனமும் அந்தப் பூஞ்செடியில் ஒரு மலரே. யாழ்ப்பாண ஆசிரிய சங்கம் ஒன்றை முதலில் தொடக்கி வைத்தவர்களும் அவர்களே என்பர்.

அச்சு இயந்திரத்தை வரவழைத்து நூல்களை அச்சிட்டு இலக்கண நூல் ஒன்றையும் எழுதி சிறுநூல்கள் பலவற்றை அச்சிட்டு அக்காலத்தில் அரும்பணி ஆற்றியுள்ளனர்.

வசதிகளும் வாய்ப்புக்களும் குறைந்திருந்த அந்த நாட்களில் இயல்பு குறைந்த மாணவர்கள் பலருக்கு கல்விச் செல்வம் அளித்த பெருமையில், இவர்களுக்குச் சிறந்த பங்கு உண்டு.

சகோதரர் பேதுருப்பிள்ளை அவர்கள் சாதனா கழக அதிபர். நீண்ட வெள்ளைநிற அங்கி அணிந்து இருப்பார். இடையில் வெள்ளைப் பட்டியால் கட்டியிருப்பார். ஆறு அடிகளுக்கு மேல் உயரம். மனிதர்கள் காலையில் ஒரு மாதிரியும் நடுப்பகுதியில் இன்னொரு விதமாகவும் மாலையில் வேறு கோலமாகவும் விளங்குவது வழக்கம்.

ஆனால் இந்த அதிபர் எந்நேரமும் சிரித்தபடியே இருப்பார். அவருடைய கருமையான நிறத்துக்கு வெண்ணிற ஆடை அழகு கூட்டியது. மூன்றடி நீளமான பிரம்பு அவர் கையில் இருந்து நழுவியது அருமை.

அவர் சிரித்தபடியே அடிப்பார். பிரம்புக்கு நாங்கள் அஞ்சுவதில்லை. அடி வேண்டி அழுதவர்களை இவன் கண்டதில்லை. ஆனால் வீட்டுக்குச் சென்று 'சேட்டு'க்களைக் கழட்டும்போது "இதென்னடா? உன்னுடைய முதுகில் தடித்த கீறுகள்'' என்று அம்மா கேட்கும்போது மயிர் கொட்டிகளை எங்களுக்குச் சாட்சி சொல்ல அழைப்போம்.

அதிபர் அவர்கள் எங்களுக்கு சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சைக்கான எண்கணிதம், தமிழ்மொழி, இலக்கியம் என்று மூன்று பாடங்களை எடுத்து வந்தார்.

அக்காலத்தில் (1935) அரசினர் லிகிதர் பரீட்சை சிலகாலமாக நடை பெறாமையால், கல்லூரிகளிலிருந்தும் மாணவர்கள் தமிழ் உயர்தர வகுப்புகளுக்கு வந்து சரிந்தனர். எங்களுடைய வகுப்பில் நாற்பது மாணவர்களுக்கு மேல் இருந்தனர்.

தமிழ்மொழிப் பரீட்சையில் கட்டுரை எழுதுதல், இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுதல், அருஞ்சொற்களை எழுதுதல், பழமொழிகள், கவிதை களுக்குப் பொருள் எழுதல், சுருக்கம் எழுதல் என்பன இடம்பெற்றன.

அதிபர் அவர்கள் ஒரு துறவி என்பதோடு, மூதறிஞர் இராஜாஜி அவர்கள் குறிப்பிட்டது போல, இவரும் ஒரு இராசரிஷி.

நாட்டிலும், மொழியிலும், இனத்திலும் மிகவும் பற்றுடையவர். பவணந்தி முனிவர் எழுதி நாவலர் உரை எழுதிய "நன்னூல் காண்டிகையுரை" என்ற நூலில், ஆனாவிலிருந்து அவ்வன்னா வரையில் அவருக்கு வாய்ப் பாடம். அவருடைய பிற்காலத்தில்தான் நான் அவரிடம் கல்வி கற்றிருந்

தாலும், அவர் நீண்டகாலம் உயர்தர வகுப்பில் இலக்கணம் படிப்பித்து வந்தவர் என்று தெரிகிறது.

நன்னூல் சூத்திரங்களை நாங்கள் வாய்ப்பாடமாகச் சொல்ல வேண்டும். அவற்றோடு உதாரணங்களையும் தவறாமல் ஒப்புவிக்க வேண்டும். சூத்திரங்கள் பாடஞ் சொல்வதில் தடங்கல் ஏற்பட்டால் அவருடைய பிரம்பு கையில் மாத்திரம் அல்ல எங்கள் தோள்பட்டை முதுகிலும் விளையாடும்.

ஒருவருக்கு அடி விழுந்தால் வகுப்பில் ஏனையோருக்கு மகிழ்ச்சியாய் இருக்கும். பிரம்பைக் கையில் எட்டிப் பிடித்துவிடுவோம். இழுபறி நடக்கும்!

கட்டுரைகளில் இலக்கணப் பிழைகள், கருத்துப் பிழைகள், சொற்களைப் புணர்த்தி எழுதுவதில் தவறுகள் கண்டாலும் நாங்கள் தண்டிக்கப் படுவதுண்டு. எல்லோருடைய கட்டுரைகளையும் பார்வையிட்டு இரவோடிர வாகத் திருத்தம் செய்து வைப்பார்.

ஒரு மாணவனுக்கு கையை நீட்டச்செய்து அடிக்கப் பிரம்பைத் தூக்கிய போது அவன் கையில் சிரங்குக் கொப்பளங்களையும் கண்டுவிட்டார். அவனை அணைத்து, "நீ பின்னேரம் அறைக்கு வந்து என்னைச் சந்தி" என்றார்.

அன்று பிற்பகல் விளையாட்டு முடிந்து அவர் அறையின் பக்கமாகக் கண்ணைத் திருப்பினேன். "கார்பொலிக்" சவுக்காரத்தால் அவனுடைய கால் கைகளைக் கழுவி, தூய வெள்ளைப் பழந்துணிகளால் பக்குவ மாய்த் துடைத்து, கொப்பளங்களை மெல்லிதாய் 'பின்'களால் தகர்த்து, தூள்களும் தடவி அவனை வழியனுப்பி வைத்தார். அந்தத் துறவி இரக்கத்தின் பிதா என அன்று என் மனதில் பதிந்தது. பின்னர் பலமுறை அதை என் மனது பதிவு செய்தது.

பாடசாலையின் முன்றலில் அழகான பூந்தோட்டம் செய்துவந்தார். பின்னேரம் ஒரு சில மாணவர்கள் பூந்தோட்டத்துக்கு கிணற்றிலிருந்து நீர் அள்ளி ஊற்றுவதுண்டு. அவர்களுக்குப் பரிசாக அதிபர் ஒவ்வொரு எழுதுகோல் 'லெட் பென்சில்' கொடுப்பது வழக்கம்.

ஒருநாள் எனக்கும் முறை வந்தது. நீர் ஊற்றி முடிந்ததும், "தாய் தந்தை இல்லாத பிள்ளைகளுக்கு இன்றைக்கு 'கலர் பென்சில்' பெட்டி ஒன்றும் சித்திரக் கொப்பியும் கொடுக்க இருக்கிறேன். இங்கே அப்படி யாராவது இருக்கிறார்களா?" எனக் கேட்டுவிட்டு, அங்கே நின்ற ஆறு ஏழு மாணவர்களையும் கூர்ந்து பார்த்தார். நான் கையை உயர்த்தினேன். உயர்தர வகுப்பில் வயது குறைந்த மாணவன் நான். என்னில் பச்சாதாபப்பட்ட துறவி 'கலர் பென்சில்' பெட்டியையும், சித்திரக் கொப்பியையும் தந்தார். குதிரை ஓட்டத்தில் பரிசு விழுந்தவனைப்போல, ஆனந்தத்தோடு ஒரு சில அடி தூரம் நடந்து வந்தேன். ஒரு காலமும் கலாசாலைப் பக்கம் முகம்காட்டாத எனது தந்தையார் அங்கே நின்றார். "என்ன பெரியவர் யாரைத் தேடுகிறீர்கள்" என்றார் அதிபர். "எனது மகனைத்தான்" என்று என்னைச் சுட்டிக்காட்டினார் என் தந்தையார்.

"தாயும் இருக்கிறாவா?" என்றார் அந்த மெய்யடியான். "கல்லுப்போல இருக்கிறா தாய்" என்றார் தந்தையார். துறவிக்கு வந்த சிரிப்பு புன்சிரிப்பாக மாறியது.

இறைவனுக்குப் பணிபுரியும் ஒரு மகத்தான மனிதத் தெய்வத்துக்குப் பொய் சொல்லிவிட்டேனே! அவர் காலடிகளில் வீழ்ந்து மன்னிப்புக் கேட்கலாமா? என்று தீர்மானிக்கு முன்னரே என் தந்தையாருடன் புறப்பட்டேன். கடற்கரையில் பாறைக் கற்களில் வந்து குமுறி மோதும் அலைகளைப்போல உள்ளம் அலைமோதியது. ஆனால் அந்தத்துறவி எக்காலத்திலாவது எந்தன் பொய்யைப் பற்றிக் கேட்டதே இல்லை.

இலக்கியப் பாடத்தில் செந்தமிழ்க் கோவை என்ற நூலும், பண்டைத் தமிழ் அரசர் என்றொரு வசன நூலும் வேறொன்றும் பாட நூல்களாய் இருந்தன. இலக்கியப் பகுதியில் வரும் ஒரு சில புராணச் செய்திகளுக்கு விபரம் அறிந்து வருமாறு அதிபர் என்னைப் பணிப்பது உண்டு.

ஏனெனில் அக்காலத்தில் யாழ்ப்பாணத்தின் குடிசைக் கைத்தொழில் சுருட்டுச் சுற்றுதலே! சுருட்டுக் கொட்டில்களில் புராணம் வாசிப்பது வழக்கம். என் தந்தையார் அப்படியான ஒரு வாசகர். அதனால் பல புராணச் செய்திகளை அறிந்து வைத்திருந்தார். அதிபரின் ஐயங்களை அப்பனிடம் நான் கேட்பது வழக்கம்.

தவணைப் பரீட்சைகள் மும்முரமாக நடந்து வந்தன. ஒருமுறை இலக்கியப் பாடத்தில் நூற்றுக்கு நூற்றுப் பத்துப் புள்ளிகள் கிடைத்தன. அதிபர்

வகுப்புக்குப் பிரம்போடு வந்தார். "அடே இங்கே ஒருத்தனுக்கு இலக்கியத்தில் நூற்றுப்பத்துப் புள்ளிகள் கிடைத்திருக்கிறது. அவன் என்னை ஏமாற்ற நினைத்தான். அவனுக்கு என்ன செய்ய வேண்டும்? ஆனால் அவனுக்குத் தொண்ணூறு புள்ளிகள் தான் கொடுத்தேன்" என்றதும் மாணவர்கள், "பிறதர்! அவனுக்கு முதுகில் பத்துப் புள்ளிகள் போடவேண்டும். இது ஏகமனதான தீர்மானம்" என்றனர். எனக்கு விழி பிதுங்கியது. நான் முன் வரிசையில் இருந்தேன். இலக்கியப் பாடத்தில் பதினொரு வினாக்களைத் தந்து பத்து வினாக்களுக்கு விடை எழுதுமாறு கேட்கப்பட்டது.

நான் பத்துக்கும் விடை எழுதினேன், ஆனால் ஒன்றுக்கு எழுதிய விடையில் சந்தேகம் ஏற்பட்டது. விடையை எண்ணப் போகிறார்களா என்ற துணிவில் பதினொன்றுக்கும் விடை எழுதி வைத்தேன். இலக்கியப் பகுதிச் செய்யுள்கள் அனைத்தும் எனக்கு வாய்ப்பாடம். வசன பாகமும் அரைவாசிக்குமேல் பாடம். எனவே விடை எழுதுவதில் எனக்குத் தயக்கம் வருவதில்லை. பதினொரு வினாக்களுக்கும் நான் விடையளித்திருப்பதை அதிபர் எல்லார் முன்னிலையிலும் கூறிவிட்டு, என்னை எல்லோர் முன்னிலையிலும் அழைத்தார்.

நான் ஒரு குற்றவாளியைப்போல் குறுகினேன். "எண்ணிப் பாராமல் செய்துவிட்டேன் 'பிறதர்'! நான் இனி இப்படிச் செய்யமாட்டேன்!" என்றேன். "இது இவனுடைய புலுடா! எண்ணாமல் விட்டது ஒரு குற்றம், பதினொன்றுக்கு விடை எழுதியது இன்னொரு குற்றம்" என்று எனக்கு எதிராகக் குரல் கொடுத்தார்கள் அங்கிருந்த மாணவர்கள். பல்வேறு தருணங்களில் இவனும் மற்றோரில் குறைகண்டது உண்டு.


அதிபர் திசையை மாற்றிவிட்டார். "இலக்கியத்தில் நீங்கள் எவராவது அறுபது புள்ளிகள் கூட எடுக்கவில்லை. இப்போது நூற்றிப்பத்து எடுத்த வனில் சிலுவை சுமத்த நினைக்கிறீர்கள்! உங்கள் எல்லோருக்கும் பூசை நடக்கப் போகுது!" என்றதும் சத்தமில்லை. நான் விடுதலையானேன். "எப்படி யானாலும் இவனுக்குக்கிட்ட ஒருவரும் நிற்க மாட்டீர்கள்" என்றார் பிறதர்.

இப்படியான பாராட்டுகள் என் ஆன்மாவில் பூங்குழல் ஊதின. இலக்கணப் பிழைகள் ஏற்படாதவாறு வசனங்களை எழுதவும், கட்டுரைகளை அழகாக அமைக்கவும், புணர்ச்சி விதிகளைப் பயன்படுத்திச் சொற்களைச் சேர்க்கவும், அதிபரே எனக்கு அத்திவாரம் வெட்டினார்

பேராசிரியர் எஸ். ஜே. இம்மானுவேல் அடிகளார்

20

# "துயரத்தில் தோன்றிய சிலுவைச்சுடர்"



ஆயிரக்கணக்கான, இலட்சக் கணக்கான மக்கள் தாங்கள் வாழ்ந்துவந்தவீடு வாசல்களை விட்டு, தேடிய தோட்டங்களை விட்டு, உற்றார் உறவினரை விட்டு, 'செல்' அடிகளுக்கும் குண்டு வீச்சுக்களுக்கும் அஞ்சி, சொந்த மண்ணைவிட்டு 1995இல் வெளியேறினார்கள்.

இந்தச் சோக வரலாற்றை இலங்கைப் பத்திரிகைகள் பெரிதுபடுத்தவில்லை. தேசத் தலைவர்கள் சிந்தனை செய்ய வில்லை. நீதிமான்கள் எவரா வது நெஞ்சுரத்தோடு உண் மையை உரைக்கவில்லை.

பக்கத்துத் தமிழ்நாடு கண்ணை மூடிக்கொண்டது. இந்துப் பத்திரிகை ஆனந்தராகம் பாடியது.

வாயில்லாப் பிராணிகளான தமிழ் மக்களுக்குக் குரல் கொடுப்பவர் எவருமே இல்லை. உலகத்துக்கே உண்மை மறைக்கப்பட்டது.

எந்த இடையூறுகளையும் துச்சமாய் மதித்து, ஈழத்தில் என்ன நடை பெறுகிறதென்பதை எடுத்துரைக்க முன்வந்தவர் எஸ்.ஜே.இம்மானுவேல் அடிகளார். ஐரோப்பிய நாடுகளில் இம்மானுவேல் அடிகளாரை அறியாதார் அறியாதாரே!

உண்மையின் காட்சியாகப் பேச்சிலும் எழுத்திலும் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்கும் அடிகளாரின் வாழ்க்கை அற்புதமானதாகும்.

அவருடைய ஒவ்வொரு அசைவுகளிலும் குருவுக்குரிய தெய்வப் பண்புகளை அவதானிக்கலாம்.

சொல்லொன்று செயலொன்று சிந்தனை வேறொன்றாக வாழும் மக்கள் மத்தியில் சிந்தனையும், சொல்லும், செயலும், ஒரே கோட்டில் பயணம் செய்யும் இவரைப் போன்ற மாணிக்கங்களைக் காணும்போதே கை எடுத்துக் கும்பிடச் சொல்லும்.

இலங்கைப் பல்கலைக்கழகத்தில் பௌதீக விஞ்ஞானப் பட்டதாரியாகி, உரோமையில் இறையியல் மெய்யியல் கற்றுக் குருவாகி, இலங்கை வந்து குரு மாணவர்களுக்கு விரிவுரையாளராகப் பணிசெய்தவர்.

கண்டி நகரில் இவரிடம் கற்ற சிங்களத் தமிழ்க் குருமார்களுக்கு அடிகளாருடைய பரந்த இலட்சியங்கள் புரியும்.

யாழ் குருமார் முதல்வராகவும் வடமாநிலத்துக் குருத்துவக் கல்லூரி அதிபராகவும் இருந்து அரும் பணியாற்றியவர். எல்லாருக்கும் இனிய வராகவும், மதம், மொழி, இனம் என்ற வேலிகளுக்கு அப்பால் சென்று நீதி, நேர்மை இவற்றுக்காக உழைப்பவராகவும் விளங்கினார்.

யாழ்ப்பாண நெற்றியில் அவருடைய பெயர் ஒட்டியிருந்தது. கத்தோலிக்க மதத்தைச் சார்ந்த பெரும்பான்மை இனக் குருமாரும், சிங்களக்

கத்தோலிக்க மக்களும், விடுதலைப் புலிகளை விரோதித்து நெருப்புக் கண்ணால் பார்த்து வந்த வேளையில் பேராசிரியர் எழுதி வெளியிட்ட கடிதங்களும், அறிக்கைகளும், நூல்களும் அவர்களுடைய கண்களில் இருந்த மாயைகளைக் கழுவிவிட்டன.

**வாடு துயர் துச்ச மென்று**
**நீடு துயர் காண் மக்களை மனதில் எண்ணி**
**புண்ணிய பூமி காக்கத்**
**தன்னுயிர் உடனே ஈந்து**
**மண்ணொடு மக்கள் காக்குமாறு**

போராடும் மாவீரர்களுக்கு அடிகளார் தமது நூலைப் படையல் செய்திருக் கின்றார்.

உலகப் பற்றைத் துறந்த மெய்யடியார் அதுவும் இறையியல் பேரறிஞர் விடுதலைப் புலிகளின் கூட்டில் அடைக்கலம் புகுவதென்றால் அது ஆச்சரியத்தின் உச்சம்தான்..

அதற்கு அடிகளார் கூறும் காரணங்களை ஆராய்ந்தால் சிலுவையின் பாதையில் சத்தியத்தின் சாட்சியாக பின் தொடர்ந்து அடிவைப்பவர்கள் காரணங்களை மறுக்கவோ மறக்கவோ முடியாது.

நெடுந்தீவின் ஆழ்கடலில் பயணம் செய்த 39 அப்பாவி மக்களை வெட்டி யும் கொத்தியும் கொலைசெய்த சிங்கள இராணுவ அட்டூழியங்கள் —
நவாலி கோயிலில் அகதிகளாயிருந்தோரை பொம்மரால் குண்டுகளைப் போட்டுச் செய்த கொடூரக் கொலைகள் —
நாகர் கோயில் பாடசாலையில் குண்டு வீச்சு —
நாச்சிக் குடாவில் மீனவர் அழிப்பு —
வாகரையில் நடந்த இரத்தக் களரி —

இவ்வாறான அரச அக்கிரமங்களைக் கண்டும் கேட்டும் அறிந்தவர் அடிகளார். துன்பத்தைத் தரும் போரையும், கொலைகளையும், படுகாயங் களையும் இயல்பாகவே எதிர்க்கின்ற அடிகளார், ஜனநாயக வழிகள், ஒப்பந்தங்கள், உண்ணாவிரதங்கள், அகிம்சைகள் எல்லாம் செல்லாக் காசுகளான வரலாறுகளைச் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

ஒடுக்கப்பட்டவர்கள் தமது பாதுகாப்புக்கும் அக்கிரமமான அடக்கு முறைக்கும் எதிர்த்து ஆயுதம் ஏந்துதல் உலக வரலாற்றில் நீதியின் பாற்பட்டது என்பதை எடுத்துக் காட்டுகின்றார்.

அரச பயங்கரவாதத்தை அடக்க ஆயுதம் ஏந்தலன்றி மாற்று வழியில்லை என்பது தெளிவாகிறது. ஒரு மருத்துவ நிபுணன் பிரேதப் பரிசோதனை மூலம் நடைபெற்ற உண்மை வரலாறுகளைக் கண்டு கொள்வதுபோல விடுதலை இறைவியலையும் அலசுகின்றார்.

சிங்கள இராணுவ அட்டூழியங்களும் அத்துமீறல்களும் எல்லை கடந்தமையால் வடகிழக்குத் தமிழ்க்குலம் மாண்பிழந்து, சீரழிந்து சிதைந்து சின்னாபின்னப்பட்டதை அம்பலமாக்கி இருக்கிறார்.

இடைவிடாத 'செல்' தாக்குதல்கள், ஆகாயப் படையின் குண்டு வீச்சல்கள், பிற நாடுகளில் தஞ்சம் கோரியவர்கள், பொருளாதாரத் தடைகள், உடுத்த உடையோடு ஓடிச்சென்றோர் பட்ட அவமானங்கள், இராணுவத் தாரின் இழிவான செயல்கள், பாலியல் வன்முறைகள், யாழ்ப்பாணப் பட்டினம் வனாந்திரமாக மாறியமை எல்லாவற்றையெல்லாம் விடுதலை இறையியலின் சத்திர சிகிச்சைப் பிரிவில் கொண்டுவந்து நிறுத்தி ஆராய்கின்றார்.

"என் மக்களை வாழவிடுங்கள்!" என்று முற்காலத்தில் மோசேஸ் என்ற முனிவர் இறைவனைப் பார்த்து வேண்டுதல் செய்ததுபோல அடிகளாரும் குரல் கொடுக்கின்றார்.

ஐரோப்பிய நாடுகளில் ஆயிரக்கணக்கில் எங்கே தமிழ் மக்கள் கூடுகிறார்களோ அங்கே அடிகளாரைக் காணலாம்.

தென் ஆபிரிக்காவுக்கும் சென்று விடுதலை நாதத்தின் வீணையை மீட்டு அந்நாட்டின் ஆதரவைக் கேட்டவர். அமெரிக்கா, அவுஸ்திரேலியா நாடுகளிலும் ஈழமக்களின் துயரத்துக்குச் சாட்சியாக நின்று கருத்துரைகள் கூறியுள்ளார்.

"எந்த இடரிலும் உண்மைக்குச் சாட்சியாக இருப்பேன்" என்று பேராசிரியர் தனது நூலின் கடைசி வரியை முடிக்கின்றார்.

எனது பேச்சிலும், எழுத்திலும், கவிதைகளிலும் மனதைப் பறிகொடுத்தவர்.

அன்னை திரேசா நூல் வெளியீட்டில் தலைமை உரை கூறி 'முப்பணி வேந்தன்' எனப் பட்டம் சூட்டியவர்.

எனது ஒவ்வொரு நூலுக்கும் ஆசியளித்து என் பணிகளைப் போற்றியவர்.

இளமையிலிருந்தே அடியேனின் அன்பும் மதிப்பும் கொண்ட குருமணி.

## வழிமேல் விழிவைத்து

சில சொற்றொடர்கள் எழுத்தாளர்களால் அதிகமாகக் கையாளப் படுகின்றன. அப்படியான ஒன்றுதான் **வழிமேல் விழிவைத்து** என்பதும். இதனை மிகு வழக்குச் சொற்றொடர்கள் என்பர்.

இந்தச் சொற்றொடர் புகழேந்திப் புலவரால் நளவெண்பாவில் பயன்படுத்தப்படுகிறது.

**வழிமேல் விழிவைத்து வாள் நுதலால் - நாம**
**மொழிமேல் செவிவைத்து மோகச் - சுழிமேல்தன்**
**நெஞ்சோட வைத்தயர்வான் கண்டான் நெடுவானில்**
**மஞ்சோட அன்னம் வர.**

நளன் அன்னத்தைத் தூதாக தமயந்தியிடம் அனுப்பி விட்டு வராதா என்று வழிமேல் விழிவைத்திருந்தா னைப் புகழேந்தியார் பொருத்தமாகக் குறிப்பிடுகின்றார்.

அன்னை திரேசா

21

# "எண்ணற்ற மக்களின் கண்ணீரைத் துடைத்த புண்ணிய சீலி"



எங்கள் காலத்தில் இப்படியான ஒரு துறவி வாழ்ந்து வந்தார் என்பது ஆச்சரியத்தின் குறிகளை எழுப்பக்கூடியது. செபம், இறை நம்பிக்கை, அன்பு, சேவை, சமாதானம் என்ற ஐந்து விதைகளைத் தூவி உலக அந்தங்களெல்லாம் மணம் பரப்பிய மாதரசி அன்னை திரேசா. இளமைக் காலத்தில் துறவறத்தில் ஆசைகொண்டு கல்கத்தாவிற்குச் சென்றிருந்தார்.

அங்கே பாடசாலை ஆசிரியராகவும் பின்னர் அதிபராகவும் இருந்து பணியாற்றினார்.

கல்கத்தா முன்னர் இந்தியாவின் தலைநகராக இருந்தது. இந்தியாவின் மக்கள் தொகை கூடிய இடம் கல்கத்தாவே.

லொறற்ரோ கன்னியர் மடத்தில் திரேசா ஊழியம் செய்து வந்தாலும் மடத்துச் சுவர்களுக்கு அப்பால் வாழ்ந்த மக்களின் பெருமூச்சுகள் இந்த இளம் கன்னியருக்கும் கேட்டது.

ஆயிரக்கணக்கான ஏழைகள் அயலில் குடி இருந்தனர்.

அவர்களுடைய இல்லம் சாக்குகளாலும், தகரத் துண்டுகளாலும், கடதாசி மட்டைகளாலும் அமைக்கப்பட்டவை.

ஆரோக்கிய வசதிகள் எதுவுமற்ற வறுமையில் மூழ்கிய பிராணிகளாக அவர்கள் வாழ்ந்தனர். அருகில் ஓடிய சிற்றாறு கழிவு நீர்களினால் நிரம்பிக் கோலம் மாறியிருந்தது.

குப்பைக் குன்றுகள், மலைகள் போல உயர்ந்து வந்துள்ளன. வேலை யில்லாத் திண்டாட்டமும், பசி பட்டினியும், நோயும், அறிவீனமும் அந்த ஏழைகளின் ஆபரணங்களாயிருந்தன.

அன்னை திரேசா கல்கத்தாவிலிருந்து தாசிலிங் என்ற இடத்திற்குப் புகையிரத மார்க்கமாகச் சென்றபோது இறைவனின் குரல் ஒலி அவர் காதுகளில் வட்டமிட்டன. அவர் திரும்பி வந்து ஐந்து ரூபா பணத்தோடும் நீலக் கரையுள்ள பருத்திப் புடவையோடும் மடத்தைவிட்டு வெளியேறிக் கல்கத்தாவில் வாழும் ஏழைகளிலும் ஏழைகளுக்குத் தொண்டு செய்ய ஆரம்பித்தார்.

முதலில் மழைக்குப் பாடசாலைத் தாவாரங்களிலும் ஒதுங்கி அறியாத பிள்ளைகளுக்கு ஒரு மர நிழலில் வைத்து கல்வி அறிவு புகட்டும் பணியைத் தொடங்கினார்.

கல்கத்தா வீதி ஓரங்களில் நூற்றுக் கணக்கானவர்கள் பிச்சைப் பாத்திரங் களோடு இருப்பார்கள்.

அவர்களில் சிலர் பசி பட்டினி நோய் துன்பம் காரணமாகவும் பராமரிப்போர் இல்லாததாலும் வீதி ஓரத்திலேயே மரணமாகிக் கிடப்பார்கள். அந்தப் பிரேதங்கள் துர்நாற்றம் வீசும் மட்டும் கவனிப்பார் அற்றுக் கிடக்கும். இந்தத் துன்பச் சூழலை மட்டிட்ட அன்னை திரேசா மரணத்தின் தோளில்

சவாரி செய்வோருக்கு ஆறுதல் அளிக்க விரும்பி காளி கோயிலுக்கு அண்மையில் கிடந்த கட்டிடத்தைக் கேட்டுப் பெற்று அங்கு தானே நோயாளி இல்லம் ஒன்றை அமைத்து மரணத்தின் வாசற்படியில் இருந்தோருக்குப் பணிபுரிந்தார்.

பிறந்த சிசுக்கள் பல குப்பை மேடுகளில் எறியப்பட்டதையும் அவர்களை இலையான்களும் புழுக்களும் சூழ்ந்திருப்பதையும் கண்ட அன்னை திரேசா மனித உயிர்களின் மாண்பை அறிந்து சின்னம் சிறிசுகளைக் காப்பாற்ற ஓர் இல்லடத்தை அமைத்தார்.

அந்த இல்லடத்தில் அன்னை திரேசாவின் அன்புப் பணியாளர் சேவையில் சேர்ந்த துறவிகள் நாள்தோறும் ஐந்தும் பத்துமாகச் சிசுக்களைப் பொறுக்கி வந்து சேர்த்து அவர்களைக் கண்போலக் காப்பாற்றினர்.

குட்டரோக நோய் கல்கத்தாவின் சமுதாயத்தில் அருவருப்போடு விலக்கப்பட்ட நோயாய் விளங்கி வந்தது.

கல்கத்தாவில் இறைச்சிக்காக ஆடு மாடு வெட்டப்படும் இடத்துக்கு அருகாமையில் சதுப்பு நிலத்தில் அமைக்கப்பெற்ற கொட்டில்களில் குட்டரோக நோயாளிகள் கவனிப்பாரற்று வாழ்ந்து வந்தனர்.

இதனைக் கண்ணுற்ற அன்னை திரேசா அவர்களுக்கு அரசாங்கத்திடம் நிலத்தைப் பெற்று இல்லடங்களை அமைத்துக் கயிறு திரித்தல், மட்பாண்டங்கள் செய்தல், கால் துடைப்பங்கள் செய்தல் போன்ற தொழில்களைக் கற்றுக் கொடுத்து வைத்தியசாலை ஒன்றும் அமைத்து குட்டரோகிகளுக்கு சிறந்த பணியாற்றினார்.

இந்தச் சேவைகளுக்கான உதவியை ஒருபோதும் அன்னை திரேசா அரசாங்கத்திடம் எதிர்பார்க்கவில்லை. கல்கத்தாவிலுள்ள நல்ல மனம் படைத்த சான்றோர்கள் அன்னையின் பணிகளைக் கண்டு ஆச்சரியப் பட்டு அவர் கைநீட்டியபோது எல்லாம் பண உதவி செய்து வந்தனர்.

இந்த மனித நேயமான செயலுக்கு பிறநாடுகளிலிருந்தும் நல்ல மனம் படைத்தவர்கள் உதவி செய்து வந்தனர்.

வீதிகள், புகையிரத நிலையங்கள், பொதுச் சந்தைகள் என்பவற்றில் காணக்கிடக்கும் கதியற்ற சிறுவர்களை அணைத்துச் சென்று அவர் களுக்கு உணவும் இல்லடமும் கொடுத்து ஆதரித்து வந்தார்.

ஒரு சில அமைப்புகளை உண்டாக்கி பசித்து வந்தோர்களுக்கு உணவு நிலையங்களாக அவற்றை மாற்றினார்.

அன்னை திரேசாவுடைய தர்ம சிந்தனையையும் தூய வாழ்வையும் தெய்வ பணியையும் பாராட்டி இந்திராகாந்தி அம்மையாரும், அவருக்கு பின்வந்த பிரதமர்களும் அன்னை திரேசாவை மதித்து பாராட்டி இருந்தனர். பாரத ரத்னா விருதையும் அளித்தனர். அன்னை திரேசாவுக்கு நோபல் பரிசு அளிக்கப்பட்டுள்ளது. ஒஸ்லோவில் நடந்த இப்பாராட்டு விழாவில் அன்னை கலந்துகொள்ள மறுப்புத் தெரிவித்தார். ஏழைமக்கள் சார்பாக அவருடைய திருச்சபை அதிகாரிகள் வற்புறுத்தினர்.

அன்னை திரேசா பங்குபற்றினாலும் வழமையாக நடைபெறும் விருந்து உபசாரங்களிலும் களியாட்ட விழாக்களிலும் பங்குபற்ற மறுத்துவிட்டார். அன்னை திரேசாவைப் புகழ்ந்து உலகிலேயே சிறந்த பெண்மணி என்று இனிய பூக்களை அள்ளி எறிவதுபோல மணம் வீசும் வார்த்தைகள் அங்கே பரப்பப்பட்டன. அவற்றிற்கு பதிலளித்த அன்னை திரேசா குப்பை மேட்டிலிருந்து தான் காப்பாற்றிய பெண்ணைப் பற்றிக் குறிப்பிட்டார். அவளை எலிக்கடியிலிருந்தும் புழுக்களின் கூட்டத்திலிருந்தும் காப் பாற்றித் தோளில் சுமந்து வந்து குளிப்பாட்டிக் கட்டிலில் கிடத்தியபோது அன்னை திரேசாவின் கையைப் பிடித்துக்கொண்டு "அம்மா இப்படியொரு அன்பான உபசாரத்தை வாழ்வில் நான் அறிந்ததில்லை. உங்களுக்கு என் நன்றி" என்று இப்படியாக சாகக்கிடந்த பெண் கூறிக் கண்மூடினாள்.

இதுவே மானிடருக்கு கிடைக்கக்கூடிய அன்புக் கிரீடம். இரண்டு சேலைகளோடும் ஒரு சோடி செருப்புகளோடும் ஒரு வாளியோடும் ஏழைகளிலும் ஏழையாக சீவித்துவரும் இக்கன்னியர் கூட்டத்தில் பல நாடுகளிலிருந்தும் பல கன்னியர்கள் ஏழைகளுக்கு சேவை செய்வதற் காக சேர்ந்து கொண்டனர். 67 நாடுகளின் அன்புச்சபையின் கிளைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செபமும், தவமும் விரதமான வாழ்வு இக்கன்னியர்களை உலகின் உயர்ந்த ஸ்தானத்துக்கு உயர்த்திக் காட்டியது..

அன்னை திரேசா என்னை ஆசீர்வதித்து ஒரு மடலை எழுதினார். அது கிடையாத நிதியம். இந்த அற்புதமான மாதரசியின் வரலாறுகளை 'அன்பின் கங்கை அன்னை திரேசா' ஒரு நூலாக எழுதினேன். அது மூன்று பதிப்புக்களைக் கண்டுகொண்டது.

22

# "மும் மணிகள்"

பேராசிரியர் கல்கி இலங்கையில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு எழுதியிருக்கும் "இலங்கை யாத்திரை" என்னும் நூலில் யாழ்ப்பாணத்தைக் கல்விமான்களின் பூமி என்று குறிப்பிடுகிறார். வட மாநிலம் எல்லாவற்றிலும் பார்க்க கல்விக்கே முக்கியத்துவம் கொடுத்து வருகிறது.

நடந்து செல்லும் வீதியில் துவிச்சக்கர வண்டியால் தாக்குண்டு வீழ்ந்து கிடப்பவரை எழுப்பி நீங்கள் யார்? என்று கேட்டால் அவர் ஒரு எழுதுவினைஞராகவோ, கணக்காளராகவோ, ஆசிரியராகவோ இருப்பார் என்று கல்கி சொல்லுகிறார். கல்விப் பாரம்பரியத்தின் அறிவுடைமையால் தான் இன்று பரந்த உலகிற்குச் சென்றிருக்கும் தமிழ் மக்கள் பயன் பெறுகிறார்கள்.


இலக்கண நூலில் "இருவென இருந்து, ஏடு அவிழ் என அவிழ்த்து, பருகுவன் அன்ன ஆவர்த்தனாகி" என்பது மாணாக்கனைப் பற்றி எழுதப்பட்டவையாகும்.

சமுதாயம் ஆசிரியர்களில் வைத்த மதிப்பு ஒப்பற்றது. ஆசிரியர்களை நெஞ்சில் ஆராதித்து வணங்கினார்கள்.

ஆசிரியர்கள் அறிவிலும் பேச்சுவார்த்தையிலும் ஒழுக்கத்திலும் ஊருக்கு ஒளி காட்டினர்.

ஆசிரியருடைய தொழிலுக்கு ஊரே ஈடு கொடுத்தது. இந்த வரிசையில் வாழ்ந்து வந்த ஆசிரியர்களை இங்கு நினைவூட்டுவது என் நெஞ்சின் பாரத்தை இறக்குவதாயிருக்கும்.

## கலைஞர் ஆர்.எஸ். நடராசா எம். ஏ.



பலாலி ஆசிரிய கலாசாலை வடமாநிலத்துக்குச் சிகரம் போன்றது. பல ஆசிரிய கலாசாலைகளுக்கு மூடுவிழா கண்டபடியால் பலாலி மேலும் சிறப்புப் பெற்றது.

அங்கே பல ஆண்டுகள் பணி புரிந்தவர் திரு. நடராசா என்பவர். அவருடைய சொந்தப் பெயர் சுந்தரம்பிள்ளை நடராசா வாக இருந்தாலும் அவரை எம். ஏ. நடராசா என்றே அழைப்பர். ஏனெனில் ஆரம்ப காலத்திலேயே பட்டதாரி யானவர்.

பரந்த கல்வியறிவும் பண்பான வாழ்வும் உயர்ந்த ஒழுக்கமும் கனிவான சொல்லுமுடைய ஒரு பேரறிவாளான்.

மிகவும் சிறந்த பேச்சாளன், சிறந்த சிந்தனையாளன், ஞானமுள்ள அரசியல்வாதி, எவரையும் புண்படுத்தாத மனித நேயம் கொண்ட மாமனிதன்.

"என் கடன் பணி செய்து கிடப்பதே" என்ற அப்பர் வாக்குக்கு ஏற்ப யார் எந்த நேரத்திலும் என்ன உதவி கேட்டாலும் இல்லை என்று சொல்லி அறியாத இனிய மனிதன்.

வரலாற்றுப் பெருமைமிக்க நெடுந்தீவில் மேற்கூர் சுந்தரம்பிள்ளை என்பவர் கிராமச்சங்கத்தில் ஒரு தூணாக விளங்கியவர். அவருடைய அரிய மகனாரே நடராசர். நெடுந்தீவு மகாவித்தியாலயத்தில் கற்று தமிழ்நாட்டில் பட்டதாரியாகி பின்னர் ஆசிரிய பணியில் ஈடுபட்டு, உயர் பதவிக்கு வந்தவர்.

மகாவித்தியாலயத்தின் அதிபராக இருந்த நவறட்ணசிங்கம் என்பவருடைய ஊக்கத்தினால்தான் இவர் பட்டதாரிப் படிப்பை மேற்கொள்ளக்கூடிய தாயிற்று. அந்த நன்றியை என்றும் மறவாது நெஞ்சில் எண்ணி வாழ்பவர். இந்த அதிபர் காலத்தில் பயின்ற நூற்றுக் கணக்கானவர்கள் அதிபர் நடராசாவினுடைய இயல்பையும், அவர் மாணவர்களை நடத்திய சிறப்பையும், அவர்களுடைய விருத்தியில் காட்டிய வேகத்தையும் சொல்லிப் புகழ்வார்கள்.

பத்திரிகைகளுக்கு எழுதுவதிலும் உயர்கல்விப் பணிகளிலும் அவருடைய காலம் சென்று வருகிறது.

எனது எழுத்துப் பணிகளை வியந்து பத்திரிகைகளில் எழுதியுள்ளார். என்னில் மதிப்பும் அன்பும் உள்ள பெரியார்.

## அறிஞர் யேம்ஸ் அவர்கள்

மாதகல் சஞ்சூசையப்பர் கல்லூரியின் அதிபராக இருந்த திரு. யேம்ஸ் அவர்கள் அதிபர்களுக்குள் ஒரு மாணிக்கம் என்று சொல்லலாம்.

அடியேன் பல வருடங்கள் காவலூர் அந்தோனியார் கல்லூரியில் ஆசிரியராக இருந்த வேளையில் ஒரு நாள் கத்தோலிக்க பாடசாலை களின் பொது முகாமையாளராக இருந்த வண. எமிலியானுஸ்பிள்ளை அடிகளாரைச் சந்தித்தேன். எனக்கு ஏற்பட்டுள்ள சில இடர்களைக் குறிப்பிட்டு இளவாலைக்கு அண்மையில் எனக்கு ஓர் இடம் தருமாறு கேட்டேன். பொதுமுகாமையாளர் என்னை நன்றாக அறிந்தவர். எனது மதிப்புக்குரிய ஆசிரியர்.

அவர் என்னை நோக்கி "உமக்கு மாதகல் சஞ்சூசையப்பர் கல்லூரிக்குப் போக விருப்பமா? அந்தக் கல்லூரி அதிபர் ஒரு சிறந்த நீதிமான். ஒரு

குருவைப் போன்றவர். நீர் மிகவும் சந்தோஷமாக அவருடன் வேலை செய்யலாம்'' என்றார்.

அக்காலத்தில் யாழ்ப்பாணம், காவலூர், இளவாலை, வதிரி, மன்னார், என்ற இடங்களில்தான் கத்தோலிக்க கல்லூரிகள் சிறப்புற்று இருந்தன. குருமார்கள் ஆங்காங்கு அதிபர்களாக இருந்தனர். குருமார் திருமணம் செய்யாதவர்கள். ஆசிரிய பணியை தெய்வப் பணியாகத் திறம்பட செய்ய வேண்டும் என்ற நோக்கம் உடையவர்கள்.

கடமையில் தவறாதவர்கள். நீதியின் செங்கோல் தளம்புவதில்லை. மன்னிப்பு என்பது அவர்கள் எல்லோரிலும் காணக்கிடைக்கும் அரிய நிதியம்.

உடன் ஆசிரியர்கள் கடமையில் கருத்தாகவிருக்க வேண்டுமென்று நினைப்பதும், ஒழுங்காகக் குறிக்கப்பட்ட நேரத்திற்கு பாடசாலைக்கு சமூகமளிக்க வேண்டும் என்பதும், ஒழுக்கமும் பண்பும் உடையவர்களாக விளங்கவேண்டுமென்பதும் அவர்கள் எதிர்பார்க்கும் விடையங்களாகும். எனவே குருமாரோடு பணிபுரிந்த நான் அவ்வாறான அதிபர்களை எதிர் பார்ப்பது இயற்கையே!

மாதகல் அதிபர் குரு உடை தரியாத குரு. அவருடைய மனச்சாட்சியும் இரக்கமும் மனித பண்புகளும் பல பக்கங்களை நிரப்பக் கூடியவை.

பல வருடங்கள் அவருக்குக் கீழே பணி செய்தபோது ஒரு நாளாவது பாடசாலைக்கு அவர் பிந்தி வந்ததில்லை என்பதை நான் இமயமலை உச்சியிலும் எடுத்துரைப்பேன். அவர் சில்லாலையைச் சேர்ந்தவர். புகழ்பூத்த இன்னாசித்தம்பி வைத்திய பரம்பரையின் சொந்தக்காரர். ஊரில் பெரிய மதிப்பும் செல்வாக்குமுடையவர்.

இந்தக் கல்லூரி அரசாங்க பாடசாலை ஆக்கப்பட்ட பின்பு சில அதிபர்கள் பாடசாலையைச் சூறையாடிச் சென்றுள்ளனர். நூல் நிலையத்தில் உள்ள நூல்களைக் கொண்டு செல்வது, சிறந்த தளபாடங்களை வீட்டிற்கு ஏற்றிச் செல்வது, அழகுசாதனப் பொருட்களை அபகரிப்பது என்று பல குற்றச் சாட்டுகள் கூறப்பட்டுள்ளன.

நிதி மோசடிகளும் இவற்றில் ஒன்று. அதிபர் யேம்ஸ் அவர்களுக்கு ஆங்கில சிரேஷ்ட பாடசாலைப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள்

தேக்கம் பலகையில் செய்யப்பட்ட அழகிய அலுவலக மேசை ஒன்றை யும் ஆங்கில அகராதி ஒன்றையும் அன்பளிப்பாகக் கொடுத்திருந்தனர். அதிபர் இளைப்பாறும் வேளை வந்த போது அன்பளிப்பாகக் கிடைத்த பொருட்களை கொண்டு போகுமாறு துணைஅதிபர் பணிவாகக் கேட்டார்.

"நான் அதிபராக இருந்த காரணத்தால் தான் இவை அன்பளிப்பாகப் பரிசளிக்கப்பட்டன. எனவே இவை பாடசாலைக்கே சொந்தமானவை" எனக்கூறி மறுத்துவிட்டார். ஆனால் அவருக்குப் பின்பு அதிபராக வந்தவர்கள் அந்தப் பொருட்களை இரவு இரவாக அபகரித்துச் சென்ற தற்கு என் கண்கள் சாட்சிகளாக இருக்கின்றன.


இவையெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது ஆசிரியர் யேம்ஸ் அவர்களின் தூய மனச்சாட்சியும் நேர்மையான பணியும் எனக்குப் பல பாடங்களைப் போதிக்கின்றன.

என்னுடைய நூல்களையும் பத்திரிகைகளில் வரும் விமர்சனங்களையும் வாசித்துப் பாராட்டி விமரிசனம் உரைப்பதில் அதிபர் எப்போதும் கருத் துள்ளவராக இருந்தார். பல பேச்சுப் போட்டிகளிலும், நாடகங்களிலும் எங்கள் கல்லூரி முதலிடம் பெற்று வடமாகாணத்தில் சிறப்புற்ற தருணங்களில் அதிபர் என்னைப் பாராட்டிய நிகழ்ச்சிகள் பலவாகும்.

## துணை அதிபர் ஏ. எஸ். ரீ. ஜேம்ஸ் அவர்கள்

இளவாலையில் என் இல்லத்திற்கு அருகாமையில் உள்ளது என்றியரசர் கல்லூரி. அந்தக் கல்லூரியை அடியிட்டவர்கள் புனித வளனார் சபைத் துறவிகள். சாதி மத இன வேறுபாடு இல்லாமல் தெய்வத்துக்கு சமனானவர்கள். தெய்வத்துக்கு பணி செய்ய உலக வாழ்வைத் துறந்து துறவறத்தில் சேர்ந்தவர்கள்.

அக்காலத்தில் பணம் கட்டக்கூடியவர்களே ஆங்கிலக் கல்வியைக் கற்று வந்தார்கள். ஆனால் இப்பாடசாலைக் கட்டிடத்திற்கு பனைகள் கொடுத்தவர்கள், கல், மணல் வண்டிகளில் ஏற்றிக் கொடுத்தவர்கள், எடுபிடி வேலை செய்தவர்கள், இவ்வாறு பல வழிகளிலும் பணிபுரிந்தவர் களின் பிள்ளைகளுக்கு இத்துறவிகள் இலவசக்கல்வி அளித்தனர்.



இங்கே இளமைப் பருவத்திலேயே ஒரு ஆசிரியர் கல்விப் பணிக்காக வந்து சேர்ந்தார். அவர் இங்கேயே பணிசெய்து ஓய்வுபெற்றார். ஆங்கில அறிவிலும் ஆங்கிலப் புலமை உள்ளவர் என்பதே பொருத்தமானதாகும்.

காலையிலும் மாலையிலும் கோவிலுக்குச் சென்று வழிபடுவார். மழையும் வெள்ளமும் போட்டி போட்டாலும் அவரைத் தடைசெய்ய இயலாது. பாடசாலைக்குச் செல்லாமல் விடுமுறை எடுத்துக்கொண்ட நாட்கள் அவருடைய நாற்பது வருட சேவையில் நான்கு ஐந்து நாட்களாக இருக்கும். உயர்தர யப்பான் கடிகாரங்களைப்போல ஓய்வு ஒழிவு இன்றிப் பணிபுரிவார்.

அவர் திருத்தாமல் விட்ட அப்பியாசக் கொப்பிகள் ஒன்றுகூட கண்டுபிடிக்க முடியாது. ஆசிரியர்களும் மாணவர்களும் தலைகுனிந்து மரியாதை செலுத்தக்கூடியதாக சிறந்து விளங்கினார்.

உண்மையில் ஒழுக்கத்திலும், அறிவிலும் , பண்பாட்டிலும், ஞானத்திலும் மக்கள் நெற்றியில் அவர் பெயர் ஒட்டியிருந்தது.

அவர் பெயர் ஏ. எஸ். ரி. ஜேம்ஸ் என்பதாகும். இளவாலையில் என்றியரசர் கல்லூரிப் பெயர் இருக்கும் வரை ஆசிரியர் யேம்ஸ் பெயரும் அங்கு உச்சரிக்கப்படும். நீதிமான்களின் மொழியை உரைப்போர் வானத்து நட்சத்திரமாகப் பிரகாசிப்போர் என்று கூறப்படுகின்றது. அவ்வாறான தாரகை யேம்ஸ் என்று சுட்டிக்காட்டலாம்.

## கவிப் பேரரசு வைரமுத்து

# 23



அவருடைய பெயர் வைரமுத்து.

கை எழுத்து வைரமாலை.

அவருடைய படைப்புகள் வைர மூக்குத்திகள், வைர மோதிரங்கள், வைர வளையல்கள், வைரத் தோடுகள், வைர அட்டியல்கள், வைரப் பதக்கங்கள்.

அவர் தேடிக்கொண்டது வைரம் தேவைப்பட்ட பொன்மணியை.

அவர் சொற்கள் வைரக்கற்கள். அவற்றில் தெரிவது வைர ஒளி.

அவரின் படையல்கள் அடங்கிய நூல்கள் வைரமாளிகைகள்.

வைரமுத்துவைத் தமிழ் உலகத்தில் அறியாத ஒருவர் இருப்பார் என்று நான் நினைக்கவில்லை.

கவிஞர் என்றும், கவி அரசர் என்றும், கவிப் பேரரசர் என்றும் புகழ்ந்து போற்றியிருக்கிறார்கள். இந்திய அரசு அவரைப் பலமுறை பாராட்டியதுடன் "பத்மஸ்ரீ" என்ற பட்டமும் அளித்துள்ளது.

பத்து ஆண்டுகளுக்கு முன்பு லண்டன் மாநகரத்துக்குக் கவியரசர் வந்திருந்தபோது, அவரை வரவேற்று வரவேற்புரை நிகழ்த்துமாறு வரவேற்பாளர்கள் என்னைக் கேட்டுக்கொண்டனர். வரவேற்புரையின்போது கவிஞரின் ஆச்சரியமான திறமைகளைக் குறிப்பிட்டு உரையாற்றினேன்.

மரத்திலும், மண்ணிலும், வீட்டிலும், விளக்கிலும், ஆங்கிலம் மணக்கும் பிரித்தானியாவில் ஒரு தமிழ்க் கவிஞன் முதல் முதலாக கால் வைத்திருப்பது வரலாற்று நிகழ்ச்சி என்று மகிழச்சியோடு தெரிவித்தேன் ஒரு வேண்டுகோள் விடுத்தேன். அது இதுதான்:

கவியரசே! இன்று பாரதி உயிரோடு இருந்தால் பாஞ்சாலி சபதம் என்ற காவியத்தை எழுதியிருக்கமாட்டார். இன்று கண்ணதாசன் உயிரோடு இருந்தால் அவர் இயேசு காவியத்தில் கைவைத்திருக்க மாட்டார்.

ஏனெனில் ஈழமக்களின் துன்பக் குமுறலும், துயரக் கண்ணீரும் அவர்கள் நெஞ்சில் நிறைந்திருக்கும். எனவே அப்பெரும் கவிஞர்கள் ஈழ நாட்டைப் பற்றியே ஒரு பெரும் காவியம் எழுதியிருப்பார்கள்.

ஆனால் அவர்கள் எழுதவில்லையே என்று நான் துயரப்படவில்லை. ஏனெனில் இக்காலத்தில் தமிழ்நாடும் ஈழமும் சேர்ந்து போற்றக்கூடிய ஆற்றல்வாய்ந்த கவிஞராக நீங்கள் இருக்கிறீர்கள். உங்களுடைய நூல்கள் இலக்கிய வளத்துக்கு எடுத்துக்காட்டானவை.

திரைப்படங்களில் உங்கள் பாடல்கள் தேன்தமிழில் திசைகளெல்லாம் பரவி வருகின்றன.

எனவே இங்கு இவ்வேளை சமூகம் தந்திருக்கும் பல நூற்றுக் கணக்கான தமிழ் மக்கள் சார்பாக நான் உங்களிடம் ஓர் வேண்டுகோள் விடுகிறேன். விரைவில் ஈழமக்களின் இக்கால நிலைபற்றி ஒரு காவியத்தைப் படைத்துத் தாருங்கள் என்று சொன்னேன்.

நான் இவ்வேண்டுகோளைக்கூறி வாய் மூடமுன்னர் அங்கு வந்திருந்த நூற்றுக்கணக்கான மக்கள் எழுந்து நின்று கைதட்டி எனது வேண்டு கோளை அங்கீகரித்தார்கள்.

இறுதியாகக் கவிஞர் வைரமுத்து எழுந்து நிச்சயமாக ஓர் காவியத்தை எழுதி முடிப்பேன் என்றார்.

கவிஞரவர்கள் இன்றுவரை தான் கூறிய வாக்குறுதியை நிறைவேற்ற வில்லை.

ஈழநாட்டின் துயரங்களையும் அரசியல் அவலங்களையும் நடைபெறும் மரணங்களையும் கவிஞர் கண்டு கேட்டு வந்தாலும் தமிழ் நாட்டு அரசியலின் இரண்டு இரும்புக் கரங்களும் கவிஞரின் எண்ணங்களை நசுக்கி வருகின்றனவோ என எண்ணத் தோன்றுகிறது.

கவிஞர் வைரமுத்து அவர்களின் பாடல் வரிகள் அவரது எளிமையான வாழ்க்கையையும் பண்பட்ட உள்ளத்தையும் அவர் தேடிய தேட்டங் களையும் சித்திரித்துக் காட்டுவனவாகும்.

புதுக் கவிதைகளில் அவரது பேனா பணிபுரிந்தாலும், மரபுக் கவிதை, திரைப்பாடல், உரை நடை, பேச்சு, நாடகம் என்பவற்றிலும் கவிஞருடைய தனித்தன்மை புலப்படுகிறது.

சிறந்த தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை உலக அந்தங் களும் அறியும்படியாகச் செய்த பெருமை கவிஞர் அவர்களுக்கே உரியது.

இவற்றின் ஆதிமூலம் கவிஞர் கண்ணதாசனாக இருந்தாலும் கவிஞர் வைரமுத்துவும் இத்துறையில் போற்றப்பட வேண்டியவர்கள்.

உயர்ந்த இலக்கியப் பயிற்சியும் தெளிந்த மனித நேயமும் கற்பனையும் படைப் பாற்றலும் கிராம வாழ்க்கையும் சிறுமைகண்டு சீறும் இயல்பும் இவருக்கு இயற்கையாக அமைந்தவை.

சின்னச் சொற்களில் உயர்ந்த கருத்துக்கள், தமிழ் உள்ளங்களில் விதைக்கப்பட்டுள்ளன.

தொட்டுப் படிக்காத தொடர்கதையே ஏனம்மா, விட்டு விலகி வெகுதூரம் ாய்விட்டாய்?" - இரண்டு வரிகளில் எந்தச் சொல்லாவது விளங்காமல்

உள்ளதா? இவற்றில் மோனை உண்டு, எதுகை உண்டு, சுவை உண்டு, கருத்து உண்டு. எனவே இவ்வாறான கவிதைகள் எல்லோராலும் நினைவு கூரப்படுவதுடன் மனனம் செய்யப்பட்டு வீடுகளில் பாடப்படுவதுமுண்டு.

"சின்னச்சின்ன ஆசை சிறகடிக்கும் ஆசை" என்றும், "அந்தி மழை பொழிகிறது அதில் ஒவ்வொரு துளியிலும் உன்மனம் தெரிகிறது" என்றும், "தென்றல் என்னை முத்தமிட்டது" என்றும், "சம்சாரம் அது ஒரு மின்சாரம்", "எந்த நெஞ்சில் ஈரமில்லை" போன்ற பாடல்களும் வரட்சியான நெஞ்சில் ஈரத்தைப் பாய்ச்சிவிட்டன.

அவருடைய படைப்புகள் பிரபஞ்சத்தின் அனைத்துக் கருத்துக்களையும் உள்ளடக்கியதாயிருக்கும். ஆனபடியால் அவை எந்த உள்ளத்திலும் சஞ்சாரம் செய்யக்கூடியதாய் உள்ளன. தமிழ் இலக்கியத்தையும் நன்கு பயின்று பல்கலைக்கழகத்தில் உயர்ந்த பட்டங்களைப் பெற்றவர்.

செய்யுள் இயல், இலக்கணம் சிறப்பாகப் பயின்றவர். எனவே யாப்பு அணி இலக்கணங்களின் வரிசைகளை நன்கறிந்த ஒருவர் புதுக்கவிதை எழுதுவது காலத்தின் தேவையைக் கருதியே. வைரமுத்துவின் புதுக் கவிதைகளில் கற்பனையும் இயற்கையழகும் அறிவுறுத்தல்களும் பின்னிப் பிணைந்து கிடக்கும். மரத்தைப் பற்றி அவர் எழுதிய கவிதை மரங்களுக்கு வாய் இருந்தால் சொல்லி ஆராதிக்கக் கூடியவை. கவிஞருடைய நூல்களும் திரைப் பாடல்களைப்போல தமிழுலகில் தென்றலாய் உலாவுகின்றன.


என்னுடைய நூல்களுக்கு அவர் எழுதியுள்ள அணிந்துரைகள் அவருடைய தமிழ்ப்பற்றையும் அறிவின் ஆழத்தையும் காட்டுவனவாகும். "தமிழுக்கு அமுதென்று பேர்" என்று பாரதிதாசன் எழுதிய பாடல் வரியைக் குறிப்பிட்டு என்னைப் புகழ்ந்திருப்பது அவருடைய புலமையை மாத்திரமன்றி மற்றோரை மதிக்கும் மாண்பையும் புலப்படுத்துகிறது.

'வைரமுத்துவின் வசனநடை என்னைத் தத்தெடுத்தது' என்று எங்கேயோ எழுதியிருக்கிறேன். சின்ன வசனங்களில் பொன்னான கருத்துக்களை எழுதுவார்.

எஸ். கே. ராஜன்

24

# "ஒலிபரப்புத் துறையில் ஒப்பற்ற தீபம்"



வானொலி தொலைக்காட்சி என்பவற்றில் சேவைபுரியும் பல நண்பர்களை அறிந்து கொள்ளும் வாய்ப்பு எனக்கு உண்டு.

அப்படி நான் சந்தித்ததில் ஒரு வித்தியாசமான நண்பர் திரு. எஸ்.கே.ராஜன்.

அவருடைய வளர்ச்சியைத் தூரத்திலிருந்து கேட்டது மாத்திரமின்றி அருகில் நின்றும் கவனித்திருக்கிறேன்.

ஒலிபரப்பில் அவருக்கு கிடைத்திருக்கும் வாய்ப்பு,

வாழ்க்கை பற்றிய மதிப்பை பலவேறு கோணங்களில் காட்டியிருக்கிறது என்று கூறலாம். தனது சிக்கல்கள் நிறைந்த அனுபவங்களை மற்றவர் களோடு பகிர்ந்து கொள்ளும் முயற்சிதான் இது.

எந்தக் கதாபாத்திரங்களிலும் நடிக்கக்கூடிய திறமைபெற்ற ராஜன் ஓர் நடிகர் போலவே ஊடகத் துறையிலும் பணியாற்றி வருகிறார்.

இயற்கை அவருக்கு அளித்த வரங்கள் மூன்று. இனிமையான குரல், வசீகரமான முகம், செந்தளிப்பான சிரிப்பு, தமிழ் உச்சரிப்புகளில் அவர் அப்துல் கமீது என்பவரின் கொப்பி. அப்துல்கமீது மீது தீராக் காதல் கொண்டவர் ராஜன் என்றால் அவர் கோபித்துக் கொள்ளமாட்டார்.

பலநூறு பேட்டியாளர்களை அரிதட்டில் போட்டு ஒரு சிலரையே தெரிந் தெடுப்பார். பேட்டி காணும்போது கேட்கும் கேள்விகள் அந்தத் துறையில் இவருக்கு இருக்கும் ஆழ்ந்த புலமையை உரைத்துக் கொண்டே இருக்கும்.

குறுக்குக் கேள்வி சிலவற்றில் ராஜன் அவர்கள் மறைந்த மேதை ஜீ. ஜீ. பொன்னம்பலத்தையே நினைவூட்டுவார்.

புதிது புதிதாக ஒவ்வொரு தினமும் சிந்திக்கவும் செயல்படவும் வைக்கும் ஒரேதுறை ஊடகத்துறைதான்.

அது எழுத்தாய், பேச்சாய், நடிப்பாய் இருக்கலாம். நம் மனதில் உருவாகும் எண்ணங்களை மற்றவர்களும் அறியச் செய்து கண்ணெதிரே அதை நாடமாட விடும்பொழுது அது பலர் மனதில் தாக்கத்தை ஏற்படுத்துவதால் கிடைக்கும் திருப்திக்கு இணையில்லை.

பொதுவாக பணம், புகழ், விளம்பரத்திற்காக ஒலிபரப்பை நாடும் இக்காலத்தில் ஒரு இலட்சியத்துக்காக இத்துறையில் ஈடுபடுவது ஆச்சரியமானது. இதையே எஸ்.கே.ராஜன் செய்கின்றார். நம்மைச் சுற்றியுள்ளவர்களுடைய வாழ்க்கை நாங்கள் நினைப்பதைவிட மிகவும் ஆழமானது. அவர்களோடு பழகும்போது அவர்களுடைய வாழ்க்கை முறைகளையும் உணர்வுகளையும் அறிந்து அதில் நீந்துகின்றோம்.

சிலருடைய வாழ்க்கையை கூர்மையாய் அவதானிக்கும்பொழுது கற்பனைக் கதைகளில்கூட இல்லாத தனிச்சிறப்புகளை எம் காதுகளில் கேட்கிறோம்.போர்க்காலத்தில் எமது நாட்டில் ஒவ்வொரு குடும்பத்திலும்

நடந்த தாக்கங்கள் அதன் விளைவுகள் அதனால் ஏற்பட்ட அவலங்கள் பிறநாட்டுப் பயணங்கள் அவற்றின் முடிவுகள் இதனால் அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட திசைதிருப்பங்கள் இவையெல்லாம் ராஜனின் சிந்தனையில் கூடுகட்டியிருக்கின்றன.

எனவே தமிழ்ச் சமுதாய விழிப்புக்காக அதன் ஆரோக்கியத்திற்காக கலைத்துறையில் அது சிறகுகளை விரிப்பதற்காக ராஜன் அவர்கள் பணியாற்றுகிறார் என்று சொல்லலாம்.

மூத்தோரை வாழ்த்துவதும் அவர்கள் உரைகளைப் பொன்போல பேணு வதும் ராஜனுடைய இயல்பான குணங்களாகும். இது தமிழ் பாரம் பரியத்தின் வேர்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவது போலாகும்.

## ஓரங்கட்டப்பட்ட கவிஞர்கள்

அதியற்புதமான கவியாற்றல் பெற்ற சிலர் தமிழ் இலக்கிய உலகில் போதிய அறிமுகத்தைப் பெற முடிவதில்லை. குண்டு சட்டியில் குதிரை ஓட்டிக் கொண்டிருக்கும் இலக்கிய ஆய்வாளர்களின் பார்வையில் உன்னதமான கவிஞர்களின் படைப்புகள் படுவதில்லை. அரசியல் செல்வாக்குப் பெறுகிறவர்களும் நிறம் மாற்றிக் கொள்ளத் தெரிந்தவர்களும் முன்னுக்கு வந்துவிடுகிறார்கள்.

இப்படியான தந்திரம் கைவராத தலைசிறந்த கவிதா புருடர்களும் அவர்தம் படைப்புகளும் வெளிச்சத்துக்கு வராமலே போய்விடுகிறது.

**இருபதாம் நூற்றாண்டின் கவிஞர்கள்**
யோகி பக்கம் ~ 50

மாலி

25

# மௌனத்தின் மனச்சாட்சி

நட்புத் தளும்பும் மிருதுவான குரலில் அளவாகப் பேசும் இயல்பு. எந்நேரமும் புன்னகை மிதக்கும் உதடுகள். அன்பு உறைந்து கிடக்கும் இதயம். இவைதான் மாலியின் கோலங்கள்.

அழகான தமிழில் உரையாடும் மாலியின் சொந்தப் பெயர் மகாலிங்கம். சில சமயம் உலகத்தின் அமைதியெல்லாம் முகத்தில் அடக்கிக் கொண்டு சாந்தமயமான மகாத்மாவாகத் தோன்றுவார்.

சொற்களின் பெறுமதி எல்லோருக்கும் தெரிவதில்லை. சொற்களை வாரி இறைத்துப் புகழ்வதும் இக்காலத்து மலிவுப் பதிப்பாகிவிட்டது. சில வரவேற்புரைகளைக் கேட்டால் எரிச்சலும் குமட்டலும் உண்டாகிறது.

சிலரின் புகழ் உரைகள் வானத்தைத் தொட்டு கொண்டிருக்கிறது. ஆனால் அவரது வாழ்க்கையோ மனிதனை ஒரு இஞ்சிதனும் உயர்த்தி விடவில்லை. மௌனத்தில் பழகினால் தான் நம்மை நாமே அறிந்து கொள்ளமுடியும். எதிர்ப்படுகிறவர்களோடு நாமே நம்மைப் புகழ்ந்தும் துரும்பைத் தூணாக்கி நாம் செய்த சில காரியங்களை வியந்தும் உரைக்கும்போது நம்மை நாமே தொலைத்துவிடுகிறோம்.

இவ்வாறு தொலைத்த நம்மை நாமே கண்டுபிடிப்பதற்கு மௌன விரதம் பெரிதும் உதவுகிறது. "மௌனம் என்பது ஞான வரம்பு" அவ்வை சொன்னது உண்மையான சித்தாந்தம்.

"மௌனமாய் இரு அப்போதுதான் உன் மனச்சாட்சியின் மெல்லிய குரல் உனக்குக் கேட்கும்" என்றார் காந்தி அடிகள். கோவில்களும் மடாலயங்களும் மோனதவம் புரியும் ஞானத்தலங்கள் என்று சுகிசிவம் சொல்லியிருக்கிறார்.

கத்தோலிக்க துறவுப் பெண்கள் வாழும் மடங்கள் மௌனத்தின் வாசல் தலங்கள். அங்கே ஒரு குருவி கீச்சிடும் சத்தங்கூட ஒலிபெருக்கியில் கேட்பது போலக் கேட்கும்.

மௌனத்தில் விளைந்து முற்றிய ஒரு எழுத்தாளரையும் பேனா மன்னரையும் இந்த நாட்டில் சுட்டிக்காட்ட வேண்டுமானால் அவர் மாலியாகத்தான் இருப்பார். தன்னைப் பற்றி எந்தச் சந்தர்ப்பத்திலாவது அவர் பந்தல் போட்டதில்லை.



26

# "மறக்கமுடியாத வேர்களும் விழுதுகளும்"



வாழ்க்கையின் அந்திய காலத்தில் சொந்த நிலபுலங் களையும் வீடுவாசல்களையும், கோவில், கல்விச்சாலைகளை யும், சுற்றம் சூழல்களையும் பிரிந்து பல ஆயிரம் மைல்கள் கடந்து வந்தோம்.

அந்நிய நிலத்தில் ஆயிரம் வசதிகள் வாய்த்தாலும் சொந்த மண்ணின் சுகத்தைக் காணலாமா?

பனியோடும் குளிரோடும் வாக னங்களின் நச்சு மூச்சுப் புகை யோடும் நாட்கள் கழிய

வேண்டும். பாம்புப் புற்றில் கைவைப்பதுபோல் குளிர்ப்பெட்டி உணவோடு காலம் தள்ளவேண்டும்.

சில காலங்களில் வீடே மறியற் சாலையாகி வெளியே போகமுடியாமல் இருக்கும். எரிவாய்வு அடுப்புகளோடும் தொலைக்காட்சிப் பெட்டியோடும் இந்த நாட்களில் சீவியம் நகர்ந்து வருகிறது.

கடந்த இருபது ஆண்டுகளாக எனக்கும் என் பாரியாருக்கும் இந்த வாழ்க்கையே நான்கு சுவராயிற்று. என் கண்மணியே! நாட்டுக் கவலை யாலும் வீட்டு நினைப்பாலும் உமது உடலம் நோய்வாய்ப்பட்டது.

2-06-2003ல் படைத்தவன் பாதங்களைத் தொட்டுக் கொண்டீர்.

நீர் ஏலவே கேட்டுக் கொண்டவாறு உமது உடலம் அழகிய பேழையில் வைக்கப் பெற்று இளவாலைக்குக் கொண்டு சென்று அங்கே உமது அன்பான தந்தையார் செல்லையா மார்சலீன் அவர்களின் பக்கத்தில் அடக்கம் செய்யப்பட்டது.

அன்று ஆனி 5ஆம் நாள். அன்பரங்கம் என்ற வீட்டில் ஒரே சனக் கூட்டம். நீர் படுத்திருந்த பேழை உள்ளூர் வெளியூர் மலர் வளையங் களாலும் அழகுசாதனப் பொருட்களாலும் அலங்கரிக்கப் பெற்று இருந்தது. கன்னியர்களும், குருமார்களும், அடுத்த கிராம மக்களும் சொந்தச் சுற்றமும் முற்றத்தில் குழுமியிருந்தனர்.

பல்கலைக்கழகத்துப் பேராசிரியர் அ.சண்முகதாஸ் அவர்களும், யாழ் பாராளுமன்ற அங்கத்தவர் ம. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் வேறு சிலரும் இரங்கலுரை ஆற்றினர்.

வீதிகளெல்லாம் வாழைக்குலைகளாலும் தோரணங்களாலும் அல்ங்கரிக் கப்பட்டன. அன்னம்மாள் ஆலயத்தில் உமது அருமை மகனார் சந்திரகாந்தன் அடிகளார் திருப்பலி நிறைவேற்றினார்.

இறுதி ஆசியுரையை யாழ் ஆயர் சௌந்தரநாயகம் அவர்கள் அளித்தார்.

அங்கு உரையாற்றிய என்றியரசர் கல்லூரி அதிபர் யஸ்ரின் அடிகளார் உமது வாழ்வின் சிறப்பான செய்திகள் சில கூறி ஆறுதல் அளித்தார்.

இறுதிச் சடங்கு முடிந்து செப ஆராதனையுடன் உமது உடலம் புனிதமாக அடக்கம் செய்யப்பட்டது.

மறுநாள் நீர் 30 ஆண்டு வாழ்ந்து வந்த அன்பரங்கம் என்ற வீடு வெறிசோடிக் கிடந்தது.

நினைவுகள் திரைபோல் விரிய வறுத்தெடுக்கும் தனிமையோடு நின்று நிலத்தைப் பார்த்தேன்.

அது ஒரு அனாதையின் தனிமை. எந்தப்பக்கம் பார்த்தாலும் உமது கைவிரல்களின் வல்லமை தெரிந்தது.

மழைநின்ற பின்னும் கொட்டும் நீர்த் துளிகளாய் என் கண்ணீரிலிருந்து துளிதுளியாய் கண்ணீர் உதிர்ந்தது.

20 ஆண்டுகள் நீரப்பாய்ச்சிய தென்னைகள் உயர்ந்து நின்று தேங்காய்க் குலைகளைச் சுமந்தபடி ஆடாமல் அசையாமல் தங்கள் சோகத்தைத் தெரிவித்தன.

அதோ அந்த எலுமிச்சைகள் பிஞ்சும், காயும், பழமுமாய் விரிந்து நின்று உம்மை நினைந்து கொண்டன.

முற்றத்து மாமரம் கடுக்கன்கள் நூறு பூட்டியபடி ஆடாமல் அசையாமல் உற்றுப் பார்க்கிறது.

மெல்லிய நாவல் நிறத்தில் ஆயிரமாயிரம் பழங்கள் தரும் ஜம்பு மரம் கண்ணீர் விடுகிறது.

பலாமரம், ஒட்டுமாமரம், நெல்லிமரம், விளாமரம் என்பவற்றிலும் சோகத்தின் சாயல் படர்ந்திருக்கிறது.

உமது பிரிய குமாரனுக்கு உண்டாக்கிய தூதுவளை இருந்த இடமும் தெரியவில்லை. குறிஞ்சா முசுட்டையையும் காணவில்லை. வாசலில் நின்ற முல்லைச் செடியும் சொல்லாமல் போய் விட்டது.

குறோட்டன்களும் நந்தியாவட்டையும் உமது பெயரை மௌனமாக உச்சரிக்கின்றன.

திருந்தாதிக்குப் படுக்கையைவிட்டு எழுந்து பிள்ளைகளைப் பலிப் பூசைக்கு அனுப்பிவிட்டு காலை உணவு தயாரித்து நீர் இறைக்கும் இயந்திரம் மூலம் வளவிலுள்ள மரவள்ளி வாழைகளுக்கு நீர்பாய்ச்சி குறித்த நேரத்தில் பாடசாலைக்குச் சென்று ஆசிரிய பணி முடிந்து வீட்டுக்கு வரும் வாழ்வு **ஒரு தேனீயின் வாழ்வல்லவா?**

ஆசிரிய சங்கங்கள், சமூக சேவை சங்கங்கள், கூட்டுறவுச் சங்கங்கள், பண்டத்தரிப்பில் பண்டித வகுப்பு, மல்லாகத்தில் ஆசிரிய சங்க சேவை, மாதகலில் ஆசிரியப் பணி இவ்வாறு உமது தலைவன் வெள்ளை வேட்டியோடு துவிச்சக்கர வண்டியில் ஊர் சுற்றிவர **பிள்ளைகளையும் வீட்டையும் கவனித்துவந்த பெருமைக்குரிய பெண்ணல்லவா!**

ஐப்பசி, கார்த்திகை அடைமழை காலத்தில் ஊதல் காற்றுக்குப் பயந்து பாயோடு தலையணைபோல கிடந்த மக்களைத் தொட்டுப் பார்த்துத் தலையிடி தடிமல் இருந்தால் **தலைமாட்டில் சுக்குக் காப்பியுடன் காணப் பட்ட வைத்தியத் தாயல்லவா!**

எனது தாயார் எனக்கு இருபத்தைந்து வயதுவரை கஞ்சி ஊற்றி விட்டுச்செல்ல, அதன் பின்பு **50 ஆண்டுகளுக்கு மேலாக அறுசுவை அளித்த இரண்டாம் தாயல்லவா?**

மக்களுக்கு துன்பம் வந்தபோது பக்கத்தில் விழிப்போடு இருந்து அருமையாக மக்களை கவனித்து வந்தமை தாய்ப் பாசம் அல்லவா?

பெற்றவர்கள் மறைந்துவிட, உடன் பிறந்தவர்கள் பறந்தும் இறந்தும் ஒதுங்கிப் போக, நன்மை தீமைகளுக்கு மட்டும் பங்குபற்றிவிட்டு

சுற்றத்தார் வீடுவிட்டு விலகிப் போக, துருப்பிடித்ததென்று தொப்புள் கொடியை அறுத்து இரத்த உறவுகள் விலகிச் செல்ல, உடம்பிலுள்ள உறுப்புகள் ஒவ்வொன்றும் என்னைக் கேட்க வேண்டாம் என்று அதன் அதன் சேவைகளை மட்டம் தட்ட, **சாய்வதற்கு மனைவியின் மடியாவது இல்லையென்று கவலை பெருகும்போது நினைக்கும் தெய்வ தூதர் அல்லவா?**

எங்கள் வீட்டு வீதியோரமாய் அம்மாக்கிழவி வீடு. அந்தக் கல்வீடு இளவாலையின் முதல் வீடாக இருந்து இடிந்து தகர்ந்து இப்பொழுது அத்திவாரம் இல்லாமல் மறைந்துவிட்டது.

அங்கே கிழக்குப் பக்கமாக புளியமரம் நிற்கிறது. "அந்த ஊர் பிறக்குமுன் அந்த மரம் பிறந்ததா? அல்லது மரம் பிறந்தபின் ஊர் பிறந்ததா?" என்பது எவரும் அறியாத கதை. அந்த வளவில் இளவாலை வாசிகசாலை தலை உயர்த்தி நிற்கிறது.

அன்னம்மாள் கோவில் சங்கலித்தமாக கோவில் அம்மா என்ற பெயரோடு வாழ்ந்துவந்த மூதாட்டி எனது மாமியாருக்கு மாமியார் முறையானவர். பத்திரிசியார் கல்லூரியில் ஒரு சிலகாலம் அதிபராகவும் பின்னர் உயர்தர வகுப்பின் பேராசிரியராகவும் வாழ்ந்த செபஸ்ரியன் அடிகளார் பிறந்து தவழ்ந்து வளர்ந்த இடம் இதுவே. செபஸ்ரியன் அடிகளாரிலும், கோவில் அம்மா என்று கூறப்படும் மரியப்பிள்ளை அவர்களிலும் அன்பும் பாசமும் நிறைந்து வாழ்ந்தவர் திரேசம்மா.

நான் இதற்கு முன்னும் திருமணம் செய்திருக்கிறேன் என்று திருமணம் செய்த அடுத்தநாள் மனைவி திரேசம்மாவிடம் சொன்னேன்.

அப்பொழுது மனைவிக்கு அருகில் அவருடைய இளையதங்கையும் இருந்தார். இருவரும் ஏங்கிப் போனார்கள். "இளைய சகோதரி அவளுக்கு என்ன நடந்தது?" என ஆத்திரத்தோடு கேட்டார். "ஒன்றும் நடக்கவில்லை இன்றும் மிகவும் நல்லாய்த்தான் இருக்கின்றா" என்றேன். எனது மனைவி மூச்சுவிட நேரமெடுத்தது. ஆச்சரியத்தால் கண்கள் அகல விரிந்தன.

மேலும் அவர்களை வேதனையில் மூழ்கவிடாமல் எனது முதல் மனைவி தமிழ் இலக்கியம் தான் என்றேன். இருவரும் நிம்மதியோடு மூச்சுவிட்டனர்.

இசையரசும் குயில் போன்ற பாடகருமான யேசுதாஸ் என்பவர் திருமண மாகும் முன்பே பிரபா என்ற காதலியுடன் பேசியிருக்கிறார்.

கலியாணத்திற்கு முன்பே இசைதான் தனது முதல் மனைவி என்று சொல்லியிருக்கிறார். அந்த முதல் மனைவியை அவரைவிட நான் அதிகமாக நேசிக்கிறேன் என்று பிரபா கூறியிருக்கிறார். இசையரசன் யேசுதாசன் அவர்களின் தாலிக்கொடியைப் பற்றி சொல்லியிருப்பதை நேயர்களின் கவனத்திற்கு கொண்டுவர விரும்புகிறேன்.

எங்கள் குடும்ப சம்பிரதாயப்படி மங்களகோடி என்ற பட்டுப் புடவை யிலிருந்து ஏழுநூல் எடுத்துக் கொடுப்பார் மணமகன். அதை மெல்லிய கயிறாகத் திரித்து அதிலேதான் தாலியைக் கோர்ப்பார்கள். கணவன் மனைவிக்கிடையில் இருக்கும் நமபிக்கையும் மெல்லியதுதான். அது அறுந்து போக நேரமாகாது. அது அறுந்து போகாமல் பார்த்துக்கொள்வது தான் சுகமான தாம்பத்தியம். "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்பது முன்னோர்களின் வைர வரிகள்.



தந்தை செல்வா

# 27



ஈழத்துக் காந்தி என்றும், பெரியார் என்றும், மூதறிஞர் என்றும், நம்பிக்கை நட்சத்திரம் என்றும் மக்களால் போற்றப் பெற்றவர் தந்தை செல்வா அவர்கள்.

அவருடைய சொந்தப் பெயர் சாமுவேல் யேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகம் என்பதாகும். இதனை எஸ். ஜே. வி. என சுருங்கக் கூறுவார். இலங்கை அரசியலில் நேர்மையும் கண் ணியமும் மிக்கவராக சிங்களத் தலைவர்களாலும் மதிக்கப் பெற்றவர் தந்தை செல்வா.

இலங்கையின் விடுதலைக்காக சிறந்த பங்காற்றி சிங்களத் தலைவரோடு இணைந்து தோள் கொடுத்த சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம் என்போர் இறுதிக் காலத்தில் சிங்களத் தலைவர்கள் எங்கள் காலை வாரிவிட்டதாக அறிந்து தங்கள் ஏமாற்றத்தைத் தெரிவித்தனர். பிரித்தானிய ஆதிக்கத்திலிருந்து பிரியும்போது தமிழீழத்தைத் தீர்க்க தரிசனத்தோடு கேட்டிருந்தால் இன்று வரையும் தமிழ் மக்கள் இடர்பட வேண்டியதில்லை.

கத்தியின்றி இரத்தமின்றி யுத்தம் ஒன்று வருகுது என்று இந்திய சுதந்திர போருக்கு நாமக்கல் கவிஞர் கட்டியம் கூறினார்.

ஈழத்தமிழர் உரிமைகளை காக்கத் தந்தை செல்வாவும் காந்திய வழியைப் பின்பற்றி சத்திய நெறியிலிருந்து போராட என்று எண்ணினார். ஆனால் முரடர்கள் எனத் தென்னாட்டு கல்வெட்டுகளில் பொறிக்கப்பட்ட சிங்கள வரோடு தூய்மையான சத்திய நெறிகளோடு நின்று அரசியலில் தாக்குப் பிடிக்கமுடியுமா? அதனால் போராட்டப் பாதையில் நீண்ட பயணம் செய்ய வேண்டியதாயிற்று. தந்தை செல்வா அவர்கள் வேதாகமத்தில் மோசேஸ் என்ற மாமுனிவர் வாக்குப் பண்ணப்பட்ட நிலத்தை மக்களுக்குக் காட்டியவாறு தமிழ் மண்ணை எங்களுக்கு அதன் எல்லைகளைக் காட்டினார். அந்த மண்ணை அடைய முடிவதற்கு அவரால் முடியவில்லை. அவரை உண்மையாகப் பின்பற்றுவோர் அவரின் கனவை நிறைவு செய்ய வேண்டி இருக்கிறது என்று ஆயர் அம்பலவாணர் தந்தை செல்வாவின் பிரிவுதின உரையின்போது குறிப்பிட்டார். 1949ஆம் ஆண்டு தமிழரசுக் கட்சி அமைத்த தந்தை செல்வா 1977ஆம் ஆண்டு இறக்கும் வரைக்கும் தமிழ் மக்களுக்குக் குரல் கொடுத்து வந்தார்.

30 ஆண்டுகளாக அரசையும் அரச படைகளையும் அவற்றின் அடக்கு முறைகளையும் எதிர்த்து வந்ததுடன் தமிழ் இனத்தின் தலைவனாகவும் விளங்கி வந்தார்.

அரசு அளித்த மந்திரி பதவியைக்கூட தந்தை செல்வா ஒதுக்கி வைத்தார்.

தமிழ் மக்களுடைய பிரச்சனைகளுக்கு ஒற்றை ஆட்சி அரசு என்ற அமைப்பின் மூலம் பரிகாரம் தேட முடியாது என்றும் சமஷ்டி ஆட்சி முறையே தீர்வு காண்பதற்கு இலகுவானது என்றும் நம்பி இருந்தார்.

இதற்காக 30 வருட காலம் கடுமையாக உழைத்தார். இந்த நாட்டை ஆண்ட சிங்கள தலைவர்கள் தமிழர் தலைவனாக ஏற்றுக் கொண்டனர். அதன் காரணமாகவே பண்டா - செல்வா ஒப்பந்தமும் டட்லி சேனநாயக்கா ஒப்பந்தமும் உடன்பாடாயின. ஆனால் ஒன்றையும் செயல்படுத்த முடியவில்லை. தொடக்கத்தில் தந்தை செல்வா இலங்கை இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டுமென்றோ அல்லது தனிநாடு உண்டாக்க வேண்டுமென்றோ விரும்பியதில்லை. ஆனால் இந்த நாட்டு ஆட்சியாளர்கள் தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை அலட்சியம் செய்தனர். செல்வா கேட்ட சமஷ்டி ஆட்சியையும் கொடுக்க அவர்கள் ஆயத்தமில்லை. இதனால் தனிநாடு கேட்டு மறுபக்கம் திரும்ப வேண்டியதாயிற்று.

"'எமது மூதாதையர் அனுபவசாலிகள். அவர்கள் தமக்கென ஒரு அரசாங்கத்தை அமைத்து இருந்தனர். இலங்கை தீவின் வரலாற்றில் தமிழனுக்கு ஒரு சரித்திரம் உண்டு. இந்த நாட்டை பிளவுபடுத்த வேண்டுமென நாம் கேட்கவில்லை. ஆனால் தமிழ் மக்கள் எதை இழந்தார்களோ அதையே திரும்பவும் பெற முடிவு எடுத்துள்ளோம். இன்று எமது கட்சி தமிழர்களுக்கென தனிநாடு அமைக்கும் தீர்வு ஒன்றை எடுத்துள்ளது. தனிநாடு அமைப்பது சுலபமான விஷயம் அல்ல. அது ஒரு கடினமான விடயம் என்பது எமக்குத் தெரியும். ஆனால் சிங்கள அடக்கு முறையிலிருந்து நாம் விடுபட வேண்டும். இல்லையேல் எமது இனமும் அழிந்துவிடுவது உறுதி. எனவே தனித்தமிழ் அரசினை அடைவதற்காக நாம் முயற்சிப்போம்." இவையெல்லாம் செல்வாவின் வாக்குகள் ஆகும்.

1947ஆம் ஆண்டு அரசியலில் நுழைந்த செல்வா தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி ஏனைய இனத்தவரின் மத்தியிலும் மதிப்பும் நல் நம்பிக்கையும் பெற்றவர்.

இவரது அரசியல் ஞானமும், தெளிவும், சிந்தனையான பேச்சும் பல தமிழ் இளைஞர்களைக் கவர்ந்து இழுத்தன. தனது அரசியல் வாழ்க்கையில் கிட்டத்தட்ட 25 ஆண்டுகள் தமிழர்களை ஸ்ரீலங்காவில் ஒரு சுதந்திரமான இனமாக அங்கீகரிக்கப்பட்ட சம உரிமையுடன் வாழும் சூழ்நிலைக்காகக் கடுமையாக உழைத்தார்.

நேர்மையான இக்கொள்கையுடன் சிங்கள மக்களின் மனதை மாற்றி விடலாம் என எண்ணினார்.

தொடர்ந்து அதிகார வரிசையில் ஏறிய சிங்கள அரசாங்கங்கள் ஏமாற்று நடவடிக்கையினால் இந்த நம்பிக்கை சிதறடிக்கப்பட்டது. இந்த நிலைமையில் உயர் தீர்க்கமானதும் இறுதியானதுமான ஒரு முடிவை தந்தை செல்வா முன் வைத்தார்.

தமிழ் இனம் சுதந்திரமாகவும் சுய கௌரவத்துடனும் வாழ வேண்டு மென்றால் ஒரு தமிழ் நாடு - தமிழ் ஈழம் அமைக்க வேண்டுமென்றதே அதன் முடிவாகும்.

பல பொது மேடைகளில் தமிழ் ஈழத்திற்காக தமிழ் மக்கள் உயிர்த் தியாகம் செய்ய வேண்டுமென்று அவர் கூறினார்.

உடல் நலிவுற்ற வயோதிப காலத்தில் அவர் ஏறிய அரசியல் மேடைகளில் மெதுவாகவும், சலனமின்றியும் பேசுவதும் அவருடைய வழக்கமாயிற்று. ஆனால் அவருடைய கருத்துகள் உறுதியாகவும் ஆணித்தரமாகவும் தமிழ் மக்களைச் சென்றடைந்தன.

தமிழ் இனம் தொடர்ந்து இலங்கைத் தீவில் வாழ வேண்டுமென்றால் அவர்களது தாயகம் பேணப்பட வேண்டும் என்பதில் அவர் அசையாத நம்பிக்கை கொண்டிருந்தார்.

மறுக்கமுடியாத இக்கோட்பாட்டில் தந்தை செல்வா கொண்டிருந்த நம்பிக்கை இன்று தாயகம், தேசியம், தன்னாட்சி என்று முன்னுரிமை பெற்று விளங்குகிறது.

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்ட செல்வா விஞ்ஞான பட்டதாரி யாகி குடியுரிமை வழக்கறிஞராகி கடமையாற்றினார். தமிழ் உணர்ச்சி என்ற நெருப்பை 30 ஆண்டு காலம் கையில் ஏந்தி அந்த பந்தத்தில் மற்றவர்களும் தொட்டுக்கொள்ள வழிசெய்தார்.


தந்தை செல்வா தமிழரசுக் கட்சியை தொடங்கியதிலிருந்து அவர் கொள்கைத் திட்டங்களில் ஊறி அடியேனும் நனைந்தேன். அவர் பிரிவின் போது 1977ல் இளவாலையில் நடந்த இரங்கல் கூட்டத்திற்கு பல நூற்றுக் கணக்கான மக்கள் சொரிந்தனர். அதற்கு இவனே தலைமை தாங்கினான். அங்கே தளபதி அமிர்தலிங்கம், திருமதி மங்கையர்க்கரசி, மல்லாகம் வழக்கறிஞர் நடராசா, மாவை சேனாதிராசா என்போர் உரையாற்றினார்கள். மழை கடைசி நேரத்தில் கூட்டம் நடைபெறாமல் தடுத்துவிட்டது. அங்கே கூட்டத்திற்கு வந்து உரையாற்றியோர் எனது இல்லத்தில் தங்கி மறுநாள் காலை செல்ல வேண்டியதாயிற்று. கரும்பு போன்ற சொற்கள், துரும்பு போன்ற உடலம், இரும்பு போன்ற கொள்கை என்று பேசி கூட்டத்தை நான் ஆரம்பித்தது என் நெஞ்சில் பதிந்திருக்கிறது. தந்தை செல்வாவை தீர்க்கதரிசி என்று அழைத்தார்கள். ஏனெனில் வருங்காலத்தைப் பற்றி அவர் நன்கு அறிந்திருந்தார்.



## ஆயர்மணி தியோகுப்பிள்ளை

# 28

**நெஞ்சுக்கு நீதி சொன்ன நேசத் துறவி**
**கொஞ்சும் குரலும்**
**பஞ்சின் மொழியும்**
**அஞ்சா நெஞ்சம்**
**கொண்ட ஆயர்**



ஊர் புகழுமாறு நீதியின் செங்கோல் பிடித்து எல்லா மக்களுக்கும் பணிசெய்த ஆயர் மணியை ஒரு தெய்வம் என்று கூறினால் பொருந்தும்.

வாடிய பயிர்களுக்கு ஞான மழை பெய்ய கோடியில் ஒருவர் தோன்றி தர்மத்தின் பாதையில் மக்களை வழி நடத்திச் செல்வதைக் காண் கிறோம். அவ்வாறு தோன்றிய சுந்தரச் சுடர்தான் ஆயர் தியோகுப்பிள்ளை. தனது துறவற வாழ்க்கை என்ற

வெள்ளை அணியில் ஒரு மைத்துளி அளவு களங்கமில்லாமல் வாழ்ந்த தூய்மையான துறவி.

எழுத்திலும், பேச்சிலும், ஒழுக்கத்திலும், நாட்டுப் பற்றிலும், சமய நெறியிலும் சிறந்த மாமனிதர்.

ஒல்லாந்தர் காலத்தில் எழுதப் பெற்று பின்னர் சிதைந்து உரு அழிந்து போய்க் கிடந்த கூத்துகள், நாடகங்கள், அம்மானைகள் முதலானவற்றை தேடி எடுத்து புதுப்பித்து பதிப்பித்த பெருமை அவருக்கே உரியது.

பொது மேடைகளில் அவர் ராகதாளத்தோடு பாடிய அம்மானைகள் இளமையிலேயே மரபு வழிவந்த விசுவாசத்தின் வேர்களாகும். பிரேமதாசா யாழ்ப்பாணம் வந்தபோது அவருக்கு தமிழரின் குறைகளைக் காலத்தோடு தீர்க்க முயற்சி எடுக்காவிடில் இலங்கையிலே ஒரு பூகம்பமே வெடிக்கும் என்று முரசு அறைந்த மாமுனிவர்.

சிறந்த கல்வித் தகைமையும் தூரதிருஷ்டியும் அர்ப்பணிப்பும் நிறைந்த திருமகனார் என்று இந்துசமய விவகார அமைச்சர் மகேஸ்வரன் அவர்கள் குறிப்பிட்டு இருப்பது அவருடைய எல்லா இயல்புகளும் உருட்டித் திரட்டிய மாத்திரை ஆகும்.

மறை மாவட்டப் பணிகளில் அவர் தொடராத துறைகள் இல்லை. அவருடைய முயற்சி எறும்புக்கும் முன்னின்று எடுத்துக் காட்டாய் நிற்பது.

தமிழருக்கு எப்போது எங்கே இடர் ஏற்பட்டாலும் அங்கே அவருடைய குரல் உரத்துக் கேட்கும். அவருடைய குரலுக்கு ஈழத்தில் எல்லாத் திசைகளிலும் வரவேற்பு இருந்தது.

திருமறை விளக்க நூல்களை எழுதியும் பத்திரிகைகளை நடாத்தியும் பொதுநிலையினருக்கும் சமய நெறி அறிவு பெருக அரும்பாடுபட்டார்.

ஆசிரிய சங்கங்களை அமைத்து திருமறை பயிற்றும் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்து மோட்ச பாதை என்ற பழைய நூலைத் திருத்தி காலத்துக்கு ஏற்றவாறு அற்புதமான பொற்பதக்கமாக அவற்றை வெளியிட்டார்.

தமிழ் இலக்கிய கழகத்தை ஆக்கிச் சிறந்த நூல்களை ஆராய்ந்து வெளியிட ஊக்கமளித்தார். அதில் என்னுடைய "நெஞ்சே நினை" என்ற நூல் முதல் வெளியீடாக அச்சேற்றப் பெற்று மூவாயிரம் நூல்கள் வெளிவந்தன.

இயேசு காவியத்தை திருமறைக்கலாமன்றத்தினர் நாடகமாக நடிக்க ஏவி அதனால் இலங்கையில் நாடக வரலாற்றில் புது முத்திரையைப் பதித்தார்.

குருமணிகளைத் தேர்ந்தெடுத்து உரோமாபுரிக்கும் பிறநாடுகளுக்கும் அனுப்பி மெய்யியல் தத்துவ சாஸ்திரம் ஆகிய கலைகளில் அருட்பணியாளர்கள் சிறப்புற்றிருக்க ஆவன செய்தார்.

1945இல் உரோமாபுரியில் கலாநிதிப் பட்டம் பெற்றுத் திரும்பிய அடிகளாருக்கு ஆலயத்துக்கு அருகாமையில் கரம்பனில் ஒரு பாரிய வரவேற்பு மண்டபம் அமைத்து சிறந்த பாராட்டு விழா நடந்தது. அவ்வேளை அவரை வாழ்த்தி உரையாற்ற கிடைத்த பாக்கியசாலிகளுள் இவனும் ஒருவன்.

திருச்சபை என்ற தேரை 25 ஆண்டுகள் ஆயர் பணியிலும் 50 ஆண்டுகள் குருத்துவப் பணியிலும் வாழ்ந்து இழுத்துச் சென்ற செல்வச் சீமான்.

அனுராதபுரத்திலும், இளவாலை என்றியரசர் கல்லூரியிலும், கொலம்பகம் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையிலும் அதிபராயிருந்து வாழும் பெரும் பகுதியைக் கல்வித் தொண்டாற்றிப் பலரைக் கரை சேர்த்தார்.

துறவற சபைகளுக்கு தோள்கொடுத்து நல்லாயன் சபையையும் புனித வளனார் சபையையும் திருக்குடும்ப கன்னியர் சபையையும் சிறப்புறுமாறு சேவை செய்தவர். அவருடைய காலம் ஒரு பொற்காலம் என்று கூறலாம். அவருடைய ஆளுமையில் தெரிந்த இறைபக்தி, மறை அறிவு, நிர்வாகத் திறமை, மொழிப்பற்று, சிந்தனை ஆற்றல், கம்பீரமான தோற்றம், நீதியான பரிபாலனம் என்பன யாழ் மாவட்டத்துக்குப் பொன்னாடை போர்க்கும் செயல்கள் ஆகின.

அரசியல் நெருக்கடிகளில் துணிவுடன் குரல் கொடுத்து ஆயனுக்குரிய கடமைகளை அஞ்சாது கடமையாற்றினார்.

போர்ச் சூழலில் ஆயர் மனையில் தன் இருப்பிடத்தில் இருந்தவரை கதிரையில் இருந்து எழும்புமாறு ஒரு இயக்கத்தின் படைவீரன் கேட்டான்.

நீ என்னைக் கதிரையில் இருத்தவில்லை. உன்னால் என்னை எழுப்ப முடியாது. உனது துவக்கும் எனக்குத் துரும்பு. நீ என்னத்தைத் தேடி வந்தாயோ அதை அறைகள் எல்லாம் தேடிப்பார் என்று சொல்லால் அறைந்த மாவீரன்.

ஆண்டவரின் நம்பிக்கையுடன் மனிதர் மத்தியில் இறைவாக்கு உரைப் போராக ஒடுக்கப்பட்டோரின் குரலாக கம்பீர தோற்றத்துடன் இன்றும் எங்கள் சிந்தனையில் நிலைத்திருக்கிறார் பேராயர் என்று இலங்கை திருச்சபையின் குருமுதல்வர் நேசக்குமார் குறிப்பிட்டார்.

தமிழ் மக்களுக்கு, நீதியும் சமத்துவமும் கிடைக்க வேண்டுமென்று ஜனாதிபதிக்கு அறிக்கைவிட்டு அதனை எல்லா பத்திரிகைகளிலும் வரச் செய்தார்.

"நெஞ்சே நினை" என்ற நூலை அடியேன் எழுதி அச்சேற்ற முடியாமல் நீண்டகாலம் காத்திருந்தேன்.

அதனை அச்சு வாகனம் ஏற்றுமாறு ஒழுங்குகளைச் செய்து நூல் அரங்கேற்றத்துக்கும் தலைமைதாங்கி என் எழுத்துக்களையும் பாராட்டி னார். அந்த நூலை இலக்கியப் பணிக்காகவே கையளித்தேன்.

இளவாலையில் கல்லூரிக்கு அருகாமையில் நான் கட்டிய "அன்பரங்கம்" என்ற இல்லத்துக்கு அத்திவாரம் இட்டது அவருடைய ஆசிர்வாதம் பெற்ற கரங்களே.

1963இல் அன்புக் கரங்களால் ஆசீர்வதித்து அந்த வீட்டைத் திறந்து வைத்ததும் ஆயர் அவர்களே. என்றென்றும் என் நெஞ்சில் வாழும் அன்பு அரசனாக ஆயர் அவர்கள் விளங்குகின்றார்.

29

# "நினைவில் தோன்றிய நிலவுகள்"

ஆயிரக் கணக்கில் ஆண்களும் பெண்களும் கூடியிருக்க நடுவிலே உள்ள உயர்ந்த பீடத்தின்மீது அமர்ந்து இருக்கிறார் சித்திரா.

சித்திரா பெயர் பெற்ற பின்னணிப் பாடகி.

அவருக்கு மாலை சூட்டி வேத மந்திரங்களை முழங்கியபடி சித்திராவின் பாதங்களைக் கழுவிய பூசாரி பூக்களைத் தூவ உடல் சிலிர்க்கிறது சித்திராவிற்கு.

தனக்கு தெய்வ மரியாதை கிடைத்த பரவசத்தில் இரு கரங்களையும் கூப்பி கண்களை மூடிக்கொள்ள அவரது பாதங்களை வீழ்ந்து வணங்கு கிறார் பூசாரி.

உணர்ச்சிப் பெருக்கில் சித்திராவின் கண்ணில் நீர் வழிகிறதைக் கண்ட சனக் கூட்டத்தின் கண்களும் கலங்குகின்றன.

கேரள மாநிலத்தின் கோட்டையம் அருகில் உள்ள நீரேற்றுபுரத்தில் கடந்த டிசம்பர் மாதம் பதினேழாம் திகதி இப்படி ஒரு அதிசயம்

நடந்தது. வேறு பெண்கள் பலருக்கும் இவ்வாறான பாதபூசை நடை பெற்றது.

சிசுக் கொலை. கற்பழிப்பு, பெண் கடத்தல், ஆபாச வீடியோக்கள் என்று பெண்களை வட்டமிடும் வல்லூறுகளுக்கு நடுவில் பெண்களுக்கு கிடைத்த மரியாதை நெஞ்சைத் தொடுகின்றது. நமது ஈழத் திருநாட்டிலும் இவ்வாறாகப் பாதபூசை பெற்ற பெண்கள் கணக்கிலடங்காமல் இருக் கின்றனர்.

எல்லா வீடுகளிலும் எந்நேரமும் சென்று வர இறைவனால் இயலாமல் இருப்பதால்தான் தாய்மாரைப் படைத்திருக்கிறார் என்று என் நண்பர் ஒருவர் சொன்ன ஞாபகம் உண்டு.

குடும்ப பாசத்தைப் பிரிந்து பிறந்த ஊரையும் விட்டு உடன்பிறந்தவர்களைத் துச்சமாக மதித்து அன்புப் பணி செய்வதற்காகத் துறவற சபைகளை சேர்ந்து தொண்டாற்றி வரும் கன்னியர்கள் சிறப்பாகப் பாதபூசை செய்யப்பட வேண்டியவர்கள் என நம்புகிறேன்.

அந்த நிலவுகளின் வரிசையில் பாதபூசை செய்வதற்கு தெரிந்தவர்கள் இருவர்.

## அருட்செல்வி சில்வேரியா புஸ்பம் ஞானப்பிரகாசம்

அருட்செல்வி சில்வேரியா புஸ்பம் ஞானப்பிரகாசம் என்பவர் பட்டதாரியான தும் யாழ் கன்னியர் மகளிர் கல்லூரியில் ஆசிரியையாகப் பணியாற்றியவர்.

கொழும்புத்துறை ஆசிரியர் கலாசாலையில் ஆசிரிய மாணவர்களுக்கு விரிவுரையாளராக இருந்து பாராட்டுப் பெற்றவர்.

உரோமை மாநகரில் ஞானபோதகங்கள் கற்று வந்து தமிழ் நெஞ்சங்களுக்கு விதைத்தவர். எளிமையான வாழ்வும் இனிமையான மொழியும் உதட்டிலே புன்சிரிப்பும் அறமார்க்கங்களில் தோய்ந்த உடலமைப்பும் கொண்ட உத்தமி.

இவருடைய தந்தையார் ஞானப்பிரகாசர் என்பவர் தமிழ் நாட்டிலே பெரியாரைப் போல எல்லோராலும் போற்றப்பட்டவர். தமிழ்நாட்டு பெரியாரோ பொதுஉடமைவாதி. இவரோ இறைபக்தியில் அம்பராந்தம். நெடுந்தீவு இவரது பிறப்பிடமாகும். நெடுந்தீவின் வரலாற்றில் தனிநாயகம் முதலி என்று குறிப்பிடப்படும் பெரியாரும் இந்தப் பெரியாரின் வம்சத்தில் தோன்றியவரே! ஞானப்பிரகாசர் யாழ். பட்டின பாடசாலையிலும் ஆசிரியராக விளங்கினார். எனது இளமைக்கால ஆசிரியராக விளங்கியவரும் இவரே.

ஆசிரியராகவும் பெரும் மதிப்பிற்குரியவராகவும் சிறந்த நாட்டுப் பற்றாளராகவும் தெய்வ பக்தியின் விடிவெள்ளியாகவும் காணப்பட்டார்.


பண்பாடும் சமயப்பற்றும், அறநெறிகளும் தவழும் இந்தப் பூங்குளத்தில் புஸ்பம் என்ற தாமரை மலர்ந்தது. கன்னியரின் வாழ்க்கைப் பாதையில் தெய்வத்தின் விழுதுகள் தெரியும். சகோதரி புஸ்பம் அவர்கள் இரண்டு முறை திருக்குடும்ப கன்னியர்களின் வடமாகாணத் தலைவியாக தெரிவு செய்யப் பெற்றார்.

அடக்கத்தின் சாயலாக விளங்கும் இந்த மாதரசி தலைவராயிருந்தபோது பெருமைக்குரிய பல விஷயங்களை நிறைவேற்றினார். திருக்குடும்ப கூட்டத்தின் வளர்ச்சிக்கும் புதிய துறைகளுக்கும் இவரே வழிவகுத்தார்.

மழை பெய்யென பெய்யும் வழியில் வந்த கற்பின் குணசீலி. எனது கட்டுரைகள், கவிதைகளை வாசிக்க இந்த கன்னியர் தவறுவதில்லை. நான் எழுதிய நூல்களைக் கருத்தோடு வாசித்து பல சந்தர்ப்பங்களில் பாராட்டியது உண்டு. பலவருடங்கள் தென்னிந்தியாவிலும் பணிபுரிந்து வந்தார். ஏழைகளின் மேல் இரக்க சிந்தனை உடையவர்கள். இந்திய கிராமங்களில் ஏழைகளின் நிலைமைகளையிட்டு வாசித்தால் இதயம் உடைந்து கண்ணீர் திறந்து ஓடும். ஒரு கையோடு இந்த உலக வாழ்க்கையை நடத்தி வரும் இந்த உத்தமியின் மற்ற கை எங்கே? அது எந்நேரமும் இறைவனைத் தொட்டபடியே இருக்கும்.



# அருட்செல்வி சோபியா வஸ்தியாம்பிள்ளை



வட மாநிலத் திருக்குடும்பக் கன்னியர்களின் தலைவியாக இருமுறை பணியாற்றியவர் அருட்செல்வி சோபியா.

இளவாலையைச் சேர்ந்த இந்த மாதர் மாணிக்கம் எனது இல் லத்துக்கு அருகில் வாழ்ந்து வந்தவர். இவருடைய தந்தை யார் ஒரு ஆசிரியர். கமலேசன் என்ற திரையில் நடித்தவர். தமிழ், சங்கீதம், நாடகம் என்பவற்றில் சிறந்தவர்.

இளமையில் மகிமை நாயகி என்றழைக்கப் பெற்று வந்தவர். படிக்கும் காலத்தில் வேலிப் பொட்டுக்குள்ளால் புகுந்து எங்கள் வீட்டுக்கு அடிக்கடி வருவார். சிரித்த செவ்வந்திப் பூப்போல முகமும், பணிவும், தெய்வ பக்தியும், அடக்கமும் அவரோடு கூடிப்பிறந்த தேவதைகள்.

கலைமாணிப் பட்டதாரியாகி யாழ். கன்னியர் மடத்தில் ஆசிரியை யாயிருந்தார். அவரணியும் மஞ்சள் நிறச் சேலை துறவையும் தோற் றத்தையும் ஒருங்கே காட்டிற்று.

கன்னியர் மடத்துத் தலைவியாக இருக்கும்போது அதன் வளர்ச்சிக் குப் பெருந்துணை செய்து, கொழும்பில் ஒரு தலைமைத்தானத்தை யும் அமைத்துவிட்டார்.

செபமும் தவமும் மனித நேயமும் கொண்ட இந்த மங்கையர் திலகம் துறவிகளுடைய தேவைகளை மாத்திரம் நிறைவேற்றவில்லை. எங்கே

எவருக்கு இன்னல் ஏற்பட்டாலும் அங்கே ஆறுதலளிக்க வந்து நிற்பார். அவருடைய பாதச் சுவடுகள் எளிமையும் இனிமையுமானவை.

இப்போது திருக்குடும்பக் கன்னியர் சபை லண்டன் கிளையொன்றில் பணிபுரிந்தபோதும் தமிழ் மக்களின் இன்ப துன்பங்களில் ஈடுபாடு கொண்டவராய் வாழ்ந்து வருகின்றார்.

அவருடைய உரையாடல்கள் பூக்களுக்கும் வகுப்பு எடுக்கும். அவருடைய செபங்கள் பிறரன்பைக் குத்தகைக்கு எடுத்துக் கொள்ளும்.

வேறு தடங்களில் சூழ இருப்போரின் மனம் செல்லாதவாறு தடுத்து, இறையருட் செல்வத்தையும் மனித நேயத்தையும் தூண்டிவிடக்கூடிய அவருடைய வார்த்தைகள் சந்தணக் குச்சின் நறுமணம் கொண்டவை.

## முத்துக்கள்

சோலையிலே மாலையிலே
துளிர்களிலே தளிர்களிலே
கோலமலர் இதழ்களிலே
குலவ பனித் துளிகளெல்லாம்
மாலை என்னும் தொழிலாளி
வடித்துவிட்ட வியர்வைநீர்
காலையெனும் முதலாளி
கணக்கெடுக்கும் முத்துக்கள்.

**கவிஞர் அப்துல் ரகுமான்**

சட்டநிபுணர் ஜி. ஜி. பொன்னம்பலம்

30

# ஆரம்ப வரலாறுகளின் ஆணிவேராக அமைந்தவர் பொன்னர்



நமது நாட்டில் உண்மைக்கு உயர்ந்த இடம் கிடைப்பதில்லை. பொய்யும் போலிகளும் பொன்னாடை போர்த்துக் கொள்ளுகின்றன.

''செருப்பையே மதிக்கும் இந்தத் தேசத்தில் பிறந்தேன்'' என்று கவியரசர் கண்ணதாசன் கருத்தில்லாமல் பாடவில்லை.

சிங்கள அரசியல் ஆட்சியில் பொய்யும் புரட்சியும் பித்தலாட்டங்களும் சர்வ சாதாரணம்.

ஈழநாட்டில் அரசியல் வரலாறு என்ற சுருளை விரித்து கடந்த

நூறு வருடத்தை மாத்திரம் பார்த்தால் அங்கே சேர். பொன். இராமநாதன், சேர். பொன். அருணாசலம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம், திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம், தேசியத் தலைவர் பிரபாகரன் என்போருடைய அத்தியாயங்கள் தோன்றுவதைக் காணலாம்.

இவர்களில் தமிழர் என்ற உணர்ச்சியைத் தூண்டிவிட்டவர்களின் முன்னணியில் பொன்னம்பலம் அவர்களையே குறிப்பிடுகிறார்கள்.

"தமிழன் என்று சொல்லடா தலை நிமிர்ந்து நில்லடா" என்ற வரிகளை எழுதிய கவிஞர் இவற்றை மறந்திருக்கலாம். ஆனால் ஈழத்தமிழர் இவ்வரிகளை நெற்றியில் பதித்திருக்கிறார்கள். இந்த வசனங்களே ஜி. ஜி. உடைய கூட்டங்களில் முன் வரிசையில் தலைகாட்டின.

இலங்கையில் சுதந்திரம் பெற்றிருந்த பெரும்பான்மைச் சிங்களவர்களின் அரசியல், தமிழ் மக்களை நசித்து வருவதையும், உரிமைகளை நாம் இழந்து வருவதையும் காலத்தில் சுட்டிக் காட்டியவர் ஜி. ஜி. அவர்கள்தான்!

இதனால்தான் "எங்கள் பலம் பொன்னம்பலம்" என்று பெரிய சீலைத்துணிகளில் எழுதிக் கொண்டு திரிந்தார்கள் அவருடைய ஆதரவாளர்கள்.

ஜி. ஜி. பொன்னம்பலம் அவர்களுடைய நடை, வசீகரம், பேச்சுத்திறமை, வெற்றிகள், வாதாடும் திறமை, பார்வை, சுறுசுறுப்பு எல்லாம் சமுதாயத்தைக் கவ்வி இழுத்தன.

1944ஆம் ஆண்டு அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் என்ற அமைப்பை அவர் நிறுவினார்.

இலங்கையில் மிகச்சிறந்த வழக்கறிஞராகவும், சட்ட நிபுணராகவும் அவர் மதிக்கப் பெற்றார்.

குற்றவியல் வழக்குகளில் அவரைப் போலச் சிறப்புப் பெற்றவர்கள் மிகச் சிலரே!

அவருடைய இளமைப் பருவத்தையிட்டு அவரே சொல்வதைக் கேளுங்கள்.

"நான் லண்டனுக்குப் படிக்கப் போனது டாக்டருக்குப் படிக்கத்தான்! அதற்காகச் செத்த பிணங்களையும், தவளைகளையும், சுறாமீன்களையும் கீறிக் கிழித்துக் கொண்டிருக்க எனக்குப் பிடிக்கவில்லை. நாறி மணக்கும் உடலங்களில் பயிற்சி பெறுவதை வெறுத்துவிட்டேன். பின்பு எஞ்சினியருக்கு படிக்க முயற்சித்தேன்.

ஏறி இறங்கி, பாலங்கள், அகழிகள், வாய்க்கால்கள், வீதிகள் என்பவற்றில் வெய்யில் குளிர், மழை, பனி என்று பாராமல் தொழில் செய்வதும் ஒத்துவரவில்லை.

சட்டம் படித்தேன். அதில் உள்ளத்தைப் பறிகொடுத்தேன். ஊக்கமாகப் படித்தேன். நல்ல வழக்குகளை நீதிமன்றத்தில் சென்று பார்த்தேன். திறமை பெற்றிருந்த வழக்கறிஞர்களிடம் பயிற்சி பெற்றேன். ஏலவே M.A. சித்தி பெற்றிருந்தபடியால் பாரிஸ்டர் ஆக வருவது இலகுவாயிற்று. மனத்துணிவோடு குற்றவியல் துறையில் புகுந்தேன்.

காணி, பூமி, கட்டிடம், வேலி, வழி வாய்க்கால் வழக்குகளாக வரும் குடியுரிமைச் சட்டங்கள் காலத்தை நீடித்துப் பணத்தை வறுகிப் பணக்காரனாகும் வழி. ஏழைகளையும் வருத்த நேரிடும். ஆகையால் குற்றவியல் வழக்குகளைத் தேர்ந்து எடுத்தேன்.

இதிலே புகழின் மேற்படிகளைத் தொடவேண்டுமாயின் எடுத்துக் கொண்ட வழக்குகளில் சிரத்தையும் ஞாபகமும் இருக்க வேண்டும். எனது கட்சிக்காரருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்ற மனோபக்குவம் வேண்டும்.

சில சமயம் சட்டம் அதற்கு மாறுபாடாயிருக்கலாம். சட்ட நுணுக்கங் களையும் தீர்ப்புகளையும் சோர்வில்லாமல் படித்தறிய வேண்டும்.
சுடச்சுடத்தான் பவுணிலுள்ள மாசு அகன்று அது ஒளிவீசும்.
அரைத்தால்தான் சந்தனம் கமழும்.
வற்றக் காய்ச்சினால்தான் பால் சுவை தரும்.
இவை சட்டத்துறையில் வக்கீல்களுக்கு முக்கியமான முன்னேற்றப் படிகள்.

லண்டனில் படிக்கும் காலத்தில் குத்துச்சண்டை, மல்யுத்தம், விளை யாட்டுக்கள், நீச்சல், குதிரைச் சவாரி எல்லாவற்றிலும் யான் பங்கு பற்றினேன். இதனால் வாழ்வில் ஒரு புது மலர்ச்சி ஏற்படும்.

என்னதான் இருந்தாலும் பெற்ற தாயையும் என்னையும் ஆளாக்கிய தந்தையாரையும் என்றும் துணையான கடவுளையும் மறக்கமாட்டேன்." என்றார்.

ஜி. ஜி. லண்டனில் இருந்து வந்து ஒரு சில வருடங்களில் அவருக்குப் பேரும் புகழும் குவிந்து ஓகோ என்ற பாராட்டு உண்டாயிற்று.

1947இல் அகில இலங்கைக் காங்கிரஸ் தமிழ் மக்கள் மத்தியில் சிறந்த செல்வாக்கைப் பெற்று பாராளுமன்றத்தில் பலம் வாய்ந்த கட்சியாயிற்று. திரு. செல்வநாயகம் அவர்களும் இக்கட்சியில் சேர்ந்து தேர்தலில் வெற்றி பெற்றார்.

வரட்டுக் கூச்சலினால் பயனில்லை என்று கண்டு டி. எஸ். சேனநாயக்கா மந்திரி சபையில் சேர்ந்து கொண்டார். அதனால் காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை, பரந்தன் இரசாயனத் தொழிற்சாலை, வாழைச்சேனை காகிதத் தொழிற்சாலை, முல்லைத்தீவு புல்மோட்டை யில் இல்மனைட் தொழிற்சாலை போன்ற பாரிய தொழிற்சாலைகள் உதயமாயின.

கடற்தொழில், கைத்தொழில் அமைச்சராக இருந்து பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலை வாய்ப்புக் கிடைக்குமாறு செய்தார்.

மீன்பிடித் தொழில் விருத்தியானது. வடகிழக்குக் கரையோர மக்கள் இதனால் பெரும் பயன் பெற்றனர். இயந்திர வள்ளங்கள், நைலோன் வலைகள் இறக்குமதியாகின. கனடா, நோர்வே போன்ற நாடுகள் இதற்கு உதவிபுரிந்தன.

பொன்னம்பலம் ஐயா அவர்கள் புகழின் உச்சியில் இருந்த வேளையில் ஒருமுறை இளவாலைக்கும் விஜயம் செய்தார்.

என்றியரசர் கல்லூரியில் அவருக்கு ஒரு பாரிய வரவேற்பு வைபவம் நடந்தேறியது.

அவ்வேளை அடியேன் உரையாற்றும்போது -
"பாரத நாட்டின் அரசியல் வாழ்வில் அருந்தொண்டு புரிந்தவர்களை மக்கள் போற்றிப் புகழ்ந்திருக்கிறார்கள்.

இந்த வரிசையில் காந்தி, நேரு, இராசகோபாலாச்சாரியார், சுபாஸ் சந்திரபோஸ் என்பவர்களை காந்திஜி, நேருஜி, இராஜாஜி, நேத்தாஜி என்று 'ஜி' என்ற கௌரவப் பட்டம் சேர்த்து அன்பாக அழைக்கின்றனர். நாங்கள் எங்கள் மதிப்பார்ந்த பொன்னம்பலம் ஐயா அவர்களுக்கு அவ் வாறான பெரும் புகழ்கொண்ட 'ஜீ' என்ற பட்டத்தைக் கொடுக்குமுன்னரே இயற்கை அவருக்கு ஒன்றுக்கு இரண்டாக ஜி. ஜி. பொன்னம்பலம் என்று பட்டமளித்துப் பெருமை பாராட்டிக் கொண்டது. இது தமிழருக்குக் கிடைத்த பெருமை" என்றேன். மண்டபம் அதிரும் படியாகக் கரகோஷம் எழுந்தது.

கூட்டம் முடிந்து கழுத்தில் விழுந்து கண்ணை மறைத்த மாலைகளைக் கழற்றிய பின்பு மக்கள் கூட்டத்தின் மத்தியில் நடந்து வந்தார். என்னை நோக்கி வந்து என்னோடு கைகுலுக்கி என்னைப் பாராட்டினார்.

முன்பு குருநகர் கடற்கரை மைதானத்தில் அவருடைய மாபெரும் கூட்டம் ஒன்றில் நான் பேசியதையும் அவர் சுட்டிக் காட்டினார்.

எங்கள் குடும்பத்துக்கும் அவருடைய குடும்பத்தினருக்கும் உள்ள நெருங்கிய தொடர்பை எனது பாரியார் மறைவின்போது இளவாலையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் உரையாற்றிய திரு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள், பேராசிரியர் சந்திரகாந்தன் அடிகளாருடைய குடும்பத்துக்கும் எங்கள் குடும்பத்துக்கும் நீண்ட காலத் தொடர்பு உண்டு என்று ஆரம்பித்தார். அது கிடக்க,

சோல்பரி ஆணைக்குழுவின் முன் தமிழருக்கு ஐம்பது வீதப் பிரதி நிதித்துவம் கேட்டு ஜி. ஜி. வாதாடினார்.

டொனமூர் குழுவினரின் சிபாரிசுகளுக்கு முன்பு சட்டசபையில் தமிழருக்கும் சிறுபான்மையைச் சேர்ந்த சோனகர், பறங்கியர் என்போருக்கும் 50 வீதமான பிரதிநிதிகள் இருந்தனர். மேலும் கனடாவிலும் வேறு இடங்களிலும் சிறுபான்மையினருக்குச் சமபலப் பிரதிநிதித்துவம் கொடுபட்டிருப்பதையும் தமிழருடைய பூர்வீக வரலாறுகளையும் சோல்பரி ஆணைக்குழுவுக்குத் தெரிவித்தார்.

ஜி. ஜி. ஒரு சட்ட நிபுணர் என்பதும் சட்ட மாமேதை என்பதும் இலங்கை அறிந்து கொண்ட உண்மை.

ஸ்ரீலங்கா அரசாங்கத்தைப் புரட்டுவதற்காகத் திட்டம் தீட்டிச் சதி செய்தார்களென உயர்ந்த பதவிகளில் தரைப்படை, கடற்படை, ஆகாயப்படைத் தளபதிகளும், பொலிஸ்படைத் தளபதியும், அரசியல் நிர்வாகத் துறையைச் சேர்ந்த உயர் அதிகாரிகளுமாக 32 அதிகாரிகள் சிறையில் அடைக்கப்பட்டனர்.

சதிவழக்கு உலகப் பிரசித்தி பெற்றது.

பிற நாடுகளிலிருந்து பார்வையாளர்களும், பத்திரிகைச் செய்தி சேகரிப்பாளர்களும் கொழும்பில் கூடினர்.

சதி வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரிகள் சார்பில் சட்டமாமேதை ஜி. ஜி. ஏற்பட்டிருந்தார். அரசாங்கம் தன்னால் ஆனவற்றை எல்லாம் செய்தது. சதி வழக்கை விளங்குவதற்கு இந்தக் கோட்டுக்கு அதிகாரமில்லை என்று முதல் நாளில் பேரிடியைத் தூக்கிப் போட்டார்.

பின்னர் நடைபெற்ற விசாரணைகளில் சட்ட நுணுக்கங்களை எடுத்து விளக்கிச் சந்தேகத்துக்கே இடமின்றி அனைவரும் நிரபராதிகளென நிரூபித்தார். இது இலங்கையில் நடைபெற்ற மகா பெரிய சதி வழக்காகும். இதனால் ஜி. ஜி. யின் பெயர் அயல் நாடுகளிலும் முகம் காட்டியது.

ஐக்கிய நாடுகள் சபையில் உலக சமாதானம் பற்றி உரையாற்றி விட்டுத் திரும்பினார். ஐ. நா. சபையிலும் உலகப் பத்திரிகைகளிலும் அவரைப் பாராட்டினார்கள்.

கட்டுநாயக்காவிலிருந்து ஜி. ஜி. யின் கொழும்பு இல்லம் வரை (இராணி வீதி) உபசரணை ஏற்பாடுகள் நிகழ்ந்தன. இதில் சிங்கள இனத்தைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர், வேறு பல நாட்டாண்மைக்காரர் கூடப் பங்கேற்றனர். இவ்வாறான ஒரு வரவேற்பு வேறொரு தமிழ் மகனுக்கு நடந்ததாக வரலாறில்லை.


ஜி. ஜி. வாதாடி வெற்றி பெற்ற கொலை வழக்குகள், குற்றவியல் வழக்குகள், காதல் வழக்கு, பவுண் நங்கூரம், காணி வழக்கு என்பவை பற்றி எழுதுவதாயின் இந்த நூலே அடங்காது. அது எனது கருத்துமல்ல. அரைச் சதம் கூட்டி விற்றதாக அமைந்த ஒரு யானைப் பெட்டி வழக்கிலே ஆஜராகி அந்தத் தீப்பெட்டியில் இரண்டு யானைப் படங்கள் இருப்பதால் அது ஒரு யானைப் பெட்டியன்று என்று வாதாடி வென்ற சுவையான வழக்குகளே பல.

அரசியல் ஞானமும், சிறந்த மனிதப் பண்புகளும், ஏழைகளில் இரக்கமும் தமிழனுக்கு எங்கே எப்போது இடர்வந்தாலும் துடிக்கும். நெஞ்சம் கொண்ட மாமனிதனாக ஜி.ஜி.யும், அவருடைய பிரிய மகனார் குமார் பொன்னம்பலம் அவர்களும் வாழ்ந்து வந்தனர்.



31

# தெய்வப் பிறவிகளே! திரும்பி வர மாட்டீரோ?



### சீனக்கதை ஒன்று கேளுங்கள்

ஒரு அரண்மனையில் மன்னருக்கான உணவு தயாராகிக் கொண்டிருக்கிறது. அப்போது அடுப்பின் மேலே உள்ள பரணில் இருந்து வெள்ளை நிறக் கட்டியொன்று அடுப்பில் கொதித்துக் கொண்டிருக்கும் குழம்பில் விழுகிறது. விழுந்த உடனே அது கரைந்து காணாமல் போய்விடுகிறது.

சமையல்காரன் என்ன செய்வது என்று தெரியாமல் திகைக்கிறான். சாப்பாட்டு நேரம்



மன்னருக்கு இதைச் சொன்னால் அந்தப் பொருளை அங்கே ஏன் வைத்தாய் என்று கோபித்து எச்சரித்துத் தண்டனை கொடுப்பார். வேறு உணவு தயாரிக்கவும் நேரமில்லை. ஏதோ நடக்கிறது நடக்கட்டும் என்று பதறியபடி உணவைப் பரிமாறினான்.

மன்னர் ஒரு கவளம் உணவை உட்கொண்டார்.

சமையல்காரனை நிமிர்ந்து பார்த்து ''யார் இந்த உணவைத் தயாரித்தது?'' என்று கேட்டார்.

"நான்தான் மன்னா! ஆனால் தெரியாமல்......." என்று இழுத்தான். பயத்தினால் பேசமுடியாமல் அவனுடைய தொண்டை அடைத்தது.

"ஆகா! இன்று சமையல் மகா திறம்! என்றுமில்லாத புதுச்சுவை. இனிமேலும் இவ்வாறே சமைத்து வா!'' என்று மன்னர் பாராட்டிவிட்டுக் கழுத்திலே கிடந்த மாலையையும் கழற்றிச் சன்மானமாகக் கொடுத்தார்.

பரணிலிருந்து தவறி விழுந்த கல் உப்புக்கல்தான். அதிர்ஷ்டம் வரும் என்று சேகரித்து வைக்கப்பட்டிருந்த கல்லில் இருந்து ஒரு துண்டு சமையல் சட்டிக்குள்ளே விழுந்திருக்கிறது. சமையல்காரனுக்கு அதிர்ஷ்டம் விழுந்தது.

உப்பு உபயோகமான கதை இதுதான்!

உப்பு உணவுக்குச் சுவை சேர்த்து விடுகிறது. "உப்பில்லாப் பண்டம் குப்பையிலே'' என்பது பழமொழி.

அடியேனுடைய எழுத்துக்கள் - கவிதைகளில் சுவையுண்டென்று யாராவது கருதினால் அந்த உப்பைப் போட்டவர் எனது அன்புக்குரிய அண்ணர் அவர்களே!

கோவில்கள் நூறு சென்று கும்பிட்டு வந்தாலும் ஆவியிலே அண்ண ரைப்போல் அருந்தெய்வம் கண்டிலனே என்று கூறலாம்.

எனது இளமைக் காலத்திலிருந்து எனக்குத் தாயாய், தந்தையாய், உடன் பிறப்பாய், ஆசிரியனாய் இருந்தவர் அண்ணரே!

அவர் அதிபராகவே ஆசிரியத் தொழிலை ஆரம்பித்து அதிபராகவே யிருந்து இளைப்பாறினார்.

ஆசிரியப் பெருமக்களே தமிழ்ச் சமுதாயத்தில் மதிப்புக்குரியவர்களாய் வாழ்ந்துவந்த ஒரு காலப் பகுதியில் அண்ணர் அவர்களும் ஆசிரியராக, சமூகப் பணியாளராக, பாடசாலை அதிபராக, பேச்சாளராக, எழுத்தாளராகத் தன்னை இனம்காட்டிக் கொண்டார்.

இந்தியாவிலிருந்து சரத் சந்திரர், தாகூர் என்போர் எழுதிய நாவல்களை யும் சிறுகதைகளையும் சஞ்சிகைகளையும் வரவழைத்து வாசிப்பார். கலைமகள், செந்தமிழ்ச் செல்வி, சத்தியநேசன், நல்வழி முதலான பத்திரிகைகளை நான் என் இளம் வயதில் வாசித்திருக்கிறேன். இளையோருக்கென "இளைஞர் இலக்கியம்" என்றொரு தொடர் நூலை எழுதி முடித்தார்.

அதிலே பத்திரிகைகளில் வெளிவந்த பல பாடல்கள் இடம்பெற்றன. நாடகங்களை எழுதிப் பழக்கி மேடையேற்றினார். அந்த நாடகம் புனித சஞ்சுவாம் கோவில் முன்றலில் நடந்தேறியது. அதில் ஒரு கட்டத்தில் பின்வரும் அறுசீர் விருத்தம் பாடப்பெற்றதை யான் இன்றும் மறப்பதற்கில்லை.

**"அஞ்சுவான் என்று பார்த்தேன்**
**அதட்டியும் வெருட்டிப் பார்த்தேன்**
**சஞ்சுவாம் கோவில் முன்னே**
**சண்டையேன் என்றிருந்தேன்.......**"

என்று அப்பாடல் பாடப்பெற்றபோது ஆரவாரமான கைதட்டுக் கேட்டது. சிரேட்ட பாடசாலைத் தராதரப் பரீட்சைக்கென மாணவர்களை ஆயத்தம் செய்யும்போது தமிழ் மொழி, எண்கணிதம், வரலாறு, இலக்கியம் என்னும் பாடங்களைத் தானே கற்பித்து வந்தமையால் எனக்கும் அப்பாடங்களில்

திறமைபெற வீட்டில் துணைசெய்து வந்தார் என்பது சொல்லித்தெரிய வேண்டியதில்லை.

யான் வேறு பாடசாலைகளில் படிக்க வேண்டியிருந்தாலும் அண்ண ருடைய அறிவாற்றலினால் நான் வகுப்பில் முன்னணியில் வருவதற்கு அவரே காரணமானார்.

பத்திரிகைகளில் எழுதுவதிலும் அவர் தீவிரம் காட்டினார். ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் நான் சேர்ந்தபோது எனக்குப் பலவேறு வகைகளில் அவருடைய அன்பையும் அறிவையும் அள்ளி ஊட்டினார். அவருடைய பெயர் ஆசிரியர் சின்னப்பு நாயகம் என்றிருந்தாலும் மற்றோர் குறிப்பிடும்போது மாஸ்டர் நாயகம் என்றே அழைப்பர்.

என்னுடைய எழுத்துக்கள் ஒவ்வொன்றையும் பொற்கொல்லர் பவுண் நிறுப்பதுபோல் நிதானமாக அளந்து மதிப்புரை கூறுவார். அவருடைய வாயால் பாராட்டப்படும்போது அது வசிட்டர் வாயால் கேட்பதுபோல எனக்குப் பரவசமூட்டும்.

கணித நூலொன்றையும் மாதாவின் செபநூல் ஒன்றையும் அச்சேற்றினார்.

எங்களுடைய சகோதர பாசம் ஒப்புவமையற்றது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நான் படித்து வந்தபோது “இளங்கதிர்” என்ற ஆண்டு மடலுக்கு ஆசிரியராய் இருந்தேன். அதைப் பாாத்துவிட்டு அண்ணர் எனக்கு வரைந்த மடலை ஆயுள் உள்ள வரையும் நினைவு கூரத்தக்கது. நாட்டு விடுதலையில் பெருங்காதல் கொண்டவர்.

நான் பிறநாட்டுக்கு வந்தமையால் பெருந்துயரம் கொண்டார். தன்னைப் பிரிந்துவிட்டேன் என்ற கவலை அவரை வாட்டி வதைத்தது.

லண்டனில் இருந்து பாண்டியன் தாழ்வுக்குச் சென்றால் தன் அன்பைச் சொரிந்து தள்ளுவார்.

அவரைக் காண்பதும், பேசுவதும், குசலம் விசாரிப்பதும், நாட்டு நடப்புகளை அலசுவதும் எங்கள் ஆன்மீக ரேகைகளை ஒன்றாக்கி விடும்.

எங்கள் இருவருக்கும் விருப்பமான உணவுப் பண்டங்களைத் தயாரிப் பதில் அண்ணி ஒற்றைக் காலில் நிற்பா. அண்ணர் மனைவி என்றும் எனக்கு அருமைச் சகோதரியாகவே வாழ்ந்தார். புன்சிரிப்பும் தாமரையால் முகம் கழுவியது போன்ற நிறமும், இனிய பேச்சும் என் நெஞ்சை விட்டு நீங்காதவை.

மற்றோரை உபசரிப்பதில் அண்ணி ஒரு அற்புதமான பெண். கூழ், ஒடியற் பிட்டு, தோசை, வடை என்று கேட்டதெல்லாம் செய்து தந்து லண்டனில் மறந்தவற்றையெல்லாம் மல்லிகை மாலைபோல முன்னால் வைப்பார்.

லண்டனில் வெளிவந்த நூல்களின் முதற் பிரதியை நான் அண்ண னுக்கு அனுப்பி வைப்பதே எனது வழக்கம்.

அவற்றைப் பார்த்து அவரிலும் பார்க்க வேறொருவர் ஆனந்தமடைய இயலாது. மடுமாதா காவியத்தை அவருக்கே காணிக்கையாக்கினேன். எனது எழுத்துக்கள் ஒன்றும் தவறாமல் வாசிப்பவர்கள் மூவர். அவர்களில் ஒருவன் யான். மற்றவர் அச்சுக் கோப்பவர். இன்னொருவர் எனது பிரிய அண்ணர் என்று நான் நகைச்சுவையாக குறிப்பிடுவதுண்டு.

என் பிரிய அண்ணர் எனக்குப் பத்துப் வயது மூத்தவர். என் அருமைத் தம்பியார் எனக்குப் பத்து வயது இளையவர். அவர் பெயர் அலெக்சீஸ் செபரத்தினம்.

அரசாங்க எழுதுவினைஞர் பரீட்சையில் தேறி அஞ்சல் திணைக்களத்தில் சேமிப்புப் பகுதியில் பணி புரிந்து வந்தார்.

பல பரீட்சைகளில் சித்திபெற்று உயர்ந்து கணக்காய்வாளராக நீண்ட காலம் பணிபுரிந்தார்.

அக்காலத்தில் எழுதுவினைஞர் சங்கச் செயலாளராகவும் அஞ்சல் ஒலி என்ற பத்திரிகையின் ஆசிரியனாகவும் விளங்கினார். எவரோடும் இனிமையாகப் பேசுவதிலும், உதவி செய்வதிலும் நட்புக் கொண்டாடு வதிலும் அவருக்கு இணையானவர்கள் குறைவுதான்.

கொழும்பு மனிங் பட்டினத்தில் இரு மருங்கும் அழகான வீடு உண்டு. அவை அக்கால வெள்ளைநிற அதிகாரிகளுக்கெனக் கட்டப்பட்டவை.

ஒவ்வொரு வளவும் ஒரு ஏக்கர் இருக்கும். வீடுகள் ஐந்து, ஆறு, படுக்கை அறைகளுடன் விசாலமானவை. அப்படி ஒரு வீட்டிலே தம்பியார் வசித்து வந்தார்.

அங்கே போவதும், தங்குவதும், விடுதலையைக் கழிப்பதும் எனக்கும் மக்களுக்கும் ஆனந்தமாயிருக்கும். பின்புறமாக ஒரு வாழைத்தோட்டம். எக்காலமும் பழக்குலைகள் தொங்கும்.

என்னிலே மட்டற்ற பற்றும் பாசமும் கொண்ட தம்பிமாரும் யானும் சேர்ந்திருந்தால் அதைத் காண்போர் எம்மை ஒட்டிப்பிறந்த இரட்டைப் பிறவிகள் என்பார்.

அண்ணா என அவர் அழைப்பதிலே பாசத்தின் வேர்கள், கையிலே ஓடும் நாடி நரம்புகளைப் போலத் தெரியும். எனது ஒவ்வொரு எழுத்தையும் வாசித்து அதில் ஊறியிருப்பார். எனது வளர்ச்சியில் அவரைப் போல அக்கறை கொண்ட ஜீவன் இல்லை. எனக்கு நோய் துன்பம் கண்டால் துடிதுடித்துப் போவார்.

எவ்வாறிருந்தாலும் அடியேன் லண்டனுக்கு வந்ததை அவரால் தாங்க முடியவில்லை. கிழமைக்கு ஒரு மடல் தவறாது வரும். அவற்றைக் கண்களினூடாக வல்லக் கண்ணீர்த் திவலைகளினூடாக யான் வாசித்திருக்கிறேன்.

நாட்டின் விடுதலையில் மட்டற்ற பற்றுக் கொண்ட மாமனிதன். யாழ்ப்பாணப் பட்டினத்துக்கு அமரர் நியாயவாதி என். ரி. சிவஞானம் என்பவர் மக்கள் தலைவராய் வாழ்ந்து சுடப்பட்டதுபோல் இவரும் பண்டத்தரிப்பு பெரும் பிரிவில் மக்கள் தலைவராய் வாழ்ந்து சுடப்பட்டார்.

வீட்டுக்கு முன்புறமாக மிதிவண்டி திருத்தும் ஒரு இளைஞனைப் புலிக்குத் தோழன் என்று தீர்மானித்து, இந்தியன் பட்டாளத்துக்கு வக்காலத்து வாங்கிய ஒரு இயக்கத்தினர், துன்புறுத்தி அடித்துக் காயப்படுத்தி விட்டனர்.

இதை அறிந்த எனது தம்பியார் அவனுக்கு நடந்த அக்கிரமத்தைப் பண்டத்தரிப்பில் நிலை கொண்டிருந்த இந்தியன் பட்டாள அதிபருக்கு முறையிட்டுள்ளார்.

அன்றிரவு, ஆங்கிலத்தில் வந்த கடிதம் ஒன்றை வாசிக்குமாறு அவர் வீட்டில் சென்று அழைத்து அந்த இடத்திலேயே சுட்டுத் தள்ளிவிட்டு ஓடி மறைந்தனர் அவருடைய அரசியல் எதிரிகள்.

இவ்வாறு தமிழ் ஈழத்தில் நடைபெறும் கொலைகள் எண்ணற்றவை. மனித உயிரின் மாண்பை அறியாமல், விடுதலையின் பெறுமதியை உணராமல், தியாகத்தின் இலக்கைச் சிந்தியாமல் செய்யப்படும் இழிவான செயல்கள் மன்னிக்க முடியாதவை.

நல்லுள்ளம் படைத்த, அறிவு நிரம்பிய, மனித நேயம்மிக்க என் தம்பியார் பிரிந்த துயரம் என்னைக் கசக்கிப் பிழிந்தது.

எனது அமுதுவின் கவிதைகள் என்ற நூலை அவருக்கே காணிக்கை யாக்கினேன்.

### என்ன கவி எழுதுகிறீர்?



என்ன கவி எழுதுகிறீர் பாவலரே! போலிகளாய்
இருக்கின்றீர்கள்!
கன்னி எழில் தமிழ் அணங்கு கையிரண்டு விலங்குடையாள்
கண்ணீர் கண்டும்
செந்நெருப்பு விழிகொண்டு சீறிஎழ மாட்டீரா?
சீச்சீ வானில்
புண்ணிருந்தால் போலிருக்கும் நிலாவினையும் காதலையும்
புனைகின்றீரே!



**கவிஞர் காசி ஆனந்தன்**

வண்ணை தெய்வம்

32

# தமிழ் தென்றல்



புலம் பெயர்ந்த நாடுகளில் வண்ணைத் தெய்வம் அவர்களை ஒரு தமிழ் பண்ணையாக கொள்வார்கள்.

அவருடைய சொந்தப் பெயர் தெய்வேந்திரம் என்பது.

நாடகக் நடிகராக யாழ்ப் பாணத்தில் அறிமுகமாகிப் பல நாடகங்களில் நடித்து, சிறந்த பல நாடகங்களை எழுதி மேடைக் கலைஞனாக விளங் கினார். பேச்சிலும் உரைநடை யிலும் கவிதைகளிலும் ஒப்பற்ற ஈடுபாடு கொண்டவர்.

எல்லாவற்றிலும் மேலாக ஒரு கலா இரசிகன்.

இலண்டனுக்கு வந்திருந்தபோது என்வீட்டில் காலை ஆகாரமாய்க் கொடுத்த தோசையைப் பற்றியே தன் பத்திரிகையில் எழுதி என்னைப் பாராட்டியிருப்பது அவருடைய அன்புத் தென்றலின் அறிகுறி.

அவர் எப்போது என் வீட்டிற்கு விருந்தினராக வந்தாலும் எனது நித்திரை யன்னலூடாக மாயமாய் மறைந்துவிடும்.

இரவோடிரவாக இலக்கிய இரசனை இடம்பெறும். அவருடைய மலர்ந்த சிரிப்பில் பின் குமிழிகள் ஆடும்.

பரீஸ் நகரத்தில் அவருக்கு நூற்றுக் கணக்கான நண்பர்கள் இருக்கிறார்கள். எங்கே தமிழ் தலைகாட்டுகிறதோ அங்கே வண்ணையைக் காணலாம். அவருடைய இல்லம் தமிழ்ச் சான்றோர்களுக்கு ஒரு தங்குமடம்.

பல சிறந்த நாடக மாந்தர்கள் வண்ணைத் தெய்வத்தின் பட்டறையில் துருத்தி ஊதியவர்களாய் இருப்பார்கள்.

அவருடைய நாடகங்கள் விழிப்பை ஏற்படுத்திச் சமத்துவத்துக்கு இழுத்துச் செல்லும் குதிரைகள்.

பிரான்ஸ் நாட்டில் வசித்துவரும் வண்ணைத் தெய்வம் பல நூல்களையும் எழுதியுள்ளார்.

யாழ்ப்பாணத்து மண்வாசனை என்ற நூலில் எனது கட்டுரை முதலிடத்தைப் பிடித்துவிட்டது.

"கொந்தல் மாங்காய்" என்ற சிறுநூல் கருத்தும் கவர்ச்சியுமுள்ள ஒரு சொற்சித்திரம்.

அது ஆக்கியோனின் சிந்தனை ஆற்றலுக்கும் கற்பனைக்கும் ஒரு உரை கல்லாகும்.

பிரான்ஸ் நாட்டில் வானொலி, பத்திரிகை நாடகம், கவியரங்கம் என்பவற்றில் வண்ணை உப்புப் போலக் கலந்து கொள்வார்.

எனது கவிதைகளிலும் உரைச் சித்திரங்களிலும் பெரிதும் ஈடுபாடு கொண்ட இரசிகன்.

யாரிடம் ஆற்றல் இருந்தாலும் அவர்களை மதிப்பதிலும் தொடர்பு கொள்வதிலும் பற்றுக் கொண்டவர்.

தமிழ் மொழியிலே பற்றுக் கொண்டவர்களை மதித்து, வாழ்த்தி அவர்களை ஒரு அங்குலமாவது உயர்த்திவிட வேண்டுமென ஆவல் கொண்ட சிந்தனையாளன்.

அவருடைய தொடர்பும், ஊக்கமும், நயவுரைகளும் பாராட்டும் என் எழுத்துக்குப் பலவாறு துணைபுரிந்துள்ளன.

“வண்ணை தெய்வம்” என்ற பத்திரிகை பல சிறந்த கலைஞர்களுடைய வரலாறுகளைத் தந்துதவும் ஏடு.

யாழ். வண்ணார்பண்ணையென்னும் தமிழ்ச் சான்றோரின் திருத்தலம் இளமையிலே அவருக்கு தமிழ்ப்பற்றின் விதைகளைத் தூவியுள்ளது.

## பாடையிலே போகும்போது


கோடையிலே எரிவெய்யிலில் காயும்போது
கொப்பளிக்கும் தமிழ்வெள்ளம் தோயவேண்டும்
வாடைதரும் ஊதலிலே நடுங்கும்போது
வாழ்ந்த தமிழ்க் கதிரென்னைக் காயவேண்டும்
பாடையிலே படுத்தூரைச் சுற்றும்போது
பைந்தமிழில் அழுவோசை கேட்க வேண்டும்
ஓடையிலே என்சாம்பல் கரையும்போது
ஒண்தமிழே சலசலத்து ஓய வேண்டும்

**கவிஞர் ராஜபாரதி மட்டுநகர்.**

சட்டத்தரணி ஜெயசிங்கம் J.P., U.P.M.

33

# குலம் செய்த தவம்



கலைஞர் கருணாநிதி அவர்களுக்கு வாய்த்த ஒரு மருமகனார் இருந்தார். அவர் பெயர் முரசொலி மாறன். மத்திய மந்திரி சபையின் அங்கத்தவராயிருந்து காலம் சென்றுவிட்டார் இருதய நோயால்.

கருணாறிதி தனது மக்கள் எல்லாரிலும் பார்க்க மருமகனாரில் பாசம் கொண்டவரென்பதைப் பலர் சொல்லியிருக்கிறார்கள். எனக்கும் ஜெயசிங்கம் என்பவர் பிரிய மருமகன். எனது பிரிய அக்காவின் மகன்.

சட்டத்தரணி ஜெயசிங்கம் அவர்கள் யாழ். வழக்காடு மன்றத்துக்குச் சென்று திரும்பும் வழியில் குடிபோதையில் 'வான்' ஒன்றினைச் செலுத்தியவனால் தாக்கப்பட்டு அந்த இடத்தில் மரணமடைந்தார்.

அமரர் ஜெயசிங்கம் அவர்கள் சட்டத்தரணியாகவும் பதில் நீதவானாக வும் பணிபுரிந்து வந்ததோடு ஆதரவற்றவர்களுக்காகவும், ஏழைகளுக் காகவும் வாதாடி வழக்குரைத்து வந்தமையால் யாழ்ப்பாணத்தில் புகழ்பெற்ற வழக்கறிஞராய் விளங்கினார்.

அவருடைய இறுதிக் கிரியைகள் நடந்து பாண்டியன்தாழ்வு அன்னம்மாள் தேவாலயத்தில் திருப்பலி நிறைவேறியபோது அவர் இல்லத்தில் இருந்து கோவில் வரை தேங்கி நின்ற சன வெள்ளமே அவருடைய மதிப்புக்கும் பண்புக்கும் சாட்சி கூறுவதாயிற்று.

சத்தியத்தை நேசித்தவராய், நீதியை ஆராதித்தவராய், உண்மைக்கு உழைத்தவராய், மனித நேயத்துக்காக வாழ்ந்தவராய் ஜெயசிங்கம் அவர்கள் போற்றப் பெற்றார்.

கோவிலில் உரையாற்றிய நீதிபதியும், வீட்டில் இரங்கலுரையாற்றிய வழக்கறிஞர்களும், வேறு பல சான்றோர்களும் ஜெயசிங்கம் அவர்கள் ஏழைகளுக்காகவே வாழ்ந்தாரெனக் கண்ணீர் அஞ்சலி செலுத்தினார்கள்.

வழக்குத் தவணை குறித்து வீட்டுக்கு வருகிறவர்களிடம் காலையில் சாப்பிட்டீரா? காரைதீவுக்குப் போகக் காசிருக்கா? என்று கருணையுடன் கேட்டு அவர்களுக்கு உணவு கொடுக்கும் ஒரு சட்டத்தரணியாக வேறெவரையும் சுட்டிக் காட்டமுடியாது.

**என் பிரிய ஜெயசிங்கமே,**
லண்டன் மாநகரில் கடந்த 20 ஆண்டுகளாக வாழ்ந்து வரும் எனக்கு யாழ்ப்பாணத்தில் ஒரு ஜீவநதியாக நீ வாழ்ந்து வந்தாய்.

என்னை முற்றத்தில் கண்டுவிட்டால் சூரியனைக் கண்ட சூரியகாந்தி மலர்போல முகம் மலர்வாய்; கட்டி அணைப்பாய்; மாமா என்று நீ அழைக்கும் இரண்டெழுத்தில் அன்பும் மதிப்பும் கசிந்து கண்ணில் துளிகள் விழும். தேனும் பாலும் கலந்த சொற்கள் உன் வாயில் உதிரும்.

அவ்வையாருக்கு நெல்லிக்கனி கொடுத்த அதியமானின் தமிழன்பும் உனது தமிழன்பும் அணிலின் வரிகள்போல் ஒன்றிணைந்தவை. உன்னிடம் உள்ள சிறந்தவை. அத்தனையும் எனக்குத் தந்தால்தான் உனது பொச்சம் அடங்கும்.

நீ இந்த உலகை விட்டுப் போகுமுன்னர் எனக்கு எழுதிய கடிதத்தில் லண்டனுக்கு வந்து இரண்டு வாரம் தங்கிப்போக விரும்புவதாய் குறிப்பிட்டிருந்தாய். ஒரு மாசமாவது இங்கே தங்குமாறு கேட்டிருந்தேன். ஆனால் இடையில் இயமன் குறுக்கிட்டான்.

நீ இந்த உலகைப் பிரிந்த சேதியைக் கேட்டதும் அதை என்னால் நம்பவே முடியவில்லை. துடிதுடித்துப் போனேன்.

என் அந்திய காலத்தில் இந்தக் குளிர் நாட்டில் கிடந்து நடுங்காமல் உன் காலடிகளில் வந்து கிடந்து உயிரை விடலாம் என்று மனக்கோட்டை கட்டினேன்.

பெலத்துப் பேசி அறியாதது உன் குரல், அன்பு, பாசம், உறவு என்பவற் றுக்கு அற்புதமான இலக்கணம் நீதான். உருசியான மருந்து மாத்திரை யானாலும் அதில் பாதி மாமாவுக்கு என்று நினைக்கும் உன் ஆன்மா.

உண்மை, கருணை, பாசம், பற்றுதல், எளிமை என உனது சிறப்பான இயல்புகளைப் புகழ்ந்து பேசுவோர்களிடம் நான் "குலம் செய்த தவம்" என்று கூறியதுண்டு.

யாழ். ஆயர், குருமணிகள், சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர், இலங்கை வங்கி அதிபர், வைத்திய பீடத்தினர், பல்கலைக்கழகச் சான்றோர் என யார்தான் உன்னைப் போற்றாதவர்கள்?

என்னுடைய எழுத்துக்களிலும் கவிதைகளிலும் உனக்கிருந்த பற்று எல்லையற்றது. எந்தப் பத்திரிகையில் எந்த ஆண்டு மடலில் எந்த நூலில் எந்த வெளியீட்டில் அமுது என்று கண்டாலும் ஆனந்தமாக அதைத் தேடிப் பாதுகாத்து உறுதிகளோடு வைத்திருப்பாய்.

நான் பாதுகாத்து வந்த எனது கவிதைகள் அனைத்தும் தொலைந்து தாலி பறி கொடுத்த பத்தினியாய் உன்வாசல் வந்தபோது சிரித்தபடி

சென்று உனது தேடிய தேட்டத்தைத் தந்தாய். அதுவே "அமுதுவின் கவிதைகள்" என்ற நூலாக வெளிவந்தது.

குசேலருக்கு வாய்த்த துவாரகை போல உன் கையிருப்பு எனக்குக் கிடைத்தது. நான் ஒரு கவிஞன் என்பதோடு ஒரு சித்திரக் கலைஞன் என்பதையும் நீ அறிவாய்.

நான் லண்டனில் இருந்து அங்கே கொண்டுவரும் காற்சட்டை, 'சேட்டுகள்' எல்லாம் கேட்டுக் கேள்வி இன்றி எடுத்து அணிவாய். போவாய் - வருவாய். எக்காலத்திலாவது நான் அதையிட்டு வாய் திறந்ததில்லை.

இவ்வாறு நீ செய்வது என்மேல் உனக்குள்ள அன்புத் தாகத்துக்குத் தண்ணீர் ஊற்றுவதாக எனக்கு இதயம் சொல்லும்.

உனது பாரியார் உனது சொற்கடவாத பதிவிரதை. மாமாவுக்கு இன்றைக்கு இதைச் செய்து வை என நீ சொன்னால் அவள் நாலு செய்து வைப்பாள். அவள் வசிட்டனுக்கு வாய்த்த அருந்ததி.

இப்போது ஆயிரம் ஆயிரம் அனாதைப் புதையல்கள் உனக்குள்ளே யிருந்து கூக்குரலிட்டு என்னை அழைக்கின்றன.

நீ வாழ்ந்து வந்த இல்லத்துக்குப் போனால் அங்கே மாலை போட்டவாறு உனது நிழற்படம். அதைப் பார்த்து மாலை மாலையாக என் கண்ணீர் சொட்டுகிறது.

கண்ணீர் தெய்வீகத் திராட்சைகளின் இரசம். ஆறுதலுக்கு இராசபானம்.

எனது இரங்கற் பாடல்களாகிய கையறுநிலைக் கவிதைகள் கண்ணீரில் எழுதிய கல்வெட்டுக்கள்தான்.

காவலன் அசிரியர் அருள்திரு. ரூபன் மரியாம்பிள்ளை

34

# பஞ்சவர்ணத்தில் பட்டுச் சேலை



'**பா**துகாவலன்' பத்திரிகை இலங்கையில் வெளிவந்த மூத்த பத்திரிகைகளில் ஒன்று.

அது கடந்த 130 ஆண்டுகளாக வெளிவரும் ஒரு சிறந்த வாரப் பத்திரிகை.

"நான் இளமையில் ஆடிய தொட்டில் அதுதான்" என்று கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தேன்.

"எழுத்தாளருக்கு ஒரு தூது" என்று யான் எழுதிய முதலாவது கட்டுரை பாதுகாவலனில் முதலாம் பக்கத்தில் வெளிவந்ததைக் கண்டு நானே பரவசம் அடைந்தேன்.

தொடர்ந்து காவலனில் அடிக்கடி எழுதி எனது கைவரிசையைக் காட்டினேன். பாதுகாவலன் ஆசிரியராக நீண்ட காலம் பணியாற்றியவர் ஆசிரியர் ஞானப்பிரகாசம் என்பவர்.

அவர் ஒரு எழுத்தாளராகவும், ஒழுக்க சீலராகவும், திருச்சபையின் உண்மைத் தொண்டனாகவும் பணியாற்றி வந்தார்.

அடியேன் 'ஞானி' என்பவரைப் பின்பற்றிக் கவிதைகள் எழுதத் தொடங்கினேன்.

இலக்கண விதிகளுக்கு அமைவாக எண்சீர் விருத்தப் பாக்களையும், அறுசீர் விருத்தங்களையும் எழுதினேன்.

அவற்றைப் புகழ்ந்து பாராட்டி "உமது கவிதைகள் எல்லாருக்கும் இலகுவாக விளங்குகின்றன. அருளப்ப நாவலரைப் போல நம்பிக்கையாக வருவீர்" என்று வியந்து பேசினார்.

நான் தொடர்ந்து வேறு பத்திரிகைகளுக்கும் எழுதி ஒருவாறு எனது காலைப் பதித்து வந்தேன்.

**சத்தியத்தின் குடைபிடித்து நேர்மை என்ற**
**சாகாத வரமளிக்கும் ஆடை சாத்தி**
**எத்திக்கும் இறைமகனார் இயேசு தந்த**
**இணையற்ற சிலுவையெனும் கொடியை ஏந்தி**

............................................... என்று காவலன் புதுவருட ஆண்டு மடலுக்கு அடியேன் எழுதிய பாட்டொன்று நினைவில் வருகின்றது.

"'மாதா அஞ்சலி" என்று 53 விருத்தங்களை எழுதினேன். தொடர்ந்து அந்தப் பாடல்கள் காவலனில் வெளிவந்தன.

இறுதியான 3 பாடல்களும் வெளிவந்தபோது ஒரு மாதாவின் பக்தர் அந்தப் பாடல்களை நூலாக வெளியிட எனது அனுமதியைக் கேட்டார்.

எனக்கு ஏற்பட்ட மகிழ்ச்சிக்கு எல்லை இல்லை. மாதா அஞ்சலி என்ற நூல் எனது முதல் நூலாகச் சூசைமாமுனிவர் அச்சகத்தில் இருந்து வெளியாயிற்று.

கட்டுரைகளையும் கவிதைகளையும் எழுதியனுப்புமாறு அடிக்கடி காவலன் ஆசிரியர் எனக்கு மடல் எழுதுவார்.

அந்நாட்களில் யாழ்ப்பாணப் பட்டினத்தில் மக்களின் அன்புக்கும் பெரும் மதிப்புக்கும் உரியவராய் வாழ்ந்துவந்த செவாலியர் அருளானந்தம் அவர்கள் எனது கவிதை ஒன்று காவலனில் வெளிவந்திருந்ததைப் பாராட்டித் தனது தியானத்துக்கு அது மிகத் துணைபுரிந்தது என்று எழுதியதை வாசித்து நான் அதிர்ச்சியடைந்தேன்.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் என்ற பன்மொழிப் புலவர் ஒருமுறை ஆசிரியர்கள் முன்னிலையில் என்னைப் பாராட்டியதையும் நான் மறக்காமல் எனது இதயம் என்ற குளிர்ப்பெட்டியில் பூட்டி வைத்திருக்கிறேன்.

காவலன் ஆசிரியரின் ஆதரவும், பாராட்டும், ஊக்கமும், தூண்டுதலும் அடியேன் ஒரு எழுத்தாளனாவதற்கான விட்டமின் மாத்திரை களாயிருந்தன.

அதிபர் கவிமாமணி க.த. ஞானப்பிரகாசம் அவர்கள் பாடசாலை வைரவிழா ஒன்றில் என்னை அழைத்து, பாதுகாவலன் ஆசிரியரைக் கொண்டு எனக்குப் பொன்னாடை போர்த்துக் கவிஞர் என்ற பட்டமும் அளித்து, அக்காலத்தில் பாராட்டியிருப்பதை நினைந்தால் என் உடலம் புல்லரிக்கிறது.

பாதுகாவலன் ஆசிரியர் இளைப்பாறியபோது அவருக்குத் தேன் தமிழில் ஒரு பிரியாவிடைப் பத்திரத்தை அடியேன் எழுதியிருந்தேன்.

அவரின் பின்பு காவலன் ஆசிரிய பதவியைப் பெற்றிருந்தவர்களும் என் கவிதைகளையும் கட்டுரைகளையும் பிரியமாக வெளியிட்டனர்.

மாதா அஞ்சலி என்ற சிறிய நூல் வெளியீட்டின் பின்பு நீண்டகாலம் நூல் வெளியிட வாய்ப்புகள் வரவில்லை.

'நெஞ்சே நினை' என்ற நூலை எழுதிப் பல ஆண்டுகளாக அச்சேற்ற இயலாமலிருந்தேன்.

பின்னர் யாழ் மறைமாவட்ட இலக்கியக் கழகத்தின் முதல் வெளியீடாக அந்த நூல் வெளிவந்தது.

நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசரின் வாழ்க்கை வரலாறு நூலாக வெளிவரவேண்டும் என்பதில் ஆயர்மணி தியோகுப்பிள்ளை பெருந் தாகமாயிருந்தார்.

பேராதனைப் பல்கலைக்கழகப் பேராசிரியர்களின் பாராட்டுகளோடு அந்நூல் புனித வளனார் அச்சகத்தில் இருந்து வெளிவந்தது. இதையே என்முதல் நூல் எனலாம்.

இப்போது எனது கடைசி நூலும் அதே அச்சகத்தில் இருந்து வெளிவருவது இறைவன் எனக்களித்த ஆசீர்.

இப்பொழுது காவலன் ஆசிரியராயும், அச்சக இயக்குநராகவும் பொறுப்பேற்றிருக்கும் அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை அடிகளார் அவர்கள் முன்னர் அங்கிருந்த ஆசிரியர் ஞானப்பிரகாசம் என்பவர் போல என்னில் அன்பும், மதிப்பும் கொண்ட பேரறிவாளன்.

எனக்குச் செவாலியர் பட்டமும் விருதும் கிடைத்தபோது அதனைத் தான்பெற்ற விருதாக நினைந்து பாராட்டியவர்.

பல காவலன் இதழ்களில் என்னையிட்டு எழுதி அடியேனைத் தூக்கிக் காட்டியவர்.

எழுத்தாளர்களையும் இளங் கவிஞர்களையும் ஊக்கப்படுத்துவதில் அயராத ஆர்வம் கொண்டவர்.

காவலன் பல்வேறு அங்கங்களிலும் சிறந்து விளங்கவேண்டுமெனச் சிந்தித்துப் பணிபுரியும் தியாகி.


இந்த நூலுருப் பெறத் தாயும் தந்தையும் அவரே! இதைப் பஞ்சவர்ணப் பட்டுச்சேலை ஆக்கிவிட்டார். அடியேன் இதனை எழுதியிருந்தாலும் அடிகளார் கண்ணும் கருத்துமாய் இருந்து நூலைச் சிறப்பான உருவத்தோடு உங்கள் கைகளில் விரிய மலராக்கி வைத்தவர்.

வளனார் அச்சகத்தின் சிறப்புக்கு அச்சுத்தேர் இழுக்கும் அன்பர்களுக்கு நன்றி.

முகத்தார் எஸ். யேசுரட்ணம்

35

# நல்லோர் மதிக்கும் நாடக மாமணி



எல்லார் வாயிலும் நல்ல வோர் நடிகனென நயம்படப் பேசப்படுகிறவர் முகத்தார்.

வருவோர்கள் வாழ்த்துவதும் போவார்கள் புகழுவதும் அங்கே கேட்கலாம்..

வரும் நூறாண்டு வாழ்த்தும் படிக்கு ஒரு நூலையும் எழுதியுள்ளார். அதன் பெயர் "முகத்தார் வீட்டுப் பொங்கல்".

இலங்கை வானொலியைப் பற்றி இரண்டு மூன்று வரிகள் படித்தவர்கள் கூட முகத் தாரைப் பற்றி அறியவில்லை யென்றால் அது அதிசயந்தான்!

ஒரு நாடகம் இலங்கை வானொலியில் 585 வாரங்கள் தொடர்ந்து நடைபெற்றதென்றால் அது முகத்தார் யேசுரட்ணம் அவர்கள் தானே தயாரித்து நடித்த "முகத்தார் வீடு" தான்!

வானொலித் துறையில் இதை ஒரு சாதனை என்று கூறலாம்.

"ஆயரின் மெழுகுவர்த்தி" என்ற ஆங்கில நாடகத்தை இளவாலை என்றியரசர் கல்லூரியில் நடித்தார்.

அந்த அபூர்வமான நாடகத்தில் கள்வனுக்கு நடித்து முடித்தபோது ஒரு கண்கூடக் கைதட்டின.

அரசாங்கத்தின் உச்சக் கிளைகளில் ஏறியிருந்தபோதும் ஒலிபரப்புத் துறையில் ஓயாமல் ஈடுபட்டு வந்தார்.

எனது சுதந்திர தாகம் என்ற நாடகத்தையும் நடித்தார்.

அவருடைய தடித்த குரல், முகபாவம், மீசை, வசீகரமான சிரிப்பு, யாழ்ப்பாணத் தமிழ் - அதற்கேற்ற உச்சரிப்பு எல்லாம் அவரை உச்சிப் படிகளில் ஏற்றிவிட்டன.

யான்தான் இளமையில் ஊக்கமும் ஆக்கமும் தந்ததாக அவர் எழுதியிருந்தாலும் நடிப்பு அவரோடு கூடப்பிறந்த பிறவி.

அவருடைய தாயார் ஒரு ஆசிரியை. செந்தாமரையால் முகம் கழுவிய தோற்றமுள்ளவர். தேனை நாவில் பூசிக் கொண்டு பேசும் சீதை.

"மாமி" என்று மனையாள் அழைக்கும்போது அந்தப் பாசக் குரலில் எள்ளுப் பாகின் இனிமை தெரியும்.

வெள்ளித் தட்டில் நெல்லுச் சோறு போட்டு அள்ளித் தீத்தி வளர்த்த செல்லப்பிள்ளை.

சண்டியன் சின்னத்தம்பி, லண்டன் மாப்பிள்ளை, மாடிவீட்டு மருக்கொழுந்து, போச்சடி பத்தாயிரம்..... என்று பல பிரபல்யமான நாடகங்களால் கொடிகட்டியவர்.

இவருடைய நாடகங்கள் மாலை வேளைகளில் வீடுகளில் மாத்திரமன்றி, தெருவிலும், வயல்வெளிகளிலும், இலை குழைகளிலும் கேட்டது.

இவருடைய வசனங்களைப் பனை வட்டுகளில் கூடப் பாராயணம் செய்து சொல்லுவார்கள்.

நாடகங்கள் பூவில் நெய்த சேலைகள், விரித்தால் பூஞ்சோலைகள்.

வசனங்களில் நகைச்சுவை ததும்பும். குடும்பங்களில் அவை அடுப்படி போலக் கிட்டடியில் இருந்து சுவை நீட்டும்.

முகத்தார் இலங்கையில் 'வாடைக்காற்று' என்ற திரைப்படத்தில் நடித்து ஜனாதிபதி விருதையும் பெற்றவர்.

இப்போது பரீஸ் நகரில் வாழ்ந்து வருகிறார்.

ஒலிபரப்புக் கூட்டுத்தாபனங்கள், வானொலி நிலையங்கள் என்பவற்றில் அவர் கைவரிசை தெரிகிறது.

இளவாலை மக்கள் சேர்ந்த கூட்டங்களில் பேசும்போது என்னையும் சேர்த்துக் கொள்ளாவிட்டால் அவருக்குப் பத்தியப்படாது.

தனது பேச்சுக்கும் எழுத்துக்கும் உப்புப் போட்டது போலக்கதைக்காகச் சேர்த்துக் கொள்ளுவார்.

அடியேன் பரீஸ் நகரத்துக்கு எந்த விழாவுக்குப் போனாலும் அங்கே வண்ணைத் தெய்வம் என்ற முத்தமிழ் அறிஞரையும், தம்பி முகத்தார் யேசுரட்ணம் அவர்களையும் காணலாம்.


எனது நூல்களிலும், எழுத்திலும், பேச்சிலும் உண்மையான இரசிகத் தன்மையும், அன்பும் பெருமதிப்பும் வைத்துக் கொண்டு என்னை ஊக்கப்படுத்தும் பேரன்பர்களில் ஒருவராய் இருக்கிறார்.

புலம்பெயர்ந்த நடிகர்கள் முகத்தாரில் நகைச்சுவையின் நாடி நாளங்கள் ஓடுவதைக் கண்டு அவரை ஆராதிக்கிறார்கள்.

கலைமாமணி, கலைப் பூபதி, என்று பல பட்டங்களைக் கொடுத்து கலையுலகம் அவரைப் பாராட்டியுள்ளது.

36

# ஈழத்தில் உதயம் செய்த இசை நிலா



இசைக்கு அடிமையாகாதவர்கள் இல்லை என்பார்கள்.

ஞானத்தில் சிறந்த பரத கண்டத்தில் கானத்தில் பேரும் புகழும் பெற்றிருந்தவர் திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி.

ஐக்கிய நாடுகள் சபையிலும் இந்த இசையரசியின் குரல் ஒலித்திருக்கிறது. அன்று "இந்த அம்மையார் கால் வைத்த இடத்தில் ஏன் ஒரு பல்கலைக்கழகம் இயங்கக் கூடாது?" என்று கேட்டார் அமரர் திரு. சு. நடேசபிள்ளை.

நடேசபிள்ளை அவர்கள் யாழ்ப்பாணத்துச் சான்றோர்களில் ஒருவர். மேலும் அவர் சேர். பொன். இராமநாதன் அவர்களின் புத்திரியை மணம் புரிந்தவர். தமிழ் இலக்கியங்களிலும், இசையிலும் தேர்ச்சி பெற்றிருந்தவர். பாராளுமன்ற அங்கத்தவர்.

திருமதி எம். எஸ். சுப்புலட்சுமி அவர்கள் பரமேஸ்வராக் கல்லூரி மண்டபத்தில் இசைக் கச்சேரி ஒன்றை நடத்தினார். (1939ஆம் ஆண்டு என நினைக்கிறேன்) இதுதான் நான் முதன் முதல் கேட்ட இசைக் கச்சேரி.

சங்கீத ஞானத்தின் உச்சிப்படிகளை நான் தடவியதில்லை. என்றாலும் இசை வரிசையின் ஆனா ஆவன்னாத் தெரியாதவர்கள்கூட எம்.எஸ். அவர்களின் இனிய ஓசையைக் கேட்டிருந்தால் அதில் மயங்கி விடுவார்கள் என்பது நிச்சயம்.

இசை ஞானத்தின் எல்லைக் கோடுகளை முட்டியவர்களே எம். எஸ். உடைய கானத்துக்கு ஒப்பாகப் பாடுவதற்கு ஒருவருமில்லை எனக் கூறுவதுண்டு.

யாழ்ப்பாணமும் பரமேஸ்வராக் கல்லூரியும் ஏன் இலங்கையுமே முன்பின் இவ்வாறான தேனிசைப் பாடல்களைக் கேட்டிருக்குமோ என்பது சந்தேகந்தான்!.

சில காலத்துக்கு முன்பு லண்டனில் நடைபெற்ற இசைக் கச்சேரி ஒன்றுக்குப் போயிருந்தேன். ஈழத்துச் சீர்காழி என அழைக்கப்பெறும் இசை மன்னன் மாணிக்கம் யோகராசா அவர்கள் பாடிய இசைக் கச்சேரி தான் அது.

ஈழத்து அறிஞர் சிவபாதசுந்தரம் அவர்களும் அங்கே வந்திருந்தார். அவர் உரையாற்றிய பின் அடியேன் உரையாற்றும்போது யாழ்ப்பாணத் தில் நான் எம். எஸ். அவர்கள் நிகழ்த்திய இன்னிசைக் கச்சேரி ஒன்றைக் கேட்ட வரலாற்றை விளக்கினேன்.

அன்று நிகழ்ச்சிகள் நிறைவுற்று நான் வெளிவாசலில் வந்து நின்றபோது, உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த பெண் ஒருவர் என்னிடம் வந்து தானும் இளம் வயதில் பரமேஸ்வராக் கல்லூரியில் நடைபெற்ற

எம். எஸ். உடைய இன்னிசைக் கச்சேரியில் பங்குபற்றியதாகவும் அதைத் தான் மறக்கவில்லை என்றும் எனக்குக் கூறினார்.

எம். எஸ். அவர்கள் கச்சேரியின்போது, வீணை, மிருதங்கம், கடம், வயலின் வாசித்தவர்களும் கலைஞர் சிகரங்கள்தான்.

அந்த இசை நிகழ்ச்சி இன்றும் என் காது மடல்களுக்குள் எங்கேயோ ஒளித்திருந்து இடைக்கிடை விழித்துப் பார்க்கிறது.

இசை என்பதன் மலர்ச்சியை நான் மட்டிட்டறிந்த நாளை மறக்கமுடியுமா?

ஆரம்ப காலத்தில் சகுந்தலை, பக்த மீரா என்னுந் திரைப் படங்களில் அவர் தோன்றியிருந்தாலும் பின்னர் அதை நிறுத்திவிட்டார்.

எழுத்துலகில் கொடிகட்டிப் பறந்த பேராசிரியர் கல்கி அவர்கள் ஆனந்த விகடன் பத்திரிகை ஆசிரியராயிருந்து, அரசியலில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றார்.

பின்னர் அவரை ஆனந்தவிகடன் ஏற்றுக் கொள்ளவில்லை.

ஒரு புதிய பத்திரிகை ஒன்றை உருவாக்கக் கல்கி எண்ணியபோது அதற்குக் கைகொடுத்தவர் இந்த இசைச் செல்வியே!

இவருடைய இசைக் கச்சேரியால் சேர்ந்த நிதியம் 'கல்கி' என்ற பத்திரிகை தோன்றவும், அதனால் தமிழ் துள்ளிக் குதிக்கவும் காரணமாயிற்று.

பேனா மன்னர் கிருஷ்ணமூர்த்தி, (கல்கி) சதாசிவம் அவர்களுடைய கையைப் பிடித்தார். சதாசிவம் அவர்கள் தன் பத்தினி எம். எஸ். அவர்களின் கரங்களைப் பிடித்தார். இசை மழை கொட்டியது. கல்கி பத்திரிகை உதயமானது. கல்கி பத்திரிகையின் பள்ளி எழுச்சியின் சலங்கைச் சத்தம் தமிழ் பேசும் உலகெங்கும் கேட்டது.

பாரத நாட்டில் பல சிறந்த நற்பணிகளுக்காக எம். எஸ். அவர்களின் தங்கக் குரல் பயன்பட்டது.

குயிலின் குரலைக் குத்தகைக்கு எடுத்திருந்த இசையரசி சிறந்த ஒழுக்க சீலியாகவும், மாதர்களுக்கு ஒரு மாணிக்க மாலையாகவும் வாழ்ந்து வந்தார்.

"தெய்வ பக்தியும், எளிமையும், கணவன் எதைச் சொன்னாலும் மறுத்துக் கூறி அறியாத மரியாதையும், பிறரிடம் காட்டும் பணிவும், உலகில் இன்னும் தெரிந்து கொள்ள வேண்டியவை அதிகம் உண்டென்ற மனப்பக்குவமும் அவருடைய புகழுக்குக் காரணங்கள் என்பது எனது தாழ்மையான கருத்து" என்று இசைமேதை எம். எல். வசந்தகுமாரி அவர்கள் 22-01-1987 இல் குறிப்பிட்டிருப்பதை இங்கு நினைவு கூரலாம்.

**ஆரா அமுதே அரசே** என்ற பராபரக் கண்ணிகளைத் தொடங்கி
"**எல்லாரும் இன்புற்றிருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்று அறியேன் பராபரமே**" என்ற தெய்வ வணக்கத்துடன் அவருடைய பாடல்கள் ஆரம்பமாவது வழக்கம்.

பம்பாயில் நடைபெற்ற இசைக்கச்சேரி ஒன்றில் இரண்டு மணி நேரம் மின்சாரம் நின்றுபோனது. அங்கிருந்தோர் கச்சேரியைத் தொடங்குமாறு வேண்டினர். 2 மணி நேரமும் கச்சேரி தொடர்ந்தது. "இப்படி அமைதியாக அம்மாவின் இசையைக் கேட்டதில்லை." என்று சுவாமி சின்மயானந்தா அவர்கள் கூறினார்கள்.

தாமரையின் தேன் எடுத்து, அடிக்கரும்பின் சாறெடுத்து, கட்டித் தயிர் கடைந்து நெய்யெடுத்து, தங்கமென்ற உடலெடுத்து ஈழத்தின் காதுகளுக்கு விருந்து வைத்த இசையரசியை வாழ்த்த வேண்டும்.

அன்று ஈழத்தில் பல்கலைக்கழகம் என்னும் கலைக்கோயில் தோன்று முன் அந்தத் திருநெல்வேலி மண்ணில் உதயம் செய்த அதே நிலா—

பின்பு பரத நாட்டின் அறப்பணிகளுக்காகக் குரல் கொடுத்த அதே நிலா —

இசை வெள்ளத்தால் தமிழ் பேசும் மக்களின் இதயங்களை ஈரமாக்கிய அதே நிலா —

ஒழுக்கம், அமைதி, அடக்கம், எளிமை என்பவற்றால் இசை ஒளிக்குப் பெருமை சேர்த்த அதே நிலா —

இந்த இசைத் தேவதை தோன்றிய மண்ணில் ஒரு பல்கலைக்கழகம் தோன்ற வேண்டும் என்ற பேராசையைத் தன் திருப்பாடல்களால் மானசீகமாய் நிறைவேற்றிய அதே நிலா —

இன்றும் தன் இசை அருவியால் குளிப்பாட்டி வருகிறது அதே நிலா—

இசையைக் கலையைப் போற்றவும், இன்னுயிர்த் தமிழைக் காக்கவும், ஈழத்தாயை வாழ்த்தவும் இன்றெமக்கருள்வாய் இறையவனே

அடியேன் வேதாகமத்தையும், கீதாஞ்சலியையும், திருக்குறளையும், கம்பன் காவியத்தையும், கண்ணதாசன் பாடல்களையும், இசையரசி எம். எஸ். அவர்களின் இசைத்தட்டுகளையும் என் நூலகத்தில் மேல் வரிசையில் வைத்துள்ளேன்.

## வில்லாண்ட பரம்பரை

எங்கள் நிலம்மீது மழை கொண்டுவந்த முகிலுக்கு
ஐம்பது அகவையாகிறது.
எம்மீது இருள்கவிந்த வேளையில் ஒளி கொண்டுவந்த
வெய்யிலுக்கு வயது ஐம்பதாகிறது.
ஐயனே! கடுங்கோடை எரித்த நிலம்மீது நீயே
மழைத்துளி ஆகிவந்தாய்.
காரிருள் சூழ்ந்த பொழுதுகளில் நீயே சோதிப் பிளம்பாகித்
தோன்றினாய்.
நெடுங்காலம் தலைநிமிராதிருந்த பரம்பரை நின் வரவுக்குப்
பின்னரே மீண்டும் முடிதரித்தது.

**கவிஞர் புதுவை இரத்தினதுரை**

அறிஞர் தாசீசியஸ்

37

# கொஞ்சும் தேன்மொழியில் நெஞ்சுக்கு விருந்து வைத்தவர்

வரலாற்று நதியின் வாரிசுகளில் ஒருவராக அறிஞர் தாசீசியஸ் அவர்களைக் குறிப்பிடலாம்.

ஈழநாட்டிலிருந்து லண்டனுக்கு இடம்பெயர்ந்து வந்தவர்களுக்கு உணவுத் தட்டுப்பாடிருக்கவில்லை. குளிர்பானங்களுக்கும் குறைவில்லை. பசித்த முகம் பார்த்துப் பதறும் நிலை பார்த்துப் பாலும் பழமும் கொடுக்கவும் பலர் இருந்தனர்.

ஒரே ஒரு குறைதான் புலம்பெயர்ந்து வந்தவர்களை வாட்டி வதைத்தது. சொந்த நாட்டில் நடைபெறும் உண்மையான நிகழ்ச்சிகளை அறிய முடியாமல் அந்தரிக்க வேண்டியதாயிற்று.

பிரித்தானிய வானொலியிலும், தொலைக்காட்சியிலும் வெளிவரும் கடுகுச் செய்திகளும் அரசாங்க ஊதுகுழலில் இருந்து கறந்தவையாயிருந்தன.

தமிழ் ஈழத்தின் துயரத் தொட்டில்களின் அருகே சென்று, நமது உடன்பிறப்புகளின் துன்பச் செய்திகளைப் பிழிந்து எடுத்து, எல்லோரும்

காது கொடுக்குமாறு இனிய தேன்மொழியில் புதிய வாத்தியம் ஒன்றை எடுத்து இசைக்க வேண்டுமெனப் பேராசை கொண்டார் முத்தமிழ் அறிஞரான தாசீசியஸ் அவர்கள்.

இந்தத்தமிழ் உறவின் ஆசைச் செடி முளைத்து வேர் விட்டு விருட்சமாகி ஐரோப்பிய நாடுகளுக்கும் கிளை பரப்பியது. அதன் பெயர்தான் அனைத்துலகத் தமிழ் வானொலி என்பது.

எனவே அனைத்துலகத் தமிழர் வானொலிக்கு ஆனா எழுதியவர் என்று ஆயிரக் கணக்கானோர் சூழ்ந்திருக்க ஒலிபரப்புத் துறையின் சிகரம் அப்துல் ஹமீது அவர்களுக்கு லண்டனில் விழா எடுத்தவேளையில் தலைமை தாங்கிய அறிஞர் தாசீசியஸ் அவர்களைப் பார்த்து அடியேன் கூறியிருப்பது - அதுவும் மேடையில் தோன்றிய முதற் பேச்சாளன் கூறிய முதல் வசனமாகச் சொல்லியிருப்பது - என் நெஞ்சில் தோன்றிய நினைவுச் சுடர்தான்!

அப்துல்ஹமீது அவர்களுக்கு லண்டன் மாநகரே மூக்கில் கை வைக்குமாறு இந்த விழாவை எடுத்த செயல்வீரன் எஸ். கே. ராஜன் அவர்கள்.. விழாவின் தலைவராக அறிஞர் தாசீசியஸ் அவர்களை அழைத்தது தமிழுக்கும் வானொலிக்கும் அவரிட்ட மல்லிகை மாலையாகும்.

திரு. தாசீசியஸ் அவர்கள், இளமையிலே கலைப்பட்டதாரியாகிக் கல்லூரிகளில் ஆசிரியப் பணிபுரிந்து, கல்வி அதிகாரியானார். இலங்கையில் சிறந்த கலைஞர்களோடும், புலவர்களோடும், நாடக மேதைகளோடும் நட்புக் கொண்டு முத்தமிழில் ஆசனம் பெற்றவர்.

நாடக அரங்குகளில் அவருடைய பங்கை விரிப்பில் பெருகும்.

லண்டனில் வானொலியைத் தொடக்கிய 1997ஆம் ஆண்டில் செய்திகள், திரைப்பாடல்கள், விமரிசனங்கள், சிறுவர் பகுதி, வைத்தியம், காலைக்கதிர், நூலாய்தல், உரையாடல் என்று பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளைப் புகுத்தி ஒரு சிறந்த வானொலி எவ்வாறமைய வேண்டுமெனத் தன்வழி தனிவழியாகத் தீர்மானித்து எல்லாரும் போற்றும் வகையில் குரல் கொடுத்தவர்.

சிறந்த பேச்சாளன். அரிய சிந்தனையாளன். அனுபவ முத்திரைகளை அகன்றுவிடாமல் நெஞ்சமென்ற குளிர்ப்பெட்டியில் சேமித்து வைக்கும் மதியூகி. இசை, நாடகம் என்பவற்றில் பற்றும் பாசமும் கொண்ட சிவாஜி.

ஒரு நதியின் தெளிவும், மலையின் உறுதியும், காட்டின் அறிவுப் பரம்பலும், மருத நிலத்தின் மலர்ச்சியும் கொண்ட இந்த அறிஞர் புகழிலே தொட்டுப் பூசிக் கொள்ளாமல் ஒதுங்கி வாழும் ஒரு சித்தர்.

இனம், மதம், நாடு, என்ற பேதமின்றி எந்தத் திசையில் மல்லிகை மலர்ந்தாலும் அதனைப் போற்றும் இயல்புடையவர்.

ஈலிங் அம்மன் கோயிலில் ஒரு கவிதை நூலை வெளியிட்ட இளங்கவிஞர், தனது நூலுக்கு அறிஞர் தாசீசியஸ் அளித்த வரவேற்பையிட்டுக் கூரையும் மகிழுமாறு குரல் எழுப்பினார்.

எனக்கு எழுதிய மடல் ஒன்றில் அறிஞர் அவர்கள்

**புலவரில் புலவர் ஏறே**
**புதுச் சங்கம் கோர்க்கும் ஈழம்**
**புலவரில் உன்பேர் உலகப் பேர்** என என்னை உச்சியில் வைத்ததை நான் ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவருடைய உள்ளத்தை மனப் பூவால் அஞ்சலி செய்கின்றேன்.

எனது "அன்பின் கங்கை" என்ற நூலுக்கு அரங்கேற்ற வேளையில் கூறிய ஆய்வுரையை என் ஆயுள் மறந்தறியாது. ஈழத்துச் சான்றோர் வரிசையில் அவருக்கு அழியாப் பேருண்டு.



வித்துவான், தமிழ் ஒளி க. செபரத்தினம்

38

# மழைக்குப் புகழ் மாலையா?

மழைக்குப் புகழ்மாலை சூட்ட வேண்டுமா?

"மாரியை நோக்கிக் கைமாறு இயற்றுமோ வையம்" என்றான் கம்பன்.

நாக பாசம் நீங்கிய வரலாற்றை எழுத நினைந்த கம்பனுக்கு சடையப்ப வள்ளல்தான் நினைவில் ஓடி வருகிறார்.

சடையப்பனுடைய ஊரை அணுகியதும் கலைஞர்களுக்கும், அறிஞர் களுக்கும் பசி முழுதும் நீங்கி விடுவதுபோலக் கருடன் அணுகி வந்ததும் நாகபாசம் இருந்த இடம் தெரியாமல் அழிந்து போய்விட்டது என்று உவமை காட்டி அதனால் மனம் மகிழ்கின்றான் கம்பன்.

ஈழநாட்டுச் சான்றோர்களுடைய பசியைத் தீர்க்க வித்துவான் அவர்கள் குறித்த காலப் பகுதியில் வாழக் கிடைக்கவில்லை. 'அந்தச் சான்றோர்களைத் தக்கவாறு நம்முடைய சந்ததியார் அறிந்து கொள்ள முடியாத பசி இருந்து வந்தது. அதனைத் தீர்த்துவிட்டார் வித்துவான் அவர்கள்.

"ஈழநாட்டுச் சான்றோர்கள்" என்ற அருமையான ஆராய்ச்சி நூலை எழுதி எங்களுக்கு விருந்து வைத்தார். சைமன் காசிச் செட்டியாரில் இருந்து, பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை வரையும் உள்ள பதினெட்டுப் பெரியார்களின் வரலாறுகள் அதில் அடங்கியுள்ளன. ஒரு பல்கலைக்கழகம் ஆற்றவேண்டிய பணியைத் தனி மனிதன் முயற்சியாக வெளியிட்டிருப்பது போற்றிப் புகழ வேண்டிய செய்தியாகும்.

இதனைப் பாராட்டக் கிழக்குப் பல்கலைக்கழகம் வித்துவான் அவர்களுக்கு கலைமுதுமாணி (M. Phil) பட்டமளித்திருந்தது. இப்போது (2005) அவர் தமிழ்நாடும் ஈழத்துச் சான்றோரும் என்று .இன்னொரு நூலையும் எழுதி அச்சேற்றியுள்ளார். இதுவும் ஒரு ஆச்சரியமான ஆராய்ச்சிப் பணியாகும். தமிழுலகின் ஆராய்ச்சி ஆவணமாக இதுவும் புகழ் சூடிக்கொண்டது.

பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வந்தபோதே ஈழத்துச் சான்றோர்களைப் பற்றி எழுத வேண்டுமென அவர் கருதியிருந்தார்.

நாங்கள் இருவரும் பேராதனையில் ஒன்றாகவே படித்து வந்தோம். பேராசிரியர் செல்வநாயகம் அவர்களில் பேரன்பு கொண்டவர்களாக அவரை மதித்து வந்தோம்.

பேராசிரீயருடைய இலக்கிய நலனாய்வு எங்களுக்கு உண்மையில் ஒரு புதிய உலகத்துக் கதவுகளைத் திறந்துவிட்டது.

பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் சிவத்தம்பி என்போரும் பிற்காலத்தில் இலக்கிய நலனாய்தலில் சிறந்து விளங்குவதற்குப் பேராசிரியரே காரணமாய் இருந்திருக்க வேண்டும் என்பது அடியேனுடைய அபிப்பிராயம்.

வித்துவான் செபா அவர்கள் விபுலானந்த அடிகளாரிலும் ஒப்பற்ற உயர்ந்த மதிப்பைக் கொண்டவர்.

ஆகையால் விபுலானந்த அடிகளாரின் வாழ்வும் வளமும் என்ற நூலை எழுதினார்.

ஆசிரியராய், கல்லூரி அதிபராய், சமயப் போதகராய், தமிழ் ஆராய்ச்சி யாளராய், மேடைப் பேச்சாளராய்ப் பலதுறைகளில் அவருடைய சக்தி மலர்ந்தது.

சிறுகதைகள், நாடகங்கள், சமயப் பாடல்களிலும் அவர் சிறந்தவர் என்பதோடு புலமைப்பரிசில்களும் பெற்றவர்.

எனது கவிதைகளிலும் அவரை ஒரு காதலன் என்று கூறலாம். அவற்றைக் கூர்மையாக வாசித்து நயந்து அடிக்கடி பாராட்டுவார். தான் வெளியிடும் நூல் சூடு ஆறு முன் எனக்கொரு பிரதி அனுப்பாவிட்டால் அவருக்கு மனம் ஆறுதலடையாது.


என் பிரிய மகனார் பேராசிரியர் சந்திரகாந்தன் அடிகளாருடைய பேச்சிலும் எழுத்திலும் மிக்க ஆர்வமும் மதிப்பும் கொண்டவர். ஆதலின் ஈழத்துத் தமிழ்ச்சான்றோர் நூலுக்கு அவரே அணிந்துரை எழுதியுள்ளார்.



நல்லறச் செல்வன் மைக்கல் ஆபேற்பிள்ளை

39

# வானமும் பூமியும் வாழ்த்திடும் திருத்தலம்



**மை** சூரில் யாதவகிரி எனனும் இடத்துக்குப் போய் அமைதியான அந்த இடத் திலே நின்று யாரைக் கேட் டாலும் அந்த இல்லத்தைக் காட்டுவார்கள்.

அந்த இல்லம் அழகின் அரங்கம். அதன் முன்னால் போய் நின்றாலே உடலம் சிலிர்த்துப் போகிறது.

ஒரு சோலை வனத்துக்குள் புகுந்த பிரமிப்பு ஏற்படுகிறது. திரும்புகிற இடமெல்லாம் பசுமை. ஒன்பது ஆண்டுகளாகக் கட்டி டக் கலையில் சிறந்ததாகப் பரிசு பெற்றிருக்கிறது.

கொழும்புக் கோட்டைப் புகையிரத நிலையத்திலிருந்து கூப்பிடு தூரத்தில் ஒரு அழகான தெய்வீக ஆலயம் வீதியோரத்தில் எழுந்து நிற்கிறது.

நற்கருணை நாதர் ஆலயம் என்று கேட்டால் எந்தக் குஞ்சு குழந்தையும் அதனைக் காட்டிவிடுவார்கள். புனித பிலிப்பு நேரியார் ஆலயம் என்பதே அதன் பூர்வீகப் பெயராய் இருந்தாலும் இப்போது அதனை நற்கருணை நாதர் ஆலயமென்றே அழைக்கின்றனர்.

காலை 6 மணி தொடக்கம் இரவு 9 மணி வரையும் அங்கே மக்கள் சரிந்தவாறிருப்பார்கள். செபங்களும் பாடல்களும் தியானங்களும் வழிபாடுகளும் தொடர்ந்தவாறிருக்கும்.

ஒக்கொட் மாவத்தை என்ற வீதியால் போகும்போது பாதையோரங்களில் கால் வைக்க இடமின்றிக் கடைகள் இருமருங்கும் பந்தி போட்டிருந்தாலும் ஆலயத்தைக் கண்டதும் 'இதை நாடி நட' என்று கண்ணுக்குத் தெரியாத கைகள் அழைக்கின்றன. உள்ளே சென்றால் சுவர்க்கத்தின் தென்றல் வீசுகிறது.

நற்கருணைநாதர் ஒளிக்கதிர்க் கிண்ணத்தில் உறைந்திருக்கப் பக்த கோடிகள் வந்து வணங்கித் தங்கள் துன்ப முடிச்சுகளைப் பெருமூச்சு களோடு அவிழ்த்துக் குவிக்கின்றனர். பின்பு அமைதியாக ஆறுதல் பெற்றபடி செல்கின்றனர்.

அற்புதமான ஆலயத்தின் பிற்பக்கத்தை நோக்கினால் ஐந்து ஆறு குருமார் அங்கே அமைதியாகப் பணிபுரிவதைக் காணலாம்.

சந்நியாச ஆச்சிரமமாய் இருப்பதால் அவ்விடம் மௌனத்தின் கூடாரம் என்று நினைக்கத் தோன்றுகிறது.

லண்டனிலிருந்து யாழ்ப்பாணம் செல்லும்போதும் வரும்போதும் அடியேனுக்கு அமைதியான தங்குமடமாக இவ்விடம் தஞ்சமளிக்கிறது.

நற்கருணைநாதர் சபைத் துறவிகளே ஆலயத்தை இனிது பராமரித்து வருகின்றனர். இப்போது சபையின் சிரேட்டராயிருப்பவர் அருட்செல்வன் மைக்கல் ஆபேற்பிள்ளை என்பவர்.

இந்தத் துறவி காலை 5 மணி தொடக்கம் இரவு 10 மணி வரையும் அங்கே பணிபுரிகின்றார்.

**“காலையில் ஒன்ருவர் கடும்பகலில் ஒன்ருவர்**
**மாலையில் ஒன்ருவர் மனிதரெல்லாம்...........**” என்பது ஒரு கவிதை.

ஆனால் மூன்று பொழுதும் முகமும் அகமும் மலர்ந்தபடி வாழும் இந்த அன்புத் துறவியை நமது முன்னைய கவிஞர்கள் கண்டிருந்தால் ஒரு காவியமே இயற்றிவிடுவார்கள்.

சிரிப்பும் நேர்மையும் தூய்மையுமே அவரோடு கூடப்பிறந்த உடன்பிறப்புகள். நல்ல உயரமான உடம்பு, சிவந்த மேனி, இறைவனைப் புகழ்வதற்கென்றே அமைக்கப் பெற்ற அவருடைய குரலில் ஏழு சுரங்களும் முறையாக இசை எழுப்பும்.

உரைகளிலும் பாடல்களிலும் திரை நட்சத்திரங்கள் கூட அதிசயிக்கும்.

என்னைத் தத்தெடுத்து ஒரு தந்தையாராக எண்ணி உபசரிப்பார். ஆயிரம் அவசர கருமங்களிலும் என்மீது அவர் காட்டிவரும் பரிவும் பாசமும் எழுதமுடியாதவை.

எனது எழுத்துக்கள், கவிதைகளில் இயல்பாகவே பற்றுள்ளவர். காலை மலர்ந்ததும் கண் விழிக்குமாறு கோலக் குரலில் என்னை எழுப்பி, காப்பி கொடுத்து, சோப்பும் சீப்பும் தந்து, துணிமணிகளைத் தந்து, விண்ணிலே திரியும் மேகக் கூட்டம்போல குளிர்ந்த முகம் காட்டி, நுளம்பு கடித்திருக்குமா? காற்றாடி வேலை செய்ததா? எனக் குசலம் வினவி குறை ஒன்றுமின்றிக் கவனித்துக் கோவில் வழிபாடு முடிந்ததும், காலைப் போசனம் அளித்து என் எழுத்து வேலைக்கே களம் அமைத்துவிடுவார்.


இளவாலையில் இருந்தே ஒரு துறவியாக வேண்டுமென விரும்பி இன்று வரையும் அந்தப் பேராலயத்தில் அரும்பணி புரிந்து வருகின்றார். எல்லார் இதயங்களிலும் இவருக்கு ஒரு ஆசனம் உண்டு.

இலங்கையில் பல இடங்களில் அவர்களுடைய நற்கருணைச் சபை கிளைகளைப் பரப்பியுள்ளது.

கல்விமானும், அரசியலாரின் அங்கீகாரம் பெற்ற சான்றோரும் ஆகிய அருட்பணியாளர் அலெக்சாந்தர் அடிகளாரும் இச்சபையின் ஒரு சிறந்த தூணே! அடிகளார் இப்போது சில்லாலை இன்னாசித்தம்பி வைத்திய நிலையத்தை, நற்கருணை நாதர் சபையின் ஆச்சிரமமாக மாற்றி அமைத்திருக்கிறார். விரைவில் அங்கே ஒரு கிளை ஆரம்பமாகும் எனத் தோன்றுகிறது.

எவ்வாறாயினும் மனிதருக்குப் பலன் கருதாமல் பணிபுரிகிறவர்கள் சமுத்திரங்களின் மேல் தெரியும் நட்சத்திரங்களைப் போலப் பிரகாசிப்பார்கள்.

அருட்செல்வர் மைக்கல் அவர்கள் எனது இலக்கியப் பணிக்கு மௌனமாகக் கதியால் போட்டிருக்கிறார் என்பது என் கருத்து.



கவிமாமணி க. த. ஞானப்பிரகாசம்.

40

# புல்லாங்குழலின் புலம்பல்

கிட்டத்தட்ட எழுபது ஆண்டுகளின் முன்பு "நீ அறிந்த புலவர்கள் யார்?" என்று என்னிடம் யாராவது கேட்டிருந்தால் நான் உடனே கம்பர், புகழேந்தி, ஒட்டக்கூத்தர், ஞானி என்று பதில் கூறியிருப்பேன்.

ஏனெனில் அக்காலத்தில் பாரதி, பாரதிதாசன், கவிஞர் தேசிக விநாயகம்பிள்ளை என்போரின் பெயர்கள் என் காதில் அடிபடவில்லை.

அக்காலத்தில் கல்விப் பகுதியில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த வித்தியாசமாச்சாரப் பத்திரிகையில் ஒரு பாடலைக் கண்டு அதை மனன பாடமாக்கிவிட்டேன்.

**கீரையும் ஆடும் போலும் கிளர் கிளி பூனை போலும்**
**தேரையும் பாம்பும் போலும் சீவிக்கும் ஈழ நாட்டீர்!**

என்று அக்கவிதை ஆரம்பமாகிறது. இதை எழுதியவர் ஆசிரியர் ஞானி. இக்கவிதை இக்காலத்துக்கும் சாலப் பொருந்தும். அவர் இவ்வாறான கவிதைகளை அடிக்கடி எழுதுவதுண்டு. பாதுகாவலன் வீரகேசரி ஈழகேசரி

என்பன போன்ற பத்திரிகைகளில் அவருடைய கவிதைகள் வெளி வந்தன.

ஆசிரியர் கந்தையா தம்பிப்பிள்ளை ஞானப்பிரகாசம் என்பவர் ஞானி என்ற புனைபெயரில் கவிதைகளை எழுதிவந்தார்.

"பண்டித ஞானி" என்பதே அவர் கையாண்ட புனை பெயர். அக்காலம் நடைபெற்ற பல்வேறு கவிதைப் போட்டிகளில் பங்குபற்றிப் பரிசில்களைப் பெற்றுப் புகழ்மாலை சூடியவர்.

இலங்கை சுதந்திரம் பெற்ற வேளையில் நடைபெற்ற மரதன் கவிதைப் போட்டியில் முதுதமிழ்ப்புலவர் மு. நல்லதம்பி அவர்கள் முதலாம் இடத்தையும் இவர் இரண்டாம் இடத்தையும் பெற்றுப் புகழப் பெற்றார்.

கொழும்புத் தமிழ்ச்சங்கம் நடாத்திய இலக்கியப் போட்டியில் பாரதி பிள்ளைத் தமிழ் என்ற நூலை எழுதி முதற்பரிசு பெற்றுக்கொண்டார்.

அடியேன் அந்நாட்களில் எழுதிய கவிதை ஒன்றில்

**அன்பினையான் அன்னையிடம் அன்று கண்டேன்**
**அறிவினையான் குருநாதர் இடத்தில் கண்டேன்**
**துன்பமதைப் பிரிவினிலே கண்டு கொண்டேன்**
**தூய்மை நிலை துறவிகளில் கண்டு வந்தேன்**
**பொன் பொருளில் எனக்காசை அதிகம் இல்லை**
**புலவனென வருதற்கோ கொள்ளை ஆசை**
**என்னை இளம் வயதினிலே கவர்ந்தார் ஞானி**
**இளம்புலவர் சுவரடியில் தொடர்ந்து வந்தேன்**

என்று உண்மையை எழுதினேன்.

கொழும்புத் தமிழ்ச்சங்க அலுவலகத்துக்குச் சென்ற வேளையில் ஞானி அவர்களை இரா.நெடுஞ்செழியனுக்கு ஒரு வரவேற்புப்பா பாடித்தருமாறு சங்கத்தின் செயலாளர் திரு க.இ.க.கந்தசாமி அவர்கள் கேட்டுக் கொண்டார்கள். உடனே பத்து விருத்தப்பாக்களை எழுதி கொடுத்ததை கண்டதும் செயலாளர் ஞானியை ஒரு காளமேகப் புலவர் என அழைத்துப் பாராட்டினார்.

உலகக் கவிஞர் பேரவை நடாத்திய உலகக் கவிதைத் தேர்விலும் சிறப்புக் கவிதைப் பரிசில் பெற்றிருந்தார்.

மட்டுநகர் புனித திரேசா கல்விச்சாலையில் ஆசிரியராய் இருக்கும் போது விபுலானந்த அடிகளாரிடமும் புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்களிடமும் இலக்கண இலக்கியங்களைக் கற்று 1933ஆம் ஆண்டு தொடக்கம் கவிதைகள் புனையத் தொடங்கினார். சென்னை வித்துவான் பரீட்சைக்குரிய இலக்கண இலக்கியங்களைச் சுவாமி விபுலானந்தரிடமும் கற்றுக்கொண்டார் என்று கூறுவார்கள்.

பாடாண்டிணை வாழ்த்தியல் துறையிலும் காஞ்சித்திணை கையறு நிலைத் துறையிலும் அமையுமாறு கவிதைகள் புனைவதில் இவரை நிகரற்றவர் எனக் கூறுவர்.

வாழ்த்தியல் துறையில் ஆயர்கள் குருமணிகளையும் சட்டமேதை ஜி.ஜி பொன்னம்பலம் அவர்களையும் அமைச்சர் தொண்டைமான் அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன் பெருங்கவிக்கோ சேதுராமன் என்னும் சான்றோர்களையும் பாடிப் பெரும் மதிப்புப் பெற்றவர்.

கையறுநிலைக் கவிதைகளில் மகாத்மா காந்தி சுவாமி விபுலானந்தர், சுவாமி ஞானப்பிரகாசர், சதாசிவஐயர், ஈழகேசரி பொன்னையா என்போரையும் வேறுபல சான்றோர்களையும் பாடியுள்ளார். ஞானி எழுதிய சரம கவிகள் பல ஆயிரம் இருக்கும். அவை எல்லாம் குடும்ப விளக்குகளாக போற்றப் பெறுகின்றன.

அக்கால அரசர்களின் மெய்க்கீர்த்திகள் கல்வெட்டுகளில் பொறிக்கப் பெற்றிருப்பதை நாம் காண்கிறோம்.

அவ்வாறு ஈழநாட்டில் வாழும் தமிழ் மக்கள் மத்தியிலும் கல்வி ஆற்றல், பண்பு, சமயசேவை மனிதநேயம் என்பவற்றில் சிறந்து வாழ்ந்த நூற்றுக்கணக்கான கிராம திலகங்களைச் சரம கவிகள் மூலம் இறந்தும் இறவாமல் காத்து வைத்தவர் ஞானி அவர்களே என்று துணிந்து கூறலாம்.

சரமகவி நூல்களில் தெய்வம், நாடு, கீர்த்தி, இரங்கல் என வகுத்து எழுதியிருக்கும் ஆற்றல் போற்றுதற்குரியது.

மாதா மலர் மாலை என்று கவிமணி எழுதிய நூலும் பாராட்டுதற்குரியது. அவருடைய செய்யுள்கள் அனைத்தையும் தொகுத்து நூலாக்க வேண்டுமெனப் பலர் முனைந்ததை யான் அறிவேன். அவை முற்றுப் பெற்றதாய் தெரியவில்லை.

ஆசிரியராயும் அதிபராயும் சிறந்த பண்பாளராகவும் பேச்சாளராகவும் எல்லாவற்றிலும் பார்க்கச் சிறந்த மரபுக் கவிஞராகவும் வாழ்ந்து வருகின்ற ஞானி அவர்கள் நம்மிடையேயுள்ள மூதறிஞராக அல்வாய் தெற்கு இராணி மனையில் வாழ்ந்து இறைவனடிகளையிட்டுக் கவிதைகள் புனைந்து வருகின்றார்.

கவிமாமணி அவர்களைக் காவலன் ஆசிரியர் ஞானப்பிரகாசம் அவர்கள் பெரிதும் போற்றுவார். அடியேனுக்குக் கவிதைத் துறையில் விடிவெள்ளியாயிருந்தவரும் அன்பு ஒழுகுமாறு 'குஞ்சி' என நான் அழைக்கும் சிறிய தந்தையாரும் என் மதிப்புக்கும் பாசத்துக்கும் உரியவரும் கவிமாமணி ஞானி அவர்களே!

புல்லாங்குழலின் புலம்பல் என்பது அதன் இன்னிசைதான். கவிமாமணியின் பக்கத்தில் இருந்தால் அவர் ஒரு புல்லாங்குழல் என்பது தெரியும். அவர் வாயால் புறப்படும் சொற்களெல்லாம் கவிதைகள். அதாவது இன்னிசைப் புலம்பல்.



திரு. ஜீவன் பேதுருப்பிள்ளை M.Sc. F.C.C.A., F.C.H.A.
திரு. இராசா சுவாம்பிள்ளை பொறியியல் நிபுணர்

41

# இலண்டனில் கண்ட இரண்டு நதிகள்

**கோ**தாவரி நதி, கவிதை போலக் கிடந்தது என்று கம்பன் சொல்லுகிறான்.

இன்பக் கலைகளின் அன்பனாகிய கம்பனே இவ்வாறு பேசுகிறான்.

பூமிக்கு அலங்காரமாய், ஐந்து புலனுக்கும் விருந்தாகி, சொல்லெலாம் பொருள் பொதிந்து, எவரும் விரும்புமாறு இனிமையின் எல்லையைக் காட்டி, மலை, காடு, பாலை நிலம், வயல், நெய்தல் நிலம் எல்லாம் குளிப்பாட்டிக் கடலில் கலக்கிறது கோதாவரி.

முன்பின் கண்டறியாத இலண்டனுக்கு வந்து வளமார்ந்த இரண்டு நதிகளைக் கண்டேன்.

ஆலிலைச் சருகுகளாக ஆண்டுகள் உதிர்ந்து போய்விட்டன. 'வாலிபம் போவதும் மருத்துவம் கேட்பதும்' எங்களுக்குப் புதிய சேதிகளில்லை.

எத்தனையோ கோடைகளைக் கண்டுவிட்டேன். குளிரிலே விறைத்து நடுங்கியிருக்கிறேன். மழையிலே நனைந்திருக்கிறேன். வெய்யிலில்

வெதும்பியிருக்கிறேன். வசந்தத்தில் மகிழ்ந்திருக்கிறேன். இலைகளை இழந்து வெறும் தடிகளாய்த் தோன்றும் மரங்களைப் பார்த்து மனம் மகிழ்ந்திருக்கிறேன். வாழ்வில் பல காலடிச் சுவடுகளைப் பார்த்துப் பின்னால் நடந்திருக்கிறேன்.

முதலில் திரு. ஜவன் பேதுருப்பிள்ளை அவர்களைக் கண்டபோது அவருடைய அன்பான உரையாடல்களிலும், சிரிப்பிலும், நகைச்சுவை யிலும், மற்றோருக்குப் பதிலுரைக்கும் அவருடைய திறமையிலும் நான் என்னை இழந்து போனேன்.

முகவசீகரமும், ஆளுமையும், ஒளிவு மறைவற்ற நெஞ்சமும் என்னைத் தத்தெடுத்தன. அவர் இந்நாட்டில் வாழும் ஒரு ஜீவநதி என்று மட்டிட்டேன்.

கிட்டத்தட்ட 40 ஆண்டுகளாக இலண்டனில் வாழ்ந்து வருகிறார். இலங்கையில் புகழ்பெற்ற சென். யோசவ் கல்லூரியில் கற்று பல்கலைக் கழகத்தில் பட்டதாரியாகி, கணக்கியல்துறையில் கொழும்பில் உலக வங்கியில் பணிபுரிந்து லண்டன் வந்து சேர்ந்தார்.

இலண்டனில் கணக்கியல் துறையில் உயர்தரப் பரீட்சைகளில் தேறி 'ஷெல்' விநியோகப் பகுதிப் பிரதம கணக்காய்வாளராயிருந்த பின்னர் அனைத்துலக குழுக்களின் கணக்காய்வுப் பகுதியின் பிரதம அதிபராக நீண்ட காலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றார்.

தமிழர் பிரச்சினைகளிலும் நாட்டுப் பற்றிலும் ஈடுபாடு கொண்டவராதலின் பல தருணங்களில் பிரித்தானிய ஊடகங்களில் பேட்டியளித்து நிலமைகளை விளக்குவதற்காக இவரை அழைப்பதுண்டு. இவரது ஆங்கிலப் புலமை நாடறிந்த விஷயமே!

இதனால்தான் ஈழத்தின் தலைசிறந்த எழுத்தாளர் சிவநாயகம் ஐயா அவர்கள் எழுதிவந்த "ஹொட்ஸ்பிறிங்" மாத சஞ்சிகைக்கு வெளியீட்டாள ராக நீண்டகாலம் ஜவன் பணிசெய்து வந்தார்.

தமிழ் மக்களின் அன்புக்கும் மதிப்புக்கும் உரியவராய் விளங்குவதோடு தான் சார்ந்த சமயப் பணிகளிலும் முன்னின்று பணிபுரிந்து வருகிறார்.

வட கீழ் மாகாண மக்கள் இலங்கை வானொலியில் உண்மையான விபரங்களை அறிய முடியாமலிருந்த காலப்பகுதியில் வெரித்தாஸ்

வானொலி செய்த அரும்பணிகளைப் பலர் அறிவார். வெரித்தாஸ் வானொலிக்கு நன்றி உரைக்கும் முகமாக அதன் வெள்ளிவிழாவைத் தலைமை தாங்கி நடத்தி அனைவரின் பாராட்டையும் பெற்றார்.

மனித வாழ்க்கைக்கு நதிகள் தேவைப்படுகின்றன.
நீரின்றி உலகம் இல்லை.
நதியின் நீரில் மனிதன் நீராடித் தூய்மை அடைகிறான்.
சமயம் மனித ஆன்மாவைத் தூய்மை செய்கிறது.
நதிநீரால் மனிதன் தாகம் தணிகிறான்.
சமயம் மனிதனின் ஆன்மீகத் தாகத்தைத் தீர்க்கிறது.

அடியேன் அன்பின் கங்கை அன்னை திரேசா என்ற நூலை லண்டன் பட்டின மண்டபத்தில் அரங்கேற்றிய வேளை அதற்குத் தலைமை தாங்கியவர் இவரே! நூலுக்கு ஊக்கமும் ஆக்கமுந் தந்தார் இவர் கத்தோலிக்க பணியகத்தில் தலைவராய் இருந்த வேளையில் இவருடைய தூண்டுதலினாலும், அயராத தமிழ்ப்பற்றினாலும் தான் அடியேனுக்கு "பாவேந்தர்" என்ற மதிப்பார்ந்த பட்டத்தை மறைந்த பாப்பரசர் வழங்கிப் பாராட்டினார்.

எனது எழுத்துக்களிலும், பேச்சிலும், வாழ்வு வளத்திலும் எப்போதும் கருத்தாயிருந்து மேலும் மேலும் எழுதுமாறு தூண்டுவார். பொறியியல் துறையில் பிரித்தானிய அரசுக்குப் பெருந்துணை செய்யும் திரு இராசா சுவாம்பிள்ளை அவர்கள் இளவாலையைச் சேர்ந்தவர்.

இளமையிலே என்றியரசர் கல்லூரியில் படிக்கும் காலத்திலேயே எனது மேடைப் பேச்சில் நானறியாத ருசியைக் கண்டவர். எனது அன்பான விசிறிகளில் ஒருவர். என்னிலே பற்றும் பாசமும் கொண்டவர்.

இலண்டனுக்கு நான் வந்து 21 ஆண்டுகளாயின. யான் இங்கு வந்த ஆரம்ப காலத்திலே என்றியரசர் கல்லூரி ஆண்டு விழாவில் என்னை அழைத்து அங்கே உரையாற்றுமாறு செய்து, இலண்டன் வாழும் தமிழ் மக்களை எனக்கு அறிமுகம் செய்து வைத்தார்.

கொழும்பு சென் பெனடிக்ற் கல்லூரியில் கற்று, லண்டன் உயர்தர பரீட்சையில் தேறி உடனடியாக லண்டன் வந்து பொறியியல் துறையின் உச்சிப்படிகளில் அரசாங்க சேவையிலீடுபட்டார்.

இவருடைய தந்தையார் புகையிரதப் பகுதியில் நிலைய அதிகாரியாக நீண்டகாலம் பணிபுரிந்து ஓய்வு பெற்றவர், தெய்வபக்தியிலும், பண்பாட்டிலும், சமூக சேவையிலும் முன் நின்றவர். திரு இராசா அவர்களே இளவாலையில் இருந்து முதன் முதலாக இலண்டனுக்கு உயர்தரப் படிப்புக்கு வந்த வாலிபர் என்பது எனது கருத்து.

கையிடும் பணி எதுவானாலும் அதனைத் தெய்வபணியாகக் கருதி அது முற்றுப்பெறும்வரையும் அயராது உழைப்பது அவரது வழக்கம். இதனால் பிரி. அரசாங்கம் அவர் ஓய்வு பெறவும் விட்டபாடில்லை.

திரு. இராசா அவர்கள் இளவாலைக்கு வந்து, அங்கே கல்லூரி அதிபராயிருந்த யஸ்ரீன் அடிகளாரின் சகோதரியை மணந்து இலண்டனுக்குக் கூட்டி வந்தார். தேனும் பாலும் போல் இன்றுவரையும் ஊருக்கு ஒப்பற்ற தீபங்களாக வாழ்ந்து வருகின்றனர்.

இலண்டனிலுள்ள கற்றோர் பொருண்மிய வளர்ச்சிச் சங்கங்களில் பொருளாளராகவும், ஆலோசனையாளராகவும் பதவிகள் பொறுப்பேற்றுத் தாய்நாட்டுக்கு அவை மூலமாக இயன்ற உதவிகளைச் செய்துவர வடிகாலாய் இருக்கிறார். அவருடைய பணியில் எவராவது ஒரு கரும்புள்ளியை இடவே நினைக்க முடியாது.

இலண்டனில் நடந்த வெரித்தாஸ் வானொலி வெள்ளிவிழாவின் செயலாளராயிருந்து நிர்வாகப் பொறுப்பைச் சுமந்து அவ்விழா கீர்த்தியுடன் நடைபெற ஆவன செய்தவர்.

என்னுடைய எழுத்துக்களை எங்கே கண்டாலும் அதைப் பெற்று வாசித்து மனம் மகிழ்வதோடு மற்றோருக்கும் அந்த முல்லையில் மணமிருக்கிற தென்று சுட்டிக் காட்டும் நல்லியல்புள்ளவர்.

அடியேனுக்கு யாழ். பல்கலைக்கழகம் கௌரவ கலாநிதிப் பட்டம் அளித்ததை அறிந்து என்னிலும் பார்க்க மகிழ்ச்சியடைந்த சான்றோன்.

தமிழ் நாட்டில் வசிக்கும் ஒரு தமிழ் அறிஞனைக் காண யான் திருச்சிக்குச் சென்றிருந்தபோது அவருடைய வீட்டுவாசலில் துளசி, கீழ்க்காய்நெல்லி, குப்பைமேனி, வல்லாரை, சித்தாத்தை போன்ற மூலிகைச் செடிகளை அவர் வளர்த்து வருவதைக் கண்டு ஆச்சரியமானேன். அவரிடம் அதை

யிட்டுக் கேட்டபோது இவையெல்லாம் இயற்கை தந்தவரம். இவற்றை அலட்சியப்படுத்தக்கூடாது. உயிரைக் காக்கும் அருமருந்துகள் எல்லாம்." என்றார்.

இவ்வாறு மனித சமுதாயத்திலும் நமக்குப் பயன்தரக்கூடிய மூலிகை மனிதர்களைக் காணலாம். அப்படியானவரே திரு. இராசா அவர்கள். அமைதியான பேச்சும், பிறரைப் பற்றி எச்சந்தர்ப்பத்திலும் புறணி பேசாத நல்லியல்பும், உயர்ந்த சிந்தனையும், நல்லறிவும் பண்புமுள்ள மனித மாணிக்கம்.

அருகில் இருந்து எனது வரலாறுகளைக் கேட்போர் வாய்க் கேட்டு பலவற்றை ஆராய்ந்தறிந்து எனது தமிழ் அறிவு, பட்டம், பணிகள், கட்டுரைகள், நூல்கள், கவிதைகள், விமர்சனங்கள் எல்லாவற்றிலும் ஊடுருவி ஒரு முடிவை எடுத்து அதற்கு ஐரோப்பிய குருமாரின் ஆனுசரணைகளையும் ஆலோசனைகளையும் பெற்றுப் பாப்பரசருக்கு விண்ணப்பப்படிவம் ஒன்றை அனுப்பி வைத்தார். அதனை லண்டன் பணியகத்தின் இயக்குனரும், யாழ், மன்னார், மட்டுநகர் ஆயர்களும் பரிந்துரைத்தனர்.

இதன் பயனாக ஒரு தமிழ் அறிஞனுக்கு - திருச்சபை வரலாற்றில் முதன் முதலாக - அடியேனுக்கு 110 கோடி மக்களின் திருத்தந்தையான பாப்பரசர், செவாலியார் என்னும் பட்டத்தையளித்தார்.

இது அடியேன் கனவிலும் நினைத்திராத ஒரு வரமாகும். இவ்வாறு தன் நெஞ்சில் தோன்றும் நற்பணிகளைச் செய்வதில் அவரை எவரும் தாண்டமுடியாது.



இசையரசன் மாணிக்கம் யோகேஸ்வரன்

42

# ஈழத்துச் சீர்காழி



லண்டன் மாநகரிலும், பிரான்ஸ், ஜேர்மனி, ஒல்லாந்து, நோர்வே, சுவீடன் முதலான அயல்நாடுகளிலும் தமிழ் நாட்டிலும் இசைத் துறையில் எல்லோருடைய மதிப்பையும் பெற்றவர் மாணிக்கம் யோகேஸ்வரன் என்ற இசையரசன்.

அவருடைய இன்னிசை வெள் ளத்தில் மிதந்து செல்லாதவர் களே இல்லை எனலாம்.

வாய்ப்பாட்டில் யாழ்ப்பாணத் தில் வசிக்கும்போதே இளமை யில் சீர்காழி என்ற பெயர்

பெற்றிருந்தவர். ஏனெனில் இருவருடைய குரல்வளமும் ஒரே மாதிரியானவை. அவற்றைப் பிரித்துக் கூறுவதே கேட்போருக்கு சிரமமான அனுபவமாகும்.

இசையின் நுணுக்கங்களை மாத்திரம் அறிந்து வாய்ப்பாட்டுடன் அவர் நின்று விடவில்லை.

மத்தளம், வயலின், மிருதங்கம், வீணை முதலான எல்லா இசைக் கருவிகளையும் பயன்படுத்தும் ஆற்றலையும் பெற்றவர்.

அண்மையில் இந்தியாவில் இசைத்துறையின் மாமேதை என்று கூறப்படும் அறிஞர் லண்டனுக்கு வருகை தந்தபோது மிருதங்கம் வாசித்து அவருடைய புகழ்மாலையைச் சூடியவர் யோகேஸ்வரன்.

தமிழ் நாட்டுக்கு வருடாந்தம் சென்று இசைக்கலைஞர்களோடு சேர்ந்து நிகழ்ச்சிகளில் பங்கேற்பது அவருடைய வழக்கம்.

ஹோலிவூட் என்ற உலகச் சிறப்பு வாய்ந்த அரங்கில் முதல்முதல் தமிழ் இசைப்பாடல் ஒன்றை அரங்கேற்றிய பெருமை அவருக்கே உரியது. ஆனந்தவிகடன் சஞ்சிகை (07-11-1999) இதையிட்டு எழுதும் போது ஹோலிவூட்டைக் கிறங்கடித்திருக்கிறார் எனச் சிலாகித்து எழுதியிருப்பது நமக்குப் பெருமை தருவதாகும்.

அடியேன் வெளியிட்ட இரண்டு இறுவெட்டுக்களிலும் இந்த இசையரசனின் குயிலோசை கேட்கிறது.

முதலாவது இறுவெட்டு இயேசுகானம் என்பதில் பத்துப் பாடல்களையும் அவரே பாடியிருக்கிறார். மற்ற மடுமாதா காவிய மலர்களில் நான்கு பாடல்கள் அவர் குரலில் வெளிவந்துள்ளன. அவற்றைப் பாராட்டாதவர்களில்லை.

எந்த வேளையிலும் முகம் வாடாத மலர்ச்சியும், சங்கீதத்தில் எல்லையற்ற பற்றும், ஆசைப்படும் வசீகரமான குரலும், இசை ஞானமும் அவரைப் புகழின் உச்சத்துக்கு ஏற்றி வைக்கும் ஏணிகளாகும்.

எனது பாடல்களில் ஒப்பற்ற பற்றுக் கொண்டவர் இந்த இசைவள்ளல். திருத்தலங்களைப் பற்றியும் திருக்குறளைப் பற்றியும் அவர் வெளியிட்டுள்ள இறுவெட்டுக்கள் காலம் நினைவுகூரத்தக்கவை.

43

# ஏந்திய விளக்கில் எண்ணெயாய் வந்தோர்

## திரு. சிறீக் கந்தராசா அவர்கள்

இலண்டன் மாநகரில் நூல்வெளியீடுகள், பொதுக்கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள் என்பனவற்றில் தலைமை தாங்கி வரும் பேரறிஞர். இரு மொழியிலும் வல்லபர். கொழும்பு சட்டக் கல்லூரியிலேயே விரிவுரையாளராயிருந்தவர். இனிய பண்பாளர், இவர் பாரியார் வித்துவான் வேலனாரின் புத்திரி. இசையிலும், நடனத்திலும் சிறந்தவர். எனது நூல் வெளியீடுகளில் தலைவராயும், ஆய்வுரை செய்வோராயும் பங்குபற்றிச் சிறப்புரைகளாற்றி என் அன்பைக் கவர்ந்தவர். வழக்கறிஞர், நூலாசிரியர், ஒலிபரப்பாளர், நயனாய்வாளர் எனப் பலவழிகளில் பணியாற்றி வருகிறார்.

## அருள்திரு. இயூஜின் பிரான்சீஸ் அடிகளார்

லண்டன் கத்தோலிக்க பணியகத்தின் இயக்குனர். பல்லாயிரம் மக்களின் அன்பையும், மதிப்பையும் பெற்றிருக்கும் குருமணி. என் வாழ்விலும், வளத்திலும் எக்காலமும் இணையற்ற பற்றுக்கொண்டவர். என் எழுத்து வேலைக்கு இறைவனாசி பெற்றுத்தரும் தூதன். எனக்குச் சமய

விழாக்களில் முன்னிடம் அளித்துப் பன்னீர் தெளித்தவர். தமிழ் பணியும் கடவுள் தொண்டென உணர்த்தி எனக்குப் பட்டங்கள் வந்த போதெல்லாம் தனக்கு வந்ததாக எண்ணி மகிழ்ந்த சான்றோன்.

## திரு.சிவ.தணிகாசலம்

தமிழ்ப் பேச்சிலும் தமிழ்ப் பற்றிலும் சிறந்தவர். என்னைத் தன் குருவாகப் போற்றி எந்நாளும் தன் அன்பைச் சொரியும் மாண்பாளன். தமிழையும், சமயத்தையும் கண்ணின் மணிகளாகக் கருதும் அபிமானி. இனிய குரலெடுத்துப் பாடுவதிலும், கவிதைகளுக்கு முன்னோர் போலக் கருத்து விரிப்பதிலும் வல்லபர். அடியேனின் மடுமாதா காவியம், அமுதுவின் கவிதைகள் என்ற நூல்களுக்கு ஆய்வுரை செய்த அறிஞன். எனது கவிதைகளில் உள்ளத்தைப் பறிகொடுத்த அன்பன். தமிழ்ச்சான் றோர்களை வரவேற்பதிலும், அவர்களைக் கண்டு போற்றுவதிலும் தணியாத தாகம் கொண்டவர். லண்டன் இலக்கிய மன்ற அமைப்பாளர்.

## திரு. பாஸ்கரநாதன்

எனது நகைச்சுவையான பேச்சு ஒன்றைக் கேட்டுவிட்டு அன்று இரவு முழுவதும் நித்திரையின்றி என் நினைவாயிருந்து, அன்று தொடக்கம் என்னில் ஒப்பற்ற பாசம் கொண்டிருக்கும் மெய்யன்பன். என் எழுத்து களுக்குத் தங்கச் சரிகை போட நினைப்பவர். பிரமச்சாரியான தம்பி பாஸ்கரனுக்கு வாசிகசாலையே காதலியாக கைகொடுத்திருக்கிறாள்.

கடந்த அரை நூற்றாண்டில் ஈழத்தில் வெளியான நூல்கள், பத்திரிகை களில் வெளிவந்த கட்டுரைகள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் அவர்களின் கைவரிசைகள். புலம்பெயர் நாட்டில் வெளியான நூல்கள் அவற்றின் வீக்க தூக்கங்கள் இவை எல்லாம் அறிந்த ஊர்க்குருவி. எனது குருநாதனும், புலவர் மணியுமான இளமுருகனார் அவர்களின் நிழற்படம் ஒன்றைப் பெறப் பலமாதமாக முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லை. இறுதியில் பாஸ்கரநாதன் அவர்களே புலவர் அவர்களின் மகனார் வைத்திய கலாநிதி பாரதி அவர்களின் முகவரியைத் தேடி எனக்கு அறிவித்தார். நிழற்படம் பெற்றுக் கொண்டேன்.

## எமில் மகேந்திரகுமார்

தமிழ் அபிமானியும் நாட்டுப்பற்றாளருமான எமில்குமார் அவர்களுடைய வாகனத்தின் அருகில் நின்றால் மடுமாதா காவிய மலர்கள் என்னும்

இசைத்தட்டிலிருந்து இனிய பாடல்களைக் கேட்கலாம். அவை அடியேன் இயற்றிய பாடல்களே! அந்தக் கவிதைகளைச் சுவைத்து அதனால் என்மீது பாசம் கொண்டவர். என் பிரிய நண்பர் குமார் அவர்களின் புத்திரன். எனது நூல் வெளியீட்டுக்கு ஆயிரமாய் அள்ளித் தந்தவர். இறைவழிபாட்டில் எல்லா மதத்தினரையும் இணைக்கும் பாலம் போன்றவர். எனது கவிதைகளிலும், நூல்களிலும் கருத்துள்ள சான்றோன். சமய பக்தியும், மனித நேயமும் அவருடைய இரத்த அணுக்களில் ஊறியவை. அவர் தங்கை மதியும் என் பணிகளில் ஆர்வமுள்ள தமிழரசி.

## எம். ரி. செல்வராசா

இலண்டன் மாநகரில் இயங்கி வரும் தமிழ்க் கல்விச் சாலைகளில் பேரும் புகழும் பெற்று உயர்ந்திருக்கும் மேற்கு லண்டன் மகாவித்தி யாலயத்தின் அதிபராய் இருந்து அரும்பணி புரிகிறவர் திரு. செல்வராசா அவர்கள்.

இக்கல்விக்கழகம், சி. யே. ரி. தாமோதரம்பிள்ளை முதலியோரால் 28 ஆண்டுகளின் முன்னர் ஆரம்பமானது.

பல்கலைக்கழகம் புகுமுகவகுப்புக்கள் வரை கல்வி கற்பிக்கப்படு வதோடு, வாய்ப்பாட்டு, பரதநாட்டியம், வீணை, மிருதங்கம், புல்லாங் குழல் என்னும் இசைக்கருவிகளின் பாடங்களும் கற்பிக்கப்படுகின்றன. இசை பயிலுநர்கள் இவற்றைப் பயிற்றுகின்றனர். முன்னூறுக்கு மேற்பட்ட மாணவர் இங்கு பயின்று வருகின்றனர். திரு. செல்வராசா அவர்கள் ஒரு எழுத்தாளர், நூலாசிரியர், நாட்டுப்பற்றாளர், தமிழ்த்தொண்டர், பொறியியலாளர்.

அடியேன் என்ன உதவிகளைக் கேட்டாலும் உடனடியாக அதை நிறைவேற்றுகிறார். 25 திறமைசாலிகள் ஆசிரியப்பணி புரிகின்றனர். இவ்வாண்டு (2005) இறுதியில் நடைபெற்ற ஆண்டு விழாவில் அடியேனை அழைத்து யான் கலாநிதிப்பட்டம் பெற்றதைப்பாராட்டி, மாலைசூட்டி கவிமாமணி எனப்பட்டமளித்து, வாழ்த்துப்பத்திரம் படித்து பலவாறு புகழ்ந்து போற்றி எனக்கன்று தமிழ் அன்னைக்கே மலர் தூவினார்கள்.

## சிறீரங்கன்

ஈலிங் அம்மன் கோயிலின் அறங்காவல் குழுவின் சிறப்பு உறுப்பினர். ஒலிபரப்புத் துறையிலும் பணிபுரியும் ஊரறிந்த பேச்சாளன். உள்ளத் தனைய உயர்வு என்னும் தொடருக்கு இலக்கணமானவர். தன்னை விடத் தன் இனத்தையும், தமிழையும் நேசிக்கும் ஏந்தல் எனது கட்டுரைகளைப் படித்துவிட்டுத் தொலைபேசியில் அதில் கண்ட சிறப்புக்களைக் கூறி எனக்குத் தேன்மழை பெய்கிறவர். புலவர் மணி என்று என்னைப் போற்றி அன்பு கொண்டாடும் அரும் பிறவி.

## கலாநிதி மு.நித்தியானந்தன்

தீபம் தொலைக்காட்சியின் சிற்பி. பல காரியங்களைச் சிந்தித்து அவற்றை ஒரே மனிதனாகச் சாதிக்கும் பல்கலைக்கழகம். இளம் சமுதாயத்தினரை ஊக்குவித்து ஊடகத்துறையில், கலைத்துறையில் வழிகாட்டும் விடிவெள்ளி, நூலாய்வில் பலாக்கனி பதம்பார்ப்பதுபோல் கொட்டை வேறு சுளை வேறு குந்து வேறாக்கிச் சுளையின் இனிமையைச் சுட்டிக் காட்டும் விமரிசகர். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டென்று காட்டும் கலைஞானி. சிந்தனை, சொல், செயல் மூன்றும் ஒரே கோட்டில் செல்லும் மாண்பாளன். என்னைவிட என்னை நன்றாய் நேசிப்பவன்.

## என்.எம்.என்.அனஸ்

ஊடகத் துறையைத் தன் உறவாக்கிய நண்பன். ஒலிபரப்பில் உரையாற்று வதிலும், பேட்டி காண்பதிலும், நிகழ்ச்சித் திட்டங்களிலும் மக்கள் மனதைக் கவர்ந்த செயல்வீரன். செய்யும் பணி எதுவானாலும் சிரத்தையோடு சுமக்கும் சீமோன். அறநெறிகளில் தாடிவளர்த்த இளைய சந்நியாசி தமிழ் அறிஞர்களைப் போற்றி நாடறியச் செய்ய வேண்டுமென எண்ணம் கொண்ட தமிழ்ப்பித்தன். ஈழமக்களின் துன்பக் கேணிகளைக் கண்டு தலை தோய்ந்த ஏழைகளின் நண்பன். என்னை அடிக்கடி அலவலகம் அழைத்து தீப ஆராதனை செய்யும் அன்பன்.

## வித்துவான் வேலனார்

எழுத்திலும் பேச்சிலும் கருத்திலும் சிறந்த நண்பன். அரசியல் கூட்டங்களில் சங்கத்தமிழை மேடையேற்றிய அறிஞன். ஈழத்தமிழர் வாழ்வில் திருப்

பத்தை எதிர்பார்த்திருந்த ஆர்வக்கடல். மாணவர் உள்ளத்தில் மணிவிளக்கேற்றிய ஆசிரிய மணி.

“கதியால் போட்டவர்கள்” என்று யான் எழுதிய கட்டுரைகளைப் படித்துவிட்டுக் கதியால் முறித்தவர்களைப் பற்றியும் கட்டாயம் எழுதும்படி மடல் எழுதியனுப்பிய மதிவாணன்.

“மடுமாதா காவியம்” என்ற நூலரங்கேற்றும் விழாவுக்குத் தலைமை தாங்கி எனது விருத்தப் பாடல்களைப் பாடிக்காட்டிக் கம்பனோடு என்னை ஒப்பிட்டுக் கருத்துக் கூறிய கலைமாமணி.

## சிவகுமாரன்

செந்தமிழும், சிரித்த முகமும் உடைய தெய்வப்பிறப்பு. எனது அன்பின் கங்கை அன்னை திரேசா என்ற நூலைக் கணனி என்ற தறியில் நெய்து தந்தவர். அவ்வாறே மடுமாதா காவியம் அமைத்தளித்தவர். இவ்வாறு பலவேறு பணிசெய்யும் தமிழ் நெஞ்சன். என் கவிதைகளைக் கண் கொத்திப் பாம்புபோல் வரிவரியாக வாசித்துச் சுவைத்து விரிவுரை சொல்பவர்.

## கவிஞர் சிவநாதன்

என்றும் என் இனிய நண்பர். முதுபெரும் புலவர் நல்லதம்பி அவர்களின் மைந்தன். சத்தியம் சாகாது என்ற காவியத்தைப் படைத்த கலைஞன். அதிலே என்னையிட்டும் ஏழெட்டுப்பக்கம் எழுதிய பண்பாளன். கவிதை ஆற்றலைக் கருவிலே பெற்றவர். பேச்சிலும், எழுத்திலும் கவிமணம் வீசும் காண்டீபன் எனது மடுமாதா காவியத்ததுக்கு அணிந்துரையளித்து மலர் தூவிய கவிமணி.

## இராஜ மனோகரன்

லண்டனில் வாழும் சிறந்த பேச்சாளர்களில் ஒருவர். கவிஞர், நூலாசிரியர், சித்தாந்த ஆசிரியர், பொறியியலாளர், முன்னர் தமிழரசுக் கட்சியின் வாலிப இயக்கத் தலைவர். லண்டன் இலக்கிய மன்றத் தலைவர். இவர் பேசாத கூட்டங்கள் குறைவு. என் கவிதைகளிலும் பேச்சிலும் மலரும் மொட்டு. திருமதி டாக்டரும் அப்படியே. எக்காலத்திலும் என்னில் மட்டற்ற அன்பும் மதிப்பும் கொண்ட பேரறிஞன்.

## திரு.திருமதி வரதராசா

தலைவன், அறிஞன், பண்பாளன், ஆராய்ச்சியாளன். தலைவி, அன்புக் கடல், கவிதைப் புயல், விவசாயத்துறையில் வடபகுதி மேலாளரா யிருந்தவர் வரதர். பாரியார் மகாவித்தியாலயத்தில் ஒளிவீசிய மங்கையர் திலகம். உயர்தர பட்டங்களால் மாத்திரம் வரதர் புகழ் ஏணியில் ஏற வில்லை. அவருடைய வாழ்வு ஏற்றிவிட்டது. வையத்தில் வாழும் தெய்வ மாக அவரை அறிந்தோர் போற்றினர். இறைவன் வேறு, தெய்வம் வேறு.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவரே தெய்வம் என்றார் வள்ளுவர். பண்பாட்டிலும், அறிவிலும் இருமொழிப் புலமையிலும், பேச்சிலும் அவர் சிறந்து கனடாவில் வாழ்ந்து வருகிறார்.

நெடுந்தீவு கிளைச்சங்கத் தலைவராய் நீண்டகாலம் பதவி வகித்தார். என்னிலும், என் கவிதைகளிலும், நூல்களிலும் இணையற்ற பாசம் கொண்டவர். "அன்னை திரேசா" நூல் பிரமாதம். எத்தனை முறை படித்தாலும் தெவிட்டவில்லை. ஓய்வு நேரத்தில் வேறு சில நூல்களை எழுதுங்கள். கங்கைகள் இல்லாவிட்டாலும் சிறு நதிகளாக, நீரோடை களாக இருந்தால் போதும். இலக்கியப் படைப்புக்களில் ஈரம் கசியும், பசுமை தெரியும்........" என்று எழுதினார்.

கனடாவில் நடைபெற்ற பாராட்டு விழாவில் வரதரின் பாரியார் திருமதி சேதுப்பிள்ளை பீ.ஏ. அவர்கள் கவிப்புயலாக மாறிப் பல கவிதைகளைப் படைத்தார். பதம்பார்க்க ஒரு சோறு எடுத்துக் காட்டிவிட்டு இத்துடன் முடிக்கிறேன்.


**பாட்டுத் தலைவனாம் பாரதியார் இங்கிருந்தால்**
**ஓட்டமாய் ஓடிவந்து உனைத்தூக்கிக் கைவிரித்துக்**
**கட்டியணைத்துக் கன்னத்தில் முத்தமிட்டும்**
**பொட்டும் ஒன்று வைத்துப் புகழ்மாலை போட்டிடுவான்**

இவ்வாறு என் இதயத்தில் இடம்பிடித்தோர் பட்டியல் மிக நீண்டது. பலரை இங்கு குறிப்பிடமால் விட்டதற்கு மன்னிப்புக் கோருகிறேன்.



44

# மறைந்த மனிதகுல மாணிக்கம்



உலக அந்தங்களில் வாழ்வோரும் வத்திக்கானைப் பார்த்து பெருமூச்சுவிட்டனர். மனித குலத்தின் இன்னல் தீர்க்கும் மாமருந்து மறைந்து விட்டது.

சென்ற ஆண்டு சித்திரை மாதம் 2ம் திகதி மாலை 9.37 மணிக்கு உலகின் துயரச் சிலுவையை இரண்டாம் அருளப்பர் சின்னப்பரின் தோள்களிலிருந்து தூக்கிவிட்டார் இறைவன்.

அவருடைய உடலம் சில காலம் நோய்வாய்ப்பட்டிருந்தாலும் உள்ளம் தேயவில்லை.

சிலுவையின் நிழலிலும் அதன் ஒளியிலும் அவர் வாழ்ந்து வந்தார். கிறிஸ்துவின் சாயலாக வாழ்ந்து, கடைசி நேரத்தில் உலக மக்களின் துன்பங்களைப் பங்குபற்றி இறைவனோடு கலந்து கொண்டார்.

போலாந்து நாட்டின் கிராமப் புறத்தில் எளிமையான குடும்பத்தில் தோன்றியவர். உரோமாபுரியில் 263ஆவது பாப்பரசராகவும், அனைத்து உலகக் கத்தோலிக்க மக்களின் பிதாவாகவும் விளங்கினார்.

“இறைவனின் மகிமைக்காக எனது பணிகளை அன்னை மரியாவின் கைகள் மூலம் ஒப்படைக்கிறேன்” என்ற விருதுவாக்கின் பெரிய வெள்ளி நிகழ்ச்சியை இறுதி வரையும் நிறைவேற்றி வந்தார்.

பாப்பரசராய்ப் பட்டம் சூட்ட முன்னரே கிட்லருடைய ‘நாசி’ கொள்கை யையும், பொது உடைமைச் சித்தாந்தங்களையும் போலந்து நாட்டைப் போலவே அவரும் அறிந்து கொண்டார்.

உலக மேடை நாடகத்தில் தனிமனிதனுடைய சுதந்திரம் பாதுகாக்கப் பெற வேண்டும் என்ற தத்துவத்தில் அவர் உறுதியாயிருந்தார்.

சர்வாதிகாரப் போக்குகளுக்கு எதிராகவும், தொழிலாளருடைய உரிமை மறுக்கப்படும்போதும், பொது உடமை சின்னாபின்னமாக்கப்பட்ட போதும் அவர் குரல் கடுமையாய் ஒலித்தது.

தன்னைச் சந்திக்க வந்த தனிப்பட்டவர்களின் துயரங்களைத் துடைக்கும் போது அவர் கருணையைக் காட்டினார். ஆனால் அவருடைய கைவிரல்கள் “வெல்வெற்” உறைகளால் மூடியிருந்தாலும் உள்ளே இரும்பினாலான முஷ்டியிருந்தது. ஒரு தத்துவ சாஸ்திரியின் ஞானமும், ஓர் யாத்திரிகனின் ஆன்மீகத் தாகமும், மேடை நாடக நடிகனின் சிறந்ததைத் தேர்ந்தெடுக்கும் போக்கும், கலந்து இக்கால உலகத்தில் அறமார்க்கங்களின் ஞான மாமலையாக அவரைக் காட்டியது.

ஊடகங்களில் பின்னலில் முன்னணி வகித்த பூரணமான தொடர்பாளராக வும் இதில் முதலாவது பாப்பரசராகவும் விளங்கினார்.

இத்தாலி நாட்டைவிட 129 நாடுகளைத் தரிசித்து தன் செய்திகளை ஈடாட்டமில்லாமல் அறிவித்து ஊடக நம்பிக்கையைப் பெற்றார்.

அனைத்துலக அரசியல் மேடைகளில் கத்தோலிக்க சித்தாந்தங்களைத் துணிவாகச் சொல்லி வந்தார். பூமியில் அறமார்க்கமான சிந்தனைகளுக்கு அவரையே எல்லைக் கோடாக உலகம் நினைத்தது.

சமகாலப் பிரச்சினைகளை கருத்தோடும் அணுகினார்.

கிறீஸ்து பெருமான் ஆனந்தமளிக்கவே வந்தார். சிறுவர்களுக்கு ஆனந்தம், பெற்றோருக்கு ஆனந்தம், அவ்வாறே குடும்பங்களுக்கு, நண்பர்களுக்கு தொழிலாளர்களுக்கு, அறிஞர்களுக்கு, நோயாளிகளுக்கு, முதியவர் களுக்கு, மனித குலத்துக்கு ஆனந்தமளிக்கவே வந்தார் என நற்செய்தி யைப் போதித்தார்.

இவ்வாறு தன் பேச்சால் ஆனந்தமளித்தவர் மறைந்தமை துயரத்துக்கே உரியதானாலும் எக்காலமும் மறக்க முடியாதவர்.

இந்த மனித மாணிக்கமே சின்னஞ்சிறு செந்தமிழ்த் தொண்டு செய்த சிறியோனைப் பாராட்டிச் செவாலியர் பட்டமளித்ததை நினைந்து அவர் பொன்னடிகளில் என் நன்றியின் மலர்களைக் கிள்ளி எறிந்து வணங்குகிறேன்.



# வாழ்த்து

கற்கண்டின் சொல்லெடுத்துக்
கவிபாடும் இயல்புடைய
கவிஞர்களின் இமயம் ஒருவன்
காலத்தால் அழியாத
கவிதைகள் உரைநூல்கள்
கங்கையெனச் சொல்லும் ஒருவன்
கற்றவர் அவைதன்னில்
நகைச்சுவை பெருகிவரக்
களிப்புடன் பேசும் ஒருவன்
தமிழ்க் கங்கை தமிழுக்கு
அமுதென்று பேர்பெற்ற
தங்கமே போன்ற ஒருவன்

****

அஞ்சாது சான்றோரை
அருந்தமிழில் வல்லோரை
அகத்திலே வணங்கும் ஒருவன்
மஞ்சளொடு குங்குமம்
வைத்த ஒரு மங்கையை
மனையாளாய்க் கொண்ட ஒருவன்
கொஞ்சு தமிழ் மொழியிலே
நூல்கள் ஒரு பத்தினைக்
கோடியெனத் தந்த ஒருவன்
நெஞ்சுதனில் எந்நாளும்
நிழலாடும் தெய்வத்தை
நினைவோனை வாழ்த்தினேனே.

**வண்ணைத் தெய்வம்**
பிரான்ஸ்

## நூலாசிரியரின் நூல்கள்

1. மாதா அஞ்சலி
2. நெஞ்சே நினை (வரலாறு)
3. இவ்வழிச் சென்ற இனிய மனிதன்
4. காக்கும் கரங்கள் (வைத்தியம்)
5. அமுதுவின் கவிதைகள் (1991)
6. அன்பின் கங்கை அன்னை திரேசா (1997, 2002, 2005 மூன்று பதிப்பு)
7. மடுமாதா காவியம்
8. இளவாலை ஆலய வரலாறு
9. அமுதுவின் கவிதைகள் (திருத்திய பதிப்பு)
10. இந்த வேலிக்குக் கதியால் போட்டவர்கள்
11. புலி நானூறு விரைவில் வெளிவரும்

## பெற்றுக் கொண்ட பட்டங்கள்

| | | |
|---|---|---|
| 1. | **சொல்லின் செல்வன்** | - யாழ். தமிழ் இலக்கியக் கழகம் |
| 2. | **புலவர் மணி** | - இளவாலை ப.மா. சங்கம், லண்டன் |
| 3. | **செந்தமிழ்த் தென்றல** | - ஈழகேசரி - லண்டன். லண்டன் பட் மண்டபம் |
| 4. | **முப்பணி வேந்தன்** | - பேராசிரியர் வண. S.J.இம்மானுவேல் அடிகள் லண்டன் அக்ரன் பட்டின மண்டபம் |
| 5. | **கவியரசர்** | - லண்டன் ஈலிங் அம்மன் கோயில் கலைப்பீடாதிபதி பேராசிரியர் கலாநிதி அ. சண்முகதாஸ் அவர்கள் |
| 6. | **தமிழ்க்கங்கை** | - ஜேர்மனி தமிழர் பணியகம் கலாநிதி அ.பி. ஜெயசேகரம் |
| 7. | **பாவேந்தர்** | - பாப்பரசர் யோண்போல் II |
| 8. | **மதுரகவி** | - துணைவேந்தர் யாழ் பல்கலைக்கழகம் |
| 9. | **மகாகவி** | - லண்டன் மா. எ. சங்கம் |
| 10. | **கலாபூஷணம்** | - இந்து கலாச்சார அலுவலகம் - கொழும்பு |
| 11. | **செவாலியர்** | - பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது யோன்போல் |
| 12. | **கௌரவ கலாநிதி** | - யாழ். பல்கலைக்கழகம் |

# இந்த வேலியில்



பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை

புலவர்மணி, பண்டிதர் சோ. இளமுருகனார்

பேராசிரியர் வி. செல்வநாயகம்

துணைவேந்தர் சு. வித்தியானந்தன்

பேராயர் ஜே. எமிலியானுஸ்பிள்ளை

சம்பத்திரிசியார் கல்லூரி அதிபர்

கலாநிதி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்

வித்துவான் வேந்தனார்

கவிஞர் கண்ணதாசன்

பேராசிரியர் கல்கி

தந்தை செல்வா

சட்ட நிபுணர் ஜீ.ஜீ. பொன்னம்பலம்

என்று பல தமிழ்ச் சான்றோர்கள் போட்ட கதியால்கள் 50 ஆண்டுகளாகக் கப்பும் கவரும் விட்டு வளர்ந்து வேலி காடாகிவிட்டது. இந்தக் காட்டுக்குள் தேனீக்கள் கட்டிய கூட்டினைப் பிழிந்து அங்கும் இங்கும் தெளித்திருக்கிறேன்.

- அமுது -